ஸ்ரீமதேராமாநுஜாயநம:

பரமகாருணிகரானபிள்ளைலோகாசார்யர்

அருளிச்செய்த

# முமுக்ஷுப்படியும்,

இதற்குபெரியஜீயரருளிச்செய்த

## திருமந்த்ரார்த்தமென்னும்வ்யாக்யாநமும்,

இதற்கு

சுத்தஸத்வம் - தொட்டய்யங்காரும்

சுத்தஸத்வம் - எம்பாவைய்யங்காரும்

செய்தவற்றில் ஸர்வர்க்கும் உபயுக்தமான

## அரும்பதவிளக்கமும்.

சித்ரகூடம்-கந்தாடை.

திருவேங்கடாசார்யரால்

பரிசோதிக்கப்பட்டு,

சென்னை:

மிமோரியல்அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டன.

*Registered Copy Right.*

1890.

# புஸ்தகவிளம்பரம்

சென்னை திருவல்லிக்கேணி பேயாழ்வார் ஸந்நிதிவீதி

12 - வது கதவிலக்கமுள்ள, திருமாளிகையில் கிடைக்கும்.

| ஸ்ரீகோசங்கள். | ரூபா. | அ. | ப. |
|---|---|---|---|
| முதலாயிரவ்யாக்யானம் (௩) ஸம்புடம் பைண்டுடன். | 17 | 8 | 0 |
| திருப்பாவை ௩௦௦௦-ப்படி, ௪௦௦௦-ப்படி, ஸ்வாபதேசம் பதவுரையுடன் ... ... ... | 3 | 8 | 0 |
| திருச்சந்தவிருத்தவ்யாக்யானம் பைண்டுடன் ... | 1 | 12 | 0 |
| திருமாலை வ்யாக்யானம் பைண்டுடன் ... ... | 1 | 4 | 0 |
| ராமாநுஜ திவ்யசரிதை பைண்டுடன் ... ... | 2 | 12 | 0 |
| வார்த்தாமாலை பைண்டுடன் ... ... ... | 1 | 12 | 0 |
| திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகவ்யாக்யான மைவண்ண நறுங்குஞ்சிக்கு பட்டர் படியுடன் ... ... ... ... | 2 | 8 | 0 |
| திருப்பல்லாண்டு வ்யாக்யானம். ... ... | 0 | 8 | 0 |
| ராமாநுசநூற்றந்தாதி ௫௦-பாட்டுவரையில் வ்யாக்யானம் ... ... ... ... | 1 | 6 | 0 |
| திருமந்த்ரார்த்தம் அரும்பதத்துடன் பைண்டுப்ரதி. | 1 | 12 | 0 |

இங்ஙனம்

சித்ரகூடம்-கந்தாடை-திருவேங்கடாசார்யார்.



ஸ்ரீமதேராமாநுஜாயநம:.

# திருமந்த்ரார்த்தம்.

தொடங்கும்போதநுஸந்திக்கும்படியானதனியன்கள்.

மணவாளமாமுனிக ளருளிச்செய்த ரஹஸ்யார்த்த ஸம்ப்ரதாய பரம்பரையின் ஒட்டுத்தனியன்.

లోకగురుంగురుభిస్సహపూర్వైః కూరకులోత్తమదాసముదారమ్।
శ్రీనగపత్యభిరామవరేశౌ దీప్రశయానగురుంచభజేహమ్ ॥౧॥

லோககுருஂகுருபிஸ்ஸஹபூர்வைஃகூரகுலோத்தமதாஸமுதாரம்
ஸ்ரீநகபத்யபிராமவரேஶௌதீப்ரஶயாநகுருஂசபஜேஹம்.

ஈயுண்ணிபத்மநாப ரருளிச்செய்த பிள்ளைலோகாசார்யர் விஷயமான தனியன்.

లోకాచార్యాయగురవే కృష్ణపాదస్యసూనవే।
సంసారభోగసన్దష్ట జీవజీవాతవేనమః ॥౨॥

லோகாசார்யாயகுரவேக்ர்ஷ்ணபாதஸ்யஸூநவே
ஸஂஸாரபோகிஸந்தஷ்டஜீவஜீவாதவேநம:.

பூர்வோக்தகுருபரம்பரைக்கு ப்ரத்யேகதனியன்கள்.

திருவாய்மொழிப்பிள்ளை யருளிச்செய்த கூரகுலோத்தமதாஸர் விஷயமான தனியன்.

లోకాచార్యకృపాపాత్రం కౌణ్డిన్యకులభూషణమ్।
సమస్తాత్మగుణావాసం వన్దేకూరకులోత్తమమ్ ॥3॥

லோகாசார்யக்ர்பாபாத்ரம்கௌண்டிந்யகுலபூஷணம்
ஸமஸ்தாத்மகுணாவாஸஂவந்தேகூரகுலோத்தமம்.

மணவாளமாமுநிகளருளிச்செய்த திருவாய்மொழிப்பிள்ளை விஷயமான தனியன்.

నమశ్శ్రీశైలనాథాయ కున్తీనగరజన్మనే।
ప్రసాదలబ్ధపరమప్రాప్య కైఙ్కర్యశాలినే ॥౪॥

நமஶ்ஸ்ரீஶைலநாதாயகுந்திநகரஜந்மநே
ப்ரஸாதலப்த்தபரமப்ராப்யகைங்கர்யஶாலிநே.

மணவாளமாமுனிகளுக்கு மாதாமஹரான கோட்டூரழகிய மணவாளப்பெருமாள்பிள்ளை தனியன்.

లోకాచార్యపదాంభోజ రాజహంసాయితాంతరమ్।
జ్ఞానవైరాగ్యజలధిం వన్దే సౌమ్యవరం గురుమ్ ॥౫॥

லோகாசார்யபதாம்போஜராஜஹம்ஸாயிதாந்தரம்
ஜ்ஞாநவைராக்யஜலதிம்வந்தேஸௌம்யவரம்குரும்.

மணவாளமாமுனிகளருளிச்செய்த திகழக்கிடந்தான் திருநாவீறுடையபிரான் தாதரண்ணரையன் விஷயமான தனியன்.

శ్రీజిహ్వావదధీశదాసమమలమశేషశాస్త్రవిదమ్।
సున్దరవరగురుకరుణాకన్దళితజ్ఞానమన్దిరం కలయే ॥౬॥

ஸ்ரீஜிஹ்வாவததீஶதாஸமமலமஶேஷஶாஸ்த்ரவிதம்
ஸுந்தரவரகுருகருணாகந்தளிதஜ்ஞாநமந்திரம்கலயே.

சாற்றும்போதநுஸந்திக்குந்தனியன்கள்.

வானமாமலைஜீயரளிச்செய்தது.

கோதிலுலகாசரியன்கூரகுலோத்தமதாதர்
நீதில்திருமலையாழ்வார்செழுங்குரவைமணவாளர்
* ஓதரியபுகழ்நாவீறுடையபிரான்றாதருடன்
போதமணவாளமுனிபொன்னடிகள்போற்றுவனே. (க)

வாழியுலகாசரியன்வாழியவன்மன்னுகுலம்
வாழிமுடும்பையென்னுமாநகரம் - வாழி
மனஞ்சூழ்ந்தபேரின்பமல்குமிகுநல்லா
ரினஞ்சூழ்ந்திருக்குமிருப்பு. (உ)

ஓதுமுடும்பையுலகாசரியனரு
ளேதுமறவாதவெம்பெருமான் - நீதி
வழுவாச்சிறுநல்லூர்மாமறையோன்பாதந்
தொழுவார்க்குவாராதுயர். (ங)

பிள்ளைலோகாசார்யர் திருவடிகளேஶரணம்.

ஜீயர்திருவடிகளேஶரணம்.

---

* "திருநாவீறுடையபிரான்" என்றும் பாடம்.



ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

பிள்ளைலோகாசார்யரருளிச்செய்த முமுக்ஷுப்படிக்கு,

பெரியஜீயரருளிச்செய்த

# வ்யாக்யாநாவதாரிகை.

ஸ்ரீய:பதியாய் ஸ்ரீவைகுண்ட நிகேதநனாய் நித்யமுக்தாநுபாவ்யனாய்

---

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

சோளஸிம்ஹபுரம் சுத்தஸத்வம் தொட்டயாசார்யர்

செய்தருளின அரும்பதவிளக்கம்.

ஸ்ரீய:பதியான ஸர்வேச்வரன், தனக்கு லோகஸம்ரக்ஷணத்திலுண்டான மஹா அத்ர்ப்தி தீர்ந்து த்ர்ப்தி பெறுகைக்காக அவதரிப்பித்தருள்த் திருவவதரித்தவராய், திருவநந்தாழ்வானுடைய அவதாரவிசேஷமான அழகியமணவாளமாமுனிகள்; ஸம்ஸாரிசேதநோஜ்ஜீவநார்த்தமாக ஸர்வேச்வரன் ஆசார்யனாய் நின்று ப்ரகாசிப்பித்தருளின ரஹஸ்யத்ரயத்தினுடைய ஸம்ப்ரதாயபரம்பராப்ராப்தமான அர்த்தவிசேஷங்களை ஸர்வரும் அறிந்து உஜ்ஜீவிக்கும்படி பிள்ளைலோகாசார்யர், தம்முடைய பரமக்ர்பையாலே செய்தருளின முமுக்ஷுப்படி யென்கிற ப்ரபந்தத்தினுடைய வாக்யார்த்தங்களை அத்யந்தம் மந்தமதிகளும் அநாயாஸேந அறிந்து உஜ்ஜீவிக்கும்படி பஞ்சலக்ஷண லக்ஷிதமான வ்யாக்யாநம் செய்தருளுவதாகத் திருவுள்ளம்பற்றி, முமுக்ஷுப்படிக்கு மூலமான ரஹஸ்யத்ரயத்தினுடைய அவதாரணக்ரமத்தை உபோத்காதஸங்கதியாக முந்துற இச்சூர்ணையாலே யருளிச்செய்கிறார் (ச்ரிய:பதியாயென்று தொடங்கி.)

ஸ்ரீய:பதியாகையாவது - ஸர்வமங்களாவஹையாய்ஸர்வோத்கர்ஷாவஹையான பெரியபிராட்டியாருக்கு வல்லபனாயிருக்கை. ஸ்ரீவைகுண்ட நிகேதநனாகையாவது - ச்ரிய:பதித்வத்தால்வந்த மேன்மைக்குத் தகுதியான தேசவிசேஷத்தையும், நகரவிசேஷத்தையும் இருப்பிடமாகவுடையனாயிருக்கை. நித்யமுக்தாநுபாவ்யனாகையாவது - அபரிச்சிந்நஜ்ஞாநாதிகுணகரான நித்யராலும், * ஸதாபச்யந்திப்படியே அநுபாவ்யனாயிருக்கை.

நிரதிஶயாநந்த யுக்தனாயிருக்கிற ஸர்வேஶ்வரன், அந்த நித்யஸூரிகளோபாதி தன்னை யநுபவித்து நித்யகைங்கர்யரஸராய் வாழுகைக்கு ப்ராப்தியுண்டாயிருக்கச்செய்தேயும், அத்தை யிழந்து, (𑌅𑌸𑌨𑍍𑌨𑍇𑌵) (அஸந்நேவ) என்கிறபடியே அஸத்கல்பராய்க் கிடக்கிற ஸம்ஸாரிசேதநருடைய இழவை யநுஸந்தித்து, அத்யந்தவ்யாகுலசித்தனாய், இவர்கள் கரணகளேபரங்களையிழந்து இறகொடிந்த பக்ஷிபோலே கிடக்கிற தஶையிலே, கரணாதிகளைக் கொடுத்து, அவற்றைக்கொண்டு வ்யபிசரியாதே, தன்னை யாஶ்ரயித்து

---

நிரதிசயாநந்த யுக்தனாகையாவது-ஆநந்தவல்லியில் சொல்லுகிறபடியே நிரதிசயாநந்தகுண யுக்தனாயிருக்கை. ஸர்வேச்வரனாகையாவது - த்ரிவிதாத்மவர்க்கத்துக்கும் ஈச்வரனாயிருக்கை. அந்தநித்யஸூரிகளோபாதி தன்னை யநுபவிக்கையாவது - அவர்கள் * ஸதாபச்யந்திப்படியே அநுபவிக்கிறாப்போலே பகவத்கடாக்ஷத்தாலே ஸம்ஸாராந்முக்தராய் அபரிச்சிந்ந ஜ்ஞாநாதி குணகராய் அநுபவிக்கை. தன்னை - ஸர்வசேஷியான தன்னை. கைங்கர்யமாவது - பகவந்முகவிகாஸ ஹேதுவான வ்ர்த்திவிசேஷம். நித்ய கைங்கர்யரஸராய் என்றது-அநுபவஜநிதப்ரீதிகாரித நித்யகைங்கர்யத்தில் ப்ரீதியுடையவர்களா யென்றபடி. வாழுகையாவது-ஸ்வாமிஸந்நிதியில் ஸுகமாக வர்த்திக்கை. ப்ராப்தியாவது-சேஷசேஷிபாவஸம்பந்தம். அத்தை இழந்து என்றது-அந்தசேஷசேஷிபாவஸம்பந்தஜ்ஞாநத்தை யிழந்தென்றபடி. (அஸந்நேவ)என்கிறபடியே என்றது-அஸந்நேவ என்கிற ச்ருத்யர்த்தத்தின் படியே என்றபடி. அஸத்கல்பராய்க் கிடக்கிற என்றது-அஸச்சப்த்தவாச்யமாநத்தோடு கிஞ்சித்ந்யூநமாக ஸத்ர்சராயிருக்கிறவென்றபடி. ஸம்ஸாரிசேதநரென்றது-அநாத்யசித் ஸம்பந்தத்தாலே ப்ரவாஹரூபேண வருகிற அவித்யாகர்மவாஸநாருசிவிவசராய் ஜந்மமரணாதிக்லேசபாகிகளாய்த் திரிகிற பத்தசேதநரொன்றபடி. அநுஸந்திக்கையாவது-இடைவிடாமலெண்ணுகை. அத்யந்தவ்யாகுல சித்தனாய்-அந்தமில்லாதவ்யாகுலஹ்ர்தயனாய். இவர்கள்-கீழ்ச்சொன்ன ஸம்ஸாரிசேதநர். கரணம்-ச்ரோத்ரம் முதலானகரணங்கள். களேபரங்களாவன - கரணங்களுக்கு ஆச்ரயமான சரீரங்கள். இறகொடிந்தபக்ஷிபோலே - விஷ்ணுபதப்ராப்திஸாதநங்களான இறகுகளொடிந்த பக்ஷிபோலே. கிடக்கிற தசையிலே - மூலப்ரக்ர்தியிலே கிடக்கிற தசையிலே. கரணாதிகள்-பகவத்ப்ராப்த்யுபகரணங்களான காத்ரங்களைச் சொல்லுகிறது. அவற்றைக்கொண்டு என்றது - தன்னை ஆச்ரயிக்கைக்குக்கொடுத்த அந்த கரணாதிகளைக் கொண்டென்றபடி. வ்யபிசரியாதே - அந்தகரணாதிகளைக்கொண்டு அந்யத்ர ஸஞ்சரியாதே என்றபடி. தன்னை ஆச்ரயித்து - அவற்றைக்கொண்டு தன்னை ஆச்ரயித்து.

உஜ்ஜீவிக்கைக்குடலாக, அபௌருஷேயமாய் நித்யநிர்த்தோஷமாய் ஸ்வதஃப்ரமாணமானவேதத்தையும், ததுபப்ருஹ்மணங்களான ஸ்ம்ருதீதிஹாஸபுராணாதிகளையும் ப்ரவர்த்திப்பித்தவிடத்திலும், அந்தஶாஸ்த்ராப்யாஸத்துக்கு அநேகயோக்யதை வேண்டுகையாலே அவ்வழியாலேஜ்ஞாநம்பிறந்து சேதநர் உஜ்ஜீவிக்கை அரிதாயிருக்கிறபடியைத் திருவுள்ளம்பற்றி, ஸகலஶாஸ்த்ரதாத்பர்யங்களையும், ஸங்க்ரஹமாக இவர்களறியலாம்படி பண்ணவேணுமென்று,

---

உஜ்ஜீவிக்கைக்குடலாக - உத்க்ர்ஷ்டமாக ஜீவிக்கைக்கு உபாயமாக என்றபடி. அபௌருஷேயம் - புருஷனாலே செய்யப்படாதது. நித்யநிர்த்தோஷமாய்-நித்யமாய் நிர்த்தோஷமாய். ஸ்வதஃப்ரமாணமாகையாவது-சாஸ்த்ரங்களில் சொல்லுகிற அர்த்தங்களுக்கு ப்ரமாணமாகத் தன்னை அபேக்ஷிக்குமாப்போலே தன்னில்சொல்லுகிற அர்த்தங்களுக்கு ப்ரமாணமாகத் தான் ஒன்றையும் அபேக்ஷியாமல் தனக்குத்தானே ப்ரமாணமாயிருக்கை. வேதத்தையும் என்றது - புபுத்ஸுக்களாய் ஆஸ்திகராயிருப்பார்க்கு ஸ்வார்த்த ப்ரகாசமாயிருக்கையாலே வேதம்என்கிறது. ததுபப்ருஹ்மணங்களான என்றது-அந்தவேதார்த்த வ்யக்தீகரணங்களான என்றபடி. ஸ்ம்ருதிகளாவன-மந்வாதிஸ்ம்ருதிகள். இதிஹாஸங்களாவன-மஹாபாரதராமாயணங்கள். புராணங்களாவன-விஷ்ணுபுராணாதிகள். ப்ரவர்த்திப்பித்தவிடத்திலும்-மந்தமதிகளாலே வேதார்த்தமறுதியிடப்போகாதென்று மஹாமதிகளானமநு பராசர பாராசர்ய வால்மீகி ப்ரப்ருதிமஹர்ஷிகளைக்கொண்டு ப்ரவர்த்திப்பித்தவிடத்திலும். அந்தசாஸ்த்ராப்யாஸத்துக்கு - ஸோபப்ருஹ்மணமான அந்த வேதசாஸ்த்ராப்யாஸத்துக்கு. அநேகயோக்யதை வேண்டுகையாலே - நியமம், பஹுவேதநஸாமர்த்யம், தீர்க்காயுஷ்யம் முதலான அநேகயோக்யதை அவச்யாபேக்ஷிதமாகையாலே. அவ்வழியாலே-அநேகயோக்யதாஸாபேக்ஷமான அந்தமார்க்கத்தாலே. ஜ்ஞாநம்பிறந்து-ஸ்வரூபோபாய புருஷார்த்தயாதாத்ம்யஜ்ஞாநம்பிறந்து. உஜ்ஜீவிக்கையரிதாயிருக்கிறபடியைத்திருவுள்ளம்பற்றி-உஜ்ஜீவிக்கைதுர்லபமாயிருக்கும் ப்ரகாரத்தை திருவுள்ளத்திலே விசாரித்தென்றபடி. ஸகலசாஸ்த்ரதாத்பர்யங்களையும்-ச்ருதிஸ்ம்ர்த்யாதிஸகலசாஸ்த்ரதாத்பர்யங்களையும். ஸங்க்ரஹமாக-அநாயாஸமாக என்றபடி. இவர்களென்றது - பரிமிதகால வர்த்திகளாய் அல்பஜ்ஞராய் அல்பசக்திகளாயிருக்கிறஸம்ஸாரிசேதநரென்றபடி. அறியலாம்படியென்றது-அறியும்படியாகவென்றபடி.

ஸ்வரூபோபாயபுருஷார்த்த யாதாத்ம்ய ப்ரதிபாதகமான ரஹஸ்யத்ரயத்தையும், ஸ்வயமேவ ஆசார்யனாய்நின்று ப்ரகாசிப்பித்தருளினான். அதில் திருமந்த்ரத்தை, ஸ்ரீபதரிகாஶ்ரமத்திலே ஸ்வாம்ஶபூதனான நரன்விஷயமாகப்ரகாஶிப்பித்தான்; த்வயத்தை ஸ்ரீவிஷ்ணுலோகத்திலே ஸ்வமஹிஷியான பிராட்டிவிஷயமாகப்ரகாஶிப்பித்தான்; சரமஶ்லோகத்தைத் திருத்தேர்த்தட்டிலேஸ்வாஶ்ரிதனானஅர்ஜுனன்விஷயமாக ப்ரகாஶிப்பித்தான். ஆகையாலிறே - (లక్ష్మీనాథసమారమ్భామ్) (லக்ஷ்மீநாதஸமாரம்பாம்) என்று-குருபரம்பராதியிலே ஈஶ்வரனை யநுஸந்திக்கிறது. இனி இந்த ரஹஸ்யத்ரயந்தான், ஶப்தம்ஸங்க்ரஹமா யிருந்ததேயாகிலும்

---

ஸ்வரூபேத்யாதி - ஸ்வரூபோபாயபுருஷார்த்தங்களினுடைய யதாவஸ்தித வேஷத்தைப்ரதிபாதியாநிற்கிறவென்றபடி. ஆதிசப்த்தார்த்தம்-ஹாரீதஸ்ம்ருதி, பாத்மோத்தரம் தொடக்கமானவை. ஸ்வயமேவஎன்றது-ச்ருதிஸ்ம்ருத்யாதிகளைப்போலே அந்யனையிட்டுப்ரவர்த்திப்பியாதே ஸ்வயமேவ என்றபடி. ஆசார்யனாய்நின்று என்றது - ஆசார்யரூபேண அவதரித்தென்றபடி. ப்ரகாசிப்பித்தருளினான் - ஸர்வச்லாக்யமாகப் பண்ணினானென்றபடி. அதில் என்றது-அந்த ரஹஸ்யத்ரயத்திலுமென்றபடி. மஹிஷியானவென்றது – பிராட்டிமாரில் ப்ரதானையானவென்றபடி, த்வயம் என்கிறது-இரண்டுவாக்யமாயிருக்கையாலே. சரமச்லோகமென்கிறது-சரமமான ச்லோகமென்றன்று, சரமோபாயத்தை ப்ரதிபாதிக்கையாலே "சரமச்லோகம்" என்று திருநாமம். ஆகையால் என்றது-ஸர்வேச்வரன் ஸ்வயமேவ ஆசார்யனாய்நின்று ரஹஸ்யத்ரயத்தையும் தத்தத்விஷயங்களில் ப்ரகாசிப்பித்தருளினானாகையாலேயென்றபடி. இறேயென்றது-இவ்வர்த்தம் ப்ரஸித்தமென்றபடி.

(ச்ரியஃபதியாய்) என்று தொடங்கி இவ்வளவாக - ரஹஸ்யத்ரயத்தினுடைய அவதரண க்ரமத்தை யருளிச்செய்து, இனி, தாம் வ்யாக்யாநஞ்செய்தருளுகிற முமுக்ஷுப்படி ப்ரபந்தத்தினுடைய அவதரணக்ரமத்தை அருளிச்செய்கிறார் (இனி இந்தரஹஸ்யத்ரயந்தானென்றுதொடங்கி.) இனியென்றது – இப்போதென்றபடி. இந்தரஹஸ்யத்ரயந்தானென்றது-ஸம்ஸாரிசேதநோஜ்ஜீவநார்த்தமாக ஸர்வேச்வரன் ஆசார்யனாய் நின்று ப்ரகாசிப்பித்தருளின ரஹஸ்யத்ரயந்தானென்றபடி. சப்தம்ஸங்க்ரஹமா யிருந்ததேயாகிலுமென்றது - ச்ருதிஸ்ம்ருத்யாதிகள்போலே க்ரஹணதாரணாதிகளுக்கு வருத்தமாம்படி பலசப்தங்களாயிருக்கையன்றிக்கே, எட்டெழுத்தும், இருபத்தைந்தெழுத்தும், முப்பத்திரண்டெழுத்துமாய் அநாயாஸேந க்ரஹிக்கும்படியிருந்தபோதிலுமென்றபடி.

அர்த்தமுபதேஶகம்யமாகையாலும், அதறிந்தே எல்லாரும் உஜ்ஜீவிக்கவேண்டுகையாலும்; அந்தரஹஸ்யத்ரயத்திலும் பூர்வாசார்யர்களுடைய வுபதேஶ பரம்பராப்ராப்தமான அர்த்தவிஶேஷங்களை,ஸர்வர்க்கும் ஸுக்ரஹமாகவும் ஸுவ்யக்தமாகவும், பிள்ளைலோகாசார்யர் தம்முடைய பரமக்ர்பையாலே இப்ப்ரபந்தமுகேந வருளிச்செய்கிறார்.

முன்பே ரஹஸ்ய்த்ரயவிஷயமாக மூன்றுப்ரபந்தமிட்டருளியிருக்கச்செய்தேயும், அதில், யாத்ர்ச்சிகப்படி அதிஸங்க்ரஹமாகையாலும், பரந்தபடி அதிவிஸ்த்ர்தமாகையாலும்,

---

அர்த்தம் உபதேசகம்யமாகையாலு மென்றது - ஸ்வபுத்திபலத்தாலும்சாஸ்த்ராப்யாஸத்தாலும்அறியத்தக்கதன்றிக்கேஆசார்யோபதேசத்தாலே அறியத்தக்கதாகையாலுமென்றபடி. அதறிந்தே எல்லாரு முஜ்ஜீவிக்கவேண்டுகையாலுமென்றது-உபதேசகம்யமான அந்தரஹஸ்யத்ரயார்த்த மறிந்தே எல்லாரு முஜ்ஜீவிக்க வேண்டுகையாலு மென்றபடி. அறிந்தேஎன்ற அவதாரணத்தாலே - அறியாதபோது உஜ்ஜீவநமில்லை யென்றுகருத்து. அந்தரஹஸ்யத்ரயத்திலு மென்றது - அந்தரஹஸ்யத்ரயார்த்தந் தன்னிலு மென்றபடி. பூர்வாசார்யர்களுடைய உபதேசபரம்பராப்ராப்தமான அர்த்தவிசேஷங்களையென்றது–நம்மாழ்வார் தொடக்கமான பூர்வாசார்யர்களுடைய உபதேசபரம்பரயா தமக்குப்ராப்தமான விசேஷார்த்தங்களை யென்றபடி. ஸர்வர்க்குமென்றது-ஸ்த்ரீபாலாதிஸர்வர்க்கு மென்றபடி. ஸுக்ரஹமாகவுமென்றது-அநாயாஸேந க்ரஹிக்கும்படியாகவுமென்றபடி. ஸுவ்யக்தமாகவுமென்றது-மிகவும் அர்த்தப்ரகாசமாகவுமென்றபடி. பரமக்ர்பையாலே என்றது – ரஹஸ்யத்ரயப்ரகாசகனான க்ர்பையிலும் அதிசயமான க்ர்பையாலே யென்றபடி. இப்ரபந்தமுகேநவென்றது-வ்யாக்யாநமான இப்ரபந்த ச்ரேஷ்டத்தாலே என்றபடி.

(இப்ப்ரபந்தமுகேந) என்றத்தாலே-இதுக்கு முன்பு சிலப்ரபந்தங்களருளிச் செய்ததாகத் தோற்றுகையாலே அவற்றை உதாஹரித்து அவற்றுக்குண்டான தோஷத்தையும் அவற்றிற்காட்டில் இப்ரபந்தத்துக்குண்டான வைலக்ஷண்யத்தையு மருளிச்செய்கிறார் (முன்பேயென்றுதொடங்கி.) முன்பேயென்றது-இப்ரபந்தமருளிச்செய்வதற்கு முன்பேயென்றபடி. அதிஸங்க்ரஹமாகையாலுமென்றது-அதிஸங்க்ரஹமாகையாலே பெண்ணுக்கும்பேதைக்கும் விசதமாக அர்த்த ப்ரகாசகமாகாமையாலு மென்றபடி. அதிவிஸ்த்ர்தமாகையாலு மென்றது- அதிவிஸ்த்ர்தமாகையாலே இன்னவிடத்திலே இன்னவர்த்தம்சொல்லிற்றென்று பெண்ணுக்கும் பேதைக்கும் அறியப்போகாமையாலுமென்றபடி.

ஸ்ரீயஃபதிப்படி, உபயதோஷமுமின்றிக்கேயிருந்ததேயாகிலும், ஸம்ஸ்க்ருதவாக்யபஹுளமாகையாலே பெண்ணுக்கும்பேதைக்கும் அதிகரிக்கப்போகாமையாலும், த்ரிவிததோஷமுமில்லாதபடி இன்னமும் ஒரு ப்ரபந்தமிடவேணுமென்று, திருவுள்ளம்பற்றி, எல்லாவற்றுக்கும் பின்பிறே முமுக்ஷுப்படியாகிற இப்ப்ரபந்தமிட்டருளிற்று.

ஆகையிறே, அல்லாதப்ரபந்தங்கள்கிடக்க, இத்தை எல்லாரும் அதிகரித்துப்போருகிறது. இன்னமும் பூர்வப்ரபந்தங்களில் அநுக்தமான அர்த்தவிஶேஷங்களும் இப்ரபந்தத்திலே உண்டாகையாலும், இதுவே எல்லார்க்கும் ஆதரணீயமாயிருக்கும். *

---

உபயதோஷமுமின்றியிலேயென்றது-அதிஸங்க்ரஹத்வ அதிவிஸ்தர்த்வரூபதோஷமு மின்றியிலே யென்றபடி. பெண்ணுக்கும் பேதைக்கும் அதிகரிக்கப்போகாமையாலுமென்றது - ஸம்ஸ்க்ருதவாக்ய மறியமாட்டாதஸ்த்ரீபாலர்க்கும் அப்யஸிக்கப்போகாமையாலு மென்றபடி. பேதை-பாலன்; அறிவிலான், சபலன்என்னவுமாம்.

ஆகையிறேயென்றது - அதிஸங்க்ரஹமுமன்றிக்கே அதிவிஸ்த்ரமுமன்றிக்கே ஸம்ஸ்க்ருதவாக்யபஹுளமுமன்றியிலே ஸ்த்ரீபாலர்களுக்கும் அதிகரிக்கும்படியாயிருக்கையாலே யென்றபடி. எல்லாருமென்றது-அதிஸங்க்ரஹத்துக்கு அர்த்தமறியுமவர்களுக்கும் அதிவிஸ்தாரத்தை தரிக்கவல்லார்க்கும், ஸம்ஸ்க்ருதவாக்ய பாஹுள்யத்தை தரிக்கவல்லார்க்குமென்றபடி. இவ்வைலக்ஷண்யமன்றிக்கே வைலக்ஷண்யாந்தரத்தை யருளிச்செய்கிறார் (இன்னமுமென்றுதொடங்கி.) இன்னமுமென்றது-த்ரிவிததோஷராஹித்யமாகிற வைலக்ஷண்யமுமன்றிக்கே பின்னையு மென்றபடி. பூர்வப்ரபந்தங்களில் என்றது-யாத்ர்ச்சிகப்படி, பரந்தபடிச்ரியஃபதிபடியாகிற ஏதத் பூர்வ விரசித ப்ரபந்தங்களில் என்றபடி. இதுஎன்றது - விசேஷார்த்த ப்ரதிபாதகமான இந்தப்ரபந்த மென்றபடி. எல்லார்க்கு மென்றது - பண்டிதர்களுக்குமென்றபடி. ஆதரணீயமாகக்கடவது என்றது-பரிக்ரஹிக்கத்தக்கதென்றபடி. *

ச்ரியஃபதியாய் என்றுதொடங்கி இவ்வளவாக - ரஹஸ்யத்ரயத்தினுடைய அவதாரணக்ரமத்தையும், அந்தரஹஸ்யத்ரயார்த்த ப்ரதிபாதகங்களானப்ரபந்தங்களினுடைய அவதாரண க்ரமத்தையும், அவற்றில் முமுக்ஷுப்படிப்ரபந்தத்துக்குண்டான வைலக்ஷண்யத்தையும் அருளிச்செய்தாராய் நின்றது - கீழ்; இனி, முமுக்ஷுப்படிக்கு ப்ரதிவாக்யம் அர்த்தமருளிச்செய்வதாக ப்ரதீகக்ரஹணம்பண்ணுகிறார்

ஸ்ரீமதேராமாநுஜாயநம:.

முமுக்ஷுப்படி வ்யாக்யாநம்.

# திருமந்த்ரப்ரகரணம்.

## ரஹஸ்யத்ரயோபோத்காதம்.

மூ.—முமுக்ஷுவுக்கறியவேண்டும் ரஹஸ்யம்மூன்று.

---

வ்யா.—(முமுக்ஷுவுக்கறியவேண்டும்ரஹஸ்யம்மூன்று) முமுக்ஷுவாகிறான் - மோக்ஷத்திலே இச்சையுடையனானவன். (𑌮𑍁𑌚𑍍𑌲𑍢 𑌮𑍋𑌕𑍍𑌷𑌣𑍇) * முசில்மோக்ஷணே இறேதாது. இத்தால் - ஸம்ஸாரவிமோசநத்தில் இச்சைபிறந்தவனுக்கென்றபடி. ஆத்மப்ராப்திகாமனுக்கும் முமுக்ஷுத்வமுண்டேயாகிலும், இவ்விடத்தில் அவன் விவக்ஷிதனன்று. அவனுக்கு ரஹஸ்யத்ரயஜ்ஞாநாபேக்ஷையில்லையிறே. ஆகையாலே இவர் முமுக்ஷுவென்கிறது-

---

(முமுக்ஷுவுக்கென்று தொடங்கி.) அர்த்தமருளிச்செய்கிறார் (முமுக்ஷுவாகிறானென்று.) முமுக்ஷுவாகிறான் - மோக்ஷத்திலே இச்சையுடையனானவன் முமுக்ஷுவாகிறானென்றபடி. பலிதார்த்தத்தையருளிச்செய்கிறார் (இத்தாலென்று.) இத்தால் என்றது-இந்தமுமுக்ஷுபதத்தால் என்றபடி. ஸம்ஸாரமாவது-புண்யபாபநிபந்தநமான அசித்ஸம்பந்தம். அதாவது - சித்ஸ்வரூபனான ஆத்மாவுக்கு அவித்யாதிகாரணமான தேஹஸம்பந்தம். விமோசநம்-விடுகை. இச்சைபிறந்தவனுக்கென்றது-நிவர்த்தியிலே அபேக்ஷைபிறந்தவனுக்கென்றபடி. என்றபடி என்றது-என்று சொன்னபடி என்று அர்த்தம். ஆத்மப்ராப்திகாமனுக்கு-ஆத்மாநுபவத்தில் அபேக்ஷைபிறந்தவனுக் கென்றபடி. முமுக்ஷுத்வமுண்டேயாகிலும் என்றது-முமுக்ஷுபதவாச்யத்வம் சிலரபிப்ராயத்தாலே உண்டானபோதிலுமென்றபடி; இல்லையென்றுகருத்து. இவ்விடத்தில் என்றது - இந்த முமுக்ஷுவுக்கு என்கிற பதத்தில் என்றபடி. விவக்ஷிதனன்றென்றது - வாச்யனன்றென்றபடி. அவனுக்கு - ஆத்மப்ராப்திகாமனுக்கு. ரஹஸ்யத்ரயஜ்ஞாநாபேக்ஷை - ரஹஸ்யத்ரய ப்ரதிபாதிதஜ்ஞாநத்தில் அபேக்ஷை. இறே - இவ்வர்த்தம் கீதாசாஸ்த்ர ப்ரஸித்தமென்றபடி. ஆகையாலென்றது - ஆத்மப்ராப்திகாமன் விவக்ஷிதனல்லாமையாலே யென்றபடி. இவர்—இந்தக்ராந்தகர்த்தாவான பிள்ளைலோகாசார்யர். முமுக்ஷுவென்கிறது-முமுக்ஷுவென்று சொல்லுகிறது.

பகவத்ப்ராப்திகாமதயா ஸம்ஸார நிவ்ர்த்தியில் இச்சைபிறந்தவனை. ஏவம்பூதனானவனுக்கு, (அறியவேண்டும் ரஹஸ்யம்மூன்று) என்றது - இவனுக்கு அவச்யம் ஜ்ஞாதவ்யமாயுள்ளது ஸ்வரூபோபாய புருஷார்த்தங்களாகையாலும், அவற்றை இந்தரஹஸ்யத்ரயம் உள்ளபடி ப்ரதிபாதிக்கையாலும், ரஹஸ்யத்ரயமுமே அறியவேண்டுவதென்கை. (స్వజ్ఞానంప్రాపకజ్ఞానం ప్రాప్యజ్ఞానంముముక్షుభిః । జ్ఞానత్రయముపాదేయమేతదన్యంనకిఞ్చన) (ஸ்வஜ்ஞாநம் ப்ராபகஜ்ஞாநம் ப்ராப்யஜ்ஞாநம் முமுக்ஷுபிஃ - ஜ்ஞாநத்ரயமுபாதேயம் ஏததந்யம்நகிஞ்சந) என்னக்கடவதிறே. (ரஹஸ்யம் மூன்று) என்று இவருத்தேஶிக்கிறது, திருமந்த்ரமும் த்வயமும் சரமஶ்லோகமுமாகிற இவற்றையென்னுமிடம், மேலே ஸுஸ்பஷ்டம். இவற்றை ரஹஸ்யங்களென்கிறது - ஸகலவேதாந்த ஸாரார்த்தப்ரதிபாதகதயாபரமகுஹ்யங்களாகையாலே. ஆக இவ்வாக்யத்தால்-அதிகாரி நிர்த்தேஶமும் தத்ஜ்ஞாதவ்ய நிர்த்தேஶமும்பண்ணியருளினாராய்த்து.

---

பகவத்ப்ராப்திகாமதயா ஸம்ஸாரநிவ்ர்த்தியில் இச்சைபிறந்தவனுக்கு - பகவத்ப்ராப்தி காமதயாதத்விரோதியான ஸம்ஸார நிவ்ர்த்தியிலே இச்சைபிறந்த வதிகாரிக்கென்றபடி. அவச்யம் ஜ்ஞாதவ்யமாயுள்ளது - பகவத்ப்ராப்த்யர்த்தமாகவும் ஸம்ஸார விமோசநார்த்தமாகவும்அவச்யம் ஜ்ஞாதவ்யமாயுள்ளதென்றபடி. இந்த - வக்ஷ்யமாணமான. உள்ளபடி ப்ரதிபாதிக்கையாலுமென்றது-யதாவஸ்த்திதவேஷத்தை ப்ரதிபாதிக்கையாலே என்றபடி. ரஹஸ்யத்ரயமுமே யறியவேண்டுவது என்கையாலே - அவச்யம் ஜ்ஞாதவ்யமென்றபடி. என்கையென்றது - சொல்லுகை யென்றபடி. ரஹஸ்யத்ரயம் - ரஹஸ்யத்ரயார்த்தம். அறியவேண்டுவது என்றது - ஆசார்யோபதேசபூர்வகமாக அறியவேணுமென்றுவிதிக்கிறதென்றபடி. மேலே ஸுஸ்பஷ்டம் என்றது - மேல்க்ரந்தத்திலே ஸுஸ்பஷ்டமென்றபடி. அதாவது - (அதில்ப்ரதம ரஹஸ்யம் திருமந்த்ரம்) என்றதும், இரண்டாம்ப்ரகரணத்தியில், (த்வயத்துக்கதிகாரி ஆகிஞ்சந்யமும் அநந்யகதித்வமும்) என்றதும், மூன்றும் ப்ரகரணத்தியில் (சரமச்லோகமென்று இதுக்குப்பேராகக்கடவது) என்றதும். இவற்றையென்றது - திருமந்த்ரத்வய சரமச்லோகங்களை என்றபடி. ஸகலவேதாந்தஸாரார்த்தமாவது-அர்த்தபஞ்சகத்தை ப்ரதிபாதியாநின்றுகொண்டு அதிகுஹ்யங்களாயிருக்கையாலே. ஸாரார்த்தமென்றது - ஸாரார்த்த ப்ரதிபாதகமென்றபடி. ஆக - இவ்வளவாகவென்றபடி. இவ்வாக்யத்தாலென்றது-(முமுக்ஷுவுக்கறியவேண்டும் ரஹஸ்யம் மூன்று) என்கிற இவ்வாக்யத்தாலென்றபடி. முமுக்ஷுவுக்கு என்றத்தால் - அதிகாரி நிர்த்தேசமும், அறியவேண்டும், ரஹஸ்யம் மூன்றுஎன்கிறபதங்களால்-ஜ்ஞாதவ்யநிர்த்தேசமும் பண்ணியருளினாராய்த்து.

மூ.—அதில் ப்ரதம ரஹஸ்யம் திருமந்த்ரம்.

வ்யா.—இனி அந்தரஹஸ்யத்ரயத்திலும் ப்ரதமரஹஸ்ய மேதென்னும் ஆகாங்க்ஷையிலே யருளிச்செய்கிறார் (அதில்ப்ரதம ரஹஸ்யம் திருமந்த்ரமென்று.) அதாவது - அந்தரஹஸ்யத்ரயத்திலும்வைத்துக்கொண்டு, இவ்வதிகாரிக்கு ப்ரதமம் ஜ்ஞாதவ்யமான ரஹஸ்யம், ஸ்வரூபயாதாத்ம்யபரமாய் த்யாஜ்யோபாதேய விபாகஜ்ஞாநத்தைப் பரிபூர்ணமாகப் பிறப்பிக்குமதான திருமந்த்ரமென்கை.

முமுக்ஷுவுக்கு - பகவத்ப்ராப்திகாமதயா ஸம்ஸாரசப்தவாச்யங்களான அவித்யாகர்மவாஸநாருசி ப்ரக்ருதிஸம்பந்த விமோசநத்திலே இச்சைபிறந்தவனுக்கு, ரஹஸ்யம் மூன்று - ஸ்வரூபோபாய புருஷார்த்த யாதாத்ம்யப்ரதிபாதகமான ரஹஸ்யத்ரயங்களானவை, அறியவேண்டும்-அவச்யமாக அறியத்தக்கவை என்று மூலார்த்தம்.

இனி என்றது - அதிகாரிநிர்த்தேசமும் ஜ்ஞாதவ்யநிர்த்தேசமும் பண்ணின அநந்தரமென்றபடி. அந்தரஹஸ்யத்ரயத்திலுமென்றது - அவச்யம் ஜ்ஞாதவ்யமான ரஹஸ்யத்ரயத்திலு மென்றபடி. ப்ரதமரஹஸ்யமென்றது-ப்ரதமம் ஜ்ஞாதவ்யமான ரஹஸ்யமென்றபடி. ஆகாங்க்ஷயாவது - பதஸ்யபதாந்தரவ்யதிரேகேண அந்வயாநுபபத்தி; சங்கையிலே யென்னவுமாம். அருளிச்செய்கிறார் என்றது - சங்கைக்கு ஸமாதாநமருளிச்செய்கிறாரென்றபடி. அதாவது என்றது-(அதில் ப்ரதமரஹஸ்யம் திருமந்த்ரம்)என்று சொன்னதாவதென்றபடி. அந்தரஹஸ்யத்ரயத்திலும்—ஸ்வரூபோபாயபுருஷார்த்த யாதாத்ம்ய ப்ரதிபாதகதயா அவச்யம் ஜ்ஞாதவ்யமான ரஹஸ்யத்ரயத்திலு மென்றபடி. வைத்துக்கொண்டு என்றது - சாரியைச் சொல்லு. இவ்வதிகாரிக்கென்றது — பகவத்ப்ராப்திகாமதயாஸம்ஸாரநிவர்த்தியிலே இச்சையுடையனாய் ப்ரஸ்துதனான அதிகாரிக்கென்றபடி. ஸ்வரூபயாதாத்ம்ய பரமாயென்றது-ஸ்வரூபயாதாத்ம்ய ப்ரதிபாதகபரமாயென்றபடி. பரம் - அவ்யயம். பரமாய்-ஸமர்த்தமாயென்றபடி. விபாகஜ்ஞாநத்தையென்றது-விபாகவிஷயகஜ்ஞாநத்தை யென்றபடி. பரிபூர்ணமாகஎன்றது-ஸம்பூர்ணமாக என்றபடி. என்கை - சொல்லுகை.

அதில் - அவச்யம் ஜ்ஞாதவ்யமான அந்த ரஹஸ்யத்ரயத்திலும், ப்ரதமரஹஸ்யம்-ப்ரஸ்துதனான அதிகாரிக்கு ப்ரதமத்திலே அறியத்தக்கரஹஸ்யம், திருமந்த்ரம் - ஸ்வரூபயாதாத்ம்யபரமாய் த்யாஜ்யோபாதேய விபாகஜ்ஞாநத்தை பரிபூர்ணமாகப் பிறப்பிக்குமதான திருமந்த்ரமாயிருக்குமென்று மூலார்த்தம்.

அநந்யார்ஹஶேஷத்வம், அநந்யஶரணத்வம், அநந்யபோகத்வமாகிற ஆகாரத்ரயத்தையும் ப்ரதிபாதிக்கையாலே சேதநஸ்வரூப யாதாத்ம்ய ப்ரதிபாதந பரமாய், தததுகுணமானத்யாஜ்யோபாதேயவிபாகத்தையும் ஸுஸ்பஷ்டமாக ப்ரதிபாதியாநின்றுள்ள இம்மந்த்ரத்தாலே ஸுசிக்ஷிதனானவனுக்கிறே, மற்ற ரஹஸ்யங்களிரண்டிலும் ப்ரதிபாதிக்கப்படுகிற உபாயோபேயங்களில் அபேக்ஷைஜநிப்பது. ஆகையாலே ஸ்வரூபயாதாத்ம்ய பரமான திருமந்த்ரம், ப்ரதமரஹஸ்யமென்னக்குறையில்லை.

இன்னமும், ப்ரணவத்துக்கு மந்த்ரஶேஷம் விவரணமானாப்போலே மந்த்ர ஶேஷத்துக்கு த்வயம் விவரணமாய், த்வயத்துக்கு சரமஶ்லோகம் விவரணமாயிறே யிருப்பது, அந்த ந்யாயத்தாலும் இதினுடைய ப்ராதம்யம்ஸித்தமிறே. ஆக இவையெல்லாவற்றையும் திருவுள்ளம்பற்றியாய்த்து, (ப்ரதமரஹஸ்யம் திருமந்த்ரம்) என்று இவாருளிச்செய்தது. இத்தை மந்த்ரமென்கிறது (𑌮𑌨𑌨𑌾𑌤𑍍𑌤𑍍𑌰𑌾𑌯𑌤 𑌇𑌤𑌿 𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌃) (மந்தாரஂத்ராயதஇதிமந்த்ர:) என்கிறபடியே-ஶப்தஶக்தியாலும் அர்த்தபோதநத்தாலும் தன்னையநுஸந்திப்பார்க்கு ரக்ஷகமாகையாலே.

---

தததுகுணமான-பூர்வோக்த ஆகாரத்ரயாநுகுணமான. உபாதேயாஂசங்களாவன-லக்ஷ்மீசேஷத்வமும், ததேகோபாயத்வமும், பாகவதசேஷத்வமும், பகவத்பாகவதகைங்கர்ய ப்ரார்த்தனையும். ஸுசிக்ஷிதனானவனுக்கிறே யென்றது-நன்றாக சிக்ஷிதனானவனுக்கிறே யென்றபடி. மற்றரஹஸ்யங்களிரண்டிலுமென்றது-சேஷித்தத்வய சரமச்லோக ரஹஸ்யங்களிரண்டிலுமென்றபடி. உபாயோபேயங்களில் அபேக்ஷை ஜநிப்பது என்றது-பகவானாகிற உபாயத்திலும், பகவத்கைங்கர்யமாகிற உபேயத்திலும் அபேக்ஷை யுண்டாகிறதென்றபடி. ஆகையாலே யென்றது-உபாயோபேயங்களில் அபேக்ஷை ஜநிப்பது ஸ்வரூபயாதாத்ம்யஜ்ஞாநபூர்வகமாகையாலே யென்றபடி. ஸ்வரூபயாதாத்ம்ய பரமான திருமந்த்ரம் ப்ரதமரஹஸ்யமென்னக்குறையில்லையென்றது-ப்ரதமஂ ஜ்ஞாதவ்யமான ரஹஸ்யம் திருமந்த்ரமென்று சொல்லுகையில் ஸஂசயமில்லையென்றபடி. இன்னமுமென்றது – கீழ்ச்சொன்ன ஹேதுக்களன்றிக்கே ஹேத்வந்தரத்தாலுமென்றபடி. மந்த்ரசேஷமென்றது - மந்த்ரமென்றுசொல்லப்பட்ட ப்ரணவத்துக்கு சேஷமென்றபடி. சேஷமென்கிறது - அதுக்கு வ்யாப்யமாகையாலே. இவ்விடத்தில் மந்த்ரசேஷமென்கிறது - நமஃபதத்தையும் நாராயணபதத்தையும். விவரணமாவது-ப்ரணவத்தில் சொன்ன அர்த்தத்தை விவரிக்கை. ஆக - இவ்வளவாக வென்றபடி. இவை - பூர்வோக்தங்களான அர்த்தங்கள். மந்தாரம் - அநுஸந்தாதாரம். சப்த்தத்துக்கு சக்தியாவது - பலப்ரதாநஸாமர்த்ய்ம்.

மூ.—திருமந்த்ரத்தினுடைய சீர்மைக்குப் போரும்படி ப்ரேமத்தோடேபேணி அநுஸந்திக்கவேணும்.

---

ஶப்தஶக்தியாலே ரக்ஷகமாம்-ஜபஹோமாதிகளாலே கார்யங்கொள்ளும் உபாஸகர்க்கு; அர்த்தபோதநத்தாலே ரக்ஷகமாம்-ஈஶ்வரனே உபாயோபேயமென்றிருக்கும் ப்ரபந்நர்க்கு. அர்த்தபோதநத்தாலே ரக்ஷகமாகையாவது - (దేహాసక్తాత్మబుద్ధిర్యదిభవతిపదం సాధువిద్యాత్తృతీయం స్వాతన్త్ర్యాన్ధోయదిస్యాత్ప్రథమ మితరశేషత్వధీశ్చేద్ద్వితీయమ్। ఆత్మత్రాణోన్ముఖశ్చేన్నమఇతిచపదం బాన్ధవాభాసలోలశ్శబ్దం నారాయణాఖ్యం విషయచపల ధీశ్చేచ్చతుర్థీం ప్రపన్నః) (தேஹாஸக்தாத்மபுத்திர்யதிபவதிபதம் ஸாதுவித்யாத்த்ருதீயம் ஸ்வாதந்த்ர்யாந்தோயதிஸ்யாத்ப்ரதமம் இதரசேஷத்வதீஶ்சேத்த்விதீயம்-ஆத்மத்ராணோந்முகஶ்சேத் நமஇதிசபதம் பாந்தவாபாஸலோலஶ்ஶப்தம் நாராயணாக்யம் விஷயசபலதீஶ்சேச்சதுர்த்தீம் ப்ரபந்ந:) என்று பட்டரருளிச்செய்தபடியே-தன்னை அநுஸந்திப்பார்க்கு தேஹாத்மாபிமாநமும், ஸ்வாதந்த்ர்யமும், அந்யஶேஷத்வமும், ஸ்வரக்ஷணேஸ்வாந்வயமும், அபந்துஸங்கமும், விஷயப்ராவண்யமும் மேலிடாதபடி பண்ணி ஸ்வரூபாநுரூபமாக நடக்கும்படிநோக்குகை.

வ்யா.—இனிமேல் இம்மந்த்ரத்தினுடைய வைபவத்தை விஸ்தரேண ப்ரதிபாதிப்பதாகத் திருவுள்ளம்பற்றி, ப்ரதமம் இதினுடைய அநுஸந்தாநக்ரமகதநமுகத்தாலே இதின்வைபவத்தையருளிச்செய்கிறார் (திருமந்த்ரத்தினுடைய என்று தொடங்கி.) திருமந்த்ரத்துக்குச் சீர்மையாவது - (ఋచోయజూంషిసామానితథైవాథర్వణాని చ। సర్వమష్టాక్షరాన్తస్థమ్) (ரிசோயஜூம்ஷிஸாமாநிததைவாதர்வணாநிச-ஸர்வமஷ்டாக்ஷராந்தஸ்தம்யச்சாந்யதபிவாங்மயம்) என்கிறபடியே ஸகலவேதஸங்க்ரஹமாய், "மற்றெல்லாம்பேசிலும்"

---

ஆதிசப்தத்தாலே - தர்ப்பண ப்ராஹ்மணபோஜந தக்ஷிணைகளைச்சொல்லுகிறது. அர்த்தபோதநமென்கிறது-தன்னிடத்திலுண்டான அர்த்தங்களை அறிவிப்பிக்கை. ஸ்வரூபாநுரூபமாக நடக்கும்படிபண்ணி நோக்குகையாவது - சேஷத்வபாரதந்த்ர்ய ஸ்வரூபத்துக்கு அநுரூபமாக யதேஷ்டவிநியோகார்ஹமாக யதேஷ்டவிநியுஜ்யமாநனால் அநந்யபோக்யமாக நடக்கும்படி பண்ணி நோக்குகை.

இப்படி (ப்ரதமரஹஸ்யம்திருமந்த்ரம்) என்கிறவாக்யத்துக்குஅர்த்தமருளிச்செய்து, மேல்வாக்யத்துக்கும் இதுக்கும்ஸங்கதியருளிச்செய்கிறார் (இனிமேலென்றுதொடங்கி.) அர்த்தமருளிச்செய்கிறார் (திருமந்த்ரத்துக்குச் சீர்மையாவதென்று தொடங்கி.) சீர்மையாவது - கௌரவம். ஸகலவேதஸங்க்ரஹமாயென்றது - லௌகிகஸகலசப்தத்துக்கும் வேதம்காரணமாய் அந்தவேதந்தனக்கும் ப்ரணவம் காரணமான வழியாலே.

என்கிறபடியே ஜ்ஞாதவ்ய ஸகலார்த்த ப்ரதிபாதகமாய், (మన్త్రాణాంపరమోమన్త్రో గుహ్యానాంగుహ్యముత్తమమ్। పవిత్రఞ్చపవిత్రాణాంమూలమన్త్రస్సనాతనః) (மந்த்ராணாம்பரமோமந்த்ரோ குஹ்யாநாம்குஹ்யமுத்தமம்-பவித்ரம்சபவித்ராணாம்மூலமந்த்ரஸ்ஸநாதந:) என்கிறபடியேமந்த்ரங்களில்வைத்துக்கொண்டு பரமமானமந்த்ரமாய், குஹ்யங்களில்வைத்துக்கொண்டு உத்தமமான குஹ்யமாய், பவித்ரங்களுக்கும் பவித்ரமாயிருக்கிற கௌரவம். சீர்மைக்கு, போரும்படி என்றது - தகும்படியென்கை. ப்ரேமத்தோடே பேணியநுஸந்திக்கை யாவது - இத்தை யநுஸந்திக்குமளவில் சுஷ்கஹ்ருதயனாயிருந்து அநுஸந்திக்கையன்றிக்கே, இதின்வைலக்ஷண்யஜ்ஞாநமடியாக இதின்பக்கல் தனக்குண்டான ப்ரேமத்தோடே, * குஹ்யாநாம்குஹ்யமானவிது அநதிகாரிகள் செவிப்படாதபடி, (మన్త్రం యత్నేన గోపయేత్) (மந்த்ரம்யத்நேநகோபயேத்) என்கிறபடியே பேணிக்கொண்டநுஸந்திக்கை. இப்படி யநுஸந்திக்கவேணுமென்கையாலே-ப்ரகாராந்தரேண அநுஸந்திக்கலாகாதென்கிற நியமம் தோற்றுகிறது.

இப்படி, தன்பக்கல் ப்ரேமமுண்டாகவே இம்மந்த்ரம் இவனுக்குக் கார்யகரமாமோவென்ன அருளிச்செய்கிறார்

---

ஜ்ஞாதவ்ய ஸகலார்த்தங்களாவன - அர்த்தபஞ்சகம்தத்ப்ரதிபாதகமாயென்றபடி. சுஷ்கஹ்ருதயனென்றது-தயார்த்ரஹ்ருதயனன்றிக்கேயிருக்கை. இதின்வைலக்ஷண்யஜ்ஞாநமடியாக என்றது-இம்மந்த்ரத்தினுடைய ஸகலவேதஸங்க்ரஹத்வஜ்ஞாதவ்யஸகலார்த்தப்ரதிபாதகத்வபரம மந்த்ரத்வஉத்தமரஹஸ்யத்வ பரமபவித்ரத்வரூப வைலக்ஷண்யஜ்ஞாந பூர்வகமாக. ப்ரேமத்தோடே-விச்வாஸத்தோடே. அநதிகாரிகள் செவிப்படாதபடி-முமுக்ஷுக்களல்லாதவர்களுடைய செவியில் யாத்ருச்சிகமாகவும் கேளாதபடி. பேணிக்கொண்டு-ரக்ஷித்துக்கொண்டு. நியமம்தோற்றுகிறது என்கையாலே-நியமாதிக்ரமம் பண்ணினானாகில் ஸந்மார்க்க ப்ரச்யுதனாவான் என்று அபிப்ராயம்.

திருமந்த்ரத்தினுடைய—, சீர்மைக்கு-ஸகலவேதஸங்க்ரஹத்வ ஜ்ஞாதவ்யஸகலார்த்த ப்ரதிபாதகத்வாதி கௌரவத்துக்கு, போரும்படி-தகும்படி, ப்ரேமத்தோடே-ப்ரீதியோடே, பேணி-அநதிகாரிகள் செவிப்படாதபடி ரக்ஷித்துக்கொண்டு, அநுஸந்திக்கவேணும்-அநுஸந்தாநம் பண்ணவேணுமென்று மூலார்த்தம்.

இப்படி-பூர்வோக்தப்ரகாரம். இவனுக்கு-வைலக்ஷண்யஜ்ஞாநபூர்வகமாக ப்ரேமமுடைய அநுஸந்தாதாவுக்கு.

மூ.—மந்த்ரத்திலும் மந்த்ரத்துக்குள்ளீடான வஸ்துவிலும் மந்த்ரப்ரதனான ஆசார்யன்பக்கலிலும் ப்ரேமம் கநக்கவுண்டானால் கார்யகரமாவது.

(மந்த்ரத்திலுமென்று தொடங்கி.) அதாவது - ஜ்ஞாதவ்யார்த்த ஜ்ஞாபகமான இம்மந்த்ரந்தன்னிலும், ஶேஷித்வ ஶரண்யத்வப்ராப்யத்வங்களாகிற ஆகாரத்ரயயுக்ததயா இம்மந்த்ரத்துக்கு வாச்ய வஸ்துவாயிருக்கிற ஈஶ்வரவிஷயத்திலும். (தந்மந்த்ரம் ப்ராஹ்மணாதீநம்) (தந்மந்த்ரம்ப்ராஹ்மணாதீநம்) என்கிறபடியே இம்மந்த்ரம் ஆசார்யாதீநமாயிருப்பதொன்றாகையாலே இத்தை யதாப்ரதிபத்தி யுக்தனையக்கொண்டு தனக்கு உபகரித்த ஆசார்யவிஷயத்திலும் தத்தத்வைலக்ஷண்யாநுரூபமாக ப்ரேமம் அதிசயேநவுண்டானால் இவனுக்கு கார்யகரமாவதென்கை.

அதாவது-கார்யகரமாவதுஎன்று சொன்னதாவது. ஜ்ஞாதவ்யார்த்தஜ்ஞாபகம்- அர்த்தபஞ்சகப்ரதிபாதகம். இம்மந்த்ரந்தன்னிலும்- இந்தத்திருமந்த்ரத்திலும். சேஷித்வமாவது-சேஷபூதராலுண்டான அதிசயத்துக்கு ஆச்ரயமாயிருக்கை. சரண்யத்வமாவது-அசரண்யரானவர்களுக்குஸர்வப்ரகாரத்தாலும்ரக்ஷகனாயிருக்கை. ப்ராப்யத்வமாவது-பரமபுருஷார்த்ததயா அபிமதமாயிருக்கை. ஆகாரத்ரயயுக்ததயா - ஆகாரத்ரயத்தோடேகூடியிருக்கையாலே. இம்மந்த்ரத்துக்கு-பதத்ரயாத்மகமானஇந்தத்திருமந்த்ரத்துக்கு. ப்ரணவத்தில் சேஷித்வேநவும், நமஃபதத்தில் சரண்யத்வேநவும், நாராயணபதத்தில் கர்மணிவ்யுத்பத்தியாலே ப்ராப்யத்வேநவும் வாச்யவஸ்துவாயிருக்கிற ஈச்வரவிஷயத்திலும். இத்தை-ஆசார்யாதீநமான இம்மந்த்ரத்தை. யதாப்ரதிபத்தியுக்தனையக் கொண்டு என்றது-உபதேஷ்டாவானதன்னை ஆசார்யனென்று நினைக்கையும், உபதேசபாத்ரனானசிஷ்யனைத் தனக்கு சிஷ்யனென்று நினைக்கையும், உபதேசத்துக்கு அர்த்த சுச்ரூஷாதித்ருஷ்டப்ரயோஜநத்தை பலமாகநினைக்கையுமாகிற விப்ரதிபத்தியின்றிக்கே, உபதேஷ்டாவான தன்னை உபதேசஸமயத்தில் தன்னுடைய ஆசார்யனையே இவனுக்கு உபதேஷ்டாவாகவும், தான் அங்குத்தைக்கு கரணபூதனாகவும், உபதேசபாத்ரனான சிஷ்யனையும் தன்னைப்போலே தன்னாசார்யனுக்கு சிஷ்யனாக ப்ரதிபத்திபண்ணுகையும், பரோபதேசம் பண்ணுமளவில் இவ்வாத்மா திருந்தி, (ஆளுமாளார்) என்கிற விஷயத்துக்கு மங்களாசாஸநத்துக்கு ஆளாகவேணுமென்னு மதுவே பலமாக உபதேசிக்கை யதாப்ரதிபத்தியுக்தனையக் கொண்டென்றபடி. தனக்கு-அதிநீசனான தனக்கு. ஆசார்யவிஷயத்திலும்-பகவத்ப்ராப்தியைப் பண்ணிக்கொடுக்க வல்லனான ஆசார்யவிஷயத்திலும். மந்த்ரத்துக்கு வைலக்ஷண்யமாவது - ஸகலவேதஸங்க்ரஹத்வாதிகள். ஈச்வரனுக்கு வைலக்ஷண்யமாவது-ஸர்வசேஷித்வாதிகள். ஆசார்யனுக்கு வைலக்ஷண்யமாவது-உபதேஷ்டாவான தன்னை என்று தொடங்கி, யதாப்ரதிபத்தி யுக்தனையென்னுமளவாகச் சொன்னதெல்லாம்.

மூ.—ஸ௦ஸாரிகள் தங்களையும் ஈஶ்வரனையும் மறந்து,

---

வ்யா.—(మన్త్రే తద్దేవతాయాఞ్చ తథా మన్త్రప్రదే గురౌ । త్రిషు భక్తిస్సదా కార్యా సా హి ప్రథమసాధనమ్) (மந்த்ரேதத்தேவதாயா௦சததாமந்த்ரப்ரதே குரௌ-த்ரிஷுபக்திஸ்ஸதாகார்யாஸாஹிப்ரதமஸாதநம்) என்னக்கடவதிறே.

இனி, இம்மந்த்ரத்தினுடைய அவதரணப்ரகார கதந முகத்தாலே இதினுடைய அப்ரதிமவைபவத்தை யருளிச்செய்கிறார் (ஸ௦ஸாரிகள் என்றுதொடங்கி.) ஸ௦ஸாரிகளாகிறார்-அநாத்யசித்ஸம்பந்தத்தாலே ப்ரவாஹரூபேணவருகிற அவித்யாகர்மவாஸநாருசிவிவஶராய் ஜந்மமரணாதிக்லேஶபாகிகளாய்த்திரிகிறபத்த சேதநர்.(தங்களையு மீஶ்வரனையும்மறந்து)என்றது-(దాసభూతాస్స్వతస్సర్వే హ్యాత్మానః పరమాత్మనః। నాన్యథాలక్షణం తేషాం బన్ధే మోక్షే తథైవ చ)(தாஸபூதாஸ்ஸ்வதஸ்ஸர்வே ஹ்யாத்மாநஃபரமாத்மநஃ - நாந்யதாலக்ஷண௦ தேஷா௦பந்தேமோக்ஷேததைவச) என்கிறபடியே ஸ்வதஸ்ஸித்தமான பகவச்சேஷத்வத்தை லக்ஷணமாகவுடையராயிருக்கிற தங்களையும், (పతిం విశ్వస్య) (பதி௦விஶ்வஸ்ய) (స్వామిత్వం బ్రహ్మణి స్థితమ్)(ஸ்வாமித்வ௦ப்ரஹ்மணிஸ்திதம்) இத்யாதிகளிற் சொல்லுகிறபடியே தங்களுக்கு நிருபாதிகஶேஷியாயிருக்கிற ஈஶ்வரனையும் அறியாதேயென்கை. ஆனால்அறியாமலென்னாதேமறந்துஎன்பானென், முன் பொருக்கால்நினைத்துப் பின்பு அந்நினைவுக்கு ப்ரச்யுதிவந்தவிடத்திலிறே மறந்து என்னலாவதென்னில்; "மறந்தேனுன்னை முன்னம்" என்கிறபடியே ஸ்வதஸ்ஸித்தமான ஸம்பந்தத்தை யுணர்ந்தால், முன்புநினைத்திருந்த அர்த்தத்தை மறந்தாப்போலேயிருக்கும் ஸம்பந்தத்திலுறைப்பை நினைத்து அருளிச்செய்தாராமித்தனை.

---

மந்த்ரத்திலும் - ஜ்ஞாதவ்யார்த்த ஜ்ஞாபகமான மந்த்ரத்திலும், மந்த்ரத்துக்குள்ளீடான வஸ்துவிலும்-மந்த்ரத்துக்கு சேஷித்வ சரண்யத்வ ப்ராப்யத்வேநவாச்யனான ஈச்வரவிஷயத்திலும், மந்த்ரப்ரதனான ஆசார்யன் பக்கலிலும்-இம்மந்த்ரத்தை யதாப்ரதிபத்தியுக்தனாய் உபகரித்த ஆசார்யவிஷயத்திலும், ப்ரேமம் கனக்கவுண்டானால்-ப்ரேமம் அதிசயேந உண்டானால், கார்யகரமாவது என்று மூலார்த்தம்

இனி-இனிமேல். அப்ரதிமவைபவத்தை-அஸத்ர்சமான வைபவத்தை. திரிகிற-பிறப்பது சாவதாய்த்திரிகிற. லக்ஷணமாகவுடையராயிருக்கிற-ஸ்வரூபமாகவுடையராயிருக்கிற வென்றபடி. நிருபாதிகசேஷியாயிருக்கிறவென்றது - கர்மோபாதிகமான சேஷிகளைப்போலன்றிக்கேஸ்வதஶ்ஶேஷியாயிருக்கிறவென்றபடி. ஸம்பந்தத்திலுறைப்பை நினைத்தென்றது - நிருபாதிகஸம்பந்தமாகையாலே யாவதாத்மபாவி த்ர்டமாயிருக்கையை நினைத்தென்றபடி.

மூ.—ஈஶ்வரகைங்கர்யத்தையும் இழந்து, இழந்தோமென்கிற விழவுமின்றிக்கே, ஸம்ஸாரமாகிறபெருங்கடலிலே விழுந்து நோவுபட,

---

வ்யா.—(ஈஶ்வரகைங்கர்யத்தையும் இழந்து) என்றது-கீழ்ச்சொன்ன அஜ்ஞாநத்தாலே வருத்தஶேஷியான ஈஶ்வரவிஷயத்தில் கைங்கர்யமாகிற பரமபுருஷார்த்தத்தையும் ப்ராபிக்கப்பெறுதேயென்கை. புருஷார்த்தத்தினுடைய கௌரவத்தையும், அதுக்கிட்டுப் பிறந்துவைத்து கிட்டப்பெறுமல் கிடந்தபடியையும் நினைத்து, (இழந்து) என்கிறுர். (இழந்தோமென்கிறஇழவுமின்றிக்கே) என்றது - ஸ்வஸ்வரூப பரஸ்வரூபஜ்ஞாநமும் புருஷார்த்தஜ்ஞாநமும் இல்லாமையாலே ஸ்வஶேஷத்வாநுரூபமான ஶேஷிவிஷய கைங்கர்யரூப புருஷார்த்தத்தைஇழந்தோமென்கிற அலாபக்லேசந்தானுமின்றிக்கேயென்கை.

(ஸம்ஸாரமாகிற பெருங்கடலிலேவிழுந்து நோவுபட) என்றது - (సంసారసాగరం ఘోరమనన్తక్లేశభాజనమ్) (ஸம்ஸாரஸாகரம்கோரமநந்தக்லேசபாஜநம்) என்கிறபடியே - அநந்தக்லேஶபாஜநமாய், ஒருவராலும் ஸ்வயத்நத்தால் கரைகாணவரிதாம்படியிருக்கிற ஸம்ஸாரமாகிற மஹாஸமுத்ரத்துக்குள்ளே விழுந்து தாபத்ரயாபிபூதராய்க்கொண்டு க்லேஶப்படவென்கை. இத்தால் - தங்களையும் ஈஶ்வரனையும் அறியாமையாலும், புருஷார்த்தத்தையறியாமையாலும், ஸம்ஸாரஸமுத்ரத்துக்குள்ளேகிடந்து நோவுபடாநிற்க, விரோதியான ஸம்ஸாரந்தன்னையும், தந்நிஸ்தாரணோபாயத்தையு மறியாமையாலும், ஜ்ஞாதவ்யமான அர்த்தபஞ்சகத்திலும் ஒன்றையும் அறியாமற்கிடந்தார்களென்கை.

---

கீழ்ச்சொன்ன அஜ்ஞாநத்தாலே என்றது - மறந்து என்கிறபதத்தாலே சொல்லப்பட்ட அஜ்ஞாநத்தாலேயென்றபடி. பரமபுருஷார்த்தத்தையும்-இதுக்குமேல்பட்ட புருஷார்த்த மில்லாமையாலே பரமபுருஷார்த்தமென்றபடி. அதுக்கு இட்டுப்பிறந்து வைத்து என்றது-அந்தகைங்கர்யரூப பரமபுருஷார்த்தத்துக்காகப்பிறந்தென்றபடி. வைத்துஎன்றது-சாரியைச்சொல்லு. கிட்டப்பெறுமல் கிடந்தபடியையும் - அதுசெய்யப்பெறுமல் விஷயாந்தரப்ரவணராயிருந்தப்ரகாரத்தையுமென்றபடி. இழந்தோமென்கிற இழவுமின்றிக்கே - ஸ்வஸ்வரூப பரஸ்வரூப புருஷார்த்தஸ்வரூப விஷயகஜ்ஞாநமுண்டாகில் ஸ்வசேஷத்வாநுரூபமான சேஷிவிஷயகைங்கர்யரூப புருஷார்த்தத்தைஇழந்தோமென்று அலாபத்தில் க்லேசமுண்டாம், ஸ்வஸ்வரூபாதிஜ்ஞாநமில்லாமையாலே இழந்தோமென்கிற அலாப க்லேசந்தானும் இல்லாமல் என்கை. இத்தால் என்றது - (ஸம்ஸாரிகள் தங்களையும்) என்கிற இச்சூர்ணையாலென்றபடி.

மூ.—ஸர்வேஶ்வரன் தன்க்ருபையாலே, இவர்கள் தன்னையறிந்து கரைமரஞ்சேரும்படி,

---

வ்யா.—(ప్రాప్యస్యబ్రహ్మణోరూపమ్) (ப்ராப்யஸ்யப்ரஹ்மணோரூபம்) இத்யாதிப்படியே ஸகலஶாஸ்த்ரங்களும் ப்ரதிபாதிப்பது அர்த்தபஞ்சகத்தையுமிறே.

அவ்வர்த்தங்களை இவர்களுக்கு ஸங்க்ரஹமாக அறிவிக்கைக்காக, ஸகலஶாஸ்த்ர ஸங்க்ரஹமான திருமந்த்ரத்தை ஸர்வேஶ்வரன் வெளியிட்ட ப்ரகாரத்தைச் சொல்லுகிறது மேல். (ஸர்வேஶ்வரன் தன்க்ருபையாலே) என்றது - (ఈశేశితవ్యసమ్బన్ధాదనిదంప్రథమాదపి) (ஈஶேஶிதவ்யஸம்பந்தா தநிதம்ப்ரதமாதபி) என்கிறபடியே -அநாதியாக ஸர்வரோடு முண்டான ஈஶேஶிதவ்ய ஸம்பந்தத்தையுடையனான எம்பெருமான், (ఏవంసంసృతిచక్రస్థే భ్రామ్యమాణేస్వకర్మభిః । జీవేదుఃఖాకులేవిష్ణోః కృపాకాప్యుపజాయతే) (ஏவம்ஸம்ஸ்ருதிசக்ரஸ்தே ப்ராம்யமாணேஸ்வகர்மபி: - ஜீவேதுஃகாகுலேவிஷ்ணோஃக்ருபாகாப்யுபஜாயதே) என்கிறபடியே இவர்கள் படுகிற துஃகதர்ஶநமாத்ரத்தாலுண்டான தன்னுடைய நிர்ஹேதுக க்ருபையாலே யென்கை. (இவர்கள் தன்னையறிந்து கரைமரஞ்சேரும்படி) என்றது - இப்படி ஸம்ஸாரஸாகரத்திலே கிடந்து நோவுபடுகிற விவர்கள், (త్వామేవశరణంప్రాప్యనిస్తరన్తిమనీషిణః) (த்வாமேவஶரணம் ப்ராப்ய நிஸ்தரந்திமநீஷிண:) என்றும், (సంసారార్ణవమగ్నానాం విషయాక్రాన్తచేతసామ్ । విష్ణుపోతంవినానాన్యత్కిఞ్చిదస్తిపరాయణమ్) (ஸம்ஸாரார்ணவமக்நாநாம் விஷயாக்ராந்தசேதஸாம் - விஷ்ணுபோதம்விநா நாந்யத் கிம்சிதஸ்திபராயணம்) என்றும் சொல்லுகிறபடியே ஸம்ஸாரநிஸ்தரணோபாய பூதனான தன்னையறிந்து ஸம்ஸாரஸாகரத்தைக்கடந்து அக்கரைப்படும்படியென்கை.

---

இத்யாதிப்படியே-இத்யாதிகளில் சொல்லுகிறபடியே, அர்த்தபஞ்சகத்தையுமிறே-ஸகலசாஸ்த்ரங்களும்ப்ரதிபாதிப்பதுஎன்றந்வயம்.

அவ்வர்த்தங்களையென்றது - ஸகலசாஸ்த்ர ப்ரதிபாதிதமான அர்த்தபஞ்சகங்களை யென்றபடி. இவர்களுக்கு - அர்த்தபஞ்சக ஜ்ஞாநசூந்யராய் ஸம்ஸாரமாகிற மஹாஸமுத்ரத்துக்குள்ளே விழுந்து தாபத்ரயாபிபூதராய்க்கொண்டு க்லேசப்படுகிற ஸம்ஸாரிகளுக்கென்றபடி. இப்படி - இந்தப்ரகாரம். [ஸம்ஸாரார்ணவமக்நாநாமிதி] ஸம்ஸாரமாகிற ஸமுத்ரத்திலே முழுகி சப்த்தாதிவிஷயங்களாலே ஆக்ரமிக்கப்பட்ட நெஞ்சையுடையவர்களுக்கு, ஸர்வவ்யாபகனாய் தந்நிஸ்தரணோபாய பூதனான ஸர்வேச்வரனைவிட்டு மற்றொருஸாதநமானது கொஞ்சமுமில்லையென்றபடி. விஷ்ணுபோதம்-இக்கரையோடு அக்கரையோடு வ்யாபகமான போதமென்றபடி. போதம்-ஓடம். அக்கரைப்படும்படியென்றது-பரமபதத்தேயேறும்படி யென்றபடி.

மூ.—தானேசிஷ்யனுமாய், ஆசார்யனுமாய்நின்று திருமந்த்ரத்தை வெளியிட்டருளினான்.

---

(தானேஶிஷ்யனுமாய், ஆசார்யனுமாய்நின்று) என்றது - "நரநாரணனாயுலகத்தறநூல் சிங்காமைவிரித்தவன்" என்கிறபடியே-நரநாராயணரூபேணவவதரித்து நரனானதான் ஶிஷ்யனுமாய், நாராயணனானதான் ஆசார்யனுமாய்நின்றதென்கை.

(திருமந்த்ரத்தை வெளியிட்டருளினான்) என்றது - ஸகலசாஸ்த்ரஸங்க்ரஹமாய், அந்தஶாஸ்த்ர தாத்பர்யமான அர்த்தபஞ்சகத்தையும் ஸுஸ்பஷ்டமாக ப்ரதிபாதியாநிற்கும் திருமந்த்ரத்தை ப்ரகாஶிப்பித்தருளினானென்கை. அருளிச்செய்தான் என்னாதே வெளியிட்டருளினா னென்றது - இப்போது, தான்ஒன்றை நிர்மித்துச்சொன்னானல்லன், அநாதியானத்தை ப்ரகாஶிப்பித்தா னித்தனையென்னுமிடமும், அதிகுஹ்யமாயுள்ளத்தை இவர்கள்துர்க்கதிகண்டு ஸஹிக்கமாட்டாமையாலே ப்ரகாஶிப்பித்தானென்னுமிடமும் தோற்றுகைக்காக.

---

ஸகலசாஸ்த்ரஸங்க்ரஹமான என்றது-ஸகலவேத ஸங்க்ரஹமான வென்றபடி. (ஸுஸ்பஷ்டமாக ப்ரதிபாதியாநிற்கிற) ப்ரணவத்தாலே-ப்ரத்யகாத்ம ஸ்வரூபத்தையும், நமஸ்ஸாலே-விரோத்யுபாய ஸ்வரூபங்களையும், நாராயணசப்த்தத்தாலே - பரஸ்வரூபத்தையும், அதில் சதுர்த்தியாலே-பலஸ்வரூபத்ஸதயும் சப்ததயா ப்ரதிபாதியாநிற்கிறவென்றபடி.

ஸம்ஸாரிகள் - அநாத்யவித்யா ஸம்பந்தத்தாலே ப்ரவாஹரூபேண வருகிற அவித்யாகர்மவாஸநா ருசி விவசராய்த்திரிகிற பத்தசேதநர், தங்களையும் - சேஷபூதரென்று தங்களையும், ஈச்வரனையும் - சேஷியென்று ஈச்வரனையும், மறந்து-அறியாதே, ஈச்வர கைங்கர்யத்தையும்-ப்ராப்தசேஷிவிஷயத்தில் கைங்கர்யத்தையும், இழந்து - லபிக்கமாட்டாதே, இழந்தோமென்கிற இழவுமின்றிக்கே - இழந்துபோனோமென்கிற க்லேசமுமில்லாதே, ஸம்ஸாரமாகிற பெருங்கடலிலே-ஸம்ஸாரமாகிற மஹாஸமுத்ரத்துக்குள்ளே, விழுந்து நோவுபட - அதலேபதிதராய் தாபத்ரயாபிபூதராய் க்லேசப்படாநிற்க, ஸர்வேச்வரன்-ஸர்வரோடும் தனக்குண்டான ஸ்வஸ்வாமிபாவஸம்பந்தத்தையுடைய வெம்பெருமான், தன்க்ருபையாலே-தன்னுடைய நிர்ஹேதுகக்ருபையாலே, இவர்கள்—ஸம்ஸாரமாகிற மஹாஸமுத்ரத்திலே யிருந்து நோவுபடுகிற இவர்கள், (மரம்-தன்னை அறிந்து) - நிஸ்தரணோபாயபூதனான தன்னையறிந்து, கரைசேரும்படி—,தானே-ஸர்வேச்வரனானதானே,சிஷ்யனுமாய் - நரரூபியான சிஷ்யனுமாய், ஆசார்யனுமாய்நின்று - நாராயணரூபியான ஆசார்யனுமாய் நின்றிருந்து, திருமந்த்ரத்தை-ஸகலசாஸ்த்ர ஸங்க்ரஹமாய் அர்த்தபஞ்சகத்தை ஸுஸ்பஷ்டமாக ப்ரதிபாதியாநிற்கிற திருவஷ்டாக்ஷரியை, வெளியிட்டருளினான் - ப்ரகாசிப்பித்தருளினான் என்று மூலார்த்தம்.

மூ.—ஶிஷ்யனாய் நின்றது ஶிஷ்யனிருக்கு மிருப்பு நாட்டா ரறியாமையாலே அத்தையறிவிக்கைக்காக.

---

வ்யா.— ஆனால் ஆசார்யனாய்நின்று வெளியிட்டருளிவிட அமையாதோ, ஶிஷ்யனாய்நின்றதேதுக்காகவென்ன அருளிச்செய்கிறார் (சிஷ்யனாயென்றுதொடங்கி.) அதாவது – ஆசார்யனாய் நின்று வெளியிட்டருளினவளவன்றிக்கே, தானே ஶிஷ்யனுமாய்க் கொண்டுநின்றது- (ఆస్తికో ధర్మశీలశ్చ శీలవాన్ వైష్ణవశ్శుచిః। గమ్భీరశ్చతురో ధీర శ్శిష్య ఇత్యభిధీయతే) (ஆஸ்திகோ தர்மசீலஶ்ச ஶீலவாந்வைஷ்ணவஶ்ஶுசி: - கம்பீரஶ்சதுரோ தீரஶ்ஶிஷ்யஇத்யபிதீயதே) (శరీరం వసు విజ్ఞానం వాసః కర్మ గుణానసూన్। గుర్వర్థం ధారయేద్యస్తు స శిష్యో నేతరస్స్మృతః) (ஶரீரம் வஸு விஜ்ஞாநம் வாஸ:கர்மகுணாநஸூந் - குர்வர்த்தம்தாரயேத்யஸ்துஸசிஷ்யோநேதரஸ்ம்ர்த:) (సద్బుద్ధిస్సాధుసేవీ సముచితచరిత స్తత్త్వబోధాభిలాషీ శుశ్రూషుస్త్యక్తమానః ప్రణిపతనపరః ప్రశ్నకాలప్రతీక్షః। శాన్తో దాన్తోఽనసూయుశ్శరణముపగతశ్శాస్త్రవిశ్వాసశాలీ శిష్యః ప్రాప్తః పరీక్షాం కృతవిదభిమతం తత్త్వతశ్శిక్షణీయః

---

[ఆస్తికః - ஆஸ்திகஇதி] சாஸ்த்ரவிச்வாஸமுடையனாய், சாஸ்த்ரோக்ததர்மங்களை அநுஷ்டிக்கவேணுமென்கிற மனமுடையனாய், ததநுரூபமான ஆசாரமுடையனாய், ஸகலசாஸ்த்ர தாத்பர்யமான விஷ்ணுபக்தியையுடையனாய், பூர்வோக்தகுணங்களால் வந்த உத்கர்ஷரூபாஹங்காரம் நெஞ்சில் தட்டாதவனாய், ஆசார்யவிஷயத்தில் தனக்குண்டான பாவபந்தம் பிறரால் அறியவொண்ணாதஸ்வபாவனாய், ஆசார்யாநுவர்த்தநத்தில் அவன் முகமலர்த்திக்குறுப்பானஆசார்ய கைங்கர்யத்தில் தைர்யமுடையனாயிருக்குமவன் சிஷ்யனென்று சொல்லப்படுவானென்றபடி. [శరీరమ్ - ஶரீரமிதி] சரீர அர்த்த ப்ராண க்ர்ஹ க்ஷேத்ர புத்ர தாராதிகளொன்றும் தனக்கு சேஷமென்று நினையாதே அங்குத்தைக்கே சேஷமாக்கி ப்ர்தக்ப்ரயத்நமொன்றுமின்றிக்கே அவன்நினைவிலேயொதுங்கி க்ரயவிக்ரயார்ஹனாயிருக்குமவன்சிஷ்யனென்று சொல்லப்படுவான்என்று சொல்லிற்றிறே.ந்யாஸவித்யையில் வேதாந்தாசார்யர் அருளிச்செய்தது; [సద్బుద్ధిః - ஸத்புத்திரிதி] ஸத்விஷயங்களிலே ப்ரவணமான புத்தியையுடையனாய், ஸாதுஸேவாரதனாய், ததநுஷ்டாநஸம்பந்நனாய், தத்வஜ்ஞாநாபேக்ஷயுடையனாய், சுச்ருஷாநிரதனாய், நிரபிமாநியாய், ப்ரணிபாதநமஸ்க்ரியாபரனாய், ப்ரச்நகாலநிரீக்ஷகனாய், பாஹ்யாப்யந்தர இந்த்ரிய நிக்ரஹமுடையனாய், பிறருயர்த்தி ஸஹிக்கமாட்டாத அஸூயையில்லாதவனாய், சரணாகதனாய், சாஸ்த்ரவிச்வாஸமுடையனாய், உபகாரத்தை அறியுமவனாய், அபிமதனான சிஷ்யன் ப்ராப்தனானால் உள்ளபடிசிக்ஷிக்கத்தக்கவன் என்றபடி.

ஸத்புத்திஸ்ஸாதுஸேவீ ஸமுசிதசரிதஸ்தத்யக்த போதாபிலாஷீஶு-ஶ்ரூஷு-ஸ்த்யக்தமாநப்ரணிபதநபர:ப்ரஶ்நகாலப்ரதீக்ஷ:-ஶாந்தோதாந்தப்ரஶர்ந்த ஶ்ஶரணமுபகதஶ்ஶாஸ்த்ரவிஶ்வாஸ சாலீ சிஷ்யப்ராப்தபரீக்ஷாம் க்ர்தவிதபிமதம் தத்வதஶ்ஶிக்ஷணீய: ) இத்யாதிகளிற் சொல்லுகிறபடிகளும், ஸாத்யாந்தரநிவர்த்தியும், பலஸாதநஶுஶ்ரூஷையும், ஆர்த்தியும், ஆதரமும், அநஸூயையையுமுடையனா யிருக்கையுமாகிற ஶிஷ்யலக்ஷணம் லோகத்திலுள்ளாரறியாமையாலே, அத்தை ஸ்வாநுஷ்ட்டாநத்தாலே யறிவிக்கைக்காகவென்கை. உபதேஶத்தாலே யறிவிக்குமளவில் ஸ்வோத்கர்ஷம்தேடிக்கொள்ளவந்தானித்தனையென்று நினைக்கவுங்கூடும். அநுஷ்ட்டாநத்தாலே யறிவிக்குமளவில் நமக்கும் இதுவேணுமென்று விஶ்வஸித்து பரிக்ரஹிக்கைக்கு உடலாயிருக்குமிறே.

இப்படி ஶிஷ்யனாய்நின்று இம்மந்த்ரஶிக்ஷைபண்ணிஇவ்வழியாலேஜ்ஞாநம்பிறக்கவேணுமோ, "ஞாநக்கலைகள்"என்கிறபடியே ஸகலஶாஸ்த்ரங்களும் ஜ்ஞாநஸாதநமாயன்றோ இருப்பது, அவற்றை யப்யஸித்து அவ்வழியாலே ஜ்ஞாநம் பிறந்தாலோவென்ன

---

படிகளும் - க்ரமங்களும். ஸாத்யாந்தர நிவர்த்தியாவது-ஸ்வரூபவிரோதியான ஐச்வர்யகைவல்யங்களாகிற ப்ராப்யாந்தரத்தில் மறந்தும் அந்வயமற்றிருக்கை. பலஸாதநசுச்ரூஷையாவது-ஆசார்யர் தனக்குஉபகரிக்கிறதத்வஜ்ஞாநமாகிற பலத்தினுடையஸித்திக்கு ஸாதநமாயிருந்துள்ள ஆசார்யபரிசர்யை; ஆசார்யமுகோல்லாஸமாகிற பலத்துக்கு ஸாதநமான தத்பரிசர்யை யென்னவுமாம். ஆர்த்தியாவது - "இருள்தருமாஞாலம்" என்கிறபடியே பிறந்த ஜ்ஞாநத்துக்கு விரோதியான இவ்விபூதியில்நின்றும் கடுகப்போகப் பெறாமையாலுள்ள க்லேசமாகவுமாம்; அன்றிக்கே, ஆசார்யவிக்ரஹாநுபவாஉலாபத்தில் க்லேசமாகவுமாம். ஆதரமாவது - உத்தரோத்தரம் அநுபுபூஷை விளையும்படி ஆசார்யனருளிச்செய்கிற பகவத்குணாநுபவத்தில் மேன்மேலு முண்டாகாநிற்கிற விருப்பம். அநஸூயையாவது - ஆசார்யன் பாகவத கைங்கர்யங்களை பரக்க உபபாதியாநின்றால் அதில் அஸூயையற்றிருக்கை. சிஷ்யலக்ஷணம் - சிஷ்யஸ்வரூபம். லோகத்திலுள்ளார் - லோகத்தில் ஜநங்கள்அறியாமையாலே, அத்தை-அந்தசிஷ்யலக்ஷணத்தை, அறிவிக்கைக்காக-ஸ்வாநுஷ்டாநத்தாலே அறிவிக்கைக்காக என்றபடி. இறே - ப்ரஸித்தம்.

சிஷ்யனாய் நின்றது - தானே சிஷ்யனாய்க்கொண்டு நின்றது, சிஷ்யனிருக்குமிருப்பு - ஸாத்யாந்தரநிவர்த்தியும் பலஸாதநசுச்ரூஷையும் ஆர்த்தியும் ஆதரமும் அநஸூயையையுமுடையனாயிருக்கையாகிற சிஷ்யலக்ஷணம், நாட்டாரறியாமையாலே - லோகத்திலுள்ளா ரறியாமையாலே, அத்தை - அந்த சிஷ்யலக்ஷணத்தை, அறிவிக்கைக்காக என்று மூலத்துக்கு அர்த்தம்.

மூ.—ஸகலஶாஸ்த்ரங்களால் பிறக்கும் ஜ்ஞாநம் ஸ்வயமார்ஜிதம்போலே, திருமந்த்ரத்தால் பிறக்கும் ஜ்ஞாநம் பைத்ர்கதநம்போலே. பகவந்மந்த்ரங்கள்தானநேகங்கள்.

---

ஶாஸ்த்ரஜந்யஜ்ஞாநத்துக்கும் இம்மந்த்ரஜந்ய ஜ்ஞாநத்துக்கும் உண்டான விஶேஷத்தை ஸத்ருஷ்டாந்தமாக வருளிச்செய்கிறார் (ஸகலஶாஸ்த்ரங்களாலென்று தொடங்கி.) அதாவது-தத்வஜ்ஞாநஜநகங்களான ஶ்ருதிஸ்ம்ருத்யாதி ஸகல ஶாஸ்த்ரங்களாலும் சேதநருக்குப் பிறக்கும் ஜ்ஞாநம் ஸ்வயமார்ஜித தநம்போலே அத்யாயாஸலப்யமாயிருக்கும்; ஆசார்யோபதேசமடியாகத் திருமந்த்ரத்தால் பிறக்கும் ஜ்ஞாநம், பைத்ர்கதநம்போலே அநாயாஸலப்யமா யிருக்குமென்கை. (శాస్త్రజ్ఞానం బహుక్లేశం బుద్ధేశ్చలన కారణమ్। ఉపదేశాద్ధరిం బుద్ధ్వా విరమేత్సర్వకర్మసు) (சாஸ்த்ரஜ்ஞாநం பஹுக்லேசம்புத்தேஶ்சலநகாரணம் - உபதேசாத்தரிం புத்த்வா விரமேத் ஸர்வகர்மஸு) என்னக்கடவதிறே. இத்தால் - ஶாஸ்த்ரங்களிற்காட்டில் தத்ஸங்க்ரஹமான திருமந்த்ரத்துக்குண்டான வைபவஞ்சொல்லிற்றாய்த்து.

ஆனால் ஶாஸ்த்ரங்களொழிந்ததாகிறது, பகவந்மந்த்ரந்தான் இதொன்றுமன்றே, பின்னையும் பலவில்லையோவென்கிற ஶங்கையிலே மந்த்ராந்தரங்களிற்காட்டில் இதுக்குண்டான வைபவத்தையருளிச் செய்வதாகத் திருவுள்ளம்பற்றி, (பகவந்மந்த்ரங்கள் தானநேகங்களென்கிறார்.) அதாவது-(ఆస్తాం తే గుణరాశివద్గుణపరీవాహాత్మనాం జన్మనాం సంఖ్యా) (ஆஸ்தாంதேகுணராஶிவத்குணபரீவாஹாத்மநாంஜந்மநாంஸங்க்யா) (బహవో నృప కల్యాణగుణాః పుత్రస్య సన్తి తే। తవానన్తగుణస్యాపి షడేవ ప్రథమే గుణాః)(பஹவோநர்பகல்யாணகுணாঃபுத்ரஸ்யஸந்திதே-தவாநந்தகுணஸ்யாபி ஷடேவப்ரதமேகுணாঃ)(బహూని మే వ్యతీతాని జన్మాని తవ చార్జున) என்றும் “எண்ணில்தொல்புகழ்” என்றும், “எந்நின்றயோநியுமாய்ப் பிறந்தாய்” என்றும், இத்யாதிகளிற் சொல்லுகிறபடியே பகவத்குணங்களும், குணபரீவாஹரூபங்களான

---

இத்தால் - ஸகலசாஸ்த்ரங்களால் என்கிற இவ்வாக்யத்தால்.

ஸகல சாஸ்த்ரங்களால் - ச்ருதிஸ்ம்ருத்யாதி ஸகலசாஸ்த்ரங்களாலும், பிறக்கும் ஜ்ஞாநம் - சேதநருக்குப் பிறக்கும் ஜ்ஞாநம், ஸ்வயமார்ஜிதம்போலே-ஸ்வயமார்ஜித தநம்போலே அத்யாயாஸலப்யமா யிருக்கும்; திருமந்த்ரத்தால் பிறக்கும் ஜ்ஞாநம் - ஆசார்யோபதேச பூர்வகமாகத் திருமந்த்ரத்தால் பிறக்கும் ஜ்ஞாநம், பைத்ர்கதநம்போலே - பிதாதேடினதநம்போலே அநாயாஸலப்யமாயிருக்குமென்று மூலத்துக்கு அர்த்தம்.

ஆனாலென்றது - ச்ருதிஸ்ம்ருத்யாதி ஸகலசாஸ்த்ரங்களால் பிறக்கும் ஜ்ஞாநம் அத்யாயாஸலப்யமானால், சாஸ்த்ரங்களொழிந்ததாகிறது - ஆயாஸப்ரதமான சாஸ்த்ரங்கள் ஒழிந்ததாகட்டும்.

மூ.—அவைதான், வ்யாபகங்களென்றும், அவ்யாபகங்களென்றும் இரண்டுவர்க்கம். அவ்யாபகங்களில் வ்யாபகங்கள்மூன்றும் ச்ரேஷ்ட்டங்கள்.

---

அவதாரங்களும் அஸங்க்யாதமாயிருக்குமாப்போலே அவற்றையநுபந்தித்திருக்கும் மந்த்ரவிசேஷங்களும் (అనన్తావైభగవన్మన్త్రాః) (அநந்தாவைபகவந்மந்த்ராঃ)என்கிறபடியே அநேகங்களாயிருக்குமென்கை.

அவையெல்லாந்தான் ஏகவர்க்கமோவென்ன (அவைதான் வ்யாபகங்களென்றும் அவ்யாபகங்களென்று மிரண்டுவர்க்கமென்கிறார்.) அதாவது - ஸர்வவ்யாபகமான பகவத்ஸ்வரூபத்தை ப்ரதிபாதிக்கையாலே வ்யாபகங்களென்றும், பகவதவதாரகுணசேஷ்டிதங்களி லோரொன்றை ப்ரதிபாதிக்கையாலே அவ்யாபகங்களென்றும் உபயவர்க்கமா யிருக்குமென்கை.

வர்க்கத்வயமும் தன்னிலொக்குமோவென்ன (அவ்யாபகங்களில் வ்யாபகங்கள் மூன்றும் ச்ரேஷ்ட்டங்களென்கிறார்.) அதாவது-அவ்யாபகங்களா யிருந்துள்ள ஸகலமந்த்ரங்களிலும் (నారాయణాయవిద్మహే వాసుదేవాయధీమహి, తన్నోవిష్ణుఃప్రచోదయాత్) (நாராயணாய வித்மஹே வாஸுதேவாயதீமஹி, தந்நோவிஷ்ணுঃப்ரசோதயாத்) என்று - விஷ்ணுகாயத்ரியில் ஓதப்படுகிற வ்யாபகமந்த்ரங்கள் மூன்றும் ஶ்ரேஷ்ட்டங்களாயிருக்குமென்கை.

---

அவற்றை அநுபந்தித்திருக்குமென்றது - குணங்களையும் அவதாரங்களையும் அநுஸரித்திருக்குமென்றபடி.

பகவந்மந்த்ரங்கள்தான்-பகவானுடைய குணங்களையும் குணப்ரவாஹரூபமான அவதாரங்களையும் அநுஸரித்திருக்கும் மந்தரங்கள்தான், அநேகங்கள் - அஸங்க்யாதங்கள் என்று மூலத்துக்கு அர்த்தம்.

அவையெல்லாந்தான்-அஸங்க்யாதத்வங்களானபகவந்மந்த்ரங்கள்தான். ஏகவர்க்கமோ - ஏகாகாரமோ. ஸர்வவ்யாபகமான-ஸர்வவஸ்துவ்யாபகமான. அவதாரகுணசேஷ்டிதங்களில் ஓரொன்றை-அவதாரங்களையாவது, குணங்களையாவது, சேஷ்டிதங்களையாவது ஒவ்வொன்றையே ப்ரதிபாதிக்கையாலுமென்றபடி.

அவைதான் - அஸங்க்யாதங்களான அந்தபகவந்மந்த்ரங்கள்தான், வ்யாபகங்களென்றும்-ஸர்வவ்யாபகமான பகவத்ஸ்வரூபத்தைப்ரதிபாதிக்கையாலே வ்யாபகமந்த்ரங்களென்றும், அவ்யாபகங்களென்றும்-பகவதவதார குணசேஷ்டிதங்களில் ஓரோ ஒன்றை ப்ரதிபாதிக்கையாலே அவ்யாபகங்களென்றும், இரண்டுவர்க்கம்-உபயவர்க்கமாயிருக்கும் என்று மூலத்துக்கு அர்த்தம்.

தன்னிலொக்குமோ - தனக்குள்ளே ஸமாநமாயிருக்குமோ.

மூ.—இவைமூன்றிலும்வைத்துக்கொண்டுபெரியதிருமந்த்ரம் ப்ரதாநம்.

---

இந்த விஷ்ணுகாயத்ரியிலே நாராயண வாஸுதேவ விஷ்ணு ஶப்தங்கள் அந்தமந்த்ரத்ரயத்துக்கும் ப்ரதாநபூதநாமத்ரயங்கள்; ஆகையாலே, ஸாதாரண ப்ரணவ நமஸ்ஸுக்களோடே கூடின மந்த்ரத்ரயத்துக்கும் உபலக்ஷணமாகக்கடவது.

இந்தவ்யாபகமந்த்ரத்ரயமும் தன்னிலொக்குமோவென்ன (இவைமூன்றிலும்வைத்துக்கொண்டு பெரியதிருமந்த்ரம் ப்ரதாநம்) என்கிறார். அதாவது - அவ்யாபகங்களிற்காட்டில் ஶ்ரேஷ்ட்டமாயிருந்துள்ள இந்தவ்யாபகமந்த்ரங்கள்மூன்றிலும் வைத்துக்கொண்டு, (𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑌾𑌯 𑌵𑌿𑌦𑍍𑌮𑌹𑍇) (நாராயணாயவித்மஹே) என்றுப்ரதமோபாத்த மாகையாலும், அர்த்தபூர்த்யாதிகளாலும், (𑌨𑌾𑌸𑍍𑌤𑌿𑌚𑌾𑌷𑍍𑌟𑌾𑌕𑍍𑌷𑌰𑌾𑌤𑍍𑌪𑌰𑌃) (நாஸ்திசாஷ்ட்டாக்ஷராத்பரஃ)(𑌨𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑍋𑌽𑌷𑍍𑌟𑌾𑌕𑍍𑌷𑌰𑌾𑌤𑍍𑌪𑌰𑌃)(நமந்த்ரோஷ்ட்டாக்ஷராத்பரஃ)என்னும்படியான பெருமையையுடைய திருமந்த்ரம் ப்ரதாநமாயிருக்குமென்கை.

---

ஸாதாரண ப்ரணவநமஸ்ஸுக்களோடே கூடின - ஸர்வமந்த்ர ஸாதாரண ப்ரணவமநஸ்ஸுக்களோடே கூடின. உபலக்ஷணம் - ஸூசகம்.

அவ்யாபகங்களில் - பகவதவதாரகுண சேஷ்டிதங்களில், ஒரோன்றை ப்ரதிபாதிக்கையாலே அவ்யாபகங்களென்று சொல்லப்படுகிறஸர்வமந்த்ரங்களிலும், வ்யாபகங்கள் மூன்றும் - ஸர்வவ்யாபகமான பகவத் ஸ்வரூபத்தை ப்ரதிபாதிக்கையாலே் வ்யாபகங்களென்று சொல்லப்படுகிறதாய் விஷ்ணுகாயத்ரியில் ஓதப்படுகிற மந்த்ரங்கள்மூன்றும், ச்ரேஷ்டங்கள்-ப்ரதாநங்கள் என்று மூலார்த்தம்.

வைத்துக்கொண்டு - சாரியைச்சொல்லு. ப்ரதமோபாத்தமாகையாலும்-ப்ரதமத்தில் சொல்லப்படுகையாலும். ஆதிசப்தம்-சிஷ்டபரிக்ரஹத்தைச்சொல்லுகிறது. [𑌯𑌥𑌾𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑍁-யதாஸர்வேஷ விதி] யாதொருபடி ஸர்வதேவதைகளிலும் வைத்துக்கொண்டு நாராயணனில்காட்டில் பரனில்லை; அப்படியே ஸர்வமந்த்ரங்களிலும்வைத்துக்கொண்டு திருவஷ்டாக்ஷரியில்காட்டில் பரமில்லை. [𑌭𑍂𑌤𑍍𑌵𑍇𑌤𑌿-பூத்வேதி] புத்ரசிஷ்யர்களைக் குறித்து, கையெடுத்து சபதபூர்வகமாகச் சொல்லுகிறேன்; - திருவஷ்டாக்ஷரத்தில் காட்டில் பரமமாயிருப்ப தொருமந்த்ரமில்லை. பெருமையையுடைய - அதிசயத்தையுடைய.

இவைமூன்றிலும்வைத்துக்கொண்டு-அவ்யாபகங்களில் காட்டில் ச்ரேஷ்டமாயிருந்துள்ள இந்த வ்யாபகமந்த்ரங்களில் மூன்றிலும் வைத்துக்கொண்டு, பெரியதிருமந்த்ரம் ப்ரதாநம்-ச்ருதிஸ்ம்ர்த்யாதிகளாலே ச்ரேஷ்டமாக ப்ரதிபாதிக்கப்பட்ட பெருமையையுடைய திருமந்த்ரம் ச்ரேஷ்டமாயிருக்குமென்று மூலார்த்தம்.

மூ.— மற்றையவை யிரண்டுக்கும் அசிஷ்டபரிக்ரஹமும் அபூர்த்தியுமுண்டு.

---

மற்றைவ்யாபகத்வயத்துக்கும் தாழ்வேதென்ன(மற்றையவை யிரண்டுக்கு மஶிஷ்டபரிக்ரஹமு மபூர்த்தியுமுண்டு என்கிறார்.) அதாவது - வாஸுதேவ விஷ்ணுஶப்தங்களான மற்றை வ்யாபக மந்த்ரங்களிரண்டுக்கும், நாராயணஶப்தம்போலே ஸ்வரூப ரூப குணாதிகளையெல்லாம் ப்ரதிபாதியாதே, ஸ்வரூபமாத்ரத்தை ப்ரதிபாதிக்கையாலே, நிர்விஶேஷ சிந்மாத்ரவஸ்துவாதிகளான குத்ர்ஷ்டிகள், மிகவும்ஆதரித்துப்போருகையாகிற அஶிஷ்டபரிக்ரஹமும், வ்யாப்யாத்யாஹாராதிஸாபேக்ஷதையாகிற அபூர்த்தியுமுண்டென்கை. "ஷடக்ஷரி, வ்யாப்யபதார்த்தங்களையும், வ்யாபநப்ரகாரத்தையும், வ்யாப்திபலத்தையும், வ்யாபகனுடைய குணங்களையும் சொல்லாதே, வ்யாப்திமாத்ர ப்ரகாஶகமாகையாலே அபூர்ணம்; வ்யாபநப்ரகாரத்தைச் சொல்லிநிற்கச்செய்தேயும், வ்யாப்யபதார்த்தங்களுக்குவாசகஶப்தம் இல்லாமையாலும்,(సర్వంవసతి) (ஸர்வ०வஸதி) என்று - அர்த்தபலத்தாலே ஸர்வ ஶப்தம் புகுந்தாலும், அதில் குணம் அந்வயியாமையாலும், இனி குணஸித்திக்காக பகவச்சப்தத்தைக் கூட்டிக்கொள்ளவேண்டுகையாலும்,வ்யாப்திபலத்தைச் சொல்லாமையாலும், திருத்வாதஶாக்ஷரியும் அபூர்ணம்; இம்மந்த்ரம், அவைபோலன்றியிலே, வ்யாப்ய பதார்த்தங்களோடு,

---

ஸ்வரூபரூபகுணாதிகளை-பகவத்ஸ்வரூபரூப குணாதிகளையெல்லாம். ஸ்வரூபம்-திவ்யாத்மஸ்வரூபம். ரூபம் – திவ்யமங்களவிக்ரஹம். ஆதிசப்தம்-விபூதிகளைச்சொல்லுகிறது. ஸ்வரூபமாத்ரத்தை-பகவத்ஸ்வரூபமாத்ரத்தை. இவ்விடத்தில், குத்ர்ஷ்டிகள்-சங்கராதிகள். வ்யாப்யாத்யாஹாரம்-வ்யாப்ய பதார்த்தவாசகபதாத்யாஹாராம். ஷடக்ஷரியாவது-ஓம்நமோவிஷ்ணவேஎன்னுமது. வ்யாப்திமாத்ரப்ரகாசகமாகையாலே - பகவத்ஸ்வரூப வ்யாப்தி மாத்ர ப்ரதிபாதக மாகையாலே. வ்யாபநப்ரகாரத்தைச் சொல்லிநிற்கச் செய்தேயும்-வாஸுதேவஶப்த்தமானது, ஸர்வத்ரவஸதீதிவாஸுதேவঃ என்று-அதிகரணவ்யுத்பத்யா ஆதாரகத்வலாபேந வ்யாபந ப்ரகாரத்தைச்சொல்லாநிற்கச்செய்தேயும் என்றபடி.வ்யாப்யபதார்த்தங்களுக்கு-ஸ்வதঃ வ்யாப்ய பதார்த்தங்களுக்கு. அர்த்தபலத்தாலே-நிருக்த்யர்த்தபலத்தாலே. அதில்-அந்த ப்ரதமாந்தமான ஸர்வசப்தத்திலே. குணஸித்திக்காக-குணஸித்த்யர்த்தமாக. பகவச்சப்தம் - குணவாசகபகவச்சப்தம். வ்யாப்திபலத்தை - பரத்வ ஸௌலப்யங்களை. திருத்வாதசாக்ஷரி என்றது-ஸ்ரீரங்கராஜனுக்கு ஆராதநமந்த்ரமாகையாலே. இம்மந்த்ரம் அவைபோலன்றிக்கே-இந்ததிருவஷ்டாக்ஷரிமந்த்ரம் ஷடக்ஷரித்வாதசாக்ஷரிமந்த்ரங்கள் போலன்றிக்கே.

மூ.—இத்தை வேதங்களும்,

---

வ்யாபநப்ரகாரத்தோடு, வ்யாப்திபலத்தோடு, வ்யாபகனுடைய குணங்களோடு வாசியற ஶாப்தமாகக்காட்டுகையாலே, அவற்றிற்காட்டில் இதுக்கர்த்தபௌஷ்கல்ய நிபந்தநமான ஆதிக்யமுண்டு" என்று, மற்றைவ்யாபகமந்த்ரங்களிரண்டினுடைய அபூர்த்தியையும், திருமந்த்ரத்தினுடைய அர்த்தபூர்த்தியையும், ஸுஸ்பஷ்டமாக ஆச்சான்பிள்ளை யருளிச்செய்தாரிறே.

வ்யா.—இதுதனக்கு ஶிஷ்டபரிக்ரஹ முண்டோவென்னவருளிச்செய்கிறார் (இத்தையென்றுதொடங்கி.) அதாவது-விஷ்ணுகாயத்ரியிலே வ்யாபகமந்த்ரத்ரயத்தையுஞ் சொல்லுகிறவளவில் ப்ரதமத்திலே நாராயணஶப்தத்தை ப்ராதாந்யேந ப்ரதிபாதிக்கையாலும், (విశ్వన్నారాయణమ్) (விச்வம்நாராயணம்) என்று தொடங்கி, (నారాయణపరంబ్రహ్మతత్త్వన్నారాయణఃపరః, నారాయణపరోజ్యోతి రాత్మానారాయణఃపరః, యచ్చకించిజ్జగత్యస్మిన్ దృశ్యతేశ్రూయతేపివా, అన్తర్బహిశ్చతత్సర్వం వ్యాప్య నారాయణస్స్థితః) (நாராயணபரம்ப்ரஹ்ம தத்வம்நாராயணபர:, நாராயணபரோஜ்யோதிராத்மாநாராயணபர:, யச்சகிம்சித்ஜகத்யஸ்மிந்த்ர்ஶ்யதேஶ்ரூயதேபிவா, அந்தர்ப்பஹிஶ்சதத்ஸர்வம் வ்யாப்யநாராயணஸ்திதஃ) என்று, ஸகலவேதாந்த ஸாரபூதமான நாராயணாநுவாகத்திலும்,

---

வாசியற - தமதரமின்றிக்கே.—மற்றையவை யிரண்டுக்கும்-வாஸுதேவ விஷ்ணுஸம்ஜ்ஞிக வ்யாபகமந்த்ரங்களிரண்டுக்கும், அஶிஷ்டபரிக்ரஹமும் - நிர்விசேஷசிந்மாத்ர வஸ்துவாதிகளான குத்ர்ஷ்டிகள் மிகவும் ஆதரித்துப்போருகையாகிற அஶிஷ்டபரிக்ரஹமும், அபூர்த்தியுமுண்டு - வ்யாப்யாத்யாஹாராதி ஸாபேக்ஷதையாலே அர்த்தாபூர்த்தியுமுண்டு என்று மூலார்த்தம்.

[విశ్వంనారాయణమ్-விச்வம்நாராயணம்] விச்வம்-ஸ்வாதீநஸர்வதத்வத்ரயம், நாராயணம் - பத்தமுக்தநித்யரூபேண மூன்றுவகையாயிருக்கிற ஆத்மாக்களுக்கும், போக்யபோகோபகரண போகஸ்தாநரூபேண மூன்றுவகையான அசேதநங்களுக்கும், அந்தர்யாமியாயிருந்து தாரண நியமந ரக்ஷணங்களைப் பண்ணிக்கொண்டிருக்குமவனாய், [நாராயணபரம்ப்ரஹ்ம] பரப்ரஹ்மவாச்யனும் நாராயணனே, பரதத்வமும் நாராயணனே, பரம்ஜ்யோதியும் நாராயணனே, பரமாத்மாவும் நாராயணனே, இந்த ஜகத்திலே ப்ரத்யக்ஷத்தாலே காணப்பட்டும் ச்ருதியாலே கேட்கப்பட்டுமிருக்கிறதுயாதொருவஸ்து அந்த ஸகலப்ரமாண ப்ரதிபந்நமான வஸ்துக்களெல்லாவற்றையும் உள்ளோடு புறம்போடு வாசியற வ்யாபித்து அந்தராத்மாவாய்க்கொண்டுநிற்கிறவன் நாராயணன்,

மூ.—ரிஷிகளும்,

---

(ఏకోహవై నారాయణఆసీత్ నబ్రహ్మా నేశానో నేమేద్యావాపృథివీ) (ஏகோ ஹவைநாராயண ஆஸீத், நப்ரஹ்மாநேஶாநோ. நேமேத்யாவா ப்ர்திவீ) என்று மஹோபநிஷத்திலும், (చక్షుశ్చద్రష్టవ్యఞ్చనారాయణః, శ్రోత్రఞ్చశ్రోతవ్యఞ్చనారాయణః) (சக்ஷுஶ்சத்ரஷ்டவ்யஂசநாராயணஃ, ச்ரோத்ரஂசஶ்ரோதவ்யஂசநாராயணஃ) என்று தொடங்கி (దిశశ్చప్రదిశశ్చనారాయణః) (திஶஶ்சப்ரதிஶஶ்சநாராயணஃ) என்று முடிவாக நடுவுடையஸுபாலோபநிஷத்திலும், (యస్యాత్మాశరీరమ్ యస్యపృథివీశరీరమ్) (யஸ்யாத்மாசரீரஂயஸ்யப்ர்திவீஶரீரம்) என்று தொடங்கி (యస్యమృత్యుశ్శరీరమ్) (யஸ்யம்ர்த்யுஶ்ஶரீரம்) என்கிற தீருகநடுவுள்ளபர்யாயங்கள்தோறும் (ఏషసర్వభూతాన్తరాత్మాఽపహతపాప్మాదివ్యోదేవఏకోనారాయణః)(ஏஷஸர்வபூதாந்தராத்மாऽபஹதபாப்மா திவ்யோதேவஏகோநாராயணஃ) என்று அந்தர்யாமிப்ராஹ்மணத்திலும் வாஸுதேவ விஷ்ணுஶப்தங்களை யநாதரித்து நாராயணஶப்தத்தையிட்டு பகவத்ஸ்வரூபாதிகளை நிர்த்தேஶிக்கையாலும், அபௌருஷேயமாய் நித்யநிர்த்தோஷமாய் ஸ்வதஃப்ரமாணங்களான வேதங்களும் விரும்பிற்றின. (యథాసర్వేషుదేవేషు నాస్తినారాయణాత్పరః। తథాసర్వేషుమన్త్రేషు నాస్తిచాష్టాక్షరాత్పరః). (யதாஸர்வேஷு தேவேஷு நாஸ்திநாராயணாத்பரஃ - ததாஸர்வேஷுமந்த்ரேஷு நாஸ்திசாஷ்டாக்ஷராத்பரஃ)

---

நாராயணனொருவனுமே உளனானன், ப்ரஹ்மாவுமில்லை, ருத்ரனுமில்லை, இந்தத்யாவாப்ர்திவிகளு மில்லை, நக்ஷத்ரங்களு மில்லை; காண்கிறகண்ணும் காணப்படுகிறதும் நாராயணன், கேட்கிறசெவியும் கேட்கப்படுகிறதும் நாராயணன், திக்குக்களும் விதிக்குக்களுமெல்லாம் நாராயணனே; யாவனொருவனுக்கு ஜீவாத்மா சரீரமாயிருக்கிறது, யாவனொருவனுக்குப்ர்திவிசரீரமாயிருக்கிறது; யாவனொருவனுக்கு ம்ர்த்யுசரீரமாயிருக்கிறது; அவன் ஸர்வபூதங்களுக்கும் ஆத்மாவாய் தத்கததோஷம் தட்டாதபடி அபஹதபாப்மாவாய், பரமபதநிலயனாகையாலே திவ்யனாய், லீலாவிபூதியோகத்தாலேதேவனாய், இப்படி ஸர்வாதிகனாகையாலே அத்விதீயனான நாராயணன்.

பகவத்ஸ்வரூபாதிகள் என்கிறவிடத்தில், ஆதிசப்தத்தாலே-குணசேஷ்டிதங்களைச்சொல்லுகிறது. நிர்த்தேசிக்கையாலும்-ப்ரதிபாதிக்கையாலும். விரும்பிற்றின - ஆதரித்தன. பரிக்ரஹித்தது கள் என்று கருத்து. [యథా-யதேதி]யாதொருபடி ஸர்வதேவர்களிலும்வைத்துக்கொண்டு நாராயணனில்காட்டில் பரமாயிருப்பதொன்றில்லை, அப்படியே ஸர்வமந்த்ரங்களிலும் வைத்துக்கொண்டு திருவஷ்டாக்ஷரத்திற் காட்டில் பரமில்லை.

(భూత్వోర్ధ్వబాహురద్యాత్ర సత్యపూర్వం బ్రవీమివః । హే పుత్రశిష్యాశ్శృణుత నమన్త్రోష్టాక్షరాత్పరః) (பூத்வோர்த்த்வபாஹுரத்யாத்ர ஸத்ய பூர்வம்ப்ரவீமிவ: - ஹேபுத்ரஶிஷ்யாஶ்ஶ்ருணுத நமந்த்ரோஷ்டாக்ஷராத்பர:) (సర్వవేదాన్తసారార్థస్సంసారార్ణవతారకః । గతిరష్టాక్షరో నృణామపునర్భవకాఙ్క్షిణామ్) (ஸர்வவேதாந்தஸாரார்த்த ஸ்ஸம்ஸாரார்ணவதாரக:-கதிரஷ்டாக்ஷரோ ந்ரூணா மபுநர்ப்பவகாங்க்ஷிணாம்) (ఆర్తావిషణ్ణాశ్శిథిలాశ్చభీతా ఘోరేషుచవ్యాధిషువర్తమానాః । సంకీర్త్యనారాయణశబ్దమాత్రం విముక్తదుఃఖాస్సుఖినోభవన్తి) (ஆர்த்தாவிஷண்ணாஶ்ஶிதிலாஶ்சபீதா கோரேஷுசவ்யாதிஷுவர்த்தமாநா: - ஸங்கீர்த்யநாராயணசப்தமாத்ரம் விமுக்தது:காஸ்ஸுகிநோபவந்தி) (నారాయణేతిశబ్దోస్తివాగస్తివశవర్తినీ । తథాపినరకేఘోరే పతన్తీతికిమద్భుతమ్) (நாராயணேதிசப்தோஸ்தி வாகஸ்திவசவர்த்திநீ-ததாபிநரகேகோரே பதந்தீதிகிமத்புதம்) (కింతత్రబహుభిర్మన్త్రైః కింతత్రబహుభిర్వ్రతైః । నమోనారాయణాయేతి మన్త్రస్సర్వార్థసాధకః) (கிம்தத்ரபஹுபிர்மந்த்ரை: கிம்தத்ர பஹுபிர்வ்ரதை: - நமோநாராயணாயேதி மந்த்ரஸ்ஸர்வார்த்த ஸாதக:) இத்யாதிகளாலே வேதார்த்தோப ப்ர்ம்ஹணங்களாயிருக்கிற ஸ்வப்ரபந்தங்களிலேபலவிடங்களிலும் இத்தைஶ்லாகித்துக்கொண்டு செல்லுகையாலே, வேதார்த்தவிஶதீகரண ப்ரவர்த்தரான வ்யாஸாதிகளும் விரும்பினார்கள்;

---

[భూత్వా-பூத்வேதி] புத்ரசிஷ்யர்களைக்குறித்துக் கையெடுத்து சபதபூர்வகமாகச் சொல்லுகிறேன் கேளுங்கோள்; - திருவஷ்டாக்ஷரத்திற் காட்டில் பரமாயிருப்பதொரு மந்த்ரமில்லை; [సర్వ - ஸர்வேதி] ஸர்வவேதாந்தஸாரமான அர்த்தமாய் ஸம்ஸாரமாகிற கடலைக்கடத்துவதான திருவஷ்டாக்ஷரம், மோக்ஷகாங்க்ஷிகளான புருஷர்களுக்குப்புகலிடம்.

[నారాయణా-நாராயணேதி]நாராயணனென்கிறசப்தமுண்டு, அத்தைச்சொல்லுகைக்கு வாகிந்த்ரியமுண்டு, இப்படியிருக்க, கோரமான நரகத்திலே என்னவென்றுவிழுகிறார்கள், இதோராஶ்சர்யம்.

[కింతత్ర - கிம்தத்ரேதி]திருமந்த்ரமானது ஸர்வார்த்தத்தையும் ஸாதித்துக்கொடாநிற்கும், அதுண்டாயிருக்க அநேகமந்த்ரங்களால் என்னப்ரயோஜநமுண்டு. அநேக கர்மாநுஷ்டாநங்களால் என்ன ப்ரயோஜநமுண்டு. வ்யாஸாதிகள் என்கிறவிடத்தில், ஆதி சப்தத்தாலே - பராசர வால்மீக சுக சௌநகாதிகளைச் சொல்லுகிறது. விரும்பினார்கள் - ஆதரித்தார்கள்.

௬.—ஆழ்வார்களும், ஆசார்யர்களும் விரும்பினார்கள்.

“வண்புகழ்நாரணன்” “செல்வநாரணன்” என்றுதொடங்கி, “வாழ்புகழ்நாரணன்” என்றுமுடிவாக, ஆதிமத்யாவஸாநமாக நம்மாழ்வாரருளிச்செய்கையாலும், “நாடுநகரமுநன்கறியநமோநாராயணாய” என்றுதொடங்கி “ஓவாதேநமோநாரணாவென்பன்” என்று பெரியாழ்வாரும், “நாத்தழும்பெழநாரணா” என்றுதொடங்கி “நலந்திகழ்நாரணன்” என்று பெருமாளும், “நான்முகனை நாராயணன் படைத்தான்” என்றுதொடங்கி “எட்டெழுத்து மோதுவார்கள் வல்லர்வானமாளவே” என்று திருமழிசைப்பிரானும், “நான்கண்டுகொண்டேன் நாராயணாவென்னுநாமம்” என்று உபக்ரமதசையிலே ஒருக்காற்சொன்னாப்போலேயொன்பதின்காற்சொல்லி, “நாராயணா! ஓ ஓ மணிவண்ணா நாகணையாய்வாராய்” என்று திருமங்கையாழ்வாரும், உபக்ரமத்தோடு உபஸம்ஹாரத்தோடு வாசியற அருளிச்செய்கையாலும், “நன்மாலைகொண்டு நமோநாரணாவென்னும் சொன்மாலைகற்றேன்” என்றும், “நாரணாவென்றோவாதுரைக்குமுரையுண்டே” என்றும், “ஞானச்சுடர்விளக்கேற்றினேன் நாரணற்கு” “நாரணன்றன்நாமங்கள்” “பகற்கண்டேன்நாரணனைக்கண்டேன்” என்றும், “நாமம்பலசொல்லி நாராயணா” என்றும், முதலாழ்வார்களு மருளிச்செய்கையாலும், “மயர்வறமதிநலமருளினன்” என்கிறபடியே நிர்ஹேதுகபகவத்கடாக்ஷத்தாலே ஸமதிகதஸமஸ்தவஸ்துவாஸ்தவரான ஆழ்வார்களெல்லாரும் விரும்பினார்கள்; இதரமந்த்ரங்களை யநாதரித்து, இத்தையேதந்தாமுக்குத்தஞ்சமாக வநுஸந்தித்து, உபதேஶவேளையிலும், தந்தாமைப் பற்றினவர்களுக்கும்இத்தையே உஜ்ஜீவநஹேதுவாக வுபதேஶித்துப் போருகையாலே, அவ்வாழ்வார்களைப் பின்சென்ற ஆசார்யர்களெல்லாரும் விரும்பினார்களென்கை.

---

ஆழ்வார்களெல்லாரும்-நம்மாழ்வார் தொடக்கமான ஆழ்வார்களெல்லாரும். நம்மாழ்வாரை முன்னாகவருளிச்செய்தது-அவயவிபூர்வமாக அருளிச்செய்யவேணுமென்னு மபிப்ராயத்தாலே. இதரமந்த்ரங்களை - வாஸுதேவாதிமந்த்ரங்களை. இத்தையே - திருவஷ்டாக்ஷரியையே. தஞ்சமாக - ரக்ஷகமாக. தந்தாமைப்பற்றினவர்களுக்கும் - தங்களை ஆச்ரயித்தவர்களுக்கும். ஆழ்வார்களைப் பின்செல்லுகையாவது - நிர்ஹேதுகபகவத்கடாக்ஷத்தாலே ஸமதிகதஸமஸ்தவஸ்து வாஸ்தவராய், ஆழ்வார்களுடைய உக்த்யநுஷ்டாநங்களாலே அவர்களைப்போலே வர்த்திக்கை. இத்தால் - பகவந்மந்த்ரங்கள்தான் அநேகங்கள் என்று தொடங்கி இவ்வளவான க்ரந்தத்தாலென்றபடி.

மூ.—வாச்யப்ரபாவம்போலன்று வாசகப்ரபாவம்; அவன் தூரஸ்த்தனானாலும் இது கிட்டிநின்றுதவும்.

---

இத்தால் - மந்த்ராந்தரங்களிற்காட்டில் இம்மந்த்ரத்துக்குண்டான வைபவஞ் சொல்லிற்றாய்த்து.

இனி வாச்யந்தன்னிலும் இதுக்குண்டான வைபவத்தையருளிச்செய்கிறார் (வாச்யப்ரபாவம்போலன்று வாசகப்ரபாவம் என்று.) அதாவது - இதுக்கு வாச்யனாயிருந்துள்ள ஈஶ்வரனுடைய பெருமைபோலன்று தத்வாசகமான இதின்பெருமையென்றபடி. அதுதானேதென்ன அருளிச்செய்கிறார் (அவன்தூரஸ்த்தனானாலும் இதுகிட்டிநின்றுதவும் என்று.) அதாவது-வாச்யனானவன் ஸந்நிஹிதனன்றிக்கே தூரஸ்த்தனா யிருந்தகாலத்திலும், வாசகமான விது ஆஸந்நமாய் நின்று, தன்னை வசித்தவர்களபேக்ஷிதங்களை ஸாதித்துக்கொடுக்குமென்கை.

---

மந்த்ராந்தரங்களில் காட்டில்-அவ்யாபகமந்த்ரங்களில் காட்டிலும் வ்யாபகங்களான ஷடக்ஷரி த்வாதசாக்ஷரிமந்த்ரங்களிற்காட்டிலும்.

இத்தை-இந்தத்திருமந்த்ரத்தை, வேதங்களும் - நாராயணாநுவாகம்முதலான வேதங்களும், ரிஷிகளும்-வேதார்த்த விசதீகரணப்ரவர்த்தகரான வ்யாஸாதிபரமரிஷிகளும், ஆழ்வார்களும்-நம்மாழ்வார்தொடக்கமான ஆழ்வார்களும், ஆசார்யர்களும்-ஆழ்வார்களைப் பின்சென்ற நாதமுநிமுதலான ஆசார்யர்களும், விரும்பினார்கள் - ஆதரித்தார்கள் என்று மூலார்த்தம்.

இதுக்கு - இம்மந்த்ரத்துக்கு, வாச்யனான-ஸர்வரக்ஷகத்வேந வாச்யனான. ரக்ஷணத்தில் வாசகப்ரபாவம் சதாதிகமென்றபடி.

வாச்ய ப்ரபாவம் போலன்று – வாச்யனான ஈச்வரனுடைய பெருமைபோலன்று, வாசகப்ரபாவம்-தத்வாசகமான இதின்பெருமை என்று மூலார்த்தம்.

அதுதானேதென்ன-வாசகப்ரபாவந்தானேதென்ன. வாச்யனானவன்-திருமந்த்ரத்துக்கு வாச்யனான கண்ணன். தூரஸ்தனாயிருந்தகாலத்திலும்-அதிதூரமான த்வாரகையிலே யெழுந்தருளியிருக்கிறகாலத்திலும்.

அவன் தூரஸ்த்தனானாலும்-வாச்யனானவன் ஸந்நிஹிதனன்றிக்கே தூரஸ்த்தனாயிருந்தகாலத்திலும், இதுகிட்டிநின்றுதவும-வாசகமான விது ஆஸந்நமாய் நின்று தன்னை வசித்தவர்களுக்கு அபேக்ஷிதங்களை ஸாதித்துக்கொடுக்கும் என்றுமூலார்த்தம்.

மூ.—த்ரௌபதிக்கு ஆபத்திலே புடைவைசுரந்தது திருநாமமிறே,

---

இப்படி வாச்யன் தூரஸ்த்தனுயிருக்க வாசகம் உதவினவிடமுண்டோவென்ன வருளிச்செய்கிருர் (த்ரௌபதிக்காபத்திலே புடைவை சுரந்ததுதிருநாமமிறேயென்று.) அதாவது - மஹாஸதஸ்ஸிலே துஶ்ஶாஸநன் வஸ்த்ராபஹாரம்பண்ணுகிறபோது, (మహత్యాపదిసంప్రాప్తే స్మర్తవ్యోభగవాన్హరిః)(மஹத்யாபதிஸம்ப்ராப்தேஸ்மர்த்தவ்யோபகவாந்ஹரி: ) என்று முன்பே ஸ்ரீவஸிஷ்டமஹாரிஷி சொல்லிவைத்தத்தை நினைத்து, (శఙ్ఖచక్రగదాపాణే ద్వారకానిలయాచ్యుత । గోవిన్దపుణ్డరీకాక్ష రక్షమాంశరణాగతామ్) (சங்கசக்ரகதாபாணே த்வாரகாநிலயாச்யுத - கோவிந்தபுண்டரீகாக்ஷ ரக்ஷமாம்ஶரணாகதாம்) என்று சரணம்புகுந்த த்ரௌபதிக்கு, அவ்வாபத்திலே, (గోవిన్దేతియదాక్రన్దత్కృష్ణామాందూరవాసినమ్) (கோவிந்தேதியதாக்ரந்தத் க்ர்ஷ்ணுமாம்தூரவாஸிநம்) என்கிறபடியே வாச்யனுன க்ர்ஷ்ணன் தூரஸ்த்தனு யிருக்கச்செய்தேயும், வஸ்த்ரங்களை வர்த்திப்பித்துக்கொடுத்தது, அவ்வவதாரத்துக்கு வாசகமான கோவிந்தனென்கிற திருநாமமிறேயென்கை. நாராயணசப்தார்த்தத்தில் ஏகதேசத்துக்கு வாசகமானதொரு திருநாமம்செய்தபடி கண்டால், இதின்ப்ரபாவம் கிம்புநர்ந்யாயஸித்தமிறேயென்றுகருத்து.

---

மஹாஸதஸ்ஸிலே-பீஷ்மத்ரோணுதி மஹாந்களிருக்கிற ஸதஸ்ஸிலே; பெரியஸதஸ்ஸிலே யென்னவுமாம். வஸ்த்ரங்களைவர்த்திப்பித்துக்கொடுத்ததென்றது - த்ரௌபதியை பரிபவம்பண்ணப்போந்ததுஶ்ஶாஸநன் தானேகையொழிந்துபரிபவப்படும்படி ராசிராசியாக வஸ்த்ரங்களை வர்த்திப்பித்துக்கொடுக்கை. இதே-மஹாபாரத ப்ரஸித்தம். நாராயண சப்தார்த்தத்தில் ஏகதேசத்துக்கு வாசகமான-நாராயணசப்தத்தில், நாரசப்த்தார்த்தங்களான வாத்ஸல்யாதிகுணங்களில் ஏகதேசமான ஸௌலப்யஸௌசீல்யகுணங்களுக்கு ப்ரகாசகமான வென்றபடி. செய்தபடிகண்டால்-வசித்தவர்களுக்கு கார்யம்செய்தபடிகண்டால். இதின் ப்ரபாவம் - பூர்ணமான திருமந்த்ரத்தின் ப்ரபாவம்.

த்ரௌபதிக்கு - "ரக்ஷமாம்ஶ்ரணுகதாம்" என்று சரணம்புகுந்த த்ரௌபதிக்கு, ஆபத்திலே-பரிபவத்திலே, புடைவைசுரந்தது-வஸ்த்ரங்களைவர்த்திப்பித்துக்கொடுத்தது, திருநாமமிறே-க்ர்ஷ்ணுவதாரத்துக்கு வாசகமான கோவிந்தனென்கிற திருநாமமன்றோவென்று மூலார்த்தம்.

மூ —சொல்லும்க்ரமமொழியச்சொன்னாலும் தன்ஸ்வரூபங் கெடாதில்லாது. இதுதான் "குலந்தரும்" என்கிறபடியே எல்லா வபேக்ஷிதங்களையும் கொடுக்கும். ஐஸ்வர்ய கைவல்ய பகவல்லா பங்களை ஆசைப்பட்டவர்களுக்கு அவற்றைக்கொடுக்கும்.

---

இன்னமுமொரு ப்ரகாரத்தாலே இதின்வைபவத்தையருளிச் செய்கிறார் (சொல்லும் க்ரமமொழியச்சொன்னாலுமென்று தொடங்கி.) அதாவது-ஏதேனுமொருமந்த்ரமும், தன்னைத்தஞ்சமாக விச்வஸித்துச் சொன்னவர்களுக்கொழிய தான் கார்யம் செய்யாதேயாகிலும் இது அங்ஙனன்றிக்கே தன்னைத்தஞ்சமாக விச்வஸித்துச்சொல்லுகையாகிற க்ரமமொழிய, (సాంకేత్యం పారిహాస్యం చ స్తోభం హేళనమేవ వా) (ஸாங்கேத்யம்பாரிஹாஸ்யஞ்ச ஸ்தோபம்ஹேளநமேவவா) என்கிறபடியே சொல்லிலும், சொன்னவர்களுக்கு ரக்ஷகமாகையாகிற தன்ஸ்வரூபத்தில் நழுவதில்லாதென்கை.

இனி இதின் ஸர்வாபேக்ஷிதப்ரதத்வமாகிற வைபவத்தையருளிச்செய்கிறார் (இதுதானித்யாதியாலே.) அதாவது - இம்மந்த்ரந்தான் "குலந்தரும்" என்றுதொடங்கி ஆழ்வாரருளிச்செய்தபடியே, அதிகாராநுகுணமான அபேக்ஷிதங்களையெல்லாங்கொடுக்குமென்கை. அத்தை விசதீகரிக்கிறார் (ஐஶ்வர்யேத்யாதியாலே.) அதாவது - (ఐహలౌకికమైశ్వర్యం స్వర్గాద్యం పారలౌకికమ్ । కైవల్యం భగవన్తఞ్చ మన్త్రోయం సాధయిష్యతి) (ஐஹலௌகிகமைச்வர்யம் ஸ்வர்க்காத்யம் பாரலௌகிகம் - கைவல்யம்பகவந்தஞ்ச மந்த்ரோயம்ஸாதயிஷ்யதி) என்கிறபடியே - ஐஹிகமாயும், பாரலௌகிகமாயு மிருக்குமைச்வர்யத்தையும், ஆத்மப்ராப்திரூபமான கைவல்யத்தையும், பரமபுருஷார்த்தமான பகவல்லாபத்தையுமாசைப்பட்ட வதிகாரிகளுக்கு, ஜபஹோமாதிகளாலே ஸ்வயம் ஸாதநமாய்நின்று, அவ்வோபுருஷார்த்தங்களைக் கொடுக்குமென்கை.

---

இன்னமுமொரு ப்ரகாரத்தாலே-கீழ்ச்சொன்ன ப்ரகாரங்களாலன்றிக்கேபின்னொருப்ரகாரத்தாலே.ஏதேனுமொருமந்த்ரம்—பகவன்மந்த்ரங்களன்றிக்கே ஏதாவதொரு இதரமந்த்ரமென்றபடி.

சொல்லும் க்ரமமொழியச் சொன்னாலும்-தன்னைத்தஞ்சமாக விச்வஸித்துச் சொல்லுகையாகிற க்ரமத்தை விட்டு * ஸாங்கேத்யாதிகளாலே சொன்னாலும், தன்ஸ்வரூபம்-சொன்னவர்களுக்கு ரக்ஷகமாகையாகிற தன்ஸ்வரூபத்தில், கெடாதில்லாது - நழுவதில்லாது என்று மூலார்த்தம்.

ஆழ்வாரருளிச்செய்தபடியே - திருமங்கையாழ்வாரருளிச்செய்த "குலந்தரும்" என்கிறபாட்டின்படியே, எல்லா வபேக்ஷிதங்களையும் கொடுக்கும் - தத்ததிகாராநுகுணமாக அபேக்ஷிதங்களையெல்லாம் கொடுக்குமென்று மூலார்த்தம்.

மூ.—கர்மஜ்ஞானபக்திகளிலே இழிந்தவர்களுக்கு விரோதியைப் போக்கி அவற்றைத்தலைக்கட்டிக்கொடுக்கும்.

---

இனி கர்மாத்யுபாய ஸஹகாரித்வரூபமான இதின் வைபவத்தை யருளிச்செய்கிறார் (கர்மஜ்ஞாநேத்யாதியாலே.) அதாவது-கர்மயோகத்தில் இழிந்தவர்களுக்கு,ஜபஹோமாதிகளாலே தன்னை ஸஹாயமாகக்கொள்ளுமளவில், கர்மயோகாரம்பவிரோதியான பாபத்தைப்போக்கி, அந்தகர்மத்தினுடைய அவிச்சேதாபாதகமாய்க்கொண்டு அத்தைத் தலைக்கட்டிக்கொடுக்கும். ப்ரதமத்திலே, ஜ்ஞாநயோகத்திலே யிழிந்தவர்களுக்கு, தன்னை ஸஹாயமாகக் கொள்ளுமளவில்,

---

ஐச்வர்யகைவல்யபகவல்லாபங்களை ஆசைப்பட்டவர்களுக்கு-ஐஹலௌகிகமாயும் பாரலௌகிகமாயு மிருக்கும் ஐச்வர்யத்தையும், ஆத்மப்ராப்திரூபமான கைவல்யத்தையும், பரமபுருஷார்த்தமான பகவல்லாபத்தை யாசைப்பட்ட அதிகாரிகளுக்கு ஜபஹோமாதிகளாலே ஸ்வயம்ஸாதநமாய்நின்று, அவற்றைக்கொடுக்கும்-அவ்வவபுருஷார்த்தங்களைக் கொடுக்கும் என்று மூலார்த்தம்.

கர்மயோகமாவது-யஜ்ஞ தாந தபோத்யாந ஸந்த்யாவந்தந பம்சமஹாயஜ்ஞ அக்நிஹோத்ர தீர்த்தயாத்ர புண்யக்ஷேத்ரவாஸ க்ர்ச்ர சாந்த்ராயண புண்யநதீஸ்நாந சாதுர்மாஸ்ய பலமூலாஶந சாஸ்த்ராப்யாஸ ஸமாராதந ஜபதர்ப்பணாதி காயசோஷணத்தாலே பாபநாசம்பிறந்து, அத்தாலே இந்த்ரியத்வாராப்ரஸரிக்கிற தர்மபூதஜ்ஞாநத்துக்கு சப்தாதிகள் விஷயமல்லாமையாலே விஷயஸாபேக்ஷை பிறந்து, யம நியம ஆஸந ப்ராணாயாம ப்ரத்யாஹார தாரணை த்யாந ஸமாதிரூபாஷ்டாங்கயோகக்ரமத்தாலே யோகாப்யாஸ காலத்தளவும் ஜ்ஞாநத்துக்கு ஆத்மாவை விஷயமாக்குகை. இதுதான் ஜ்ஞாநயோகத்துக்குஸஹகாரியுமாய்ஐச்வர்யத்துக்குப்ரதாநஸாதநமாயிருக்கும். கொள்ளுமளவில் - கொள்ளும்போது. அவிச்சேதாபாதகமாய்க்கொண்டு-அந்தராயாபாவத்தைபண்ணிக் கொடாநின்றுகொண்டு. ப்ரதமத்திலே ஜ்ஞாநயோகத்திலே இழிந்தவர்களுக்கு - கர்மயோகத்திலே ப்ரவேசித்து அதினாலே நிர்மலாந்தக்கரணனாய் ஜ்ஞாநயோகத்திலே யிழிகையன்றிக்கே, முதலிலேதானே ஜ்ஞாநயோகத்திலே ப்ரவேசித்தவர்களுக்கு.

ஜ்ஞாநயோகமாவது - யோகஜந்யஜ்ஞாநத்துக்கு ஹ்ர்தய கமலம் ஆதித்யமண்டலம் தொடக்கமானஸ்த்தலவிசேஷங்களிலே எழுந்தருளியிருக்கிற ஸர்வேச்வரனை விஷயமாக்கி, அவ்விஷயந்தனை ஶங்க சக்ர கதா பீதாம்பர கிரீடாதி நூபுராந்தமான திவ்யபூஷணாலங்க்ர்தமாய் லக்ஷ்மீஸஹிதமாகவும் அநுபவித்து, யோகாப்யாஸக்ரமத்தாலே அநுபவகாலத்தைப்போக்கி அநவரத பாவநாரூபமாக்குகை.

மூ.—ப்ரபத்தியிலே இழிந்தவர்களுக்கு ஸ்வரூபஜ்ஞாநத்தைப் பிறப்பித்து காலக்ஷேபத்துக்கும் போகத்துக்கும் ஹேதுவாயிருக்கும்.

---

கர்மஸாத்யமான ஜ்ஞாநாரம்பவிரோதி பாபநிவர்த்தியைப் பண்ணி, அந்தஜ்ஞாநத்துக்கு நாடோறும் அதிசயத்தைப்பண்ணுகின்றுகொண்டு, அத்தைத் தலைக்கட்டிக்கொடுக்கும். பக்தியோகத்திலே இழிந்தவர்களுக்கு, தன்னை ஸஹாயமாகக்கொள்ளுமளவில், பக்தியோகாரம்பவிரோதியான பாபத்தைப்போக்கி பக்திவிவ்ர்த்திஹேதுவாய்க்கொண்டு அத்தைத் தலைக்கட்டிக்கொடுக்குமென்கை.

இங்ஙனன்றிக்கே ப்ரபந்நர்க்குஇதுசெய்யு முபகாரவைபவத்தையருளிச்செய்கிறார் (ப்ரபத்தியிலே யென்றுதொடங்கி.) அதாவது-கீழ்ச்சொன்னவைபோலே துஸ்ஸகமுமாய் ஸ்வரூபவிருத்தமுமாயிருக்கையன்றிக்கே ஸுஸகமுமாய் ஸ்வரூபாநுரூபமுமானப்ரபத்யுபாயத்திலே இழிந்தவர்களுக்கு, ததநுரூபமானபகவத்பாரதந்த்ர்யரூப ஸ்வரூபஜ்ஞாநத்தை விஶதமாகப் பிறப்பித்து அர்த்தாநுஸந்தாநாதிகளாலே போதுபோக்குகைக்கும் ஹேதுவாய், "எனக்கென்றுந் தேனும் பாலு மமுதுமாய திருமால்திருநாமம்" என்கிறபடியே,

---

ஜ்ஞாநாரம்பம் - ஜ்ஞாநயோகாரம்பம். நாடோறும் - நாள்தோறும். பக்தியோகமாவது - தைலதாராவதவிச்சிந்நஸ்ம்ர்திஸந்தாநரூபமான அநுபவத்தை ப்ரீதிரூபாபந்நமாக்குகையும், அதுதன்னை அறியப்பார்த்தால் ப்ராப்த கர்மம் கழியும்படி ஸாதநஸாத்யங்களை யநுஷ்டித்து அதினுடைய ஸம்கோசவிகாஸமாம்படி பரிணமிப்பிக்கை.

கர்மஜ்ஞாநபக்தியிலே இழிந்தவர்களுக்கு - கர்மயோகஜ்ஞாநயோகபக்தி யோகங்களிலே ப்ரவேசித்தவர்களுக்கு, விரோதியைப் போக்கி-யோகாரம்பவிரோதியானபாபத்தைப்போக்கி, அவற்றை-அந்தஜ்ஞாநயோகபக்தி யோகங்களை, தலைக்கட்டிக்கொடுக்கும்-முடித்துக்கொடுக்கும் என்று மூலார்த்தம்.

இங்ஙனன்றிக்கே-உபாஸகர்க்குச் செய்யும் உபகாரவைபவமன்றிக்கே. ஸ்வரூபவிருத்தமாய் - பாரதந்த்ர்யஸ்வரூபவிருத்தமாய். ஸ்வரூபாநுரூபமான-பாரதந்த்ர்யஸ்வரூபாநுரூபமான. ப்ரபத்த்யுபாயத்திலே-ததேகோபாயத்வ ப்ரார்த்தனையாகிறப்ரபத்யுபாயத்திலே. ததநுரூபமான-அந்த ப்ரபத்யுபாயாநுரூபமான. அர்த்தாநுஸந்தாநம்-ஸ்வார்த்தாநு ஸந்தாநம், ஆதிசப்தத்தாலே - மந்த்ராநு ஸந்தாநம்.

மூ.—"மற்றெல்லாம்பேசிலும்" என்கிறபடியே அறியவேண்டு மர்த்தமெல்லாம் இதுக்குள்ளேவுண்டு. அதாவதஞ்சர்த்தம்.

---

வ்யா.—ப்ரதிபாத்யவஸ்துவைப்போலே ஸ்வயம்போக்யமாயிருக்கையாலே போகத்துக்கும் ஹேதுவாயிருக்குமென்கை.

இனி, ஜ்ஞாதவ்யஸகலார்த்த ப்ரதிபாதகத்வமாகிற இதின்வைபவத்தை யருளிச்செய்கிறார் (மற்றெல்லாம்பேசிலு மென்றுதொடங்கி.) அதாவது—"நின்திருவெட்டெழுத்துங்கற்று- மற்றெல்லாம் பேசிலும்" என்கிறபடியே, ஆத்மோஜ்ஜீவநத்துக்குடலாக அறியவேண்டும் அர்த்தவிசேஷங்களெல்லாம் இம்மந்த்ரத்துக்குள்ளேயுண்டென்கை. அறியவேண்டு மர்த்தமெல்லா மாகிறதேதென்னுமாகாங்க்ஷையிலேயருளிச்செய்கிறார் (அதாவதஞ்சர்த்தமென்று.) ஸ்வஸ்வரூப பரஸ்வரூப புருஷார்த்தஸ்வரூப உபாயஸ்வரூப விரோதிஸ்வரூபங்களாகிற அர்த்தபஞ்சகமும் என்றபடி. (ప్రాప్యస్య బ్రహ్మణోరూపం ప్రాప్తుశ్చ ప్రత్యగాత్మనః । ప్రాప్త్యుపాయంఫలంప్రాప్తేస్తథాప్రాప్తి విరోధిచ ॥ వదన్తిసకలావేదాః సేతిహాసపురాణకాః । మునయశ్చమహాత్మానో వేదవేదార్థవేదినః)

---

அ.—ப்ரதிபாத்யவஸ்துவைப்போலேஸ்வயம்போக்யமாயிருக்கையாலே- "ரஸோவைஸ:" என்றும், "எனக்குத் தேனே பாலே கன்னலே யமுதே" என்று மித்யாதியில்படியே ஏதந்மந்த்ர ப்ரதிபாத்யமானவஸ்து ஸ்வயம்போக்யமாயிருக்கையாலே, போகத்துக்கும் ஹேதுவாயிருக்கும் - ஸதாநுபவத்துக்கும் யோக்யமாயிருக்கும்

ப்ரபத்தியிலே இழிந்தவர்களுக்கு-ஸுஸுகமுமாய் பாரதந்த்ர்ய ஸ்வரூபாநுரூபமுமாயிருக்கிற ப்ரபத்த்யுபாயத்திலே ப்ரவேசித்தவர்களுக்கு, ஸ்வரூபாநுரூபமான ஜ்ஞாநத்தைப் பிறப்பித்து-ததநுரூபமான பகவத் பாரதந்த்ர்யரூபஸ்வரூப ஜ்ஞாநத்தைவிசதமாகப் பிறப்பித்து, காலக்ஷேபத்துக்கும் போகத்துக்கும் ஹேதுவாயிருக்கும் - போதுபோக்குகைக்கும் ப்ரதிபாத்ய வஸ்துவைப் போலே ஸ்வயம்போக்யமா யிருக்கையாலே போகத்துக்கும் ஹேதுவாயிருக்குமென்று மூலார்த்தம்.

ஜ்ஞாதவ்யம்என்றது-ப்ரபத்யுபாயத்திலேஇழிந்தவர்களுக்கு ஜ்ஞாதவ்யமென்றபடி.

மற்றெல்லாம் பேசிலு மென்கிறபடியே - நின்திருவெட்டெழுத்தும்கற்று மற்றெல்லாம்பேசிலுமென்கிறபடியே, அறியவேண்டுமர்த்தமெல்லாம்- ஆத்மோஜ்ஜீவநத்துக் குடலாக அறியவேண்டுமர்த்தவிசேஷங்களெல்லாம், இதுக்குள்ளே உண்டு-இம்மந்த்ரத்துக்குள்ளே உண்டு என்று மூலார்த்தம்.

அதாவது-அறியவேண்டுமர்த்தமெல்லாமாவது, அஞ்சர்த்தம்-ஸ்வஸ்வரூப பரஸ்வரூப புருஷார்த்தஸ்வரூப உபாயஸ்வரூப விரோதிஸ்வரூபங்களாகிற அர்த்தபஞ்சகமென்று மூலார்த்தம்.

மூ.—பூர்வாசார்யர்கள்இதிலர்த்தமறிவதற்குமுன்பு,தங்களைப் பிறந்தார்களாகநினைத்திரார்கள்; இதிலர்த்தஜ்ஞாநம் பிறந்தபின்பு, "பிறந்தபின் மறந்திலேன்" என்கிறபடியே இத்தையொழிய வேறொன்றால் காலக்ஷேபம்பண்ணியறியார்கள்.

---

வ்யா.—(ப்ராப்யஸ்யப்ரஹ்மணோரூபம்ப்ராப்துஸ்சப்ரத்யகாத்மந:-ப்ராப்த்யுபாயம் பலம் ப்ராப்த்தே ஸ்ததாப்ராப்திவிரோதிச! வதந்திஸகலாவேதா ஸ்ஸேதிஹாஸபுராணகா: - முநயஸ்ச மஹாத்மாநோ வேதவேதார்த்தவேதிந:) என்கிறபடியே - ஸகல வேதசாஸ்த்ரங்களும் ப்ரதிபாதிப்பது இவ்வர்த்தபஞ்சகத்தையுமாகையாலே, தத்ஸங்க்ரஹமானவிம்மந்த்ரத்துக்கும் ப்ரதிபாத்யமிதுவேயிறே. இம்மந்த்ரந்தான் ப்ரணவத்தாலே ப்ரத்யகாத்மஸ்வரூபத்தையும், நமஸ்ஸாலே விரோத்யுபாயஸ்வரூபங்களையும், நாராயணசப்தத்தாலேபரஸ்வரூபத்தையும், அதில்சதுர்த்தியாலே பலஸ்வரூபத்தையும் ப்ரதிபாதிக்கக்கடவதாயிறே யிருப்பது.

இம்மந்த்ரார்த்தவைபவத்தை யருளிச்செய்கிறார்மேல் (பூர்வாசார்யர்களென்று தொடங்கி.)அதாவது-நாதயாமுந யதிவராதிகளான நம்பூர்வாசார்யர்கள், "அன்றுநான் பிறந்திலேன்" என்கிறபடியே- இம்மந்த்ரத்தில்அர்த்தமறிவதற்குமுன்புதங்களைப் பிறந்தார்களாக நினைத்திரார்கள்; இதில் அர்த்தஜ்ஞாநம் தங்களுக்குண்டானபின்பு "பிறந்தபின் மறந்திலேன்"என்ற ஆழ்வார்திவ்யஸூக்தியில் சொல்லுகிறபடியே, இம்மந்த்ரார்த்தத்தையொழிய மற்றொன்றால் காலக்ஷேபம்பண்ணியறியார்களென்கை. வேதசாஸ்த்ரங்கள், ஆழ்வாரருளிச்செயல்கள்இவற்றால் போதுபோக்கும்போதும் இம்மந்த்ரார்த்தத்தையுட்கொண்டே யநுஸந்திக்கையாலே, இத்தையொழிய வேறொன்றால் காலக்ஷேபம் பண்ணியறியார்கள் என்னத்தட்டில்லை.

---

அ.—[ப்ராப்யஸ்யேதி-ப்ராப்யஸ்யேதி]ப்ராப்யமானப்ரஹ்மஸ்வரூபத்தையும், ப்ராப்தாவன ப்ரத்யகாத்மஸ்வரூபத்தையும், ப்ராப்த்யுபாயத்தையும், ப்ராப்திபலத்தையும், ப்ராப்திவிரோதியையும், இதிஹாஸ புராணங்களோடேகூடினஸகலவேதங்களும் வேதவேதாந்தபாரகராய் மஹாத்மாக்களானரிஷிகளும் சொல்லாநின்றார்கள்.

மேலென்றது—இனிமேல் என்றாய்-மந்த்ரவைபவப்ரதிபாதநாநந்தரமென்றபடி. பூர்வாசார்யர்கள் - நாதயாமுநயதிவராதிகளான நம்பூர்வாசார்யர்கள். ஆதிசப்தத்தாலே—எம்பார்தொடங்கித் திருவாய்மொழிப்பிள்ளையளவுமுள்ள ஆசார்யர்களைச் சொல்லுகிறது.

பூர்வாசார்யர்கள் - நாதயாமுநயதிவராதிப்ரப்ர்தி திருவாய்மொழிப்பிள்ளைபர்யந்தமான நம்மாசார்யர்கள், இதில் அர்த்தமறிவதற்குமுன்பு-இம்மந்த்ரத்தில் சொல்லப்படுகிற அர்த்தமறிவதற்கு முன்பு, தங்களைப் பிறந்தார்களாக நினைத்திரார்கள்—,

மூ.—வாசகத்திற்காட்டில் வாச்யத்திலே ஊன்றுகைக்கடி, ஈச்வரனே யுபாயோபேயமென்று நினைத்திருக்கை.

---

வ்யா.—வாசகஶக்திஸர்வத்தையும்ஸாதித்துக்கொடுக்கவற்றா யிருக்க, இதினுடையவாச்யத்திலே இவர்கள் ஊன்றுகைக்குஹேது வேதென்ன அருளிச்செய்கிறார் (வாசகத்திற்காட்டிலென்றுதொடங்கி.) அதாவது-ஸர்வபலத்துக்கும் ஸ்வயம்ஸாதநமாயும், ஸாதநாந்தரங்களுக்கும்ஸஹகாரியாய்நின்று தலைக்கட்டிக்கொடுத்தும் போருகிற இதினுடைய வாசகஶக்திதானே யமைந்திருக்கச் செய்தே, அதிலுங்காட்டில் கீழ்ச்சொன்னபடியே, இம்மந்த்ரத்தினுடைய வாச்யத்திலே, பூர்வாசார்யர்கள் ஊன்றுகைக்கடி, உபேயாந்தரபரராய் இத்தை ஸாதநமாகக்கொண்டு ஸாதித்தல், உபாயாந்தரபரராய் இத்தை ஸஹகாரியாகக்கொள்ளுதல் செய்யுமவர்களைப்போலன்றிக்கே, உபாயோபேயங்களிரண்டும் ஈஶ்வரனேயென்று ப்ரதிபத்திபண்ணி யிருக்கையென்றபடி.

ஆக (திருமந்த்ரத்தினுடைய சீர்மைக்குப்போரும்படி) என்று தொடங்கி, இவ்வளவும்-வாய்வந்தபடி யநுஸந்திக்கவொண்ணாதபடியான இதினுடைய கௌரவத்தையும், ஈஶ்வரன் தானேஶிஷ்யனுமாய் ஆசார்யனுமாய்நின்று வெளியிட்டருளுகையால்வந்த

---

அ.—இதில்அர்த்தஜ்ஞாநம் பிறந்தபின்பு-இதில்அர்த்தஜ்ஞாநம் தங்களுக்குண்டானபின்பு, "பிறந்தபின் மறந்திலேன்" என்கிறபடியே - பிறந்தபின்மறந்திலேன் என்கிற ஆழ்வார்திவ்யஸூக்தியில் சொல்லுகிறபடியே, இத்தையொழிய - இம்மந்த்ரார்த்தத்தையொழிய, வேறொன்றால் – மற்றொன்றால், காலக்ஷேபம்பண்ணியறியார்கள்-காலம் போக்கியறியார்கள் என்றுமூலார்த்தம்.

ஸர்வபலத்துக்கும்-ஐச்வர்யாதி ஸர்வபலத்துக்கும். ஸாதநாந்தரங்களுக்கு - கர்மஜ்ஞாநாதி ஸாதநாந்தரங்களுக்கு. வாசகசக்திதானே யமைந்திருக்க-சப்தசக்திதானே அதிகாராநுகுணமாக பலத்தைக் கொடுக்கைக்கு ஸமர்த்தமாயிருக்கச்செய்தே. கீழ்ச்சொன்னபடியே-பூர்வாசார்யர்கள் என்கிற கீழ்வாக்யத்தில் சொன்னபடியே. வாச்யத்திலே-அர்த்தத்திலே என்றாய், அர்த்தபரசகத்திலேயென்றபடி. உபேயாந்தர பரர் – ஐச்வர்யகைவல்யார்த்திகள். உபாயாந்தரபரர்-உபாஸகர்.

வாசகத்தில்காட்டில்-ஸர்வார்த்தஸாதகமான திருமந்த்ரத்திற்காட்டில், வாச்யத்திலே-திருமந்த்ரத்தினுடைய அர்த்தத்திலே, ஊன்றுகைக்கடி-பூர்வாசார்யர்கள்ஊன்றுகைக்கடி, ஈச்வரனேஉபாயோபேயமென்று-உபாயோபேயங்களிரண்டும்ஈச்வரனேயென்று, நினைத்திருக்கை-ப்ரதிபத்திபண்ணியிருக்கை என்று மூலார்த்தம்.

ஆகஎன்றது-திருமந்த்ரத்தினுடைய சீர்மைக்கு என்றுதொடங்கி, ஈச்வரனே உபாயோபேயம் என்று நினைத்திருக்கை என்னுமளவாக.

மூ.—இது தன்னில் சொல்லுகிற அர்த்தம்; - ஸ்வரூபமும், ஸ்வரூபாநுரூபமானப்ராப்யமும், ஸ்வரூபமும், உபாயமும், பலமுமென்னவுமாம்.

---

ஏற்றத்தையும், ஸகலஶாஸ்த்ரங்களிலும், ஸகலமந்த்ரங்களிலும், வாச்யந்தன்னிலுங் காட்டில் இதுக்குண்டான பெருமையையும், அக்ரமமாகச் சொல்லிலும் தன்கார்யம் செய்யுமாதிக்யத்தையும், அபேக்ஷிதஸகலபலப்ரதத்வரூப மாஹாத்ம்யத்தையும், கர்மாத்யுபாயஸஹகாரித்வரூபமான உத்கர்ஷத்தையும்,ஜ்ஞாதவ்யஸகலார்த்தப்ரதிபாதகதயாவந்தமாஹாத்ம்யத்தையும்,ஏதத்ப்ரதிபாத்யார்த்தகௌரவவிசேஷத்தையும் அருளிச்செய்கையாலே, இம்மந்த்ரத்தினுடைய வைபவத்தை எல்லாரும் அறியும்படி தர்ஶிப்பித்தருளினாராயிற்று.

இனிமேல் இம்மந்த்ரத்துக்கு வாக்யார்த்தம்இரண்டுபடியாகவருளிச்செய்கிறார் (இதுதன்னிலென்றுதொடங்கி.) அதாவது- இம்மந்த்ரந்தன்னில் சொல்லுகிறவர்த்தம் இவ்வாத்மாவினுடைய சேஷத்வபாரதந்த்ர்யங்களாகிறஸ்வரூபமும்; அந்தஸ்வரூபத்துக்கு அநுரூபமாயிருந்துள்ள கைங்கர்யமாகிறப்ராப்யமும்; அன்றிக்கே, சேஷத்வமாகிற ஸ்வரூபமும், அந்தஸ்வரூபாநுரூபமான உபாயமும், உபாயலப்யமான பலமும் என்று சொல்லவுமாமென்கை. இதில் ப்ரதமயோஜனையில் ப்ரணவ நமஸ்ஸுக்களாலே - ஸ்வரூபமும், நாராயணபதத்தாலே-ப்ராப்யமும் சொல்லுகிறது. அநந்தரயோஜனையில் ப்ரணவத்தாலே ஶேஷத்வமும், நமஸ்ஸாலே உபாயமும், நாராயணபதத்தாலேபலமும்சொல்லுகிறது.

---

அ.—எல்லாருமறியும்படி தர்சிப்பித் தருளினார்-இம்மந்த்ரத்தினுடைய ப்ரபாவமும் இதின் அர்த்தப்ரபாவமும் அறிந்தார்களாகில் தங்களுக்கும் இது அவச்யம்வேணும் என்று ஆசார்யோபதேசபூர்வகமாக அறிந்து உஜ்ஜீவிப்பர்கள் என்னு மபிப்ராயத்தாலே.

இம்மந்த்ரத்தில்சொல்லுகிறவர்த்தம்இவ்வாத்மாவினுடைய- ப்ரணவத்தில் த்ரீயபதவாச்யனான இவ்வாத்மாவினுடைய. சொல்லவுமாமென்கை - இரண்டுபடியாகச் சொல்லவுமாமென்றபடி. இதில்-யோஜநாத்வயத்திலும். (ப்ரணவநமஸ்ஸுக்களாலே ஸ்வரூபமும்) ப்ரணவத்தாலே-பகவதநந்யார்ஹ சேஷத்வமாகிற ஸ்வரூபமும், நமஸ்ஸாலே-பாரதந்த்ர்யமாகிற ஸ்வரூபமுமென்றபடி.

(சேஷத்வபோக்த்ர்த்வங்கள்போலன்றே பாரதந்த்ர்யபோக்யதைகள்) சேஷத்வமாது-இஷ்டவிநியோகார்ஹதாமாத்ரம்; பாரதந்த்ர்யமாவது-சேஷிக்கு இஷ்டமானபடியே விநியோகப்படுகை; போக்த்ர்த்வமாவது - ஜ்ஞாத்ர்த்வ பலத்தாலே போகதசையில் வளர்கிற ரஸங்களுக்குத் தான்போக்தாவாகை; - போக்யதையாவது-பதார்த்தகதமான ரஸவர்ணாதிகள் போக்தாவுக்கே போக்யமாயிருக்குமாப்போலே, ஆத்மகதமான ஜ்ஞாநாதிகளும் ஈச்வரனுக்கு போக்யமாயிருக்கை,

மூ.—பலமிருக்கும்படி ப்ரமேயசேகரத்திலும், அர்ச்சிராதி கதியிலும் சொன்னோம்.

இதுதான் எட்டுத்திருவக்ஷரமாய், மூன்றுபதமாயிருக்கும்.

---

வ்யா.—பலவேஷந்தானிருக்கும்படியெங்ஙனேயென்ன வருளிச் செய்கிறார் (பலமிருக்கும்படி யென்றுதொடங்கி.) அதாவது - இவ்வாத்மாவுக்கு ப்ராப்யமான பலந்தான் அர்ச்சிராதிமார்க்கத்தாலே பரமபதத்திலேபோய், பரிபூர்ணபகவதநுபவத்தைப்பண்ணி, அவ்வநுபவஜநிதப்ரீதிப்ரேரிதனாய்க்கொண்டுபண்ணும் அசேஷசேஷ வ்ர்த்தியாகையாலே, அதிருக்கும்படியை ஸங்க்ரஹேணப்ரமேய சேகரமாகிற ப்ரபந்தத்திலும், விஸ்தரேண அர்ச்சிராதிகதியாகிற ப்ரபந்தத்திலும் விசதமாகச் சொன்னோம், அவற்றிலே கண்டு கொள்வதென்கை.

இனி இம்மந்த்ரத்துக்கு ப்ரதிபதம் அர்த்தமருளிச்செய்வதாகத் திருவுள்ளம்பற்றி, ப்ரதமம் இதினுடைய அக்ஷரஸங்க்யையையும், பதஸங்க்யையையும் அருளிச்செய்கிறார்(இதுதானென்று தொடங்கி.) அதாவது - * இம்மந்த்ரந்தான் (ఓమిత్యేకాక్షరమ్, నమఇతి ద్వేఅక్షరే, నారాయణాయేతిపఞ్చాక్షరాణి, ఇత్యష్టాక్షరఞ్ఛన్దసాగాయత్రీచేతి) (ஓமித்யேகாக்ஷரம், நமஇதித்வேஅக்ஷரே, நாராயணாயேதிபஂசாக்ஷராணி, இத்யஷ்டாக்ஷரஂசந்தஸாகாயத்ரீசேதி) (ఓమిత్యగ్రేవ్యాహరేత్, నమఇతి పశ్చాత్, నారాయణాయేత్యుపరిష్టాత్) (ஓமித்யக்ரேவ்யாஹரேத், நம இதி பஶ்சாத், நாராயணாயேத்யுபரிஷ்டாத்) என்கிறபடியே எட்டுத் திருவக்ஷரமாய், மூன்றுபதமா யிருக்குமென்கை. இதினுடைய அஷ்டாக்ஷரத்வஞ் சொல்லுகிறவிடத்தில், (ఓమిత్యేకాక్షరమ్) (ஓமித்யேகாக்ஷரம்) என்றுப்ரணவத்தைஓரக்ஷரமாகவும், (నమఇతిద్వేఅక్షరే) (நமஇதித்வேஅக்ஷரே) என்று நமஸ்ஸை இரண்டக்ஷரமாகவும்,

---

அ.—இதுதன்னில் சொல்லுகிறவர்த்தம்-இம்மந்த்ரந்தன்னில் சொல்லுகிறவர்த்தம், ஸ்வரூபமும் - இவ்வாத்மாவுக்கு ப்ரணவ நமஸ்ஸுக்களாலே சேஷத்வபாரதந்த்ர்யங்களாகிற ஸ்வரூபமும், ஸ்வரூபாநுரூபமான ப்ராப்யமும்-நாராயணபதத்தாலே ஸ்வரூபாநுரூபமானப்ராப்யமும், ஸ்வரூபமும்-ப்ரணவத்தாலே சேஷத்வமாகிற ஸ்வரூபமும், உபாயமும்-நமஸ்ஸாலே உபாயமும், பலமுமென்னவுமாம் - நாராயணபதத்தாலே பலமான கைங்கர்யமுமென்று சொல்லவுமாமென்று மூலார்த்தம்.

பலவேஷமென்றது-பலஸ்வரூபமென்றபடி.

பலமிருக்கும்படி-பலஸ்வரூபமிருக்கும்படியை, ப்ரமேய சேகரத்திலும்-ஸங்க்ரஹேணப்ரமேயசேகரமென்கிற ப்ரபந்தத்திலும், அர்ச்சிராதிகதியிலும்- விஸ்தரேண அர்ச்சிராதியாகிற ப்ரபந்தத்திலும், சொன்னோம்; - விசதமாகச்சொன்னோம், அவற்றிலே கண்டுகொள்வது என்று மூலார்த்தம்,

மூ.—மூன்றுபதமும் மூன்று அர்த்தத்தைச் சொல்லுகிறது.
அதாவது ஶேஷத்வமும், பாரதந்த்ர்யமும், கைங்கர்யமும்.
இதில்முதற்பதம் ப்ரணவம்.
இது (அ) என்றும், (உ) என்றும், (ம) என்றும் மூன்று
திருவக்ஷரம்.

---

வ்யா.—(నారాయణాయేతిపఞ్చాక్షరాణి)(நாராயணாயேதிபஂசாக்ஷராணி)
என்று-நாராயணபதத்தை அஞ்சக்ஷரமாகவும் ச்ருதி சொல்லுகை
யாலே, ஸமஸ்தபதமான நாராயணபதத்தில், நாரபதத்தைப்
பிரித்து ஷடக்ஷரமாக்கி, பரணவத்தையொழிய அஷ்டாக்ஷரத்வம்
சொல்லுமவர்களுடைய பக்ஷம், அவைதிகமாகையாலே அநாதர
ணீயமாகக்கடவது.

இதில் பதத்ரயமும் எவ்வர்த்தத்தைச் சொல்லுகிறதென்னு
மாகாங்க்ஷையிலே, (மூன்றுபதமும் மூன்றர்த்தத்தைச் சொல்லு
கிறது) என்கிறார். அவ்வர்த்தங்கள் தன்னை விஶதமாக அருளிச்
செய்கிறார் (அதாவது ஶேஷத்வமும், பாரதந்த்ர்யமும், கைங்கர்
யமும் என்று.) (ஸ்வரூபமும், ஸ்வரூபாநுரூபமான ப்ராப்யமும்)
என்று முதல்சொன்ன வாக்யார்த்தம், இத்தை நினைத்திறே.
இப்பதத்ரயத்திலும்ப்ரதமபதந்தானேதென்ன (இதில்முதல்பதம்
ப்ரணவமென்கிறார்.)(ఓమిత్యగ్రేవ్యాహరేత్)(ஓமித்யக்ரேவ்யாஹரேத்)
என்றிறே ஶ்ருதிசொல்லிற்று. ஸ்ம்ருதியும் (ప్రణవాద్యంనమోమధ్యం
నారాయణపదాన్తిమమ్। మన్త్రమష్టాక్షరంవిద్యాత్సర్వసిద్ధికరంనృణామ్)(ப்ரணவாத்
யஂ நமோமத்யஂ நாராயணபதாந்திமம் - மந்த்ரமஷ்டாக்ஷரஂ வித்
யாத் ஸர்வஸித்திகரஂந்ர்ணாம்)என்றதிறே.

இனி ப்ரணவத்துக்கு அர்த்தமருளிச்செய்வதாக, இதினு
டைய அக்ஷரத்ரயாத்மகதையை யருளிச்செய்கிறார் (இது - அ-
என்றும், உ - என்றும், ம - என்றும் மூன்று திருவக்ஷரம்என்று.)

---

அ.—ஸமஸ்தபதமான நாராயணபதத்தில்-பிந்நபதமன்றிக்கே
ஏகபதத்வேந ச்ருதிப்ரஸித்தமான நாராயணபதத்தி லென்றபடி.
நாராயணபதத்தை ஷடக்ஷரமாக்கி - நாரஅயநாய என்று பிந்நமா
கப்பிரித்து ஷடக்ஷரமாக்கி. அவைதிகமாகையாலே - வைதிக
மல்லாமையாலே. அநாதரணீயமாகக்கடவது-ஆதரிக்கத்தக்கதன்
றென்றபடி.

சேஷத்வமாவது-யதேஷ்டவிநியோகார்ஹத்வம். பாரதந்த்ர்
யமாவது - யதேஷ்ட விநியுஜ்யமாநத்வம். கைங்கர்யமாவது -
பகவந்முகவிகாஸஹேதுவான வ்ர்த்திவிசேஷம்.

மூன்றுதாழியிலே தயிரைநிறைத்துக் கடைந்து வெண்ணெய் திரட்டுமாப்போலே மூன்றுவேதத்திலும் மூன்றக்ஷரத்தையும் எடுத்தது.

---

வ்யா.—இப்ரணவந்தான், அஸம்ஹிதாகாரத்தாலேமூன்றக்ஷரமாய், மூன்றுபதமாய், மூன்றர்த்தப்ரகாசகமாய், ஸம்ஹிதாகாரத்தாலே ஏகாக்ஷரமாய், ஏகபதமாய், ஏகார்த்தப்ரகாசகமாயிறேயிருப்பது. இந்த அக்ஷரத்ரயத்தினுடையவும் உத்பத்திக்ரமத்தைஸதர்ஷ்டாந்தமாகவருளிச்செய்கிறார் (மூன்றுதாழியிலேஎன்றுதொடங்கி) (భూరితిఋగ్వేదాదజాయత, భువఇతియజుర్వేదాత్, సువరితిసామవేదాత్, తానిశుక్రాణ్యభ్యతపత్, తేభ్యోభితప్తేభ్యస్త్రయోవర్ణాఅజాయన్త, అకార ఉకార మకారఇతి, తానేకధాసమభరత్తదేతదోమితి,) (பூரிதிரிக்வேதாதஜாயத, புவஇதியஜுர்வேதாத், ஸுவரிதிஸாமவேதாத், தாநிசுக்ராண்யப்யதபத், தேப்யோபிதப்தேப்யஸ்த்ரயோவர்ணா அஜாயந்த, அகார உகார மகார இதி, தாநேகதாஸமபரத்ததேததோமிதி) என்றும், (అకారఞ్చాప్యుకారఞ్చ మకారఞ్చప్రజాపతిః। వేదత్రయాన్నిరబృహద్భూర్భువస్స్వరితీతిచ) (அகாரஂசாப்யுகாரஂசமகாரஂசப்ரஜாபதி: - வேதத்ரயாந்நிரப்ர்ஹத்பூர்ப்புவஸ்ஸ்வரிதீதிச) என்றும்ஶ்ருதிஸ்ம்ர்திகளிற்சொல்லுகிறபடியேரிக்யஜுஸ்ஸாமரூபமானவேதத்ரயத்தில்நின்றும், "பூ:-புவ:-ஸுவ:," என்கிற வ்யாஹ்ர்தித்ரயத்தையும் தோற்றுவித்து, அந்தவ்யாஹ்ர்தித்ரயத்தையும், பொன்ஓட வைக்குமாப்போலே தன்ஸங்கல்பத்தால் ஓடவைத்து, அவற்றில்நின்றும் – அகார - உகார மகாரங்களாகிற அக்ஷரங்கள்மூன்றும், அடைவேதோன்றும்படி பண்ணி, இப்படி ஸர்வேச்வரன் ஸமுத்தரித்தபடியைத் திருவுள்ளம்பற்றி, பாத்ரத்ரயகதமானதயிரைத் தனித்தனியே கடைந்து, தத்ஸாரமானவெண்ணெயைவாங்கித் திரட்டினாப்போலே, மூன்றுவேதத்திலும் மூன்றக்ஷரத்தையுமெடுத்தது என்கிறார்.

---

அ.—அஸம்ஹிதாகாரம்-பிரிந்திருக்கை. (மூன்றர்த்தப்ரகாசகமாய்) லுப்தசதுர்த்திவிபக்திஸஹிதமானஅகாரம் பகவச்சேஷத்வரூபார்த்த ப்ரகாசகமாயும், உகாரம் அநந்யார்ஹத்வஸம்பந்தார்த்த ப்ரகாசகமாயும், மகாரம்-அந்த சேஷத்வாச்ரயமாய் ஜ்ஞாதாவா யிருக்கிறஜீவாத்மஸ்வரூபார்த்த ப்ரகாசகமாயுமிருக்குமென்றபடி. ஏகார்த்தப்ரகாசகமாய் - ஜீவஸ்வரூபைகார்த்தப்ரகாசகமாய், தோற்றுவித்து-தன்ஸங்கல்பத்தாலேதோன்றும்படிபண்ணி. [అకారఞ్చ-அகாரஂசேதி] அகாரத்தையும் உகாரத்தையும் மகாரத்தையும் ப்ராஜாபதியானவன் "భూః,భువః,సువః" (பூர்ப்புவஸ்ஸுவ:) என்கிற வ்யாஹ்ர்திகளையும் தனித்தனியே இடையீடாகக்கொண்டு வேதத்ரயத்தில்நின்றும் ஸங்க்ரஹித்தான். இடையீடாவது-வேதத்ரயத்தையும் ஒருதட்டும் இந்த அக்ஷரத்யத்தையும் ஒருதட்டுமாக நிறுத்துகை. ஓடவைத்து - ஓடும்படி உருக்குகை. தோன்றும்படி பண்ணுகையாவது - ஸமுத்தரிக்கை.

மூ.—ஆகையால் இது ஸகலவேதஸாரம். இதில் அகாரம் ஸகலஶப்தத்துக்கும் காரணமாய்,

---

வ்யா.—இத்தால்பலித்தத்தையருளிச்செய்கிறார்(ஆகையாலிது ஸகலவேதஸாரம் என்று.) அதாவது - அக்ஷரத்ரயமும் ஓரோ வேதத்தினுடைய ஸாரமாக ஸமுத்ர்தமாகையாலே, இவ்வக்ஷர த்ரயாத்மகமான ப்ரணவம், ஸகலவேதஸாரம் என்றபடி. 'ஆக இதுதன்னிற்சொல்லுகிற அர்த்தம்' என்று தொடங்கி இவ்வளவும்- இம்மந்த்ரத்தினுடைய வாக்யார்த்தத்தையும், அக்ஷரஸங்க்யையை யும், பதஸங்க்யையையும், பதத்ரயமும் அர்த்தத்ரய ப்ரதிபாதக மென்னுமத்தையும், அதில்ப்ரதமபதம் இன்னதென்னுமத்தையும், அதுதான் அக்ஷரத்ரயாத்மகமாயிருக்குமென்னுமத்தையும், அவ் வக்ஷரத்ரயமும் வேதத்ரயஸாரமாகஉத்பந்நமாகையாலே தத்ஸமு தாயமான ப்ரணவம் ஸகலவேதஸாரமென்னு மத்தையும் அருளிச் செய்தாராயிற்று.

இனி இவ்வக்ஷரத்ரயத்துக்கும் அடைவேஅர்த்தமருளிச்செய் வதாகத் திருவுள்ளம்பற்றி, ப்ரதமம் அகாரார்த்தத்தை யருளிச் செய்கிறார் (இதில் அகாரமென்றுதொடங்கி.) அதாவது - இவ் வக்ஷரத்ரயத்திலும்வைத்துக்கொண்டு ப்ரதமாக்ஷரமான அகாரம், (నామరూపఞ్చభూతానాం కృత్యానాఞ్చప్రపఞ్చనమ్। వేదశబ్దేభ్యఏవాదౌ దేవాదీనాం చకారసః) (நாமரூபஂசபூதாநாஂ க்ர்த்யாநாஂசப்ரபஂசநம் - வேத சப்தேப்ய ஏவாதௌதேவாதீநாஂ சகாரஸ:) என்கிறபடியே-லௌ கிகஸகலஶப்தங்களுக்கும்வேதம்காரணமாய், (ప్రణవాద్యాస్తథావేదాః) (ப்ரணவாத்யாஸ்ததாவேதா:)(ఓఙ్కారప్రభవావేదాః)(ஓங்காரப்ரபவா வேதா:) இத்யாதிகளிற் சொல்லுகிறபடியே அந்தவேதங்களுக்கும்

---

அ.—மூன்றுதாழியிலே நிறைத்ததயிரை-பாத்ரத்ரயகதமாக, கடைந்து - தனித்தனியே கடைந்து, வெண்ணய் - தத்ஸாரமான வெண்ணெயை வாங்கி, திரட்டுமாப்போலே- சேர்த்தாப்போலே, மூன்றுவேதத்திலும் - ரிக்யஜுஸ்ஸாமங்களாகிற மூன்றுவேதத்தி லும், மூன்றக்ஷரத்தையும் எடுத்தது,—என்று மூலார்த்தம்.

ஆகையால்-அக்ஷரத்ரயமும் ஓரோவேதத்தினுடைய ஸார மாக ஸமுத்ர்தமாகையாலே, இது - இவ்வக்ஷரத்ரயாத்மகமான ப்ரணவம், ஸகலவேதஸாரம்-ஸகலவேதங்களுடையவும் ஸாரபூத மாயிருக்குமென்று மூலார்த்தம்.

இனி-இனிமேல். இவ்வக்ஷரத்ரயத்துக்கும் - ஸகலவேதஸார மாக ஸமுத்ர்தமான இந்தஅக்ஷரத்ரயத்துக்கும். [నామరూపమ్- நாமரூபமிதி] தேவாதிகளான ஸர்வபூதங்களுடைய நாமங்களை யும், ரூபங்களையும், வ்யாபார விசேஷங்களையும் வேதசப்தங்களா லே கண்டு முன்புபோலே ஸ்ரஷ்டாவானவன் ஸ்ர்ஷ்டித்தான்.

மூ.—நாராயணபதத்துக்கு ஸங்க்ரஹமாயிருக்கையாலே, ஸகலஜகத்துக்குங்காரணமாய் ஸர்வரக்ஷகனான எம்பெருமானைச் சொல்லுகிறது.

---

வ்யா.—ப்ரணவம் காரணமாய், (తస్యప్రకృతిలీనస్య) (தஸ்யப்ரக்ருதிலீநஸ்ய) என்கிறபடியே அந்தப்ரணவந்தனக்கும், தான்காரணமாயிருக்கையாலே (అకారోవైసర్వావాక్) (அகாரோவை ஸர்வாவாக்) (సమస్తశబ్ద మూలత్వా దకారస్యస్వభావతః) (ஸமஸ்தசப்தமூலத்வாதகாரஸ்ய ஸ்வபாவத:) என்கிறபடியே ஸகலசப்தத்துக்குங்காரணமாய், ஸர்வேஶ்வரன் ஸமஸ்தவஸ்து ஶரீரிதயா ஸர்வரக்ஷகனா யிருக்கும்படியை ப்ரதிபாதிக்கிற நாராயணபதத்துக்குஸங்க்ரஹமா யிருக்கையாலே, (యతోవాఇమానిభూతానిజాయన్తేయేనజాతానిజీవన్తి) (யதோவா இமாநி பூதாநிஜாயந்தே, யேநஜாதாநிஜீவந்தி) (సఏవసృజ్యస్సచసర్గకర్తా సఏవపాత్యత్తిచపాల్యతేచ) (ஸஏவஸ்ர்ஜ்யஸ்ஸசஸர்க்ககர்த்தா ஸஏவபாத்யத்திசபால்யதேச) இத்யாதிகளிற் சொல்லுகிறபடியே எல்லாஜகத்துக்கும் காரணமாய், எல்லார்க்கும் ரக்ஷகனாயிருக்குமெம்பெருமானைச் சொல்லுகிறதென்கை. இத்தால் - இவ்வக்ஷரத்தில் ப்ரக்ர்த்யர்த்தமான காரணத்வமும், தாத்வர்த்தமான ரக்ஷகத்வமும் சொல்லிற்றாயிற்று. இவ்வகாரத்துக்கு நாராயணபதஸங்க்ரஹதயா ரக்ஷகவாசித்வம் சொல்லும்போதும், தாதுஸித்தவேஷத்தை அவலம்பித்தே சொல்லவேணுமிறே.

---

அ.—எல்லா ஜகத்துக்கும்-ஸமஸ்த ஜகத்துக்கும், ஜகதந்தர்வர்த்திஸகலப்ராணிகளுக்கும். காரணமாய்-நிமித்தஸஹகாரிஉபாதாநரூபத்ரிவிதகாரணமாய். இத்தால்-ஸகல ஜகத்துக்கும் காரணமாய் ஸர்வரக்ஷகனான எம்பெருமானைச்சொல்லுகிற அர்த்தத்தால், ப்ரக்ர்த்யர்த்தமும் - ப்ரணவஸஂஜ்ஞிக அகாரார்த்தமான காரணத்வமும், தாத்வர்த்தமான ரக்ஷகத்வமும், "அவரக்ஷணே" என்கிறவிடத்திலே, அவ்என்கிறதாத்வர்த்தமான ரக்ஷகத்வமும்.

இதில்-இந்த அக்ஷரத்ரயத்திலும், அகாரம்-ப்ரதமாக்ஷரமான அகாரம், ஸகலசப்தத்துக்கும் காரணமாய் - ச்ருதிஸ்ம்ர்த்யாதிகளில் சொல்லுகிறபடியே ஸகலசப்தத்துக்கும் காரணமாய், நாராயணபதத்துக்கு ஸங்க்ரஹமா யிருக்கையாலே-ஸர்வேச்வரன் ஸமஸ்தவஸ்து சரீரிதயா ஸர்வரக்ஷகனா யிருக்கும்படியை ப்ரதிபாதிக்கிறநாராயண பதத்துக்கு ஸங்க்ரஹமாயிருக்கையாலே, ஸகல ஜகத்துக்கும் காரணமாய் - ச்ருதிஸ்ம்ர்த்யாதிகளில் சொல்லுகிறபடியே எல்லாஜகத்துக்கும் காரணமாய், ஸர்வரக்ஷகனான - எல்லார்க்கும் ரக்ஷகனாயிருக்கும், எம்பெருமானைச் சொல்லுகிறது—, என்று மூலார்த்தம்.

மூ.—ரக்ஷிக்கையாவது-விரோதியைப் போக்குகையும், அபேக்ஷிதத்தைக்கொடுக்கையும். இவையிரண்டும் சேதநர் நின்றநின்றவளவுக்கீடாயிருக்கும். ஸம்ஸாரிகளுக்குவிரோதிஶத்ருபீடாதிகள், அபேக்ஷிதம் அந்நபாநாதிகள்;

---

வ்யா—ரக்ஷிக்கையாவதுதானேதென்னும்ஆகாங்க்ஷையிலேயருளிச்செய்கிறார் (ரக்ஷிக்கையாவதென்றுதொடங்கி.) அதாவது-ரக்ஷகத்வந்தான் அநிஷ்டநிவர்த்தகத்வ, இஷ்டப்ராபகத்வரூபேண த்விவிதமாகையாலே, ஈஶ்வரன் சேதநரை ரக்ஷிக்கையாவது அவர்களுக்கு துஃகாவஹமான விரோதியைப் போக்குகையும், ஸுகாவஹமான அபேக்ஷிதத்தைக்கொடுக்கையுமென்கை. இவர்களுக்கு இவன்போக்கும் விரோதியேது, கொடுக்கும் அபேக்ஷிதமேதென்ன அருளிச்செய்கிறார் (இவையிரண்டும்சேதநர்நின்றநின்றவளவுக்கீடா யிருக்குமென்று.) சேதநர் நின்றநின்றவளவுக்கீடாயிருக்கும் என்றது - தத்ததிகாராநுகுணமா யிருக்குமென்றபடி.

இது தன்னை வ்யக்தமாக வருளிச்செய்கிறார்மேல் (ஸம்ஸாரிகளுக்கித்யாதி.) அதாவது-தேஹாத்மாபிமாநாதிகளும், ஶப்தாதி விஷயாநுபவமுமே யாத்ரையாயிருக்கும் ஸம்ஸாரிகளுக்கு நிவர்த்யமான விரோதி, ஶத்ருக்களால்வரும் நலிவுதொடக்கமானவை; ப்ராப்யமானவபேக்ஷிதம், சோறுதண்ணீர்முதலானவையென்கை. (சத்ருபீடாதிகள்) என்கிறவிடத்தில், ஆதிஶப்தத்தாலே - ஆதிவ்யாதிமுதலானவற்றால்வரும்பீடைகளைச்சொல்லுகிறது. (அந்நபாநாதிகள்) என்கிறவிடத்தில், ஆதிஶப்தத்தாலே-ஸ்ரக்வஸ்த்ராபரணாங்கராகாங்கநாலிங்கநாதிகளைச்சொல்லுகிறது.

---

அ.—ரக்ஷிக்கையாவது - ஈச்வரன்சேதநரைரக்ஷிக்கையாவது, விரோதியைப் போக்குகையும்-துஃகாவஹமான விரோதியைப் போக்குகையும், அபேக்ஷிதத்தைக் கொடுக்கையும் - ஸுகாவஹமான அபேக்ஷிதங்களைக் கொடுக்கையுமென்று மூலார்த்தம்.

இவையிரண்டும் - போக்கும்விரோதியும் கொடுக்கும் அபேக்ஷிதமுமாகிற இவையிரண்டும், சேதநர் நின்றநின்றவளவுக்கு-சேதநருடையதத்ததிகாரத்துக்கு, ஈடாயிருக்கும்- அநுகுணமாயிருக்குமென்று மூலார்த்தம்.

தேஹாத்மாபிமாநாதிகளும் என்கிறவிடத்தில், ஆதிசப்தத்தாலே - ஸ்வஸ்வாதந்த்ர்யாபிமாநத்தைச்சொல்லுகிறது. யாத்ரையாயிருக்கை-போதுபோக்காயிருக்கை. அநுபவமே யாத்ரைஎன்றத்தாலே-வேறொன்றால் போதுபோக்குகை யன்றிக்கே அதுவே கமநமாயிருக்கையைச் சொல்லுகிறது. (ஆதிவ்யாதி)ஆதியாவது-மாநஸிகதுஃகம்;வ்யாதியாவது-தேஹஜமான ஜ்வராதிகள்.

மூ.—முமுக்ஷுக்களுக்குவிரோதி ஸம்ஸாரஸம்பந்தம்,

---

வ்யா.—(முமுக்ஷுக்களுக்கித்யாதி) அதாவது-ஸஂஸாரத்திலடிக்கொதித்து, பரமபதத்திலேபோகவாசைப்படாநிற்கும் முமுக்ஷுக்களுக்குநிவர்த்யமானவிரோதி *பொய்ந்நின்றஞானமும்பொல்லாவொழுக்கு மழுக்குடம்புமாய்க்கொண்டுஇவ்விபூதியிலேயிருக்கையாகிற ஸஂஸாரஸம்பந்தம்;

---

அ.—ஸஂஸாரிகளுக்கு-தேஹாத்மாபிமாநிகளாய்சப்தாதிவிஷயப்ரவணரான ஸஂஸாரிகளுக்கு, விரோதி-நிவர்த்யமான விரோதி, சத்ருபீடாதிகள் - சத்ருக்களால்வரும் பாதை ஆதிவ்யாதிகளால் வரும் ச்லேசம், அபேக்ஷிதம்-ப்ராப்யமான அபேக்ஷிதம், அந்நபாநாதிகள்-சோறு தண்ணீர் ஸ்ரக்வஸ்த்ராபரணங்க நாலிங்கநசும்பந க்ரீடைகளென்று மூலார்த்தம்.

ஸஂஸாரத்தில், அடிக்கொதித்து-கால்கொதித்து. அதாவது-விரோதி ஜ்ஞாநம்தலையெடுக்கை. பரமபதத்திலே-ஸுகாவஹமான பரமபதத்திலே.

பொய்ந்நின்ற-உத்பத்தி விநாசாதி யோகத்தாலே அஸத்ய சப்தவாச்யமான அசேதநவிஷயத்தில், ஞாநமும் - ஆத்மஜ்ஞாநமும், பொல்லாவொழுக்கும்-அந்த தேஹாத்மாபிமாநமடியான ஸஂஸார துஷ்கர்மப்ரவ்ர்த்தியும், அழுக்குடம்பும் - இக்கர்மமடியாகவரக்கடவதான மாஂஸாஸ்ர்காதி மலரூபதேஹஸம்பந்தமும், இந்நின்ற நீர்மை - இவற்றிலே நிலைநின்றுபோந்த வாஸநாருசிகளாகிற ஸ்வபாவ விசேஷத்தை, இனி யாமுறாமை-நிர்ஹேதுக கடாக்ஷமூலமானஜ்ஞாநலாபத்தையுடையவர்களாய் இன்று அங்கிகாரபலத்தையுடைய நாங்கள் அணுகாதபடி, உயிரளிப்பான் எந்நின்ற யோநியுமாய்ப் பிறந்தாய் - ப்ராணிபதார்த்தங்களுடைய அநிஷ்ட நிவ்ர்த்தியையும் இஷ்ட ப்ராப்தியையும் பண்ணிக்கொடுக்கைக்காக ரூபப்ரகாரவ்யவஸ்திதங்களான ஸகலஜாதிகளிலும் அவதீர்ணனானவனே, இமையோர்தலைவா - ஏவஂவிதஸௌலப்யவிசிஷ்டனான வுன்னை ஆச்ரிதரை ஸதா அநுபவிப்பிக்கைக்காக ஸதாஸ்தாநபரரான *அயர்வறுமமரர்களுக்கு அதிபதியானவனே, அடியேன் செய்யும் விண்ணப்பம் மெய்ந்நின்றுகேட்டருளாய் - உன்திருவடிகளில் நிருபாதிகசேஷத்வத்தையே ஸ்வரூபமாகவுடையனான நான்செய்கிறமெய்யானவிண்ணப்பத்தை, ஜகத்வ்யாபாரத்தில் பராக்கற்றுநின்று கேட்டருளமேணும். மெய்ந்நின்று என்று-அபரோக்ஷிக்கும்படி நின்றென்னவுமாம். கேட்டருளாய் என்று-கேட்கைதானே அருளென்று கருத்து. இந்நின்ற நீர்மை இனி யாமுறாமை-அடியேன்செய்யும் விண்ணப்பம். என்றந்வயம். யாமுறாமை என்று பன்மையாயிருக்க, அடியேன் என்ற ஒருமையாலே - ஈச்வரனுக்கு விஜ்ஞாபிப்பார் தாமொருவருமாய், பலலாபம் ஸம்பந்திபரம்பரைக்கும் ஒக்குமென்றுகருத்து

மூ.—அபேக்ஷிதம்பரமபதப்ராப்தி. முக்தர்க்கும்,நித்யர்க்கும் விரோதி கைங்கர்யஹாநி; அபேக்ஷிதம் கைங்கர்யவ்ர்த்தி.

---

வ்யா.—ப்ராப்யமான வபேக்ஷிதம், பகவதநுபவாதிகளுக்கு அநுகூலமான பரமபதத்தைப்ராபிக்கையென்கை.

(முக்தர்க்குமித்யாதி.) அதாவது - நிவர்த்த ஸம்ஸாரராயும், அஸ்ப்ர்ஷ்ட ஸம்ஸாரகந்தராயும், பகவதநுபவஜநித ப்ரீதிகாரித கைங்கர்ய பரராயிருக்கும் முக்தர்க்கும் நித்யர்க்கும்விரோதி-வகுத்தஶேஷியான ஸர்வேஶ்வரன்திருவடிகளிலே ஸ்வரூபாநுரூபமாகப் பண்ணிக்கொண்டுபோரும் கைங்கர்யத்துக்கு வரும் விச்சேதம். அபேக்ஷிதம் உத்தரோத்தரம் அடிமைசெய்துசெல்லுகையாகிற கைங்கர்யவ்ர்த்தியென்கை. ஆக, இப்படி அதிகாராநுகுணம் விரோதியைப்போக்கி அபேக்ஷிதத்தைக்கொடுக்கையாலே ஈஶ்வரனே ஸர்வரக்ஷகனென்னுமிடம் சொல்லிற்றாயிற்று.

---

அ.—முமுக்ஷுக்களுக்கு-ஸம்ஸாரத்திலே அடிக்கொதித்துபரமபதத்திலேபோகஆசைப்படாநிற்கும்முமுக்ஷுக்களுக்கு,விரோதி-நிவர்த்யமான விரோதி, ஸம்ஸாரஸம்பந்தம்-அவித்யாகர்மவாஸநாருசிப்ரக்ர்தி ஸம்பந்தத்தோடே இவ்விபூதியிலே யிருக்கையாகிற ஸம்ஸாரஸம்பந்தம், அபேக்ஷிதம்-ப்ராப்யமான அபேக்ஷிதம், பரமபதப்ராப்தி-பகவதநுபவாதிகளுக்கு அநுகூலமான பரமபதத்தைப்ராபிக்கையென்று மூலார்த்தம்.

நிவ்ர்த்த ஸம்ஸாரராய் என்கிற விசேஷணம்-முக்தர்க்கும், அஸ்ப்ர்ஷ்ட ஸம்ஸாரகந்தராயென்கிற விசேஷணம் - நித்யர்க்கும், பகவதநுபவஜநித ப்ரீதிகாரிதகைங்கர்யபரரா யிருக்கும் என்கிற விசேஷணம் - இருவர்க்குமாக யோஜிக்கவுமாம். ஸ்வரூபாநுரூபமாக-சேஷத்வபாரதந்த்ர்யஸ்வரூபாநுரூபமாக.

முக்தர்க்கும்-நிவ்ர்த்த ஸம்ஸாரராயும் பகவதநுபவஜநிதப்ரீதிகாரித கைங்கர்யபரராயு மிருக்கும் முக்தர்க்கும், நித்யர்க்கும்-அஸ்ப்ர்ஷ்ட ஸம்ஸாரகந்தராயிருக்கிற நித்யர்க்கும்; விரோதி - நிவர்த்யமான விரோதி, கைங்கர்யஹாநி - வகுத்த சேஷியான ஸர்வேச்வரன்திருவடிகளிலே ஸ்வரூபாநுரூபமாகப் பண்ணிக்கொண்டுபோரும் கைங்கர்யத்துக்கு வரும் விச்சேதம், அபேக்ஷிதம் - ப்ராப்யமான அபேக்ஷிதம், கைங்கர்யவ்ர்த்தி - உத்தரோத்தரம் அடிமைசெய்து செல்லுகையாகிற கைங்கர்ய வ்ர்த்தி என்று மூலார்த்தம்.

மூ.— ஈஶ்வரனையொழிந்தவர்கள் ரக்ஷகரல்ல ரென்னுமிடம் ப்ரபந்நபரித்ராணத்திலே சொன்னோம்.

---

வ்யா.—இப்படி, ஈஶ்வரனேயோபின்னை எல்லாரையும் ரக்ஷிக்கிறவன், லோகத்திலே மாதாபித்ர்ப்ரப்ர்திதேவதாந்தர பர்யந்தமாக ரக்ஷகராய்ப் போருகிறவர்கள் பலருமில்லையோவென்ன வருளிச்செய்கிறார் (ஈஶ்வரனையொழிந்தவர்கள் ரக்ஷகரல்லரொன்னுமிடம் ப்ரபந்நபரித்ராணத்திலே சொன்னோம் என்று.) அதாவது - நிருபாதிகபந்துவாய், ஸர்வகாலமும் கைவிடாதே நோக்கிக்கொண்டு போரும் ஸர்வேஶ்வரனையொழிந்தஔபாதிகபந்துக்களானமாதாபித்ராதிகளும், அர்வாசீநரான தேவதாந்தரங்களும் ரக்ஷகரல்லரென்னுமிடம், ஸஹேதுகமாக ப்ரபந்நபரித்ராண மென்கிற ப்ரபந்தத்திலே சொன்னோம், அதிலேகண்டுகொள்வதென்கை.

---

அ.—அர்வாசீநரான-தங்களுடைய ரக்ஷணத்தில் தங்களுக்கு சக்தியில்லாதவர்களான.

ஈச்வரனையொழிந்தவர்கள் - நிருபாதிகபந்துவாய்ஸர்வகாலமும் கைவிடாதே நோக்கிக்கொண்டுபோரும் ஸர்வேச்வரனை யொழிந்தவர்கள், ரக்ஷகரல்லரென்னுமிடம் - ஔபாதிகபந்துக்களான மாதாபித்ராதிகளும் அர்வாசீநரான தேவதாந்தரங்களும் ரக்ஷகரல்லரொன்னுமிடம், ப்ரபந்நபரித்ராணத்திலே சொன்னோம்- ஸஹேதுகமாகப்ரபந்நபரித்ராண மென்கிற ப்ரபந்தத்திலேசொன்னோம், அதிலே கண்டுகொள்வது என்று மூலார்த்தம்.

ப்ரபந்ந பரித்ராணே; - ப்ராதாக்கள் ரக்ஷகரல்லரென்னுமிடம்வாலிபக்கலிலும் ராவணன்பக்கலிலும் காணலாம்; புத்ரர்கள் ரக்ஷகரல்லரொன்னுமிடம் ருத்ரன்பக்கலிலும் கம்ஸன்பக்கலிலுங்காணலாம்; மாதாபிதாக்கள் ரக்ஷகரல்லரொன்னுமிடம், கைகேயிபக்கலிலும் ராவணன்பக்கலிலும்காணலாம்; ஸ்த்ரீகளுக்கு பர்த்தாக்கள் ரக்ஷகரல்லரொன்னுமிடம், தர்மபுத்ராதிகள் பக்கலிலும் நளன்பக்கலிலும் காணலாம்.

இவர்கள் ரக்ஷகரொன்றே நாட்டில் கண்காட்டியாய்ப்போருகிற சந்த்ராதித்யர்கள் ரக்ஷகராகக் குறை யென்னென்னில்; அவர்களும் ஈஶ்வராஜ்ஞைக்கு அஞ்சி, தாங்கள் நினைத்தபடி ஸஞ்சரிக்கப்பெறாதே * நாழிகை கூறிட்டுக்கொண்டு உதிப்பது அஸ்தமிப்பதாய்க்கொண்டு ஹிரண்யராவணாதிகள்கையிலேயகப்பட்டு அவர்களுக்கு இழிதொழில்செய்துதிரிகையாலும் ரக்ஷகராகமாட்டார்கள்.

மூ.—ரக்ஷிக்கும்போது பிராட்டிஸந்நிதி வேண்டுகையாலே, இதிலே ஸ்ரீஸம்பந்தமுமநுஸந்தேயம்.

---

வ்யா.—அநந்தரம் அர்த்தபலத்தாலே இப்பதத்திலே அநுஸந்திக்கப்படும் ஸ்ரீயஃபதித்வத்தையருளிச்செய்கிறார். (ரக்ஷிக்கும்போது என்று தொடங்கி.) அதாவது - (లక్ష్మ్యా సహ హృషీకేశో దేవ్యా కారుణ్యరూపయా। రక్షకస్సర్వసిద్ధాన్తే వేదాన్తేపి చ గీయతే) (லக்ஷ்ம்யாஸஹ ஹ்ருஷீகேசோ தேவ்யாகாருண்யரூபயா - ரக்ஷகஸ்ஸர்வஸித்தாந்தே வேதாந்தேபிசகீயதே) என்கிறபடியே ரக்ஷகனான ஈச்வரன் சேதநனை ரக்ஷிக்கும்தசையில், இவர்களுடைய அபராதங்களைக் கண்டாதல், தன் ஸ்வாதந்த்ர்யத்தாலே யாதல் உபேக்ஷியாமல் செய்கைக்குறுப்பான க்ருபையை ஜநிப்பிக்கும் புருஷகாரபூதையான பிராட்டி ஸந்நிதி அவஶ்யாபேக்ஷிதமாகையாலே, ரக்ஷகனானவனைச் சொல்லுகிற இவ்வகாரத்திலே, அவனுடைய லக்ஷ்மீஸம்பந்தமும் அநுஸந்தேயமென்கை.

---

அ.—த்ரைலோக்யத்துக்குமீச்வரனான இந்த்ரனும் நம்பதம் எப்போது நழுவுகிறதோ! என்று அஞ்சி, ஶாபோபஹதனாய் ப்ரஹ்மஹத்யையாலே அபிபூதனாய் இந்த்ரஜித்தின் கையிலே கட்டுண்டு, மஹாபலிபோல்வார்கையிலே ஐச்வர்யத்தைப்பறிகொடுத்துக் கண்ணும்கண்ணீருமாய்க் கழுத்தும் கப்படமுமாய்க்கொண்டு திரிந்தானொருவனாகையாலும் ரக்ஷகனாகமாட்டான். ப்ரஹ்மாவும், மதுகைடபர்கையிலே நோவுபட்டு வேதங்களைப்பறிகொடுத்து, “கண்ணிழந்தேன், தநமிழந்தேன்” என்று நிலம் துழாவுகையாலும், ருத்ரன்கையிலே தலையறுப்புண்கையாலும் ரக்ஷகனாகமாட்டான்.

ருத்ரனும், ஸகலப்ராணிகளையும் ஸம்ஹரிக்கையே தொழிலாகவுடையனாய், விடாயர்முகத்திலே நெருப்பைச்சொரிந்தாப்போலே யிருக்கிற * தழல்நிறவண்ணனாய், தன்னை ஆச்ரயித்தவாணனை, “அறுத்துத்தா, பொசுக்கித்தா” என்று கொடுந்தொழில்களைச்செய்வித்துக்கொண்டு தன்னை ஆச்ரயித்தவாணனை தலையில்பூ வாடாமல் ரக்ஷிக்கிறோமென்று ப்ரதிஜ்ஞைபண்ணி, தோளுதளைகளைக்கள்ளிக்காடு சீத்தாப்போலே சீக்கக்கண்டு, “உயிருண்டாகில் உப்புமாறியுண்ணலாம்” என்று நெற்றியில் கண்ணைப் புதைத்துக்கொண்டு நழுவினானொருவனாகையாலும், லோககுருவாய் தனக்குப் பிதாவான ப்ரஹ்மாவின்தலையைத்திருகி பாதகியாய்க் கூறுசெய்தவூரிலேகுறும்புசெய்து கையும் கைத்தலையுமாய்க்கொண்டு திரிவாரைப்போலே கையும் கபாலமுமாய்க்கொண்டு திறந்துகிடந்தவாசல்கள்தோறும்புகுந்து தன்னைவெளியிட்டுக்கொண்டு திரிகையாலும் ரக்ஷகனாகமாட்டான் என்ற விதுகளைக் கொள்வது.

மூ.—அத்ரபகவத்ஸேநாபதிமிஶ்ரர்வாக்யம்; - "அவன்மார்பு விட்டுப் பிரியில், இவ்வக்ஷரம்விட்டுப்பிரிவது."

---

வ்யா.—லக்ஷ்மீஎன்னாதே,ஸ்ரீஎன்றது,(𑌶𑍍𑌰𑌯𑌤 𑌇𑌤𑌿 𑌶𑍍𑌰𑍀𑌃) (ஶ்ரயத இதி ஸ்ரீ:) என்கிறபடியே அவனைநித்யஸேவைபண்ணுகையாலே அவனோடு இவளுக்குண்டான அவிநாபாவமும்,ஸ்ரீயத இதி ஸ்ரீ: என்கிறபடியேசேதநருக்கு இவள் நித்யஸேவ்யையாயிருக்குமென்னுமதுவும்தோற்றுகைக்காக.

இன்னமும் இவ்வகாரத்திலே ஈஶ்வரனுடைய லக்ஷ்மீஸம்பந்தம் நியமேந தோற்றுமென்னுமத்தை ஆப்தவசநத்தாலே தர்ஶிப்பிக்கிறார் ( அத்ர இத்யாதியால். ) அதாவது - இவ்விடத்திலே ஜ்ஞாநாதிகரான ஸ்ரீஸேநாபதிஜீயர் அருளிச்செய்யும் வார்த்தை; " 'அகலகில்லேனிறையும்' என்று அவன்திருமார்பிலே நித்யவாஸம் பண்ணுமிவள், அம்மார்பைவிட்டுப்பிரியிலாயிற்று அவனுக்கு ப்ரதிபாதகமான விவ்வக்ஷரத்தைவிட்டுப்பிரிவது" என்றென்கை. "என்று" என்கிறவித்தனையுங்கூட்டாதபோது, கீழோடுஇவ்வாக்யம் அந்வயியாது. இத்தால் - அவன்திருமார்பில் ஸம்பந்தம் இவளுக்கு நித்யமாகையாலே, அவன்தோற்றுமிடத்திலேஇவளும் தோற்றுகை நிஶ்சிதமாகையாலே,அவன்திருமார்பி லந்வயத்தோபாதி, அவனுக்கு வாசகமான அகாரத்தில்அந்வயமும் இவளுக்கு நித்யமென்றதாயிற்று.

---

அ.—ரக்ஷிக்கும்போது-ரக்ஷகனானவீச்வரன்சேதநரைரக்ஷிக்கும் தசையிலே, பிராட்டிஸந்நிதிவேண்டுகையாலே - இவர்களுடைய அபராதங்களைக் கண்டாதல் தன்ஸ்வாதந்த்ர்யத்தாலே யாதல் உபேக்ஷியாமல் செய்கைக் குறுப்பான க்ர்பையை ஜநிப்பிக்கும் புருஷகார பூதையான பிராட்டிஸந்நிதி அவச்யாபேக்ஷிதமாகையாலே, இதிலே ஸ்ரீஸம்பந்தமு மநுஸந்தேயம்-ரக்ஷகனானவனைச் சொல்லுகிற இவ்வகாரத்திலே அவனுடைய லக்ஷ்மீ ஸம்பந்தமும் அநுஸந்தேயமென்று மூலார்த்தம்.

நியமேந-நியமமாக. அத்ர-இந்த அகாரத்திலே.

இத்தால்என்றது - அத்ரபகவத்ஸேநாபதி இத்யாதிவாக்யத்தாலே. ஸ்ரீஸம்பந்தமு மநுஸந்தேயமென்கிற விடத்திலே, அவன் மார்வைவிட்டுப் பிரியிலாய்த்து இவ்வக்ஷரம்விட்டுப்பிரிவதுஎன்ற பகவத்ஸேநாபதிமிச்ரர்வாக்யம் என்றந்வயம். மூலார்த்தம் ஸ்பஷ்டம். இன்னமும்-கீழருளிச்செய்த ப்ரகாரமன்றிக்கே ப்ரகாராந்தரேணவும். இவ்வர்த்தத்தை-அவனுக்கு வாசகமான அகாரத்தில் அந்வயம் இவளுக்கு நித்யம்என்னு மிவ்வர்த்தத்தை. அநவரதாந்வயத்தை-நித்யஸம்பந்தத்தை.

மூ.—பர்த்தாவினுடையபடுக்கையையும், ப்ரஜையினுடைய தொட்டிலையும் விடாதேயிருக்கும் மாதாவைப்போலே, ப்ரதம சரமபதங்களைவிடாதேயிருக்குமிருப்பு.

வ்யா.—இன்னமும்இவ்வர்த்தத்தைவிஸ்தரீகரிக்கைக்காகஈச்வர சேதநவாசகங்களான அகாரமகாரங்களிரண்டிலும், இவளுக்குண் டான அநவரதாந்வயத்தைஸத்ர்ஷ்டாந்தமாக வருளிச்செய்கிறார் (பர்த்தாவினுடைய வென்றுதொடங்கி.) அதாவது - சேஷ பூதையான தன்ஸ்வரூபத்துக்குச் சேரும்படி அவனை ரஸிப்பிக் கைக்காக, பர்த்தாவினுடைய படுக்கையையும் விடாதே, ரக்ஷகை யான தன்ஸ்வரூபத்துக்குப் போரும்படி தத்ரக்ஷணம் பண்ணு கைக்காக ப்ரஜையினுடைய தொட்டிலையும் விடாதேயிருக்கும் மாதாவானவளைப்போலே, இவளும்பர்த்ர் பூதனான ஈச்வரனுக்கு ப்ரதிபாதகமாயிருந்துள்ள ப்ரதமபதமான அகாரத்தையும், ப்ர ஜாபூதரான சேதநர்க்குப்ரதிபாதகமாயிருந்துள்ள சரமபதமான மகாரத்தையும், தத்தத்விஷயத்தில் தனக்குண்டான ஸம்பந்த த்துக்கீடாக ரஸிப்பிக்கை, ரக்ஷிக்கையாகிற விவற்றைப்பற்ற, விடாதேயிருக்குமிருப்பு என்கை.

அ.—ரஸிப்பிக்கை-ஸம்ச்லேஷாதிகளாலே ரஸிப்பிக்கை. தத்தத் விஷயத்தில் தனக்குண்டான ஸம்பந்தமாவது-பத்நீத்வமாத்ர்த்வ ரூப ஸம்பந்தம். ரக்ஷிக்கையாவது - சைதந்யமாகிற ஸ்தந்யத்தைக் கொடுத்து ரக்ஷிக்கை. சைதந்யமாவது-பகவதாபிமுக்யஜ்ஞாநம்; சேஷத்வஜ்ஞாநமென்னவுமாம். ப்ரதமபதமான அகாரத்துக்கு த்ர்ஷ்டாந்தம்-படுக்கை; சரமபதமானமகாரத்துக்குத்ர்ஷ்டாந்தம்-தொட்டில்; பத்நீத்வேந-படுக்கையில் ஸம்பந்தம்; மாத்ர்த்வேந-தொட்டிலிலே ஸம்பந்தமென்றுகண்டுகொள்வது.

பர்த்தாவினுடைய படுக்கையையும் விடாதே - சேஷபூதை யான தன்ஸ்வரூபத்துக்குச் சேரும்படி அவனை ரஸிப்பிக்கைக் காக பர்த்தாவினுடைய படுக்கையையும் விடாதே, ப்ரஜையினு டைய தொட்டிலையும் விடாதே - ரக்ஷகையான தன்ஸ்வரூபத் துக்கும் போரும்படி தத்ரக்ஷணம் பண்ணுகைக்காக ப்ரஜையினு டையதொட்டிலையும்விடாதே; இருக்கும்—, மாதாவைப்போலே-மாதாவானவள் போலேஇவளும், ப்ரதமசரம பதங்களை-பர்த்ர் பூதனான ஈச்வரனுக்கு ப்ரதிபாதகமாயிருந்துள்ள ப்ரதமபதமான அகாரத்தையும், ப்ரஜாபூதரான சேதநர்க்கு ப்ரதிபாதகமாயிருந் துள்ள சரமபதமான மகாரத்தையும், விடாதே யிருக்கு மிருப்பு-தத்தத் விஷயத்தில் தனக்குண்டான ஸம்பந்தத்துக் கீடாகரஸிப் பிக்கை, ரக்ஷிக்கையாகிற இவற்றைப்பற்றவிடாதே யிருக்குமிருப்பு என்று மூலார்த்தம்.

மூ.—ஸ்ரீநந்தகோபனையும்,க்ர்ஷ்ணனையும்விடாத யஶோதைப் பிராட்டியைப்போலே. ஒருவன் அடிமை கொள்ளும்போது, க்ர்ஹிணிக்கென்றன்றே ஆவணையோலையெழுதுவது;

---

வ்யா.—கீழ்ச்சொன்னதர்ஷ்டாந்தத்தை, ஒருவிசேஷநிஷ்ட்டமாக்கியருளிச்செய்கிறார் (ஸ்ரீநந்தகோபனையுமென்றுதொடங்கி.) அதாவது-பார்யையான தன்ஸ்வரூபாநுகுணமாக ரக்ஷிப்பிக்கைக்காக பர்த்தாவான ஸ்ரீநந்தகோபனையும் விடாதே, மாதாவான தன்ஸ்வரூபாநுகுணமாகரக்ஷிக்கைக்காக புத்ரனானக்ர்ஷ்ணனையும் விடாதே, "அம்பரமே" என்கிறபாட்டில் சொல்லுகிறபடியே, மத்யே வர்த்திக்கும் யசோதைப்பிராட்டியைப்போலே, ப்ரதம சரமபதவாச்யரான ஈச்வரசேதநர்களிருவரையும் விடாதே இவளும் வர்த்திக்கும்படியென்கை.

ஈஶ்வர ஶேஷத்வமாத்ரமொழியப் பிராட்டிக்கும் ஶேஷமென்னுமிடம், இவ்வாசகத்திலின்றிக்கேயிருக்கச்செய்தேயும், இவளுக்கும் ஶேஷமென்று நாம்கொள்ளுகிறபடி யெங்ஙனேயென்ன வருளிச்செய்கிறார் (ஒருவனென்றுதொடங்கி) அதாவது - லோகத்திலே ஒருவன் தாஸதாஸிகள் முதலான ஓரடிமையைக் கொள்ளும்போது, தனக்கென்றேயெழுதிக்கொள்ளுமதொழிய, க்ர்ஹிணிக்கென்றன்றே விலையோலை யெழுதிக்கொள்வது;

---

அ.—ஒருவிசேஷநிஷ்டமாக்கி-ஒருவ்யக்திவிசேஷநிஷ்டமாக்.கி ஸ்ரீநந்தகோபனையும் விடாத - பார்யையான தன்ஸ்வரூபாநுகுணமாகரக்ஷிப்பிக்கைக்காகபர்த்தாவான ஸ்ரீநந்தகோபனையும்விடாதவளாய், க்ர்ஷ்ணனையும்விடாத-மாதாவானதன்ஸ்வரூபாநுகுணமாகரக்ஷிக்கைக்காக புத்ரனானக்ர்ஷ்ணனையும் விடாதவளான, யசோதைப்பிராட்டியைப்போலே-"அம்பரமே" என்கிறபாட்டில்சொல்லுகிறபடியே மத்யேவர்த்திக்கும் யசோதைப் பிராட்டியைப்போலே, ப்ரதமசரம பதவாச்யரான ஈச்வரசேதநர்க ளிருவரையும் விடாதே இவளும் வர்த்திக்கும்படி என்று மூலார்த்தம்.

வாசகத்தில் இன்றிக்கே - இவ்வகாரத்தில் சப்தசக்தியாலே சொல்லப்படாமலிருக்க. கொள்ளுகிறபடி – அங்கீகரிக்கும்படி. அடிமையை - சேஷவஸ்துவை. கொள்ளும்போது - க்ரயமாகக் கொள்ளும்போது. தனக்கென்றன்றே - தனக்கென்றமாத்ரமே. ஆவணஓலை - விலையோலை.

ப்ரஸ்துதமான அர்த்தம்-பிராட்டிக்கு அகாரத்தில் அந்வயம். ப்ரத்யயார்த்தம்-சேஷத்வம். இவ்வாசகத்தில்-ப்ரத்யய விசிஷ்டமான இவ்வாகாரத்தில். அடிமை கொள்ளும்போது-அடிமைசெய்கைக்கு சேஷமாகக்கொள்ளும்போது. விலையோலை-விக்ரயபத்ரம்; அடிமைச்சீட்டு என்னவுமாம்.

மூ.—ஆகிலும்,பணிசெய்வது க்ர்ஹிணிக்கிறே. அதுபோலே, நாம்பிராட்டிக்கு அடிமையாயிருக்கும்படி. ஆகப்பிரித்துநிலையில்லை. ப்ரபையையும், ப்ரபாவானையும், புஷ்பத்தையும், மணத்தையும் போலே.

---

வ்யா.—ஆயிருக்கச்செய்தேயும், அடிமைத்தொழில்செய்வது க்ர்ஹிணிக்கிறே. அதுபோலே, ஈஶ்வரஶேஷமென்னுமளவை இவ்வகாரம் சொல்லிற்றேயாகிலும், நாம் பிராட்டிக்கடிமையாயிருக்கும்படிஎன்கை.

கீழ்ச்சொன்னஹேதுக்களையெல்லாம் அநுவதித்துக்கொண்டு ஈச்வரனுக்கும், பிராட்டிக்கும் ஒருக்காலும் ப்ர்தக்ஸ்த்திதியில்லாமையை யருளிச்செய்கிறார் (ஆகப்பிரித்து நிலையில்லையென்று.) இந்தப்ர்தக்ஸ்த்தித்யபாவத்துக்கு இரண்டுத்ர்ஷ்டாந்த மருளிச்செய்கிறார் (ப்ரபையென்றுதொடங்கி.) அதாவது - ப்ரபைக்கும் ப்ரபாவானுக்கும்ப்ர்தக்ஸ்த்திதியில்லாதாப்போலவும்,புஷ்பத்துக்கும்பரிமளத்துக்கும்ப்ர்தக்ஸ்த்திதியில்லாதாப்போலவுமென்கை.

---

அ.—க்ர்ஹிணிக்கிறே-க்ர்ஹத்தைஉடையவளுக்கிறே.

க்ர்ஹிணிக்கிறே - க்ர்ஹிணிக்கு உகப்பாகவிறே. பதிக்கு சேஷமானவையெல்லாம் பத்நிக்கு சேஷமாயிருக்கு மென்கிற ந்யாயத்தாலே நாம் பிராட்டிக்கு சேஷமாயிருக்கு மென்னுமிடம் இவ்வகாரத்திலின்றிக்கே யிருந்தாலும் அவனுக்கு சேஷமென்றபோதே அவளுக்கும் சேஷமென்னுமிடம் அர்த்தாதுக்தமிறே. ஆக–அகாரார்த்தத்தில் அர்த்தபலத்தாலே ஸ்ரீஸம்பந்தம்தோற்றுமாப்போலே லுப்த்தசதுர்த்தியிலும் அர்த்தபலத்தாலே ஸ்ரீசேஷத்வம் தோற்றுமென்றதாய்த்து. அப்ராதாந்யேந அந்வயிக்கையாவது–ஈச்வரனைக்கொண்டு சேதநனுடைய இஷ்டாநிஷ்ட ப்ராப்திபரிஹாரங்களைப் பண்ணிவைக்கை. ப்ராதாந்யேந அந்வயிக்கையாவது - ஸ்வயமேவப்பண்ணுகை. ரேணுகையிடத்திலே ஜமதக்நிக்கு பத்நித்வம் வர்த்தித்தபோதே பரசுராமனுக்கு மாதர்த்வமும் வர்த்தமாய்த்திறே. ஆகையால் விஷ்ணுபத்நீத்வநிபந்தநம் பிராட்டிசேஷ்த்வம் என்னக்குறையில்லை.

ஒருவன் அடிமைகொள்ளும்போது - லோகத்திலே ஒருவன் தாஸதாஸிகள் முதலான அடிமையைக் கொள்ளும்போது தனக்கென்று எழுதிக்கொள்ளுமதொழிய, க்ர்ஹிணிக்கென்றன்றே - க்ர்ஹமுடையவளுக்கென்றன்றே, ஆவணையோலையெழுதுவது-விலையோலையெழுதுவது, ஆகிலும் - ஆயிருக்கச்செய்தேயும், பணிசெய்வது–அடிமைத்தொழில் செய்வது, க்ர்ஹிணிக்கிறே—; அதுபோலே—, நாம்பிராட்டிக்கு அடிமையாயிருக்கும்படி-ஈச்வரசேஷமென்னு மளவே இவ்வகாரம் சொல்லிற்றேயாகிலும் நாம் பிராட்டிக்கடிமையா யிருக்கும்படி என்று மூலார்த்தம்.

ஆக-கீழ்ச்சொன்ன ஹேதுக்களெல்லாவற்றையும், பிரித்து நிலை-ஈச்வரனுக்கும்பிராட்டிக்கும் ப்ர்தக்ஸ்திதி,இல்லை-கிடையாது என்று மூலார்த்தம்.

மூ.—ஆக இச்சேர்த்தி உத்தேஶ்யமாய்விட்டது. இதிலே சதுர்த்தியேறிக்கழியும்.

---

வ்யா.—(అనన్యా రాఘవేణాహం భాస్కరేణ ప్రభా యథా) (அநந்யாராகவேணாஹம்பாஸ்கரேணப்ரபாயதா) (అనన్యా హి మయా సీతా భాస్కరేణ ప్రభా యథా) (அநந்யாஹிமயாஸீதா பாஸ்கரேணப்ரபாயதா) என்று, ப்ரபாப்ரபாவான்களைப்போலே இருவர்க்கும் ப்ர்தக்ஸ்த்திதியில்லையென்னுமிடம் இருவர்வாக்காலும் சொல்லப்பட்டதிறே. (ప్రసూనం పుష్యన్తీమపి పరిమళర్ధిం జిగదిషన్) (ப்ரஸூநம்புஷ்யந்தீமபிபரிமளர்த்திம் ஜிகதிஷந்) என்கிறவிடத்திலே - ஈஶ்வரனை புஷ்பஸ்த்தாநேயாகவும், பிராட்டியைப் பரிமளஸ்த்தாநேயாகவும் பட்டரருளிச்செய்கையாலே, புஷ்பபரிமளங்களுக்குப்போலே, இருவர்க்கும் ப்ர்தக்ஸ்த்திதியில்லையென்னுமிடம் அர்த்தாத்ஸித்தம்.

இந்தப்ர்தக்ஸ்த்தித்யபாவத்தை யநுவதித்துக்கொண்டு, இச்சேர்த்தியேசேதநர்க்கு உத்தேஶ்யமாய்த் தலைக்கட்டினபடியையருளிச்செய்கிறார் (ஆகவிச்சேர்த்திஉத்தேஶ்யமாய்விட்டதென்று.) இச்சேர்த்தி உத்தேஶ்யமென்கையாலே - இவர்களைத் தனியே விரும்புகை உத்தேஶ்யமன்றென்றபடி. இருவரையும் பிரித்து விரும்பினால், ராவணசூர்ப்பணகைகளுக்குப்போலே, அநர்த்தமே பலிக்குமத்தனை. இருவரையும்பற்றினாலிறே, ஸ்ரீவிபீஷணாழ்வானைப்போலே வாழலாவது.

இனிமேல், இதில்விபக்த்யர்த்தம் அருளிச்செய்வதாகப்ரதமம் விபக்திதன்னை நிர்த்தேஶிக்கிறார் (இதிலே சதுர்த்தியேறிக்கழியுமென்று.)

---

அ.—ப்ரபையையும் ப்ரபாவானையும் போலே-ப்ரபைக்கும்ப்ரபாவானுக்கும்ப்ர்தக்ஸ்திதியில்லாதாப்போலவும், புஷ்பத்தையும் மணத்தையும்போலே - புஷ்பத்துக்கும் பரிமளத்துக்கும் ப்ர்தக்ஸ்திதியில்லாதாப்போலவும், இருவர்க்கும் ப்ர்தக்ஸ்திதியில்லையென்னுமிடம் அர்த்தாத்ஸித்தம் என்று மூலார்த்தம்.

[ஶ்லோ-ஶக்யேதி]உன்னுடைய ஐச்வர்யத்தாலும்தநத்தாலும் அந்யஸ்த்ரீகள்போலே நான் ஒன்றாலே வஞ்சிக்கைக்கு சக்யையன்றுகாண், பாஸ்கரனோடு ப்ரபைபோலே ராகவனோடு நான் அநந்யையாயிருப்பேன்.

அநுவாதம்-கீழ்ச்சொன்ன வர்த்தத்தை மறுபடிசொல்லுகை. ஆக-கீழ்ச்சொன்ன த்ர்ஷ்டாந்தங்களெல்லாவற்றாலும். இச்சேர்த்தி - எம்பெருமானுடையவும் பிராட்டியினுடையவும் சேர்த்தி, உத்தேஶ்யமாய்விட்டது-ப்ராப்யமாய்விட்டதென்றுமூலார்த்தம்.

இனி-அகாரார்த்தமருளிச்செய்தவநந்தரம். ஏறி-உண்டாகி.

மூ.—சதுர்த்தியேறினபடி யென்னென்னில்; நாராயணபதத்துக்கு ஸங்க்ரஹமா யிருக்கையாலே. இத்தால் - ஈஶ்வரனுக்கு ஶேஷமென்கிறது. ஶேஷத்வம் துக்கரூபமாகவன்றோ நாட்டிற் காண்கிறதென்னில்; அந்தநியமமில்லை, உகந்தவிஷயத்துக்கு ஶேஷமாயிருக்குமிருப்பு ஸுகமாகக்காண்கையாலே.

---

வ்யா.—அதாவது-இவ்வகாரத்திலே சதுர்த்தியேறி, (సుపాంసులుక్) (ஸுபாம்ஸுலுக்) இத்யாதிஸூத்ரத்தாலே லுப்தமாய்ப்போமென்கை. விபக்த்யந்தரமெல்லாம்கிடக்க, இவ்வகாரத்தில் சதுர்த்தியேறினபடிதா னெங்ஙனேயென்கிற ஶங்கையை யநுவதிக்கிறார் (சதுர்த்தியேறினபடி யென்னென்னிலென்று.) அதுக்கு உத்தரமருளிச்செய்கிறார் (நாராயணபதத்துக்கு ஸங்க்ரஹமா யிருக்கையாலே யென்று.) அதாவது - இவ்வகாரம் சதுர்த்யந்தமான நாராயணபதத்துக்கு ஸங்க்ரஹமாகையாலே, இதிலும் சதுர்த்தியேறிற்றென்கை. இங்ஙனன்றாகில், இரண்டுக்கும் ஸங்க்ரஹ விவரணத்வம் ஸித்தியாதிறே. இத்தாற்சொல்லுகிற வர்த்தந்தானேதென்ன வருளிச்செய்கிறார் (இத்தால் ஈஶ்வரனுக்கு ஶேஷமென்கிறதென்று.) அதாவது.- இதுதான் * తాదర్థ్యేచతుర్థీ - தாதர்த்யே சதுர்த்தி யாகையாலே, இச்சதுர்த்தியால் ஈஶ்வரனுக்கு ஶேஷமென்னுமிடம் சொல்லுகிறதென்கை.

(సర్వంపరవశందుఃఖమ్) (సేవాశ్వవృత్తిః) (ஸர்வம்பரவஶம்துக்கம்) (ஸேவாஶ்வவ்ருத்தி:) என்கிறலௌகிகந்யாயத்தைக்கொண்டு சேஷத்வத்தை துக்கரூபமாக நினைத்திருக்குமவர்கள் பண்ணும்ப்ரஶ்நத்தை யநுவதிக்கிறார் (ஶேஷத்வம் துக்கரூபமாக வன்றோ நாட்டிற்காண்கிறதென்னில் என்று.) அதுக்குஉத்தரமருளிச்செய்கிறார் (அந்தநியமமில்லையென்று தொடங்கி.) அதாவது-நாடுதன்னிலே, "பணிமின் திருவருள்" இத்யாதிப்படியே-அபிமத விஷயத்துக்கு ஶேஷமாயிருக்குமிருப்பு ஸுகரூபமாகக் காண்கையாலே, ஶேஷத்வமாகில் துக்கரூபமாயிருக்குமென்கிற நியமமில்லையென்கை.

---

அ.—தாதர்த்யே-சேஷத்வே. இடம்-அர்த்தம்.

இதிலே-இவ்வகாரத்திலே, சதுர்த்தியேறி - சதுர்த்திவிபக்தியேறி, கழியும்-லுப்தமாய்ப்போம் என்று மூலார்த்தம்.

சதுர்த்தி ஏறினபடியென்னென்னில் - விபக்த்யந்தரங்களெல்லாம்கிடக்க சதுர்த்திவிபக்தி ஏறினபடி யென்னென்னில், நாராயணபதத்துக்கு ஸங்க்ரஹமா யிருக்கையாலே - விவரணமான நாராயணபதத்துக்கு இந்த அகாரம் ஸங்க்ரஹமாயிருக்கையாலே என்று மூலார்த்தம்.

இத்தால்-தாதர்த்யத்திலேவந்தஇச்சதுர்த்தியால், ஈச்வரனுக்கு சேஷமென்கிறது-ஈச்வரனுக்கு சேஷமென்னுமிடம் சொல்லுகிறது என்று மூலார்த்தம்.

சேஷமாகையாவது-சந்தந குஸும தாம்பூலாதிகளைப்போலே அவனுக்கு இஷ்ட விநியோகார்ஹமாயிருக்கை.

மூ.—அகாரத்திலே கல்யாணகுணங்களைச்சொல்லுகையாலே, இந்த ஶேஷத்வமும் குணத்தாலேவந்தது. ஶேஷத்வமே ஆத்மாவுக்கு ஸ்வரூபம்.

---

வ்யா.—அபிமதவிஷயத்தில்ஶேஷத்வம்ஸுகமாகிறது, அவ்விஷயத்தில் குணமடியாக வந்ததாகையாலேயன்றோ வென்னவருளிச்செய்கிறார் (அகாரத்திலே யென்றுதொடங்கி.) அதாவது-ஈச்வரனுடைய ரக்ஷகத்வப்ரதிபாதகமான அகாரத்திலே, அந்த ரக்ஷணோபயோகியான கல்யாணகுணங்களைச் சொல்லுகையாலே, ஈச்வரவிஷயமான இந்தசேஷத்வமும் அந்தகுணங்களடியாக வந்ததென்கை. ஆகையால், இதுவும் ஸுகரூபமாயிருக்கக் குறையில்லையென்றுகருத்து.

ஆனால், ஔபாதிகமான விது ஸ்வரூபமன்றே யென்னவருளிச்செய்கிறார்(ஶேஷத்வமே யாத்மாவுக்குஸ் வரூபமென்று.) அதாவது-உகந்தவிஷயத்தில் இதின்ஸுகரூபத்வத்துக்கு குணக்ருதத்வத்தைஹேதுவாகச்சொல்லுகையாலே, அந்தகுணக்ருதத்வம் இங்குமுண்டென்னுமிடத்துக்குச் சொன்ன வித்தனையொழிய, அர்த்தஸ்த்திதியை நிரூபித்தால், (స్వత్వమాత్మని సంజాతం స్వామిత్వం బ్రహ్మణి స్థితమ్) (ஸ்வத்வமாத்மநி ஸஂஜாதஂஸ்வாமித்வஂ ப்ரஹ்மணிஸ்திதம்)

---

அ—.சேஷத்வம்-பிறர்க்கு சேஷமாயிருக்கை, து:கரூபமாகவன்றோ - து:காவஹமாயன்றோ, நாட்டில்காண்கிற தென்னில்-நாடுதன்னிலே காண்கிறதென்னில்என்று சங்காவாக்யார்த்தம்; அந்தநியமமில்லை—; உகந்த விஷயத்துக்கு - அபிமத விஷயத்துக்கு, சேஷமாயிருக்குமிருப்புஸுகமாகக் காண்கையாலே, சேஷத்வமாகில் து:கரூபமா யிருக்குமென்கிற நியமமில்லை என்றுஉத்தரவாக்யார்த்தம்.

அபிமத விஷயத்தில் குணங்களாவன-அநுநயஸஂச்லேஷாதிகள். ரக்ஷணோபயோகியான கல்யாணகுணங்களாவன-காருண்ய வாத்ஸல்ய ஸ்வாமித்வ ஜ்ஞாநசக்திகள்.

அகாரத்திலே - ஈச்வரனுடைய ரக்ஷகத்வ ப்ரதிபாதகமான அகாரத்திலே, கல்யாணகுணங்களைச்சொல்லுகையாலே - அந்த ரக்ஷணோப யோகியான கல்யாணகுணங்களைச்சொல்லுகையாலே, இந்த சேஷத்வமும் - ஈச்வர விஷயமான இந்த சேஷத்வமும், குணத்தாலே வந்தது - அக்குணங்களடியாக வந்ததாகையாலே இதுவும் ஸுகரூபமாயிருக்கக் குறையில்லையென்று மூலார்த்தம்.

ஔபாதிகமானவிது - குணோபாதிகமான இந்தசேஷத்வம். ஸ்வரூபன்றே - நித்யனான ஆத்மாவுக்கு ஸ்வரூபமன்றே. [స్వత్వమ్- ஸ்வத்வமித்யாதி] ஸ்வத்வம் ஆத்மாவினிடத்தில் உண்டாகாநின்றது, ஸ்வாமித்வம் ப்ரஹ்மத்தினிடத்திலே யிராநின்றது; இருவர்க்கும் ஸம்பந்தமிதுவே, மற்றொன்று எனக்கபிமதமன்று.

மூ.—ஶேஷத்வமில்லாதபோது, ஸ்வரூபமில்லை. ஆத்மாபஹாரமாவது - ஸ்வதந்த்ரமென்கிற நினைவு;

---

வ்யா.—(ఆత్మదాస్యం హరేస్స్వామ్యం స్వభావఞ్చ సదా స్మర) (ஆத்மதாஸ்யஂஹரேஸ்ஸ்வாம்யஂஸ்வபாவஂசஸதாஸ்மர) (దాసభూతాస్స్వతస్సర్వే హ్యాత్మానః పరమాత్మనః। నాన్యథాలక్షణం తేషాం బన్ధే మోక్షే తథైవచ) (தாஸபூதாஸ்ஸ்வதஸ்ஸர்வே ஹ்யாத்மாநஃபரமாத்மநஃ - நாந்யதாலக்ஷணஂதேஷாஂ பந்தேமோக்ஷேததைவச) இத்யாதிகளிலே, இத்தை ஆத்மாவுக்கு ஸ்வாபாவிகமாகச் சொல்லுகையாலே, ஶேஷத்வமே ஆத்மாவுக்கு ஸ்வரூபமென்கை.

ஶேஷத்வமேயென்று அவதரிப்பானேன், ஜ்ஞாநாநந்தஸ்வரூபமான ஆத்மவஸ்துவுக்கு, அல்லாதபோது ஸ்வரூபமில்லையோவென்ன வருளிச்செய்கிறார் (ஶேஷத்வமில்லாதபோது ஸ்வரூபமில்லைஎன்று.)

ஶேஷத்வமில்லாதபோது ஆத்மாபஹாரரூபமான ஸ்வாதந்த்ர்யபுத்தி நடக்கையாலே ஸ்வரூபமழிந்துவிடுமென்னு மத்தை தர்ஶிப்பிக்கிறார்மேலிரண்டுவாக்யத்தாலே. (ஆத்மாபஹாரமாவது என்றுதொடங்கி.) அதாவது, - (యోఽన్యథా సన్తమాత్మానమన్యథా ప్రతిపద్యతే। కిం తేన న కృతం పాపం చోరేణాత్మాపహారిణా) (யோந்யதாஸந்தமாத்மாநமந்யதாப்ரதிபத்யதே - கிஂதேநநகர்தஂபாபஂ சோரேணாத்மாபஹாரிணா) என்று ஸர்வபாப மூலமாகச்சொன்ன ஆத்மாபஹாரமாவது-தன்ஸ்வரூபம் ஸ்வதந்த்ரம் என்கிற ப்ரதிபத்தி;

---

அ.—உஜ்ஜீவநத்தில்உனக்கு ஆசையுண்டானாலும், உன் ஸத்தைதான் அழியாமல்கிடக்கவேணுமென்று ஆசையுண்டாகிலும், ஆத்மாவினுடைய தாஸ்யத்தையும் ஹரியினுடையஸ்வாமித்வத்தையும்ஸ்வபாவமாகநினை. [దాసభూతాః-தாஸபூதாஃஇதி] ஸமஸ்தமான ஆத்மாக்களும் பரமாத்மாவுக்குஸ்வதஃ-தாஸபூதராயிருப்பர்கள்; அவர்களுக்கு பத்ததசையிலும் மோக்ஷதசையிலும் வேறொரு ஸ்வரூபமில்லை.

சேஷத்வமில்லாதபோது - சேஷத்வஜ்ஞாநமில்லாதபோது, ஸ்வரூபமில்லை-ஆத்மாபஹாரரூபமான ஸ்வாதந்த்ர்ய புத்தி நடக்கையாலே ஸ்வரூபமில்லை யென்று மூலார்த்தம்.

அவதரிப்பானேன் – "சேஷத்வமே" என்றுஏவகார விசிஷ்டமாகச் சொல்லுவானேன். அல்லாதபோது-ஆத்மாஎம்பெருமானுக்கு சேஷமாகாதபோது. ஸ்வரூப மில்லையோ - ஜ்ஞாநத்வ ஆநந்தத்வஸ்வரூபமில்லையோ.

சேஷத்வமில்லாதபோது-ஸ்வவிஷயபகவச்சேஷத்வ ஜ்ஞாநமில்லாதபோது. ஆத்மாபஹாரரூபமான - அஹம், மம என்கிற, ஸ்வரூப மழிந்துவிடும் - ஜ்ஞாநத்வ ஆநந்தத்வ ஸ்வரூப மழிந்துவிடும்.

மூ.—ஸ்வதந்த்ரமாம்போதில்லையாய்விடும். ஸ்த்தாநப்ரமாண த்தாலே உகாரமவதாரணார்த்தம். இத்தால் - பிறர்க்கு ஶேஷமன் றென்கிறது.

---

வ்யா.—ஸ்வதந்த்ரமாமளவில், (అసన్నేవ)(அஸந்நேவ) என்கிற படியே,ஸ்வரூபம் இல்லையாய்விடுமென்கை.ஆகையால், ஶேஷத்வ மில்லாதபோதுஸ்வரூபமில்லை என்னத்தட்டில்லையென்றுகருத்து. ஆக-ப்ரக்ர்த்யர்த்தமான ஈஶ்வரனுடைய காரணத்வமும், தாத்வர் த்தமானரக்ஷகத்வமும், அர்த்தபலத்தால்வந்த ஸ்ரிய:பதித்வமும், ப்ரத்யயஸித்தமானசேதநஶேஷத்வப்ரதிஸம்பந்தியானஶேஷித்வ முமாகிற அகாரார்த்தத்தை யருளிச்செய்தாராயிற்று.

அநந்தரம் மத்யமாக்ஷரமான உகாரத்துக்கு அர்த்தமருளிச் செய்வதாக உபக்ரமிக்கிறார் (ஸ்த்தாந ப்ரமாணத்தாலே உகார மவதாரணார்த்த மென்று.) அதாவது - (తదేవభూతంతదుభవ్యమాఇదమ్) (ததேவபூதம்ததுபவ்யமா இதம்) என்றும், (తదేవాగ్నిస్తద్వాయుస్తత్సూర్య స్తదుచన్ద్రమాః) (ததேவாக்நிஸ்தத்வாயுஸ்தத்ஸூர்யஸ்தது சந்த்ரமா:) என்றும் இத்யாதிகளிலே ஏவகார ஸ்த்தாநத்திலே உகாரத்தை ப்ரயோகிக்கக் காண்கையாலே, ஸ்த்தாந ப்ரமாணத்தாலே உகா ரம் அவதாரணத்தை அர்த்தமாக வுடைத்தாயிருக்குமென்கை.

அவதாரணத்துக்கு அர்த்தம் அயோக வ்யவச்சேதமாதல், அந்யயோக வ்யவச்சேதமாதலாகையாலே, இவ்வவதாரணத் தாற்சொல்லுகிறதேதென்ன வருளிச்செய்கிறார்(இத்தால்பிறர்க்கு ஶேஷமன்றென்கிறதென்று.)

---

அ —ஆகையால் - தன்னிடத்தில்தனக்கு சேஷத்வஜ்ஞாந மில்லாதபோது, “ தனக்குத் தான்சேஷம் ” என்கிற ப்ரதிபத்திக் கிடாகையால். ஸ்வரூபம்-ஜ்ஞாநமும், ஆநந்தமும்.

அநந்தரம்-அகாரார்த்தத்தை யருளிச்செய்தவநந்தரம். மத்ய மாக்ஷரமான-ப்ரணவத்தில் மத்யமாக்ஷரமான.

ஆத்மாபஹாரமாவது-ஸர்வபாப மூலமாகச்சொன்ன ஆத்மா பஹாரமாவது, ஸ்வதந்த்ரம் என்கிறநினைவு-தன்ஸ்வரூபம்ஸ்வதந் த்ரமென்கிற ப்ரதிபத்தி; ஸ்வதந்த்ரமாம்போது-ஸ்வதந்த்ரமாமள வில், இல்லையாய்விடும்-“அஸந்நேவ” என்கிறபடியே ஸ்வரூபமில் லையாய்விடுமென்று மூலார்த்தம்.

(அயோகவ்யவச்சேதமாவது) யோகமாவது - ஸம்பந்தம்; அயோகமாவது-ஸம்பந்தாபாவம். வ்யவச்சேதமாவது - போக் குகை. அந்யயோகமாவது—அந்யரோடுண்டான ஸம்பந்தம்; வ்ய வச்சேதமாவது-இல்லையென்கை. ஏவஞ்ச, அயோக வ்யவச்சேத மாவது-ஸம்பந்தமுண்டென்கை; அந்யயோகவ்யவச்சேதமாவது- அந்யரோடு ஸம்பந்தமில்லையென்கை.

மூ.—பெரியபிராட்டியார்க்கு ஶேஷமென்கிறதென்றுஞ் சொல்லுவர்கள்.

---

வ்யா.—அதாவது-அவதாரணவாசகமான இவ்வுகாரத்தால், கீழ் ஈச்வரஶேஷமாகச்சொன்ன இவ்வஸ்து, அந்யர்க்கு ஶேஷமன்றென்னுமிடத்தைச் சொல்லுகிறதென்கை. சதுர்த்தியாலே ஈஶ்வரஶேஷத்வம் ப்ரதிபாதிதமாகச்செய்தே, அந்யஶேஷத்வம் ப்ரஸ்துதமாமோவென்னில்; லோகத்திலே ஒருவனுக்கு ஶேஷமான க்ர்ஹ க்ஷேத்ர புத்ர தாஸாதிகள், வேறேயுஞ்சிலர்க்குஶேஷமாயிருக்கக் காண்கையாலே, அப்படிப்பட்ட அந்யஶேஷத்வம் இந்தஸ்த்தலத்திலு முண்டோவென்று ஒருஶங்கை உதிக்குமிறே. ஆகையாலே, தாத்ர்ஶமான அந்யஶேஷத்வம் இங்கில்லையென்னுமிடத்தை ப்ரதிபாதிக்கிறது உகாரம்.

அங்ஙனன்றிக்கே, இவ்வுகாரத்தாலே லக்ஷ்மீஶேஷத்வம் சொல்லுகிறதென்பாருமுண்டென்கிறார் (பெரிய பிராட்டியார்க்கு ஶேஷமென்கிறதென்றுஞ் சொல்லுவர்களென்று.)

---

அ.—கீழ்-அகாரத்திலே. பிறர்க்கு - அக்நீந்த்ராதி தேவர்களுக்கு. சதுர்த்தியாலே ஈச்வரசேஷத்வம் ப்ரதிபாதிதமாகச்செய்தே - அகாரத்தில் தாதர்த்த்யேவந்த சதுர்த்தியாலே நிருபாதிகமான ஈச்வரசேஷத்வம் ப்ரதிபாதிதமாகாநிற்கச்செய்தே. அந்யசேஷத்வம் - நிருபாதிகமான அந்யசேஷத்வம். சேஷமான-ஔபாதிகசேஷமான. சேஷமாயிருக்க-உபாதிவசாத் சேஷமாயிருக்க. அப்படிப்பட்ட அந்யசேஷத்வம் - ஸோபாதிக அந்யசேஷத்வம் போலன்று நிருபாதிக அந்யசேஷத்வம். இந்தஸ்தலத்திலும்-தாதர்த்யே சதுர்த்தியிலும். உதிக்குமிறே-உதிக்கக்கூடுமிறே. ஆகையால்-ஸோபாதிகமான அந்யசேஷத்வம்போலே நிருபாதிகமான அந்யசேஷத்வமுண்டோ வென்கிற சங்கை உதிக்கையாலே. தாத்ர்சமான அந்யசேஷத்வம் – அப்படிப்பட்ட சங்காவிஷயமான அந்யசேஷத்வம். இங்கு-இந்தசதுர்த்தியில்.

அங்ஙனன்றிக்கே – உகாரத்தை அவதாரணார்த்தமாக்கி அத்தால் அந்யசேஷத்வநிவ்ர்த்தியைச் சொல்லாதே. இவ்வுகாரத்தாலே-சதுர்த்தியின்மேலான இந்த உகாரத்தாலே.

இவ்வஸ்துவுக்கு-இவ்வாத்மாவுக்கு.

இத்தால்-அவதாரணவாசகமான இவ்வுகாரத்தால், கீழ் ஈச்வரசேஷமாகச்சொன்ன ஆத்மவஸ்து, பிறர்க்கு சேஷமன்றென்கிறது-அந்யர்க்கு சேஷமன்று என்னுமிடத்தைச் சொல்லுகிறதென்று மூலார்த்தம்.

வேறேயுஞ் சிலர்க்கு-உபாதிவசாத் வேறேயுஞ் சிலர்க்கு. அப்படிப்பட்ட - ஸோபாதிகமான. இந்தஸ்தலத்திலும் - நிருபாதிக சேஷத்வ ப்ரதிபாதகமான இந்தலுப்தசதுர்த்தியிலும்.

வ்யா—அதாவது-(అకారశ్చిత్స్వరూపస్య విష్ణోర్వాచక ఇష్యతే-ఉకారశ్చిత్స్వరూపాయాశ్శ్రియోవాచితథావిదుః-మకారస్తుతయోర్దాస ఇతిప్రణవలక్షణమ్)(அகாரஶ்சித்ஸ்வரூபஸ்யவிஷ்ணோர்வாசக இஷ்யதே,மகாரஸ்துதயோர்த்தாஸ இதிப்ரணவலக்ஷணம்)என்றும்,(అకారేణోచ్యతేవిష్ణుస్సర్వలోకేశ్వరోహరిః। ఉద్ధృతావిష్ణునాలక్ష్మీ రుకారేణోచ్యతేసదా ॥ మకారస్తుతయోర్విప్ర శ్రీనారాయణయోస్సదా। ఆత్మనశ్శేషభూతస్యవాచకశ్శ్రుతిచోదితః) (அகாரேணோச்யதேவிஷ்ணுஸ்ஸர்வலோகேச்வரோஹரிঃ- உத்த்ர்தாவிஷ்ணுநாலக்ஷ்மீ ருகாரேணோச்யதேஸதா = மகாரஸ்துதயோர்விப்ர ஸ்ரீநாராயணயோஸ்ஸதா - ஆத்மநஶ்ஶேஷபூதஸ்யவாசகஶ்ஶ்ருதிசோதிதঃ) என்றும் இத்யாதிகளாலே பகவச்சாஸ்த்ரத்திலே, அகாரத்தை பகவத்வாசகமாகவும், உகாரத்தை லக்ஷ்மீவாசகமாகவும், மகாரத்தை ததுபய சேஷபூத ஜீவவாசகமாகவும் சொல்லுகையாலே உகாரத்தை அவதாரணவாசகமாகக் கொள்ளாதே, லக்ஷ்மீவாசகமாகக் கொண்டு, இவ்வுகாரத்தாலே பெரியபிராட்டியார்க்கு ஶேஷமென்கிறதென்றும் நிர்வஹிப்பர்களென்கை.

---

அ.—[అకారః-அகாரஇதி]அகாரமானது சித்ஸ்வரூபனான விஷ்ணுவுக்குவாசகமாகஇச்சிக்கப்படாநின்றது,உகாரத்தைசித்ஸ்வரூபையானஸ்ரீக்குவாசகமாகஅறியாநின்றூர்கள்;மகாரம்அவனுக்குதாஸனான ஆத்மாவாகச்சொல்லப்படுகிறது,இதுப்ரணவத்துக்குலக்ஷணம்.[అకారేణ-அகாரேணேதி]ஸர்வலோகத்துக்கு மீச்வரனாய் வ்யாபகனான ஹரியானவன்அகாரத்தாலேசொல்லப்படாநின்றூன்; அந்த விஷ்ணுவாலே எப்போதும் திருமார்பிலே தரிக்கப்பட்டிருக்கிற லக்ஷ்மியானவள் உகாரத்தாலேசொல்லப்படுகிறூள்; மகாரமானது அந்த ஸ்ரீ நாராயணர்களிருவருக்கும் எப்போதும் சேஷபூதனான ஆத்மாவுக்கு வாசகமாக ச்ருதியிலே சொல்லப்பட்டது. [అగ్రతః ప్రయయౌ-அக்ரதஃப்ரயயாவிதி]முன்னேபெருமாளெழுந்தருளினூர், ஸுமத்யமையான பிராட்டி நடுவே யெழுந்தருளினூள், பின்னே கையும் வில்லுமாய்க்கொண்டு இளையபெருமாள் எழுந்தருளினூர். இந்தச்லோகத்தின் அர்த்தம், "ப்ரணவம் கால்கொண்டுநடந்தாப்போலே யிருக்கிறது" என்று பூர்வாசார்யரான சோமாசியாண்டான் நிர்வாஹமாக அருளிச்செய்வர்கள்.

இவ்வுகாரத்தால்-லக்ஷ்மீவாசகமான இவ்வுகாரத்தாலே, பெரியபிராட்டியார்க்கு சேஷமென்கிறது—, என்றுஞ் சொல்லுவர்கள்-என்று நிர்வஹிப்பர்கள் என்று மூலார்த்தம்.

மூ.—அதிலும் அந்யஶேஷத்வம்கழிகையேப்ரதாநம். தேவர்களுக்குஶேஷமானபுரோடாஶத்தைநாய்க்கிடுமாப்போலே,ஈஶ்வரஶேஷமான ஆத்மவஸ்துவை ஸம்ஸாரிகளுக்கு ஶேஷமாக்குகை.

---

வ்யா.—அத்தைப்பற்றவும் பூர்வயோஜனையேமுக்யமென்னுமத்தை யருளிச்செய்கிறார்(அதிலும் அந்யஶேஷத்வம் கழிகையே ப்ரதாநமென்று.) அதாவது - பெரியபிராட்டியாருக்கு ஶேஷமாகையாகிற வதிலுங்காட்டில், கீழ்ச்சொன்ன பகவச்சேஷத்வத்துக்கு விரோதியான அந்யஶேஷத்வம் கழிகையே ப்ரதாநாபேக்ஷிதமென்கை.

அந்யஶேஷத்வம் அப்படி க்ரூரமோவென்ன, அதின்க்ரௌர்யத்தை ஸத்ர்ஷ்டாந்தமாக வருளிச்செய்கிறார் (தேவர்களுக்கென்றுதொடங்கி.) அதாவது - ஆராத்யரான இந்த்ராதி தேவர்களுக்கு போக்யதயாஶேஷமாகக் கல்பிதமான புரோடாஶத்தை தர்ஶநஸ்பர்ஶநாதிகளுக்கு அநர்ஹமாம்படி நிஹீநமாயிருக்கிற நாய்க்கிடுமாப்போலே யிருப்பதொன்று, ப்ராப்த ஶேஷியான ஈஶ்வரனுக்கு ஶேஷமான ஆத்மவஸ்துவை ஸர்வப்ரகாரத்தாலும் ஹேயரான ஸம்ஸாரிகளுக்கு ஶேஷமாக்குகை யென்கை.

---

அ.—அத்தைப்பற்றவுமென்றது-இப்படிஉகாரத்தைலக்ஷ்மீவாசகமாகக்கொண்டு பெரியபிராட்டியார்க்கு சேஷமென்கிறது என்று நிர்வஹிப்பர்கள் என்னுமத்தைப்பற்றவும். பூர்வோக்த யோஜனையென்றது - உகாரத்தை அவதாரணார்த்தவாசகமாகக் கொண்டு பிறர்க்கு சேஷமன்றென்கிற யோஜனை. ப்ரதாநாபேக்ஷிதம்-அவச்யாபேக்ஷிதம்.

அப்படிக்ரூரமோ-ஸ்வரூபமானபெரியபிராட்டியார்க்கு சேஷமென்கிற இவ்வர்த்தத்தை விட்டாகிலும் ஸ்வநிவ்ர்த்தியைச்சொல்லும்படி அந்யசேஷத்வம் அப்படி க்ரூரமோ. புரோடாசத்தை-தேவார்த்தமான ஹவிஸ்ஸை. அநர்ஹமான - அயோக்யமான. நிஹீநமாயிருக்கிற-மிகவும்நிக்ர்ஷ்டமாயிருக்கிற. இடுமாப்போலே-பொகடுமாப்போலே. ஸம்ஸாரிகளுக்கு-ப்ரஹ்மாதி தேவர்களுக்கு.

அதிலும்-பெரியபிராட்டியார்க்கு சேஷமாகையாகிற அதிலுங்காட்டில்,அந்யசேஷத்வம் கழிகையே ப்ரதாநம்-கீழச்சொன்னபகவச்சேஷத்வத்துக்கு விரோதியான அந்யசேஷத்வம் கழிகையே ப்ரதாநாபேக்ஷிதமென்று மூலார்த்தம்.

ஆராத்யரான-யஜ்ஞாதி கர்மங்களாலே ஆராத்யரான. புரோடாசமாவது-ஹவிஸ்ஸு. ஸர்வப்ரகாரத்தாலும்-ஸ்வரூபரூபகுணசேஷ்டிதங்களாலும்.

மூ.—பகவச்சேஷத்வத்திலும் அந்யஶேஷத்வம் கழிகையே ப்ரதாநம். (மறந்தும் புறந்தொழாமாந்தர்) என்கையாலே.

---

வ்யா.—இப்படிக்ரூரமான அந்யஶேஷத்வம்கழிகையேஆத்மாவுக்கு ப்ரதாநாபேக்ஷிதமென்று கீழ்ச்சொன்ன அர்த்தத்தை ஸ்த்திரீகரிக்கிறார் (பகவச்சேஷத்வத்திலும் அந்யசேஷத்வங் கழிகையே ப்ரதாநமென்று.) அதாவது - லக்ஷ்மீஶேஷத்வத்திலுங்காட்டில் ப்ரதாநம் என்றவளவேயன்று, பகவான்றனக்கு ஶேஷமாயிருக்குமதிலுங்காட்டில், அந்யவிஷயத்தில் ஶேஷத்வம் கழிகையே ஆத்மாவுக்கு ப்ரதாநாபேக்ஷிதமென்கை.

இதுக்கு ப்ரமாணங்காட்டுகிறார் (மறந்தும் புறந்தொழாமாந்தர், என்கையாலே என்று.) அதாவது - யமகிம்கரஸம்வாதத்தை திருமழிசைப்பிரான் அருளிச்செய்த (திறம்பேல்மின்கண்டீர்) என்கிறபாட்டிலே பாகவதலக்ஷணஞ் சொல்லுகிறவளவில், (திருவடி தன்னாமம் மறந்தும்புறந்தொழாமாந்தர்)என்று-ஸ்வாமியுடைய திருநாமத்தை மறந்தார்களாகிலும் மற்றொருவிஷயத்தில் ஶேஷவ்ருத்திபண்ணாதவர்கள், என்றுசொல்லுகையாலேயென்கை.

---

அ.—இப்படி-கீழ்ச்சொன்னபடியே. இதுக்கு-பகவச்சேஷத்வத்திலுங் காட்டில் அந்யசேஷத்வ நிவர்த்தியே ப்ரதாநமென்கைக்கு. திருவடிதன் நாமம் மறந்துஎன்றது - திருமந்த்ரத்தை மறந்தும்என்றதாய், பகவச்சேஷத்வ ஜ்ஞாநமில்லாவிடிலுமென்றபடி.

தேவர்களுக்கு-ஆராத்யரான இந்த்ராதிதேவர்களுக்கு, சேஷமான-போக்யதயாசேஷமாககல்பிதமான, புரோடாசத்தை - ஹவிஸ்ஸை, நாய்க்கிடுமாப்போலே-தர்சநஸ்பர்சநாதிகளுக்கு அநர்ஹமாம்படி நிஹீநமாயிருக்கிற நாய்க்கிடுமாப்போலே யிருப்பதொன்று, ஈச்வரசேஷமான ஆத்மவஸ்துவை - ப்ராப்த சேஷியான ஈச்வரனுக்கு சேஷமான ஆத்மவஸ்துவை, ஸம்ஸாரிகளுக்கு சேஷமாக்குகை- ஸர்வப்ரகாரத்தாலும்ஹேயரான இந்த்ராதிகளுக்குசேஷமாக்குகை என்று மூலார்த்தம்.

பகவச்சேஷத்வத்திலும் – பகவான்றனக்கு சேஷமாயிருக்குமதிலுங் காட்டில், அந்யசேஷத்வங்கழிகையே-அந்யவிஷயத்தில் சேஷத்வங்கழிகையே, ப்ரதாநம் - இவ்வாத்மாவுக்குப்ரதாநாபேக்ஷிதம் என்றுமூலார்த்தம்.

மூ.—இத்தால் - தனக்கும் பிறர்க்கும் உரித்தன்றென்கிறது. மகாரம்,இருபத்தஞ்சாமக்ஷரமாய்ஜ்ஞாநவாசியுமாயிருக்கையாலே ஆத்மாவைச்சொல்லுகிறது.

---

வ்யா.—ஈஶ்வரஶேஷமான ஆத்மவஸ்துவுக்கு,ஸ்வஶேஷத்வ பரஶேஷத்வங்களிரண்டும் அந்யஶேஷத்வமாகையாலே, உபயத்தையும்இவ்வுகாரம்கழிக்கிறதென்று சொல்லிநிகமிக்கிறார் (இத்தால் தனக்கும் பிறர்க்கும் உரித்தன்றென்கிறது என்று.) அதாவது- அந்யஶேஷத்வநிவர்த்தகமான இவ்வுகாரத்தாலே, அந்யரில் அந்யதமத்வம் அவிஶிஷ்டமாகையாலே, இவ்வாத்மவஸ்து தனக்கும் உரித்தன்று, தன்னையொழிந்த ஸம்ஸாரிகளுக்கும் உரித்தன்று என்னுமிடஞ் சொல்லுகிறதென்கை. ஆக உகாரார்த்தத்தை அருளிச்செய்தாராயிற்று.

அநந்தரம் த்ர்தீயாக்ஷரமான மகாரார்த்தத்தை யருளிச்செய்கிறார் (மகாரமென்றுதொடங்கி.) அதாவது - (భూతాని చకవర్గేణ చవర్గేణేన్ద్రియాణిచ। టవర్గేణ తవర్గేణ జ్ఞానగన్ధాదయస్తథా॥ మనఃపకారేణైవోక్తం ఫకారేణ త్వహఙ్కృతిః। బకారేణ భకారేణ మహాన్ ప్రకృతిరుచ్యతే॥ ఆత్మాతు సమకారేణ పఞ్చవింశః ప్రకీర్తితః)(பூதாநிசகவர்க்கேண சவர்க்கேணேந்த்ரியாணிச-டவர்க்கேண தவர்க்கேணஜ்ஞாநகந்தாதயஸ்ததா=மநஃபகாரேணைவோக்தம்பகாரேணத்வஹங்க்ர்திஃ - பகாரேண பகாரேணமஹாந்ப்ர்க்ர்திருச்யதே)என்கிறபடியே,ப்ர்திவ்யாதி ப்ரக்ர்த்யந்தமான இருபத்துநாலுதத்வத்துக்கும்வாசகமாயிருந்துள்ளககாராதிபகாராந்தமான இருபத்துநாலு அக்ஷரமும்போலன்றிக்கே (மகாரம் இருபத்தஞ்சாமக்ஷரமாய், (మనజ్ఞానే)(மநஜ்ஞாநே) என்கிறதாதுவிலே யாதல்,

---

உபயத்தையும் - ஸ்வசேஷத்வபர சேஷத்வமிரண்டையும். அந்யரில் அந்யதமத்வம் அவிசிஷ்டமாகையாலே-பகவதந்யரிலே ஒருவனுயிருக்கை தனக்கு ஸமாநமாகையாலே, உரித்தன்று-சேஷமாயிருக்கை யோக்யமன்று.

அநந்தரம்-உகாரார்த்தத்தை யருளிச்செய்த வநந்தரம்.

அவிசிஷ்டமாகையாலே - ஸமாநமாகையாலே. உரித்தன்று-சேஷமன்று.

இத்தால்—அந்யசேஷத்வ நிவர்த்தகமான இவ்வுகாரத்தால், தனக்கும்-அந்யரில் அந்யதமனுன தனக்கும், பிறர்க்கும் - தன்னையொழிந்த ஸம்ஸாரிகளுக்கும், சேஷமன்றென்கிறது-சேஷமன்றென்னு மிடம் சொல்லுகிறது என்று மூலார்த்தம்.

அநந்தரம்-த்விதீயாக்ஷரமான உகாரார்த்தத்தை அருளிச்செய்த வநந்தரம். இருபத்துநாலக்ஷரம்போலன்றிக்கே - அசேதநவாசகமான இருபத்துநாலக்ஷரம்போலன்றிக்கே.

மூ.—இதுதான்ஸமஷ்டிவாசகம்.ஜாத்யேகவசநம். இத்தால்-ஆத்மாஜ்ஞாதாவென்று தேஹத்தில்வ்யாவ்ர்த்திசொல்லிற்றாயிற்று.

---

வ்யா.—(మనుఅవబోధనే)(மநுஅவபோதநே)என்கிறதாதுவிலேயாதல் நிஷ்பந்நமாகையாலே, ஜ்ஞாநவாசியுமாயிருக்கையாலே, (పఞ్చవింశోయంపురుషః) (పఞ్చవింశఆత్మాభవతి) (பஂசவிஂஶோயஂபுருஷ:) (பஂசவிஂசஆத்மாபவதி) என்கிறபடியே பஞ்சவிஂஶகனாய்(విజ్ఞానాత్మాపురుషః)(விஜ்ஞாநாத்மாபுருஷ:) (విజ్ఞాతారమరేకేనవిజానీయాత్) (விஜ்ஞாதாரமரோகேநவிஜாநீயாத்) என்கிறபடியே ஜ்ஞாநஸ்வரூபனுமாய், ஜ்ஞாநகுணகனுமா யிருக்கிற ஆத்மாவைச்சொல்லுகிறதென்கை.

கீழ்ச்சொன்ன ஶேஷத்வம் ஸர்வஸாதாரணமாகையாலே த்ரிவிதாத்மவர்க்கத்தையும், இதிலே சொல்லவேண்டுகையாலே அருளிச்செய்கிறார்(இதுதான்ஸமஷ்டிவாசகமென்று.) அதாவது- இப்படி ஆத்மவாசகமான இம்மகாரந்தான் ஆத்மஸமஷ்டிக்கு வாசகமென்கை.

ஏகவசநம், ஸமஷ்டிவாசகமாமோ வென்கிற ஶஂகையிலே அருளிச்செய்கிறார் (ஜாத்யேகவசநமென்று.) அதாவது - வ்ரீஹி ஸமூஹத்தைச் சொல்லுகிறவன், இதொருநெல் என்றால், அந்த ஏகவசநம் ஜாதிபரமாமாப்போலே, இதுவும் ஆத்மஜாதி பரமான ஏகவசநமென்கை.

இம்மகாரத்தால், ஆத்மாவினுடைய எவ்வாகாரம் சொல்லுகிறதென்ன அருளிச்செய்கிறார் (இத்தாலென்று தொடங்கி.) அதாவது - பஞ்சவிஂஶாக்ஷரமாய் ஜ்ஞாநவாசியுமா யிருந்துள்ள இம்மகாரத்தால், ஶேஷத்வாஶ்ரயமானஆத்மா ஜ்ஞாநாஶ்ரயபூதனானவனென்று, அசேதநமான தேஹத்திற்காட்டில், ஆத்மாவின் வ்யாவ்ர்த்தி சொல்லிற்றாயிற்றென்கை.

---

அ.—இப்படி யென்றது-பகவதநந்யார்ஹ சேஷத்வேநவும் பஞ்சவிஂஶதிதத்வத்வேநவும் ஜ்ஞாநாநந்த ஸ்வரூபத்வேநவும், ஜ்ஞாநாநந்த குணகத்வேநவுமென்றபடி. இம்மகாரந்தான்-ப்ரணவாவயவமான இம்மகாரந்தான்.

மகாரம் இருபத்தஞ்சாமக்ஷரமாய், ஜ்ஞாநவாசியுமாயிருக்கையாலே ஆத்மாவைச்சொல்லுகிறது-ஜ்ஞாந ஸ்வரூபனுமாய் ஜ்ஞாந குணகனுமான ஆத்மாவைச்சொல்லுகிறதென்று மூலார்த்தம்.

ஸர்வஸாதாரணமாகையாலே - ஸ்ர்வாத்மஸாதாரணமாகையாலே. த்ரிவிதாத்மவர்க்கதத்தையும்-பத்தமுக்தநித்யரூபேண த்ரிவிதாத்மவர்க்கத்தையும். இதிலே-ஆத்மவாசகமான இந்தமகாரத்திலே.

இதுதான்-இப்படி ஆத்மவாசகமான இம்மகாரந்தான், ஸமஷ்டிவாசகம்-ஆத்ம ஸமூஹவாசகம், ஜாத்யேகவசநம் - ஆத்மஜாதி பரமான ஏகவசநமென்று மூலார்த்தம்.

அசேதநமான-அசேதநத்ரவ்யஸமுதாயாத்மகமான. வ்யாவ்ர்த்தி சொல்லிற்றாய்த்து-வைலக்ஷண்யம் சொல்லிற்றாய்த்து.

மூ.—தேஹத்தில்வ்யாவ்ர்த்திதத்வஶேகரத்திலேசொன்னோம். மணத்தையும், ஒளியையுங்கொண்டு பூவையும் ரத்நத்தையும் விரும்புமாப்போலே,ஶேஷமென்று ஆத்மாவையாதரிக்கிறது;

---

வ்யா.—தேவோஹம்,மநுஷ்யோஹம்,ஸ்த்ரீலோஹம்,க்ருஶோஹம் என்று தேஹத்திலே அஹம்புத்தி வ்யவஹாரங்கள் நடவாநிற்க, அஹமர்த்தபூதனான ஆத்மா, தேஹத்தில் வ்யாவ்ர்த்தனென்று சொல்லுகிறபடிதானெங்ஙனேயென்ன அருளிச்செய்கிறார் (தேஹத்தில் வ்யாவ்ர்த்தி தத்த்வஶேகரத்திலே சொன்னோம் என்று.) அதாவது - அநேகஹேதுக்களாலே தேஹத்தினுடைய அநாத்மத்வத்தை ஸாதியாநின்றுகொண்டு ஆத்மாவினுடைய தத்வ்யாவ்ர்த்தியை தத்த்வஶேகரமாகிற ப்ரபந்தத்திலே வ்யக்தமாகச் சொன்னோம், அதிலே கண்டுகொள்வதென்கை.

தர்மிஸ்வரூபகதநபூர்வகமாக தத்தர்மமான ஶேஷத்வத்தைத் சொல்லுகை ப்ராப்தமாயிருக்க, இப்ப்ரணவந்தன்னிலே ப்ரதமம் ஶேஷத்வத்தைச்சொல்லி, பின்னை ஆத்மாவைச் சொல்லுவானென் என்கிற ஶங்கையிலே, அப்படிசொல்லுகைக்குஹேதுவை யருளிச்செய்கிறார் (மணத்தையுமித்யாதி வாக்யத்ரயத்தாலே.) அதாவது-மணத்துக்காஶ்ரயமென்று பூவை விரும்புமாப்போலேயும், ஒளிக்காஶ்ரயமென்று ரத்நத்தை விரும்புமாப்போலேயும், ஶேஷத்வத்துக்காஶ்ரயமென்றாயிற்று ஆத்மாவையாதரிக்கிறது;

---

அ.—இத்தால்-இருபத்தஞ்சாமக்ஷரமாய்ஜ்ஞாநவாசியுமாயிருந்துள்ள இம்மகாரத்தால், ஆத்மாஜ்ஞாதாவென்று-செஷத்வாச்ரயமான ஆத்மாஜ்ஞாநாச்ரயபூதனானவனென்று,தேஹத்தில் - அசேதநமான தேஹத்திற்காட்டில், வ்யாவ்ர்த்தி சொல்லிற்றாய்த்து-ஆத்மாவின் வ்யாவ்ர்த்தி சொல்லிற்றாய்த்து என்று மூலார்த்தம்.

அஹமர்த்தபூதனான-அஹம்சப்தவாச்யனான. அநாத்மத்வம்-ஆத்மலக்ஷணஶூந்யத்வம்.

தேஹத்தில் வ்யாவ்ர்த்தி-ஆத்மாவினுடைய் அந்த தேஹத்தில் வ்யாவ்ர்த்தியை, தத்வசேகரத்திலேசொன்னோம்-தத்வசேகரமென்கிற ப்ரபந்தத்திலே வ்யக்தமாகச் சென்னோம்,அதிலேகண்டுகொள்வது—, என்று மூலார்த்தம்.

தர்மிஸ்வரூபம்—ஆத்மஸ்வரூபம். தத்தர்மமான - ஆத்மதர்மமான.

ப்ராப்தமாயிருக்க - யோக்யமாயிருக்க. ஆதரிக்கிறது-சாஸ்த்ரமும் ரிஷிகளும் ஆழ்வார்களும் ஆசார்யர்களும் ஆதரித்துப்போருகிறது.

அதாவது - இவ்வாக்யத்தாலே சொல்லப்படுகிற அர்த்தமாவது. விரும்புமாப்போலே-ஆதரிக்குமாப்போலே.

மூ.—அல்லாதபோது, (உயிரினாற்குறைவிலம்) என்கிறபடியே த்யாஜ்யம்; அதுதோன்ற ஶேஷத்வத்தைச்சொல்லி, பின்னை ஆத்மாவைச்சொல்லுகிறது. ஆகப்ரணவத்தால்-(கண்ணபுரமொன்றுடையானுக்கடியேனொருவர்க்குரியேனோ) என்கிறபடியே ஜீவபர ஸம்பந்தம் சொல்லிற்று.

---

வ்யா.—ஶேஷத்வாஶ்ரயமல்லாதபோது, (உயிரினாற்குறைவிலம்) என்று - பகவச்சேஷத்வரஹிதமான ஆத்மாவால் அபேக்ஷையுடையோமல்லோமென்கிறபடியே, த்யாஜ்யனாய்விடுமித்தனை. இப்படியிருந்துள்ள ஶேஷத்வத்தின் ஊற்றந்தோற்ற, ஶேஷத்வத்தை முந்துறச்சொல்லி, பின்னை ஆத்மாவைச்சொல்லிற்றென்கை.

பதத்ரயாத்மகமான இப்ரணவத்தாற் சொல்லித் தலைக்கட்டின அர்த்தத்தை யருளிச்செய்கிறார் (ஆக வென்றுதொடங்கி.) அதாவது - கீழ்ச்சொன்ன எல்லாவற்றாலும் ப்ரணவத்தால் கண்ணபுரமொன்றுடையானுக்கு என்று-சதுர்த்த்யந்தமான அகாரார்த்தத்தையும், அடியேன் என்று - ஶேஷத்வாஶ்ரயவாசியான மகாரத்தில் அர்த்தத்தையும், ஒருவர்க்குரியேனோ என்று - அந்யஶேஷத்வநிவர்த்தகமான உகாரார்த்தத்தையும் சொல்லாநின்றுகொண்டு, ப்ரணவார்த்தத்தை யநுஸந்தித்த திருமங்கையாழ்வார்ஸ்ரீஸூக்திப்படியே, ஜீவபரர்களுக்குண்டான ஶேஷஶேஷிபாவஸம்பந்தத்தைச் சொல்லிற்றென்கை.

---

அ.—விடுமித்தனை-விட்டுப்போய்விடும். இப்படியிருந்துள்ள-தானில்லாதபோது த்யாஜ்யதயாஸித்திக்கும்படியாயிருந்துள்ள. ஊற்றம்தோற்ற-ஸ்வரூப நிரூபகத்வே ப்ராதாந்யம் தோற்ற.

மணத்தைக்கொண்டு பூவை விரும்புமாப்போலேயும்-மணத்துக்கு ஆச்ரயமென்று பூவை விரும்புமாப்போலேவும், ஒளியைக்கொண்டு ரத்நத்தை விரும்புமாப்போலேயும்-ஒளிக்கு ஆச்ரயமென்று ரத்நத்தை விரும்புமாப்போலேயும், சேஷமென்று ஆத்மாவையாதரிக்கிறது-சேஷத்வாச்ரயமென்றாய்த்து ஆத்மாவை ஆதரிக்கிறதென்று மூலார்த்தம்.

பதத்ரயாத்மகமான - அகார உகார மகாராத்மகமான. கீழ்ச்சொன்ன எல்லாவற்றாலும் - கீழ் அகார உகார மகாரங்களாலே சொன்ன அர்த்தங்களெல்லாவற்றாலும்.

அல்லாதபோது-சேஷத்வாச்ரயமல்லாதபோது, "உயிரினால் குறைவிலம்" என்கிறபடியே-"உயிரினால் குறைவிலம்" என்கிற ஸ்ரீஸூக்திப்படியே பகவச்சேஷத்வரஹிதமான ஆத்மா, த்யாஜ்யம் - த்யாஜ்யமாய் விடுமித்தனை; அது தோன்ற-அப்படி யிருந்துள்ள சேஷத்வத்தின் ஊற்றம்தோன்ற, சேஷத்வத்தைச்சொல்லி - சேஷத்வத்தை முந்துறச்சொல்லி, பின்னை—, ஆத்மாவைச் சொல்லுகிறது - ஆத்மாவைச்சொல்லிற்று என்றுமூலார்த்தம்.

மூ.—இத்தால் (தாமரையாள் கேள்வனொருவனையே நோக்கு முணர்வு) என்றதாயிற்று. அகாரத்தாலும், மகாரத்தாலும் ரக்ஷக னையும், ரக்ஷ்யத்தையும் சொல்லிற்று;

---

வ்யா.—இன்னமும்பொய்கையாருடையதிவ்யஸூக்தியாலே ஶேஷத்வப்ரதிஸம்பந்தி ஒருமிதுநம் என்னுமிடந்தோற்ற, இந்த ஜீவபரஸம்பந்தத்தை அருளிச்செய்கிறார்(இத்தால்"தாமரையாள் கேள்வன்" என்று தொடங்கி.) அதாவது - இப்ரணவத்தால், தாமரையாள் கேளவன் என்று - அகாரவாச்யனாய், ஶேஷத்வ ப்ரதிஸம்பந்தியான ஸ்ரீயःபதியையும், ஒருவனையே நோக்கும் என்று-சதுர்த்யுகாரங்களால் சொல்லுகிற அநந்யார்ஹஶேஷத்வ ப்ரயுக்தமான ஆத்மாவினுடைய ததேகப்ரவணதையையும், உணர்வு என்று-அந்தஶேஷத்வாஶ்ரயமான மகாரத்தால் சொல்லப்பட்ட ஜ்ஞாநைக நிரூபணீயனான ஆத்மாவையும் சொல்லுகிற ஸூக்தி யிற்படியே, ஜீவபரஸம்பந்தம் சொல்லிற்றாயிற்றென்கை.

அகாரத்தில் ப்ரத்யயார்த்தப்ரதாநமாக, ப்ரணவார்த்தத்தை யோஜித்தார்-கீழ்; அதில்-தாத்வர்த்தப்ரதாநமாகப்ரணவத்துக்கு இன்னமு மொருயோஜனை யருளிச்செய்கிறார் (அகாரத்தாலு மென்றுதொடங்கி.) அதாவது - அகாரத்தாலே ரக்ஷகனான ஈஶ் வரனைச்சொல்லிற்று, மகாரத்தாலே தத்ரக்ஷ்யமான ஆத்மவஸ்து வைச்சொல்லிற்று;

---

அ.—ஆக-கீழ்ச்சொன்னவர்த்தமெல்லாவற்றாலுமாக, ப்ரணவத் தால்-பதத்ரயாத்மகமானப்ரணவத்தால்,"கண்ணபுரமொன்றுடை யானுக்கடியேன்ஒருவர்க்குரியேனோ" என்கிறபடியே-"கண்ணபுர மொன்றுடையானுக்கடியேன் ஒருவர்க்குரியேனோ" என்று-ப்ரண வார்த்தத்தை யநுஸந்தித்த திருமங்கையாழ்வார் ஸ்ரீஸூக்திப் படியே, ஜீவ பரஸம்பந்தம் சொல்லிற்று-ஜீவபரர்களுக் குண்டான சேஷசேஷிபாவ ஸம்பந்தத்தைச் சொல்லிற்றென்று மூலார்த்தம்.

இன்னமும் - இதுக்குமேலேயும். சேஷத்வப்ரதிஸம்பந்தி- சேஷி. ஜீவபரஸம்பந்தம்-ஜீவாத்ம பரமாத்ம ஸம்பந்தம்.

இத்தால்-இப்ரணவத்தால், "தாமரையாள் கேள்வனொருவ னையே நோக்குமுணர்வு" என்றதாய்த்து - தாமரையாள் கேள்வ னொருவனையே நோக்குமுணர்வு" என்று சொல்லுகிற பொய்கை யாழ்வார் ஸ்ரீஸூக்திப்படியே ஜீவபரஸம்பந்தம் சொலலிற்றாய்த் தென்றுமூலார்த்தம்.

ப்ரத்யயார்த்த ப்ரதாநமாக-சேஷத்வ ப்ரதாநமாக. அதில்- அகாரத்திலே. தாத்வர்த்த ப்ரதாநமாக- ரக்ஷகத்வ ப்ரதாநமாக. தத்ரக்ஷ்யமான-ஈச்வரரக்ஷ்யமான.

மூ.—சதுர்த்தியாலும், உகாரத்தாலும் ரக்ஷணஹேதுவான ப்ராப்தியையும், பலத்தையும் சொல்லிற்று. இனிமேல் ப்ரணவத்தை விவரிக்கிறது. உகாரத்தைவிவரிக்கிறது நமஸ்ஸு;

---

வ்யா —சதுர்த்தியாலே ரக்ஷிக்கிறதற்குபலம் இவ்வாத்மவஸ்து, அத்தலைக்கு அநந்யார்ஹமாக விநியோகப் படுகையாகையாலே, அவ்வநந்யார்ஹ ஶேஷத்வவாசியான உகாரத்தாலே ரக்ஷணபலத்தைச் சொல்லிற்றென்கை. ஆக இம்மந்த்ரத்திற் ப்ரதமபதமான ப்ரணவார்த்தத்தை யருளிச்செய்தாராயிற்று.

இனி மேலிற்பதங்களுக்கும் அர்த்தம் அருளிச்செய்மதாக, மந்த்ரஶேஷமும் இதுக்கு விவரணமாயிருக்கும்படியை முந்துற அருளிச்செய்கிறார் (இனிமேல் ப்ரணவத்தை விவரிக்கிறது என்று.) "இவ்விடத்தில் விவரணமாகிறது, ப்ரஸ்துதமான அர்த்தத்துக்கு உபயுக்தமான அர்த்தத்தைச் சொல்லிக்கொண்டு பூர்வோக்தமான அர்த்தத்தை விஶதீகரிக்கை" என்று தீபப்ரகாஶத்திலும், "(ఉక్తార్థవిశదీకారయుక్తార్థాన్తరబోధనమ్। మతంవివరణంతత్రమహితానాంమనీషిణామ్) (உக்தார்த்தவிசதீகாரயுக்தார்த்தாந்தரபோதநம்-மதംவிவரணംதத்ரமஹிதாநாംமநீஷிணாம்)" என்று ரஹஸ்யத்ரயார்த்தவிவரணக்ரமம் அருளிச்செய்த ப்ரபந்தத்திலும், விவரணலக்ஷணத்தை ஜீயரருளிச் செய்தாரிறே.

விவரிக்கிறபடிதானெங்ஙனேயென்ன அருளிச்செய்கிறார் (உகாரத்தை விவரிக்கிறது நமஸ்ஸு என்றுதொடங்கி.)

---

அ.—அகாரத்தால்-ரக்ஷகவாசியான அகாரத்தாலே, ரக்ஷகனைச் சொல்லிற்று-ரக்ஷகனுன ஈச்வரனைச் சொல்லிற்று; மகாரத்தால்-மகாரத்தாலே, ரக்ஷ்யத்தைச்சொல்லிற்று-தத்ரக்ஷ்யமான ஆத்மவஸ்துவைச் சொல்லிற்று; சதுர்த்தியால்-சதுர்த்தியாலே, ரக்ஷணஹேதுவான-ரக்ஷிக்கைக்கு ஹேதுவான, ப்ராப்தியைச்சொல்லிற்று-சேஷத்வமாகிற ஸம்பந்தத்தைச் சொல்லிற்று; உகாரத்தால்-அநந்யார்ஹவாசியான உகாரத்தாலே, பலத்தைச்சொல்லிற்று-ரக்ஷணத்துக்கு பலமான அநந்யார்ஹமாக விநியோகப்படுகையைச் சொல்லிற்றென்று மூலார்த்தம்.

மேலிற் பதங்களுக்கு - நமஃபத நாராயணபதங்களுக்கு. இதுக்கு-ப்ரதிபாதிதார்த்தமான ப்ரணவத்துக்கு. முந்துறமுன்னம்-முதலிலே. இவ்விடத்தில்-இம்மந்த்ரத்திலே. ப்ரஸ்துதமான-பூர்வம் மூலத்திலே சொல்லப்பட்ட. மஹிதாநாம்-புத்திமாங்களான எல்லாராலும்கொண்டாடப்பட்டவர்கள். ஜீயர்-வாதிகேஸரி அழகியமணவாளச் சீயர்.

எங்ஙனே-எப்படி.

மூ.—அகாரத்தை விவரிக்கிறது நாராயணபதம்; மகாரத்தை விவரிக்கிறது சதுர்த்தி; நாரபதமென்றுஞ் சொல்லுவர்கள்.

---

வ்யா.—அதாவது- அந்யசேஷத்வத்தைக்கழிக்கிறவிடத்தில் அந்யரிலே அந்யதமனாகச் சொல்லப்பட்டதன்னைவெளியாகச்சொல்லிக்கழிக்கையாலே, உகாரத்தைவிவரிக்கிறது நமஸ்ஸு; ரக்ஷகனான ஈச்வரனுடையஸ்வரூபத்தையும், ரக்ஷ்யபூதசேதநாசேதநங்களையும், ரக்ஷணோபயோகியான குணாதிகளையும், ரக்ஷணப்ரகாரத்தையும், விசதமாகச்சொல்லுகையாலே, அகாரத்தை விவரிக்கிறது நாராயணபதம். (నాకించిత్కుర్వతశ్శేషత్వమ్) (நாகிஞ்சித்குர்வதச்சேஷத்வம்) (అకించిత్కరస్యశేషత్వానుపపత్తిః) (அகிஞ்சித்கரஸ்யசேஷத்வாநுபபத்திஃ) என்கிறபடியே, கிஞ்சித்காரமில்லாதபோது சேஷத்வஸித்தியில்லாமையால், தத்ஸித்திக்குறுப்பான கிஞ்சித்காரத்தை ப்ரதிபாதிக்கிற சதுர்த்தி சேஷத்வாச்ரயமான ஆத்மவஸ்துவைச் சொல்லுகிற மகாரத்தை விவரிக்கிறது. மகாரவாச்யனான ஆத்மாவினுடைய நித்யத்வம், ஏகரூபத்வம், பஹுத்வம் தொடக்கமானவற்றை ப்ரதிபாதிக்கையாலே, மகாரத்தைவிவரிக்கிறது நாரபதமென்றுஞ் சொல்லுவர்கள் என்கை.

---

அ.—அந்யரிலே அந்யதமனாக-அந்யரிலே ஒருவனாக. வெளியாக-வேறாக. கழிக்கையாலே - அந்யரிலே ஒருவனாகச் சொல்லப்பட்ட ஸ்வசேஷத்வத்தைக் கழிக்கையாலே. ஸ்வரூபத்தையும்-ஸர்வாந்தர்யாமித்வஸர்வவ்யாபகமான ஸ்வரூபத்தையும். குணாதிகளையும் என்கிறவிடத்தில், ஆதிசப்தத்தாலே - விக்ரஹத்தைச் சொல்லுகிறது. ரக்ஷணப்ரகாரத்தையும்-மாத்ர்த்வாதிப்ரகாரத்தையும். தத்ஸித்திக்குறுப்பான-சேஷத்வஸித்திக்குறுப்பான.

வெளியாக-சாப்தமாக. கழிக்கையாலே அஹங்காரமமகாரங்களைக்கழிக்கையாலே. ரக்ஷகனான ஈச்வரனுடைய ஸ்வரூபத்தையும்-ஸமஸ்தவஸ்துசரீரதயா ஸர்வரக்ஷகனாயிருக்கையாகிற ஈச்வரஸ்வரூபத்தையும். விசதமாகச்சொல்லுகையாலே - சாப்தமாகச் சொல்லுகையாலே. தத்ஸித்திக் குறுப்பான-சேஷத்வஸித்திக்கு ப்ரகாசகமான

இனிமேல் - ப்ரணவார்த்தத்தை யருளிச்செய்த வநந்தரம், ப்ரணவத்தை விவரிக்கிறது - ப்ரணவார்த்தத்தை விவரிக்கிறது;—உகாரத்தை விவரிக்கிறது நமஸ்ஸு - உகாரார்த்த விசதமாகச் சொல்லுகிறது நமஸ்ஸு; மகாரத்தை - மகாரத்தால் சொன்னவர்த்தத்தை, சதுர்த்தி - நாராயணபதோபரிஸ்த்திதையான சதுர்த்தியானது, விவரிக்கிறது - ப்ரகாசமாகச்சொல்லுகிறது, மகாரத்தை-மகாரார்த்தத்தை, விவரிக்கிறது-விசதமாகச்சொல்லுகிறது, நாரபதமென்றுஞ் சொல்லுவர்கள்-நாரபதமென்று சிலர் சொல்லுவர்கள் என்று மூலார்த்தம்.

மூ.—அடைவேவிவரியாதொழிகிறதுவிரோதிபோயநுபவிக்கவேண்டுகையாலே. நமஸ்ஸு (ந)என்றும்,(மஃ) என்றும் இரண்டு பதம். மஃ என்கிறவித்தால் - தனக்குரியனென்கிறது; ந என்று-அத்தைத்தவிர்க்கிறது; ஆக, நமஃ என்கிறவித்தால் – தனக்குரியனன்றென்கிறது.

---

வ்யா.—அக்ஷரக்ரமத்திலே விவரியாதே, வ்யுத்க்ரமமாகவிவரிப்பானேனென்ன அருளிச்செய்கிறார்(அடைவேயென்றுதொடங்கி.) அதாவது - அக்ஷரக்ரமத்திலே விவரியாதொழிகிறது அகாரவிவரணமான நாராயணபதத்தில் பகவதநுபவத்துக்கு விரோதியான அஹங்காரமமகாராதிகள், நமஸ்ஸாலே கழியுண்டுபோய் பின்னை அநுபவிக்கவேண்டுகையாலே என்கை. இனி மத்யமபதமான நமஸ்ஸுக்கு அர்த்தமருளிச்செய்வதாக, அதில் அவாந்தரபதபேதத்தை அருளிச்செய்கிறார் (நமஸ்ஸு, நஎன்றும், மஃ என்றும் இரண்டுபதம் என்று.)

இவ்விரண்டுபதத்துக்கும் அர்த்தமேதென்ன வருளிச்செய்கிறார் (மஃஎன்கிறவித்தாலென்றுதொடங்கி.) அதாவது, - மஃ என்று - ஷஷ்ட்யந்தமான இம்மகாரத்தால் மகாரவாச்யனான ஆத்மாவுக்கு கீழ்ச்சொன்ன தாதர்த்ர்யப்ரதிகோடியான ஸ்வார்த்தத்த்வந்தோற்றுகையாலே, தனக்குரியனென்னுமத்தைச் சொல்லுகிறது; ந என்று - நிஷேதவாசியான நஞ்ஞாலே அத்தைக்கழிக்கிறது என்கை.

உபயபதத்தாலும் சொன்னவர்த்தத்தைச் சேரப்பிடித்தருளிச்செய்கிறார் (ஆக நமஃ என்கிறவித்தால் - தனக்குரியனன்றென்கிறதென்று.) பதக்ரமத்திலே அர்த்தஞ்சொல்லாதே, வ்யுத்க்ரமமாகச் சொல்லுகிறது,நிஷேத்யத்தைச்சொல்லிநிஷேதிக்கவேண்டுகையாலே.

---

அ.—நாராயணபதத்தில் பகவ தநுபவத்துக்கு - நாராயணபதத்தில்சொல்லுகிற பகவதநுபவத்துக்கு. அஹங்காரமமகாராதிகள் என்கிறவிடத்தில், ஆதிசப்தத்தாலே – ஸ்வரக்ஷணேஸ்வாந்வயத்தைச் சொல்லுகிறது. அநுபவிக்கவேண்டு கையாலே - ஸமஸ்தகல்யாணகுணாத்மகனானநாராயணனை அநுபவிக்கவேண்டுகையாலே.

அடைவே - அக்ஷரக்ரமத்திலே, விவரியாதொழிகிறது - விவரணமாகச் சொல்லாதேபோகிறது,விரோதி-பகவதநுபவத்துக்கு விரோதியான அஹங்காராதிகள், போய்-நமஸ்ஸாலே கழியுண்டுபோய், அநுபவிக்கவேண்டுகையாலே-பின்னை அநுபவிக்கவேண்டுகையாலே என்று மூலார்த்தம்.

அவாந்தரபேதத்தை-மத்யே உண்டானபதபேதத்தை. கீழ்ச்சொன்ன - ப்ரணவத்தில்சொன்ன. தாதர்த்த்ய ப்ரதிகோடியான ஸ்வார்த்தத்வம் – சேஷத்வ விரோதியான ஸ்வஸ்வாதந்த்ர்யம்.

மூ.—பிறர்க்குரியனானவன்று தன்வைலக்ஷண்யத்தைக்காட்டி மீட்கலாம், தனக்கென்னுமன்று யோக்யதையுங்கூடவழியும். இத்தால் - விரோதியைக் கழிக்கிறது. விரோதிதான்மூன்று.

---

வ்யா.—க்ரமத்திலே சொல்லும்போது "வீடுமின்முற்றவும்" என்னுமாப்போலே நிஷேதபூர்வகமாக நிஷேத்யத்தைச்சொல்லுகிறதென்று யோஜிக்கவேணும். அதுதானும் பரந்தபடியிலேஇவர் தாமே யருளிச்செய்தார்.

தனக்கும் பிறர்க்கு முரித்தன்றென்று அந்யஶேஷத்வத்தை நிஷேதித்த உகாரத்தை விவரிக்கிறதாகில், பிறர்க்கு உரித்தன்று என்றத்தையும் விவரியாமல், தனக்குரியனன்று என்றவித்தையே விவரிப்பானென்னென்கிறஶங்கையிலேயருளிச்செய்கிறார் (பிறர்க்குரியனானவன்று என்று தொடங்கி.) அதாவது - அந்யஶேஷபூதனானவன்று, ஶேஷத்வத்துக் கிசைகையாலே, அந்யரிற்காட்டில் தனக்குண்டான ஸர்வகாரணத்வ, ஸர்வரக்ஷகத்வ, ஸர்வஶேஷித்வாதியான வைலக்ஷண்யத்தைக்காட்டி அந்நிலையில்நின்றும் மீட்கலாம். தனக்குரியன் என்று நிற்குமன்று (த்வமேவ) (த்வம்மே) என்றால் (அஹமேவ)(அஹம்மே) என்னுமதொழிய ஶேஷத்வத்துக் கிசையாமையாலே, மீட்கைக்கு யோக்யதையுங்கூட வில்லையாய் விடு மென்கை.

இந்நமஸ்ஸாற் செய்கிறஅம்ஶந்தானே தென்னவருளிச்செய்கிறார் (இத்தால் விரோதியைக்கழிக்கிறதென்று.) அதுதான் ஒன்றோபலவோவென்ன வருளிச்செய்கிறார் (விரோதிதான் மூன்று என்று.)

---

அ.—அந்யசேஷபூதனானவன்று - தனக்கன்றிக்கே, பகவதந்யராய் ஸம்ஸாரிகளானவர்களுக்கு சேஷபூதனானவன்று. இசைகையாலே-அநுமோதிக்கையாலே. சேஷத்வாதியான என்கிறவிடத்தில், ஆதிசப்தத்தாலே-ச்ரிய:பதித்வமும் ஸமஸ்தகல்யாண குணாத்மகத்வமும் சொல்லப்படுகிறது. அந்நிலையில் நின்றும் - அந்ய சேஷபூதனாயிருக்குமிருப்பில்நின்றும்.

பிறர்க்குரியனானவன்று - அந்யசேஷபூதனானவன்று, தன் வைலக்ஷண்யத்தைக்காட்டி - அந்யரில்காட்டில் ஸர்வேச்வரனான தனக்குண்டானஸர்வகாரணத்வஸர்வரக்ஷகத்வ ஸர்வசேஷித்வாதியானவைலக்ஷண்யத்தைக்காட்டி, மீட்கலாம் - அந்நிலையில் நின்றும் மீட்கலாம்; தனக்கு என்னுமன்று - சேதநன், நான் எனக்குரியே னென்றிருக்குமன்று, யோக்யதையுங்கூட - மீட்கைக்கு யோக்யதையுங்கூட, அழியும் - இல்லையாய்விடும் என்றுமூலார்த்தம்.

இந்நமஸ்ஸால்-ஸ்வஸ்வாதந்த்ர்ய நிவர்த்தகமான இந்த நமஸ்ஸால். செய்கிற அம்சந்தான்-செய்கிற கார்யந்தான்.

மூ.—அதாவது - ஸ்வரூபவிரோதியும், உபாய விரோதியும், ப்ராப்யவிரோதியும். ஸ்வரூபவிரோதிகழிகையாவது - (யானே நீ யென்னுடைமையும் நீயே) என்றிருக்கை.

---

வ்யா.—அம்மூன்றுந்தா னேதென்னவருளிச் செய்கிறார் (அதாவது - ஸ்வரூபவிரோதியும், உபாயவிரோதியும், ப்ராப்ய விரோதியுமென்று.) இத்தால்-ப்ரதமபதத்திற் சொன்ன ஸ்வரூபத்துக்குவிரோதியும், இப்பதத்தில் ஆர்த்தமாகஸித்திக்கிற உபாயத்துக்குவிரோதியும் உத்தரபதத்தில்சொல்லுகிற ப்ராப்யத்துக்கு விரோதியுமென்கை. இந்நமஸ்ஸுத்தான், காகாக்ஷிந்யாயத்தாலே பூர்வோத்தர பதங்களிற் சொல்லுகிற ஸ்வரூபப்ராப்யங்களினுடைய விரோதிகளைக் கழிக்கக் கடவதாயிறே யிருப்பது. இவ்விரோதித்ரயமும் கழிகையாவதுதா னேதென்ன, அதுதன்னை அடைவேயருளிச்செய்கிறார் மேல்மூன்றுவாக்யத்தாலே. (ஸ்வரூபவிரோதீத்யாதி.) அதாவது - ஸ்வரூபத்துக்கு விரோதி * யானே யென்றனதே என்றிருக்கையாகையாலே; அது கழிகையாவது, "யானேநீ யென்னுடைமையும் நீயே" என்று ஆத்மாத்மீயங்களிரண்டும் அத்தலைக்கு ப்ரகாரதயா ஶேஷமென்றிருக்கையென்கை.

---

அ.—இத்தால்-இந்நமஸ்ஸால். ப்ரதமபதத்தில் - திருமந்த்ரத்தில்ப்ரதமபதமான ப்ரணவத்தில். ஸ்வரூபத்துக்கு—லுப்தசதுர்த்தியிற் சொன்ன பகவதநந்யார்ஹ ஶேஷத்வஸ்வரூபத்துக்கு. இப்பதத்தில் - நமःபதத்தில். உபாயத்துக்கு - பகவானாகிற ஸித்தோபாயத்துக்கு. ஆர்த்தமாக ஸித்திக்கிற - இப்பதத்துக்கு வாக்யார்த்தமான ஸ்வஸ்வாதந்த்ர்ய நிவர்த்தியாகிற அர்த்தபலத்தாலேஸித்திக்கிற. ப்ராப்யத்துக்கு - ப்ராப்யமானபகவதநுபவத்துக்கு. உத்தரபதத்தில் - நமःபதோத்தரமான நாராயணபதத்தில். காகாக்ஷிந்யாயத்தாலே-காகத்துக்கு நேத்ரகோளகம் ஒன்றாயிருக்கச் செய்தேயும் அதுதானே இரண்டுபார்ச்வத்திலும் ஸஞ்சரிக்குமாப்போலே மத்யஸ்தமான பதம்பூர்வோத்தரபதங்களோடே அந்வயிக்கை. பூர்வோத்தரபதங்களில் - தனக்கு பூர்வமானப்ரணவத்திலும், உத்தரபதமான நாராயணபதத்திலும்.

அது தன்னை - அவ்விரோதித்ரய நிவர்த்தியை. ஸ்வரூபத்துக்கு - ப்ரணவோக்தமான அநந்யார்ஹஶேஷத்வமாகிற ஸ்வரூபஜ்ஞாநத்துக்கு. யானே என்தனதே என்றிருக்கையாலே - யான் நானே என்றிருக்கையும் இது என்றனதே என்றிருக்கையுமாகையாலே. அது - அவ்விரண்டாகாரமும். யானேநீ என்னுடைமையும் நீயே-யானும் நீயே; என்னுடைமையும் நீயே. ஆத்மாத்மீயங்கள்-தானும் தன்னுடைமையும். அத்தலைக்கு ப்ரகாரதயா ஶேஷமென்றிருக்கை யென்கை-சேதநாசேதங்களிரண்டும் ஈச்வரனுக்கு சரீரதயா ஶேஷமாகையாலே தானும் தன்னுடைமையும் அவனுக்குசரீரதயாஶேஷமென்றிருக்கையென்றதவஸித்திருக்கை

மூ.—உபாய விரோதி கழிகையாவது - (களைவாய் துன்பங் களையா தொழிவாய் களைகண்மற்றிலேன்) என்றிருக்கை. ப்ராப்ய விரோதி கழிகையாவது, (மற்றை நங்காமங்கள்மாற்று) என்றிருக்கை. (மஃ)என்கை, ஸ்வரூபநாஶம்; (நமஃ) என்கை, ஸ்வரூபோஜ்ஜீவநம்.

---

வ்யா.—(உபாயவிரோதீத்யாதி.) அதாவது-உபாயத்துக்கு விரோதிஸ்வரக்ஷணே ஸ்வாந்வயமாகையாலே. அதுகழிகையாவது களைவாய் துன்பங்களையாதொழிவாய் களைகண்மற்றிலேன் என்று-து:கத்தைப்போக்குவாய், போக்காதொழிவாய், வேறொரு ரக்ஷக வஸ்துவையுடையேனல்லேன் என்றிருக்கை என்கை. (ப்ராப்ய விரோதீத்யாதி.) அதாவது-ப்ராப்யத்துக்குவிரோதி ஸ்வப்ரயோஜநபுத்தியாகையாலே; அதுகழிகையாவது - (மற்றைநங்காமங் கள் மாற்று) என்று உன்னுகப்புக்குப் புறம்பான எங்களுடைய ஆசையைப்போக்கு என்றிருக்கை என்கை.

இப்படி ஸ்வரூபோபாய புருஷார்த்தங்கள் மூன்றுக்கும் விரோதியாகிறது - இவனுடைய அஹங்கார மமகாரங்களாகையாலே, அதினுடைய க்ரௌர்யத்தையும், தந்நிவர்த்தியிலுண்டான நன்மையையும் அருளிச்செய்கிறார் (மஃஎன்கை ஸ்வரூபநாஶம், நமஃஎன்கை ஸ்வரூபோஜ்ஜீவநம் என்று.) அதாவது - చేతనస్యయదామమ్యం స్వస్మిన్స్వీయేచవస్తుని। మఇత్యక్షరద్వన్ద్వంతదామమ్యస్య వాచకమ్) (சேதநஸ்ய யதாமம்யம்ஸ்வஸ்மிந்ஸ்வீயே சவஸ்துநி-மம இத்யக்ஷரத்வந்த்வம்ததாமம்யஸ்யவாசகம்) என்கிறபடியே, மஃ-என்கிறவிதிலே "அஹங்காரமமகாரங்கள் இரண்டுமுண்டாகையாலே அதிலேஅந்விதனாகை இவ்வாத்மாவினுடைய ஸ்வரூபத்துக்குநாஶம்; நமஃஎன்று அதில் அந்வயமற்றிருக்கை ஸ்வரூபத்துக்கு உஜ்ஜீவநம் என்கை. (ద్వ్యక్షరస్తుభవేన్మృత్యుః త్ర్యక్షరంబ్రహ్మణఃపదమ్। మమేతిద్వ్యక్షరోమృత్యుర్నమమేతిచశాశ్వతమ్)(த்வ்யக்ஷரஸ்துபவேந்ம்ர்த்யு ஸ்த்ர்யக்ஷரம் ப்ரஹ்மண:பதம்' - மமேதித்வ்யக்ஷரோம்ர்த்யுர் நமமேதிசஶாஶ்வதம்) என்னக்கடவதிறே.

---

அ.—உபாயவிரோதி-உபாயாத்யவஸாயத்துக்குவிரோதி. களைகண்என்றது - பிடிப்பானஇடமாய், ரக்ஷகமென்றபடி. மற்றைநங்காமங்கள்-உன்னுடைய அபிமாநத்துக்கு வேறுபட்ட நம்முடைய காமங்கள். இருக்கை-ப்ரார்த்தித்துக்கொண்டிருக்கை.

இப்படி-முன்சொன்னபடி. அதினுடைய-அஹங்கார மமகாரங்களினுடைய. மம்யம் - மமகாரம். உஜ்ஜீவநம் - உத்க்ர்ஷ்டஜீவநம்.

மூ.—இதுதான் ஸ்வரூபத்தையும், உபாயத்தையும், பலத்தையும் காட்டும். (தொலைவில்லிமங்கலந்தொழும்) என்கையாலே ஸ்ரூபம்சொல்லிற்று;(வேங்கடத்துறைவார்க்குநம) என்கையாலே உபாயம் சொல்லிற்று; (அந்திதொழுஞ்சொல்) என்கையாலே பலம்சொல்லிற்று. உற்றதுமுன்னடியார்க்கடிமை என்கிறபடியே- இதிலே பாகவதஶேஷத்வமும் அநுஸந்தேயம்.

---

வ்யா.—இப்படி ஸ்வரூபோபாயபுருஷார்த்தவிரோதிகளைக்கழிக்கிறவளவன்றிக்கே, இந்நமஸ்ஸூத்தான் ஸ்வரூபாதித்ரயத்தையும் ப்ரகாஶிப்பிக்குமென்கிறார் (இதுதான் ஸ்வரூபத்தையும், உபாயத்தையும், பலத்தையுங் காட்டுமென்று.) இதுதன்னை உபபாதிக்கிறார் மேல்மூன்றுவாக்யத்தாலே. (தொலைவில்லிமங்கல மித்யாதி.) அதாவது-"தொலைவில்லிமங்கலந்தொழும்" என்று-அவனுகந்தருளின நிலத்தளவும்செல்ல ஶேஷமாயிருக்கும்படியைச் சொல்லுகிறவளவில், தொழும்என்று - நமஸ்காரத்தைச்சொல்லுகையாலே, ஸ்வரூபம்சொல்லிற்றென்கை. (வேங்கடத்தித்யாதி.) அதாவது- "வேங்கடத்துறைவார்க்குநம" என்று - திருவேங்கடமுடையானுக்கு ஶேஷம், நான் எனக்குரியேனல்லேன் என்று, ஸ்வரக்ஷணத்தில் ப்ராப்தியில்லாத ஸ்வரூபபாரதந்த்ர்யத்தைச் சொல்லுகையாலே, அவனே உபாயமென்னுமிடம் ஸித்திக்கையாலே உபாயம் சொல்லிற்று என்கை. (அந்திதொழுஞ்சொல்லி த்யாதி.) அதாவது -"அந்திதொழுஞ்சொல்" என்று தாஸ்யரஸமதிசயித்தால், அதினுடைய சரமதஶையிலேசொல்லக்கடவ "தொழுஞ்சொல்" என்று - நமஶ்ஶப்தத்தைச்சொல்லுகையாலே பலம் சொல்லிற்றென்கை.

இப்பதத்தில் ததீயஶேஷத்வமும் ஆர்த்தமாக அநுஸந்தேயமாகையாலே, அத்தை யருளிச்செய்கிறார் (உற்றதுமென்று தொடங்கி.) அதாவது -(நின்றிருவெட்டெழுத்துங்கற்று நானுற்றது முன்னடியார்க் கடிமை) என்று - திருமந்த்ரங்கற்றத்தால் * நான் உற்றது முன்னடியார்க்கடிமை என்னுமிவ்வர்த்தத்திலே என்கிறபடியே, அஹங்கார மமகாரங்கள் நிவ்ர்த்தமாய், பகவச்சேஷத்வம் உள்ளபடி ப்ரகாஶிக்கிற இந்நமஸ்ஸிலே, தத்காஷ்டையான பாகவதஶேஷத்வமும் அநுஸந்திக்கவேணுமென்கை.

---

அ.—இப்பதத்தில் - இந்நமஃபதத்தில். ஆர்த்தமாக - அர்த்த பலத்தாலே. அதாவது-ததீயபர்யந்தமானாலல்லது ஸ்வரூபஸித்தியில்லாதபகவதநந்யார்ஹ ஶேஷத்வரூபஅர்த்தபலத்தாலேயென்றபடி. உற்றதும்-ஊன்றியிருந்ததும். தத்காஷ்டையான - பகவச்சேஷத்வஸீமாபூமியான.

மூ.—இது அகாரத்திலேஎன்றுஞ் சொல்லுவர்கள்; உகாரத்திலே யென்றுஞ்சொல்லுவர்கள்.ஈஶ்வரன் தனக்கேயாயிருக்கும்;

---

வ்யா.—இப்படிஆர்த்தமாக அநுஸந்திக்கப்படும்பாகவதஶேஷத்வந்தான்,இந்நமஸ்ஸிலன்றிக்கேஸ்த்தலாந்தரங்களிலே சொல்லுவாரு முண்டாகையாலே, அத்தையருளிச்செய்கிறார் (இது அகாரத்திலே என்றுஞ் சொல்லுவர்கள், உகாரத்திலே என்றுஞ் சொல்லுவர்களென்று.) அதாவது - சதுர்த்தியாலே ஆத்மாவினுடையபகவச்சேஷத்வத்தைச்சொல்லுகையாலே, பகவச்சேஷத்வகாஷ்ட்டையான இந்தபாகவதஶேஷத்வாநு ஸந்தாநம் அகாரத்திலே என்றும் சிலர் சொல்லுவர்கள். அநந்யார்ஹஶேஷத்வத்துக்கெல்லை ததீயஶேஷத்வபர்யந்தமாக நிற்கையாலே, அநந்யார்ஹத்வ ப்ரதிபாதகமான உகாரத்திலே என்றும் சிலர் சொல்லுவர்கள் என்கை. ஆர்த்தமாகையாலே, அவ்வோஸ்த்தலங்களிலும் சொல்லலாயிருந்ததே யாகிலும், கந்தல்கழிந்தவிடத்திலே சொல்லுகையே உசிதமென்று கருத்து.

இந்நமஸ்ஸூக்குபூர்வத்திற்பிறந்தப்ரதிபத்தியைப்பற்ற,இதிற்பிறந்த ப்ரதிபத்திக்குண்டான வாசியை யருளிச்செய்கிறார் (ஈஶ்வரன் தனக்கேயாயிருக்குமென்று தொடங்கி.) அதாவது-(స్వరూపం స్వాతన్త్ర్యం భగవతః;)(ஸ்வரூபம்ஸ்வாதந்த்ர்யம்பகவதஃ)என்கிறபடியே, ஸ்வாதந்த்ர்யமே ஸ்வரூபமான ஈச்வரன், ஸ்வார்த்தபரனாயே இருக்கும்;

---

அ.—(உற்றது முன்னடியார்க்கடிமை)என்கிறபடியே-உற்றது முன்னடியார்க்கடிமை என்கிற ஸ்ரீஸூக்திப்படியே, இதிலே-அஹங்கார மமகாரங்கள் நிவ்ர்த்தமாய் பகவச்சேஷத்வம் உள்ளபடி ப்ரகாசிக்கிற இந்த நமஸ்ஸிலே, பாகவத சேஷத்வமும் - தத்காஷ்ட்டையான பாகவத சேஷத்வமும், அநுஸந்தேயம்-அநுஸந்திக்கவேணுமென்று மூலார்த்தம்.

அவ்வோஸ்தலங்களில் - அகார உகாரங்களில். கந்தல்கழிந்தவிடத்திலே - அஹங்காரமமகாரங்கள் ஸவாஸநமாகக் கழிந்தவிடத்திலே.

பூர்வத்தில் - ப்ரணவத்தில். வாசியை - அதிசயத்தை. இதில் பிறந்த ப்ரதிபத்திக்கு - அஹங்காரமமகாரங்கள் நிவ்ர்த்தமாய் பகவச்சேஷத்வம் உள்ளபடி ப்ரகாசிக்கிற இந்தநமஸ்ஸில் பிறந்த ஜ்ஞாநத்துக்கு. ஸ்வார்த்தபரனாயேயிருக்கும்-ஸ்வப்ரயோஜநபரனாயேயிருக்கும்.

ஸூ.—அசித்துப் பிறர்க்கேயா யிருக்கும்; ஆத்மா தனக்கும் பிறர்க்கும் பொதுவாயிருக்கும்என்று முற்பட்ட நினைவு: அங்ஙனன்றிக்கே, அசித்தைப்போலே தனக்கேயாக எனைக்கொள்ள வேணுமென்கிறது-நமஸ்ஸால்.

---

வ்யா.—சைதந்யரஹிதமாகையாலே தனக்கே என்கைக்கு யோக்யதையின்றிக்கே, பாரதந்த்ர்ய ஸ்வரூபமா யிருக்கும் அசித்து, பரார்த்தமாயே யிருக்கும்; சதுர்த்தியிற்சொன்ன ஶேஷத்வத்தையும், மகாரத்திற் சொன்ன ஜ்ஞாத்ர்த்வத்தையுமுடையனான ஆத்மா ஜ்ஞாத்ர்த்வபலத்தாலே ஸ்வார்த்ததைக்கும், ஶேஷத்வத்தாலே பரார்த்ததைக்கும் பொதுவாயிருக்குமென்று நமஸ்ஸுக்கு பூர்வபதத்திற்பிறந்த ப்ரதிபத்தி; அப்படியன்றிக்கே, பரார்த்ததைகவேஷமான அசித்துப்போலே“தனக்கேயாகவெனைக்கொள்ளுமீதே” என்கிறபடியே, அத்தலைக்கே ரஸமாம்படி விநியோகங் கொள்ளவேணும்என்றபேக்ஷிக்கிறதுஇந்நமஸ்ஸாலே என்கை.

---

அ.—சைதந்யரஹிதமாகையாலே-ஜ்ஞாநஶூந்யமாகையாலே. பரார்த்தமாயே யிருக்கும் - பரப்ரயோஜநார்த்தமாயே யிருக்கும். உடையனான - ஸ்வரூபமாகவுடையனான. பூர்வபதத்தில்பிறந்த- பூர்வபதமான ப்ரணவத்தில்பிறந்த.

ஈச்வரன்—, தனக்கேயாயிருக்கும்-ஸ்வார்த்தபரனாயிருக்கும்; அசித்து—, பிறர்க்கேயாய்-சைதந்ய ரஹிதமாகையாலே தனக்கு என்கைக்கு யோக்யதையின்றிக்கே பிறர்க்கேயாய், இருக்கும்-பரதந்த்ரஸ்வரூபமாயிருக்கும்; ஆத்மா-சதுர்த்தியில் சொன்னசேஷத்வத்தையும் மகாரத்தில் சொன்ன ஜ்ஞாத்ர்த்வத்தையும் ஸ்வரூபமாக வுடையனான ஆத்மா, தனக்கும் - ஜ்ஞாத்ர்த்வ பலத்தாலே ஸ்வார்த்த தைக்கும், பிறர்க்கும்-சேஷத்வத்தாலே பரார்த்ததைக்கும், பொதுவாயிருக்குமென்று—, முற்பட்டநினைவு - இந்நமஸ்ஸுக்கு பூர்வபதத்தில் பிறந்த ப்ரதிபத்திஎன்று மூலார்த்தம்.

அப்படியன்றிக்கே - ஸ்வார்த்ததைக்கும் பரார்த்ததைக்கும் பொதுவாயிருக்கையன்றிக்கே, தனக்கேயாக - அவனுக்காகவுமன்றிக்கே, அவனுக்கும்தனக்குமாகவுமன்றிக்கே அவன்றனக்கேயாக என்றபடி. அத்தலைக்கேரஸமாம்படி - அத்தலைக்கேரஸாவஹமாம்படி. விநியோகங் கொள்ளவேணும் - யதேஷ்டவிநியோகார்ஹமாகத் திருவுள்ளம்பற்றவேணும்.

அங்ஙனன்றிக்கே - அப்படியன்றிக்கே, அசித்துப்போலே- பரார்த்ததைகவேஷமான அசித்துப்போலே, தனக்கேயாகவெனைக்கொள்ள வேணுமென்கிறது - (தனக்கேயாகவெனைக்கொள்ளவேணும்) என்கிறபாசுரப்படியே அத்தலைக்கேரஸமாம்படி விநியோகங்கொள்ளவேணும் என்று அபேக்ஷிக்கிறது, நமஸ்ஸால் - இந்த நமஸ்ஸால் என்றுமூலார்த்தம்.

மூ.—அதாவது - போகதசையில் ஈஸ்வரனழிக்கும்போது, நோக்கவேணும் என்றழியாதொழிகை. அழிக்கைக்குஹேது கீழேசொல்லிற்று, மேலுஞ்சொல்லும்.

---

வ்யா.—“தனக்கேயாக” என்றத்தைஉபபாதிக்கிறார்(அதாவது என்றுதொடங்கி.) இத்தால் - அத்தலைக்கே * ரஸமாக விநியோக ப்படுகையாவது, தன்னோடேகலந்துபரிமாறுந்தசையிலே போக்தாவான ஈச்வரன், “ஆட்கொள்வானொத்தென் னுயிருண்ட மாயன்” என்கிறபடியே-அடிமைகொள்வாரைப்போலே புகுந்து, தன்வ்யாமோஹத்தாலே தாழநின்று பரிமாறி, இத்தலையில் ஶேஷத்வத்தை அழிக்கும்போது, நம்ஶேஷத்வத்தை நாம்நோக்கவேணும் என்று, நைச்யம்பாவித்து இருய்த்து, அவன்போகத்தை அழியாதொழிகையென்கை.

இப்படி, இவனழிக்கைக்கு ஹேதுவென்னென்ன அருளிச் செய்கிறார் (அழிக்கைக்குஹேது என்றுதொடங்கி.) அதாவது- ஈஸ்வரன் மேல்விழுந்து விநியோகங்கொள்ளுகிற தசையிலே, இவன் நைச்யம்பாவித்திருய்த்து, அவன்போகத்தைஅழிக்கைக்கு ஹேது, ஶேஷத்வமே ஆத்மாவுக்கு ஸ்வரூபமென்கையாலே, கீழே ப்ரணவத்திலே சொல்லிற்று; சதுர்த்தியிலே கிங்கரஸ்வபாவனாகச் சொல்லுகையாலே மேலில்பதத்திலும் சொல்லும்என்கை.

---

அ.—இத்தால்-இந்நமஸ்ஸால். அத்தலைக்கேரஸமாக-ஈச்வரனுக்கே உகப்பாக. கலந்துபரிமாறும்தசையிலே-கலக்கிற தசையிலே. தாழநின்று - சேஷத்வத்திலேநின்று. பரிமாறி-அநுபவித்து. இத்தலையில்-இச்சேதநனிடத்திலே. சேஷத்வத்தை யழிக்கும்போது- இவன் பண்ணும் சேஷவ்ர்த்திக்கு தான் ப்ரதிஸம்பந்தியாகையன்றிக்கே, தான் பண்ணும் சேஷவ்ர்த்திக்கு இவனை ப்ரதிஸம்பந்தி யாக்கும்போது. நம்சேஷத்வத்தை நோக்கவேணுமென்று - நாம் பண்ணும் சேஷவ்ர்த்திக்கு அவனை ப்ரதிஸம்பந்தியாக்க வேணுமென்று. நைச்யம்பாவித்திருய்த்து-தன்னுடையதாழ்ச்சியை அபிநயித்துப்பின்வாங்கி. அவன்போகத்தை- அவன்முகவிகாஸத்தை.

மேல்விழுந்து-வ்யாமோஹத்தாலே ஈச்வரன்சேதநன்மேலே விழுந்து. விநியோகங் கொள்ளுகிறதசையிலே - அநுபவிக்கும் தசையிலே.

இப்படி-நம்சேஷத்வத்தை நாம் நோக்கிக்கொள்ளவேணுமென்று. அழிக்கைக்கு-அவன் போகத்தை யழிக்கைக்கு. மேலில்பதத்திலும்-நாராயணபதத்திலும்.

---

* “ரஸமாம்படி” என்கிறபாடம் அரும்பதத்துக்குச் சேராது.

மூ.—இங்ஙனேவு பிறந்தபோதேகர்தகர்த்யன்;

---

வ்யா.—இனிஇ ப்பாரதந்த்ர்ய ப்ரதிபத்தியினுடையவைபவத்தைப் பலபடியாகஅருளிச்செய்யாநின்றுகொண்டு, இப்பதத்தை நிகமித்தருளுகிறர்மேல் (இங்ஙனேவு பிறந்தபோதே க்ர்தக்ர்த்யன் என்று.)தனக்கேயாக வெனேக்கொள்ளவேணும்என்னும் இவ்வத்யந்தபாரதந்த்ர்ய ப்ரதிபத்தி பிறந்தபோதே, தன்னுடைய ஹிதத்துக்குடலாகச்செய்யவேண்டுவதெல்லாம்செய்து தலைக்கட்டினவனென்கை.

---

அ.—அதாவது-அத்தலைக்கேரஸமாம்படிவிநியோகப்படுகையாவது, போகதசையில் - பரிமாறும்தசையில், ஈச்வரன் அழிக்கும்போது - ஈச்வரன் தன்வ்யாமோஹத்தாலே அசேஷமாயிருந்து அநுபவித்து இத்தலையில் சேஷத்வத்தை அழிக்கும்போது, நோக்கவேணுமென்று - நம்சேஷத்வத்தை நாம் ரக்ஷித்துக்கொள்ளவேணுமென்று நைச்யம்பாவித்து இருய்த்து, அழியாதொழிகை-அவன்போகத்தை யழியாதொழிகை, என்றுமூலார்த்தம்.

அழிக்கைக்குஹேது - ஈச்வரன் மேல்விழுந்து விநியோகங்கொள்ளுகிறதசையிலே இவன் நைச்யம்பாவித்து இருய்த்துஅவன்போகத்தை அழிக்கைக்குஹேது, கீழேசொல்லிற்று - சேஷத்வமே ஆத்மாவுக்கு ஸ்வரூபம்'' என்கையாலே ப்ரணவத்திலே சொல்லிற்று; மேலும் சொல்லும் - சதுர்த்தியிலே கிஂகரஸ்வபாவனுகச் சொல்லுகையாலே மேல் பதத்திலும் சொல்லுமென்று மூலார்த்தம்.

இனி என்றது - அவன் இவனே சேஷியாகவைத்து விநியோகம்கொள்ளவுமாம், சேஷமாகவைத்து விநியோகம் கொள்ளவுமாம், அதிலொரு நிர்ப்பந்தமில்லை, அவன் முகமலர்த்திக்கு த்வாரமாவதுவே இவனுக்கு உத்தேச்யமாவது என்னும்படியான அத்யந்த பாரதந்த்ர்யம் இந்நமஸ்ஸாலே ஸித்தித்த வநந்தரம். எம்பெருமான் இவனே சேஷியாகவைக்க இசைந்திருக்கை இவனுடைய ஸ்வரூபமான பாரதந்த்ர்யத்துக் கெல்லைநிலம், அவன் தன்னே இவனுக்கு சேஷமாக்குகிறது அவனுடைய நிரங்குச ஸ்வாதந்த்ர்யத்துக்கு எல்லை நிலம்.

இப்பார தந்த்ர்ய ப்ரதிபத்தியினுடைய - தன்னே சேஷியாக வைக்க இசையும்படியான இவ்வத்யந்தபாரதந்த்ர்யத்தி னுடைய. பல படியாக-அந்வயத்தாலும் வ்யதிரேகத்தாலும். இப்பதத்தை-இந்நமபதார்த்தத்தை.

ஹிதத்துக்கு-உபாயத்துக்கென்றபடி.

மூ.—இந்நினைவில்லாதபோது எல்லா துஷ்க்ர்தங்களும் க்ர்தம்; இந்நினைவிலே எல்லா ஸுக்ர்தங்களு முண்டு; இதின்றிக்கேயிருக்கப்பண்ணும்யஜ்ஞாதிகளும், ப்ராயஶ்சித்தாதிகளும் நிஷ்ப்ரயோஜநங்கள்;

---

வ்யா.—(இந்நினைவில்லாதபோது எல்லாதுஷ்க்ர்தங்களும் க்ர்தமென்று.) இப்பாரதந்த்ர்ய ப்ரதிபத்தி இல்லாத போது, (కిం తేననకృతంపాపంచోరేణాత్మాపహారిణా) (கிஂதேந நக்ர்தஂபாபஂ சோரேணாத்மா பஹாரிணா) என்கிறபடியே - ஸகலதுஷ்க்ர்தங்களும் இவனாலே செய்யப்பட்டதாய் விடுமென்கை.

(இந்நினைவிலே எல்லா ஸுக்ர்தங்களுமுண்டு) என்றது - இது வுண்டாகவே எல்லாஸுக்ர்தமும் * உண்டானால் பிறக்கும் ப்ரீதி, ஈஶ்வரனுக்குவிளைகையாலே, இந்தபாரதந்த்ர்ய ப்ரதிபத்தியிலே ஸகலஸுக்ர்தமு முண்டு என்கை. இதின்றிக்கே இருக்கப்பண்ணும் யஜ்ஞாதிகளும், ப்ராயஶ்சித்தாதிகளும் நிஷ்ப்ரயோஜநங்கள் என்றது - இந்தபாரதந்த்ர்ய ப்ரதிபத்தி யின்றிக்கே

---

அ.—இப்பாரதந்த்ர்ய ப்ரதிபத்தியில்லாதபோது - இவ்வத்யந்த பாரதந்த்ர்ய ப்ரதிபத்தியில்லாதபோது ஆத்மாபஹாரரூப ஸ்வஸ்வாதந்த்ர்யப்ரதிபத்தி நடக்கையாலே.

இந்நினைவு பிறந்தபோதே - "தனக்கேயாகவெனைக் கொள்ள வேணும்" என்கிற இவ்வத்யந்த பாரதந்த்ர்ய ப்ரதிபத்தி பிறந்த போதே, க்ர்தக்ர்த்யன் - தன்னுடைய ஹிதத்துக்குடலாகச்செய்ய வேண்டுவதெல்லாஞ் செய்து தலைக்கட்டினவனாவான்; இந்நினைவில்லாதபோது - இப்பாரதந்த்ர்யப்ரதிபத்தியில்லாதபோது, எல்லா துஷ்க்ர்தங்களும் க்ர்தம் - ஸகல துஷ்க்ர்தங்களும் இவனாலே செய்யப்பட்டதாய்விடும் என்று மூலார்த்தம்.

இதுண்டாகவே - இவ்வத்யந்த பாரதந்த்ர்ய ப்ரதிபத்தி உண்டாகவே. எல்லாஸுக்ர்தமுமுண்டானால் பிறக்கும் ப்ரீதி - பலாபிஸந்திரஹிதங்களாய் பகவத் ப்ரீத்யைக ப்ரயோஜநங்களாய் இவனிடத்திலுண்டான ஸகலஸுக்ர்தங்களாலும் ரஜஸ்தமோ நிவர்த்தித்வாரா ஸத்வோத்ரேகத்தால்பிறக்கும் ஸ்வரூபஜ்ஞாநத்வாரா பிறக்கும் ப்ரீதி. விளைகையாலே - அபிவ்ர்த்தமாகையாலே.

---

* "பண்ணினால்" என்கிறபாடம் அரும்பதத்துக்குச் சேராது.

மூ.—இது தன்னாலே எல்லாபாபங்களும்போம், எல்லாபலங்களுமுண்டாம்.

---

வ்யா.—யிருக்கச்செய்தே, ஈஸ்வரப்ரீணநார்த்தமாக இவன்பண்ணும்யாகாதிகர்மங்களும், தன்பாபவிமோசநார்த்தமாகப்பண்ணும் க்ர்ச்ச்ரசாந்த்ராயணாதிகளாகிற ப்ராயஸ்சித்தாதிகளும் ஈஸ்வரப்ரீதிக்கும், ஸ்வபாபவிமோசநத்துக்கு முடலாகாமையாலே நிஷ்ப்ரயோஜநங்களென்கை.

இது தன்னாலே எல்லாபாபங்களும் போம், எல்லாபலங்களுமுண்டாமென்றது - இந்தபாரதந்த்ர்ய ப்ரதிபத்தியாலே, ஈஸ்வரன் இவனளவிலே அநுக்ரஹாதிஶயத்தைப் பண்ணுகையால், அவனுடைய நிக்ரஹாத்மகங்களான ஸகல பாபங்களும்போம்; "உன்னடியார்க் கென்செய்வனென்றேயிருத்திநீ" என்கிறபடியே இவனுக்கு எத்தைச் செய்வோமென்று மேன்மேலுமுபகரிக்கையாலே, ஸம்ஸாரநிவ்ர்த்திதொடக்கமான கைங்கர்யப்ராப்திபர்யந்தமாக, ஸகலபலங்களுமுண்டாமென்கை. ஆகமத்யமபதார்த்தத்தை யருளிச்செய்தாராயிற்று.

---

அ.—ப்ரீணநார்த்தமாக-ப்ரீதிஉண்டாகைக்காக. யாகாதிகள் என்கிறவிடத்தில், ஆதிசப்தத்தாலே - தாநாதிகளைச் சொல்லுகிறது. சாந்த்ராயணாதிகள் என்கிறவிடத்தில், ஆதிசப்தத்தாலே - புண்ய தீர்த்தஸ்நாநாதிகளைச் சொல்லுகிறது. ஈச்வரப்ரீதிக்கும் ஸ்வபாபவிமோசநத்துக்கும் உடலாகாமையாலே - இவ்வத்யந்த பாரதந்த்ர்யப்ரதிபத்தியால்பிறக்கும் ஈச்வரப்ரீதிக்கும் ஸகலபாபமூலமான ஆத்மாபஹாரமாகிற ஸ்வபாபவிமோசநத்துக்கும் உடலாகாமையாலே.

இந்த பாரதந்த்ர்ய ப்ரதிபத்தியாலே - இவ்வத்யந்தபாரதந்த்ர்ய ப்ரதிபத்திமாத்ரத்தாலே. அநுக்ரஹாதிசயத்தை - அதிசயிதாநுக்ரஹாதிசயத்தை. நிக்ரஹாத்மகங்களான - நிக்ரஹஸ்வரூபங்களான. இருத்தி - இருந்தாய்.

இதின்றிக்கேயிருக்க-இந்த பாரதந்த்ர்ய ப்ரதிபத்தியின்றிக்கேயிருக்கச்செய்தே, பண்ணும் யஜ்ஞாதிகளும் - ஈச்வரப்ரீணநார்த்தமாக இவன்பண்ணும் யாகாதிகர்மங்களும், ப்ராயஸ்சித்தாதிகளும் - தன்பாபவிமோசநார்த்தமாகப் பண்ணும் க்ர்ச்ரசாந்த்ராயணாதிகளான ப்ராயஸ்சித்தாதிகளும், நிஷ்ப்ரயோஜநங்கள்-ஈச்வரப்ரீதிக்கும் ஸ்வபாபவிமோசநத்துக்கும் உடலாகாமையாலே நிஷ்ப்ரயோஜநங்கள்; இது தன்னாலே - இந்தபாரதந்த்ர்யப்ரதிபத்தியாலே, எல்லாபாபங்களும்போம் - ஈச்வரன் இவனளவில் அநுக்ரஹாதிசயத்தைப் பண்ணுகையாலே அவனுடைய நிக்ரஹாத்மகமான ஸகல பாபங்களும்போம், எல்லாபலங்களுமுண்டாம்- ஸம்ஸாரநிவ்ர்த்திதொடக்கமான கைங்கர்ய ப்ராப்தி பர்யந்தமாக ஸகலபலங்களு முண்டாமென்று மூலார்த்தம்.

மூ.—நாராயணன் என்றது - நாரங்களுக்கு அயநம் என்றபடி. நாரங்களாவன - நித்யவஸ்துக்களினுடைய திரள். அவையாவன;— ஜ்ஞாநாநந்தாமலத்வாதிகளும், ஜ்ஞாநஶக்த்யாதிகளும்,

---

வ்யா.—அநந்தரம் நாராயணபதார்த்தத்தை யருளிச்செய்கிறார் (நாராயணனென்றதென்று தொடங்கி.) அதாவது - நாராயணபதந்தான், நாராணும் அயநம் யஃ ஸஃ = நாராயணஃ என்றும், நாராஃ அயநம்யஸ்ய ஸஃ = நாராயணஃ என்றும், தத்புருஷ பஹுவ்ரீஹிரூபஸமாஸத்வயஸித்தமாகையாலே; அதில் தத்புருஷனில் அர்த்தத்தை முந்துற வருளிச் செய்கிறார் (நாரங்களுக்கயநமென்றபடி யென்று.) நாரங்களாகிறவைதானவையென்ன அருளிச்செய்கிறார் (நாரங்களாவன நித்யவஸ்துக்களினுடைய திரளென்று.) நாரபதம், நர என்றும், நார என்றும், நாராஃ என்றுமாய், (ரீஜ்ஞ்) (ரிங்க்ஷயே) என்கிறதாதுவிலே, ர என்றுபதமாய் - க்ஷயிக்கும் வஸ்துவைச்சொல்லி, நகாரம் அத்தை நிஷேதித்து, நர என்று-க்ஷயமில்லாத நித்யவஸ்துவைக் காட்டி, ஸமூஹார்த்தத்திலே அண்ப்ரத்யயமும், ஆதிவர்த்தியுமாய், நாரஃ என்று - நித்யவஸ்துஸமூஹத்தைச்சொல்லி, நாராஃ என்று - பஹுவசநமாகையாலே ஸமூஹபாஹுள்யத்தையும் சொல்லுகையால் (நித்யவஸ்துக்களினுடைய திரள் என்கிறார்.) இதில், நித்ய என்கையாலே - நரஶப்தார்த்தமும், வஸ்துக்கள் என்கையாலே - நாரஶப்தார்த்தமும், அவற்றினுடைய திரள் என்கையாலே- பஹுவசநார்த்தமும் சொல்லப்பட்டதிறே. தாத்ர்ஶங்களானவைதானவையென்ன அருளிச்செய்கிறார் (அவையாவனவென்றுதொடங்கி.) ஜ்ஞாநாநந்தா மலத்வாதிகளாவன-ஸ்வரூபநிரூபகங்கள். ஆதிஶப்தத்தாலே-அநந்தத்வத்தைச் சொல்லுகிறது.

ஜ்ஞாநஶக்த்யாதிகளாவன-நிரூபிதஸ்வரூபவிஶேஷங்களான ஸமஸ்தகல்யாணகுணங்களுக்கும் ப்ரதாநமா யிருந்துள்ள ஜ்ஞாநஶக்தி பலஐஶ்வர்யவீர்ய தேஜஸ்ஸுக்களாகிற ஷட்குணங்கள்.

---

அ.—தாத்ர்சங்களானவை-நித்யங்களானவை.

ஸ்வரூபநிரூபகங்கள்-தன்னையிட்டே ஸ்வரூபத்தைநிரூபிக்கும்படியாயிருக்கிற தர்மங்கள். நிரூபிதஸ்வரூப விசேஷணங்களான-ஜ்ஞாநாநந்தாமலத்வாதிநிரூபித திவ்யாத்மஸ்வரூபக தர்மங்களான. வாத்ஸல்யமாவது - குற்றமே நற்றமாக இவனை அங்கீகரிக்கையிறே.

ஜ்ஞாநமாவது-ஸ்வரூபஜ்ஞாநம். ஆநந்தமாவது-கட்டடங்க அநுகூலமாயிருக்கை. அமலத்வமாவது-ஹேய ப்ரத்யநீகமாயிருக்கை. அநந்தத்வமாவது-தேசகாலவஸ்து பரிச்சேதரஹிதமாயிருக்கை. நிரூபிதஸ்வரூபவிசேஷணங்களான-கீழ்ச்சொன்ன ஜ்ஞாநாதிகளாலே நிரூபிதமான ஈச்வரனுடைய திவ்யாத்மஸ்வரூபத்துக்கு விசேஷணங்களான.

மூ.—வாத்ஸல்யஸௌஶீல்யாதிகளும், திருமேனியும், காந்தி ஸௌகுமார்யாதிகளும், திவ்ய பூஷணங்களும், திவ்யாயுதங்களும், பெரியபிராட்டியார்தொடக்கமான நாய்ச்சிமார்களும், நித்யஸூரிகளும்,

---

வ்யா.—வாத்ஸல்ய ஸௌஶீல்யாதிகளாவன - அந்த ஷாட்குண்யாயத்தமான வாத்ஸல்ய, ஸௌஶீல்ய, ஸ்வாமித்வ, ஸௌலப்யாத் யஸங்க்யேய கல்யாண குணவிஶேஷங்கள். திருமேனியாவது - அஸாதாரணமான திவ்ய மங்கள விக்ரஹம். ஏகவசநம் ஜாத்யபிப்ராயமாய், நித்யமான திவ்ய விக்ரஹத்தையும், ஐச்சிகமாக பரிக்ரஹிக்கும் விக்ரஹாந்தரங்களையும் சொல்லுகிறது; அல்லாதபோது, ஓரோஸமூஹமா எண்ணிவருகிற ப்ரகரணத்துக்குச் சேராது. இதுதான் நடுவிற்றிருவீதிப்பிள்ளை பட்டர், ஆச்சான்பிள்ளை, இவர்கள் அருளிச்செய்த ப்ரபந்தங்களிலே ஸுஸ்பஷ்டம். காந்தி ஸௌகுமார்யாதிகளாவன - அந்தவிக்ரஹ குணங்களான ஸௌந்தர்ய, ஸௌகுமார்ய, ஸௌகந்த்ய, லாவண்ய, யௌவநாதிகள். திவ்யபூஷணங்களாவன - ஆபரண சூர்ணையிலே பாஷ்யகாரர் அருளிச்செய்தபடியே, கிரீடாதி நூபுராந்தமாக அத்திருமேனிக்குச் சாத்தும் அஸங்க்யேயமான திருவாபரணங்கள். திவ்யாயுதங்களாவன - அழகுக்கும், ஆஶ்ரிதவிரோதி நிரஸநத்துக்கு முடலாயிருந்துள்ள ஶங்கசக்ரகதாஉஸி ஶார்ங்காத் யஸங்க்யேயாஉயுதவிஶேஷங்கள். பெரியபிராட்டியார்தொடக்கமான நாய்ச்சிமாராவார்- "(శ్రీవల్లభ, ఏవంభూతభూమినీళానాయక) (ஸ்ரீவல்லப, ஏவம்பூதபூமிநீளாநாயக) (దేవిత్వామనునీళయాసహమహీదేవ్యస్సహస్రంతథా) (தேவித்வாமநுநீளயாஸஹமஹீ தேவ்யஸ்ஸஹஸ்ரம்ததா) என்கிறபடியே, ப்ரதாந மஹிஷியான பெரியபிராட்டியார் முதலாக தத்ஸமாநைகளான பூமிநீளைகளும், மற்று மநேகராகச் சொல்லப்படுகிறவர்களும், லக்ஷ்மீ ப்ரப்ர்தி மஹிஷீவர்க்கங்களும்" என்றிறே ஆச்சான்பிள்ளை யருளிச்செய்தது.

நித்யஸூரிகளாவார்—அநந்த கருட விஷ்வக்ஸேநாதிகளாயிருந்துள்ள அஸங்க்யேயரானஸூரிஜநங்கள்.

---

அ.—அந்த ஷாட்குண்யாயத்தமான - அந்தஷாட்குண்யாதீநமான. வாத்ஸல்யம்-வத்ஸலத்தின்பக்கல்தேநுவிருக்குமிருப்பு. ஸௌசீல்யம் — உயர்ந்தவர்களோடும் தாழ்ந்தவர்களோடும்புரையறக்கலக்குந் தன்மை. ஸ்வாமித்வம் - தன்னையொழிந்த எல்லா பதார்த்தங்களையும் தன்னதென்றபிமாநிக்கை. ஸௌலப்யம்-கிட்டவெளியனாகை. தத்ஸமாநைகளான - பெரியபிராட்டியார்க்கு ஸமாநைகளான.

மூ.—சத்ரசாமராதிகளும், திருவாசற்காக்கும் முதலிகளும், கணுதிபரும், முக்தரும், பரமாகாஶமும்,

---

வ்யா.—சத்ரசாமராதிகளாவன-கைங்கர்யோபகரணங்களான சத்ரசாமரதாலவ்ர்ந்தப்ர்ங்கார பதத்க்ரஹாதிகள். திருவாசற்காக்கும் முதலிகளாவார்-சண்டப்ரசண்ட பத்ரஸுபத்ர ஜயவிஜயாதிகள். கணுதிபராவார்-குமுதகுமுதாக்ஷபுண்டரீகவாமந ஶங்குகர்ண ஸர்வநேத்ரஸுமுக ஸுப்ரதிஷ்டிதாதிகள். முக்தராவார்- “கரைகண்டோர்” என்கிறபடியே-ஸம்ஸார ஸாகரத்தைக் கடந்து அக்கரைப்பட்டு, நித்யஸூரிகளோடு ஸமாநாகாரராய், நிகில கைங்கர்ய நிரதராயிருக்கும் அஸங்க்யேயரானசேதநர்.

(பரமாகாஶமாவது - பஞ்சோப நிஷண்மயமான பரமபதம்; இதுதான் பஞ்சோப நிஷண்மயமாகையாலே ஸமூஹாத்மகமாயிறே யிருப்பது; ஆகையால் ஸமூஹகணனைக்குவிரோதமில்லை. “பஞ்சோபநிஷண்மயமாகையாலே, பரமபதமும் ஸமூஹாத்மகமாயிருக்கும்” என்றிறே ஆச்சான்பிள்ளை யருளிச்செய்தது. ஆக ஜ்ஞாநாநந்தாமலத்வாதிகளுமென்றுதொடங்கி,இவ்வளவும்-ஸ்வரூபநிரூபகதர்மங்களையும், நிரூபிதஸ்வரூப விஶேஷங்களான கல்யாணகுணங்களையும், அக்குணங்களுக்கு ப்ரகாஶகமான திவ்ய மங்களவிக்ரஹத்தையும், விக்ரஹ குணமான ஸௌந்தர்யாதிகளையும், 'அந்தஸௌந்தர்யாதிகளோபாதி, பூத்தாப்போலே சாத்தின திவ்யாபரணங்களையும், அவ்வாபரணங்களோடு விகல்பிக்கலாம்படியான திவ்யாயுதங்களையும், இவையித்தனையும் காட்டிலெறித்தநிலாவாகாமே அருகேயிருந்தநுபவிக்கிற நாய்ச்சிமாரையும், அச்சேர்த்தியிலே யடிமைசெய்கிற நித்யஸூரிகளையும், அவர்களுக்கு கைங்கர்யோப கரணங்களான சத்ரசாமராதிகளையும், இச்சேர்த்திக்கு என்வருகிறதோவென்று வயிறெரிந்துநோக்கும் திருவாசல்காக்கும் முதலிகளையும்,அப்படிமங்களாஶாஸநபரராய் திருப்படைவீட்டுக்கடையக் காவலாயிருக்கும் கணுதிபரையும்,

---

அ.—தாலவ்ர்ந்தம்-திருவாலவட்டம்.ப்ர்ங்காரம்-திருக்காவேரி. பதத்க்ரஹம் - திருப்படிக்கம். ஆதிசப்தத்தாலே - ஆஸநசயநாதிகளைச்சொல்லுகிறது.

பூத்தாப்போலே-கல்பகதருபூத்தாப்போலே. அவ்வாபரணங்களோடு விகல்பிக்கலாம்படியான - இவையும் ஆபரணங்களோடு சொல்லலாம்படியான. காட்டிலெறித்தநிலாவாகாமே-ஸ்வயமேவ அநுபவித்து ஆநந்திக்கை யன்றிக்கே. அச்சேர்த்தியிலே - ஈச்வரனும்நாய்ச்சிமாருமான சேர்த்தியிலே. நோக்கும்-மங்களாசாஸநம் பண்ணும்.

மூ.—ப்ரக்ர்தியும், பத்தாத்மாக்களும், காலமும், மஹதாதி விகாரங்களும், அண்டங்களும், அண்டத்துக்குட்பட்ட தேவாதி பதார்த்தங்களும்.

---

வ்யா.—நிவர்த்தஸம்ஸாரராய் அவர்களோடுஒருகோவையாய் அடிமைசெய்கிறமுக்தரையும் அவ்வடிமைக்கு வர்த்தகமான பரம பதத்தையும் அருளிச்செய்தாராய்த்து.

லீலாவிபூதியிலுள்ளவற்றை யருளிச் செய்கிறார்மேல். ப்ரக்ர்தியாவது - குணத்ரயாத்மகதயா ஸமூஹாத்மிகையாயிருக்கும் மூலப்ரக்ர்தி. "குணத்ரயாத்மிகையாகையாலே மூலப்ரக்ர்தியும் ஸமூஹாத்மிகையா யிருக்கும்" என்றிறே, இதுக்கும் ஆச்சான் பிள்ளை யருளிச்செய்தது. பத்தாத்மாக்களாவார் - உமைமெழுகிற் பொன்போலே, இப்ப்ரக்ர்திக்குள்ளே உருமாய்ந்துகிடக்கிற ஆத்மாக்கள். காலமாவது -அஹோராத்ராதி விபாகயுக்ததயாஸமூஹாத்மகமாயிருக்கும் அசித்விசேஷம். "அஹோராத்ராதிவிபாகங்கள் அநேகமாகையாலே, காலமும் ஸமூஹாத்மகமாயிருக்கும்" என்றிறே, இதுக்கும் ஆச்சான்பிள்ளை யருளிச்செய்தது. ஆக இவ்வளவும்-ஸ்வரூபேண நித்யங்களான வஸ்துக்களைச்சொல்லிற்று, மேல் ப்ரவாஹரூபேண நித்யங்களைச் சொல்லுகிறது. ஸ்வரூபேண நித்யத்வமாவது - ஸத்தாபதார்த்தத்தினுடைய வுத்பத்தி விநாஶாத்யந்தாபாவம். ப்ரவாஹ ரூபேண நித்யத்வமாவது-உத்பத்தி விநாஶயோகியாகாநிற்கச்செய்தேயும், பூர்வகாலத்திலுண்டான நாமரூப லிங்காதிகளுடைய அநந்யதாபாவம்.

இதில் மஹதாதிவிகாரங்களாவன-மஹத்தத்வம் தொடங்கி ப்ர்திவ்யளவாகவுண்டான இருபத்துமூன்றுதத்வமும். அண்டங்களாவன – இம்மஹதாதிகளாலே ஆரப்த்தங்களாய், (అణ్డానాంతు సహస్రాణాం సహస్రాణ్యయుతానిచ) (அண்டாநாம்துஸஹஸ்ராணாம் ஸஹஸ்ராண்யயுதாநிச) என்கிறபடியே, அஸங்க்யேயமாயிருக்கிற அண்டவிஶேஷங்கள். அண்டத்துக்குட்பட்ட தேவாதி பதார்த்தங்களாவன - அண்டாந்தர்வர்த்திகளான தேவமநுஷ்யதிர்யக் ஸ்த்தாவரங்கள். ஆக-நாரபதார்த்த மருளிச்செய்தாராயிற்று.

---

அ.— அவர்களோடு ஒருகோவையாக - நித்யஸூரிகளோடு ஏககோஷ்டியாக. உருமாய்ந்துகிடக்கிற-கரணகளேபரசூந்யராய்க் கிடக்கிற.

உள்ளவற்றை-உள்ள நாரசப்தார்த்தங்களை. மூலப்ரக்ர்தி-மூலமான ப்ரக்ர்தி. மூலமாகையாவது - மஹதாதி ப்ரக்ர்த்யந்தமானவிகாரங்களுக்கெல்லாம் காரணமாயிருக்கை. உருமாய்ந்து-ஸ்வரூபமழிந்து. உத்பத்தி விநாச யோகியாகா நிற்கச்செய்தே-உத்பத்தி விநாசங்களுடைய ஸம்பந்தத்தை உடைத்தாகாநிற்கச் செய்தே. அநந்யதாபாவம் – அதுவேயாயிருக்கை.

மூ.—அயநமென்றது - இவற்றுக்காஸ்ரயமென்றபடி. அங்ஙனன்றிக்கே, இவைதன்னை ஆச்ரயமாகவுடையனென்னவுமாம்.

---

வ்யா.—மேல்அயநபதார்த்தத்தையருளிச்செய்கிறார் (அயநமென்றது இவற்றுக்காஸ்ரயமென்றபடியென்று.) அதாவது-அயநஸப்தம் ஆஸ்ரயவாசியாகையாலே, இவற்றுக்கு அயநமென்றது-இவற்றுக்காஸ்ரயமென்றபடியென்கை. பஹுவ்ரீஹி ஸமாஸார்த்தத்தையருளிச்செய்கிறார் (அங்ஙனன்றிக்கே இவைதன்னை ஆச்ரயமாகவுடையனென்னவுமாமென்று.) அதாவது - இவற்றுக்காஸ்ரயமென்று தத்புருஷனாகச் சொல்லுகையன்றிக்கே, (இவைதன்னை ஆஸ்ரயமாகவுடையன்) என்று பஹுவ்ரீஹியாகச் சொல்லவுமாமென்கை.

இவற்றுக்காஸ்ரயம் என்கிறவிடத்தில், குணங்களையும் சொல்லிற்றேயாகிலும், (இவைதன்னை யாஸ்ரயமாகவுடையன்) என்கிறவிடத்தில், குணங்களை யொழியச்சொல்லவேணும். அக்குணங்களுக்கு வ்யாப்யத்வம் சொல்லுமளவில் ஆத்மாஸ்ரயமும் அநவஸ்த்தையுமாகிற தோஷங்கள் வருகையாலே. "தன்குணங்களிலே ஈச்வரன் வ்யாபிக்கும்போது குணவிஸிஷ்டனாயே வ்யாபிக்கவேணும், நிர்க்குணமாய் வஸ்துவிராமையாலே; அப்போது, வ்யாப்யகுணங்களே வ்யாபககுணங்களாய், வ்யாபககுணங்களே வ்யாப்யகுணங்களாயறுகையாலே, ஆத்மாஸ்ரய தோஷடாம்;

---

அ.—இவற்றுக்கு-நித்யவஸ்துக்களுடைய திரளுக்கு. இவைதன்னை-நாரங்களை. வ்யாப்யத்வம்-ஆச்ரயம. சொல்லுமளவு-சொல்லும்போது. ஆத்மாச்ரயமாவது - தனக்குத்தானே ஆச்ரயமாயிருக்கை. அதாவது-பரஸ்பராபேக்ஷை. அநவஸ்தையாவது-மேன்மேலன அபேக்ஷா தோஷங்கள் வருகையாலே குணங்களை யொழியச் சொல்லவேணும் என்று அந்வயம்.

வ்யாபிக்கும்போது-அந்தப்ப்ரவிச்ய வ்யாபிக்கும்போது. நிர்க்குணமாய்-ஸ்வரூப நிரூபககுண சூந்யமாயும் நிரூபிதஸ்வரூபகுண சூந்யமாயும். அப்போது-குணவிசிஷ்டனுக்கு வ்யாப்திசொல்லும்போது. வ்யாப்யகுணங்களே வ்யாபககுணங்களாய்-ஆச்ரயகுணங்களே ஆச்ரயிகுணங்களாய். வ்யாபககுணங்களே வ்யாப்யகுணங்களாய்-ஆச்ரயிகுணங்களே ஆச்ரயகுணங்களாய். அதுக்குமேலே - ஆத்மாச்ரயமாகிறதோஷமாகைக்குமேலே, ஆத்மாச்ரயரூபதோஷ பரிஹாரார்த்தமாக ஆத்மாச்ரய குணங்களுக்கும் ஆச்ரயிகுணங்களுக்கும் ஸ்வரூபபேதமங்கி கரிக்கில் என்றபடி.

மூ.—இவையிரண்டாலும் பலித்ததுபரத்வ ஸௌலப்யங்கள்

---

வ்யா.—அதுக்குமேலே, தன்குணங்களிலே குணி வ்யாபிக்கவென்றுபுக்கால், ததாஸ்ரய குணங்களிலும் குணிவ்யாபிக்கவேணும்; அந்த வ்யாபகனுடைய குணங்களையும், குணி வ்யாபிக்கவேணும். ஆகையாலே, (அநவஸ்தாதுஷ்டமாம்) (அநவஸ்தாதுஷ்டமாம்) என்று, இதுதன்னை ஸுஸ்பஷ்டமாக ஆச்சான்பிள்ளையருளிச்செய்தாரிறே.

இவ்வுபய ஸமாஸத்தாலும், பலிதாம்ஸத்தை யருளிச்செய்கிறார் (இவையிரண்டாலுமென்றுதொடங்கி.) அதாவது - நாரங்களுக்கயநம், நாரங்களை அயநமாக வுடையவன் என்கிற, இவை இரண்டாலும் பலித்த அர்த்தம், தன்னை யொழிந்த ஸமஸ்தவஸ்துக்களுக்கும், தான் ஆதாரமாயிருக்கையாகிற பரத்வமும், இப்படி பெரியனானதான் ஸகல சேதநா சேதநங்களிலும் தன்னை அமைத்துக்கொண்டு புக்கிருக்கையாகிறஸௌலப்யமுமென்கை.

---

அ:—தன்குணங்களிலே குணிவ்யாபிக்க வென்றுபுக்கால்-ஸ்வநிஷ்ட்டங்களான குணங்களிலே குணிகுணாந்தரவிசிஷ்டனாய் வ்யாபிக்க வேணுமென்று ப்ரவேசித்தால். ததாச்ரய குணங்களிலும்-குணநிஷ்ட்டங்களாய் வ்யாப்யகுணபிந்நங்களான குணங்களிலும். ஆகையாலே - குணபேதம் சொல்லும்போது பஹுகுண கல்பநம் வருகையாலே. அநவஸ்த்தாதுஷ்டமாம்-பஹுகுணகல்பநம் அநவஸ்த்தையாகையாலே தோஷயுக்தமாம்.

உபயஸமாஸத்தாலும்-தத்புருஷனாலும் பஹுவ்ரீஹியாலும். இரண்டாலும் - இரண்டுஸமாஸத்தாலும். வஸ்துக்களுக்கும்-நாரங்களுக்கும்.இப்படி-ஸகலவஸ்துக்களுக்கும்ஆதாரமாம்படி. பெரியனான-விபுவான. தன்னை யமைத்து வைத்து-விபுவான தன்னை சரீரியாம்படி வைத்து. இவை யிரண்டாலும் பலித்தது பரத்வ ஸௌலப்யங்கள் என்கிறவிடத்தில், தத்புருஷனால் - பரத்வமும், பஹுவ்ரீஹியால்-ஸௌலப்யமு மென்கிற நியமமன்றியிலே, தத்புருஷனாலும் பரத்வஸௌலப்யங்கள் பலிக்கும்,பஹுவ்ரீஹியாலும்பரத்வ ஸௌலப்யங்கள் பலிக்கும் என்றருளிச்செய்வர்.

இவையிரண்டாலும்பலித்தது-நாரங்களுக்கு அயநம், நாரங்களை அயநமாக வுடையவன் என்கிற இவை யிரண்டாலும் பலித்தவர்த்தம், பரத்வ ஸௌலப்யங்கள் - தன்னை யொழிந்த ஸமஸ்த வஸ்துக்களுக்கும் தான் ஆதாரமாயிருக்கையாகிற பரத்வமும், இப்படி பெரியனான தான் ஸகல சேதநா சேதநங்களிலும் தன்னை யமைத்துக்கொண்டு புகுந்திருக்கையாகிற ஸௌப்யமு மென்று மூலார்த்தம்.

மூ.—அந்தர்யாமித்வமும், உபாயத்வமும், உபேயத்வமுமாகவுமாம்.

---

வ்யா.—இன்னமுமொருப்ரகாரத்தாலே, இந்தஸமாஸத்வயபலிதங்களையருளிச்செய்கிறார் (அந்தர்யாமித்வமும், உபாயத்வமும், உபேயத்வமுமாகவுமாமென்று.) அதாவது-பஹுவ்ரீஹியும்,தத்புருஷனுமாகிற உபயஸமாஸத்தாலும் பலித்தது, அந்தர்யாமிப்ராஹ்மணாதிகளிற் சொல்லுகிறபடியே,அகிலசேதநாசேதநங்களிலும், அந்தராத்மதயாऽவஸ்த்திதனாய்க் கொண்டு நியந்தாவாயிருக்கையாகிற அந்தர்யாமித்வமும்,(ఇణ్గతౌ) (இண்கதௌ)என்கிறதாதுவிலேயாதல்,(అయగతౌ)(அயகதௌ)என்கிறதாதுவிலேயாதல்ஸித்தமான அயநபதத்தில் கரணேவ்யுத்பத்தியாலும்,கர்மணிவ்யுத்பத்தியாலும்ப்ரகாஶிதமான உபாயத்வமும்,உபேயத்வமுமாகவுமாமென்கை.பஹுவ்ரீஹியோஜனை சொல்லுகிறவிடத்தில், யோக்யதானுகுணமாக நாரஶப்தத்தை, குணங்களையொழிந்த வஸ்துக்களுக்கு வாசகமாகக்கொண்டாப்போலே, தத்புருஷயோஜனையிலும்,அயநஶப்தத்தை உபாயோபேயவாசியாகக் கொள்ளுமளவில், யோக்யதானுகுணமாக நாரஶப்தத்தை அசேதநங்களையொழிந்த சேதநவஸ்துக்களுக்கு வாசகமாகக்கொள்ளக்கடவது. (నారస్త్వితిసర్వపుంసాం సమూహఃపరికథ్యతే। గతిరాలమ్బనంతస్య తేననారాయణస్స్మృతః) (நாரஸ்த்விதி ஸர்வபுംஸாം ஸமூஹஃபரிகத்யதே-கதிராலம்பநംதஸ்யதேநநாராயணஸ்ம்ர்தஃ) என்றும், (నారశబ్దేనజీవానాంసమూహఃప్రోచ్యతేబుధైః। తేషామయనభూతత్వాన్నారాయణఇహోచ్యతే) (நாரஶப்தேநஜீவாநாംஸமூஹஃப்ரோச்யதேபுதைஃ - தேஷாமயநபூதத்வாந் நாராயண இஹோச்யதே) என்றும் இத்யாதிகளிலே இவ்வர்த்தம் சொல்லப்படாநின்றதிறே,

---

அ.—யோக்யதானுகுணமாக-ஶரீரதயா ஆச்ரயமாகைக்கு அநுகுணமாக. தத்புருஷயோஜனையிலும் - "நாராணாംஅயநം-நாராயணம்" என்கிற யோஜனையிலும். யோக்யதானுகுணமாக - உபாயாபேக்ஷானுகுணமாக.

[నారస్తు - நாரஸ்த்விதி] இவ்விடத்தில்,துகாரம் – அசித்வ்யாவ்ர்த்தியைச் சொல்லுகிறது. ஆகஅசித்வ்யாவ்ர்த்தமான ஜீவாத்மஸமூஹம் நாராஃ என்று வித்வாங்களாலே சொல்லப்படாநின்றது; அந்தநாரத்துக்கு உபேயமாயும் உபாயமாயுமிருக்கையாலே ஸர்வேச்வரன் நாராயணனென்று சொல்லப்படாநின்றான். வித்வாங்களாலே, நாரசப்தத்தாலே-ஜீவாத்மாக்களுடைய ஸமூஹம் சப்தசக்தியாலே சொல்லப்படுகிறது; அந்த நாரசப்தவாச்யரான ஜீவாத்மாக்களுக்கு உபாயோபேயமாயிருக்கையாலே இவ்விடத்தில் எம்பெருமான் "நாராயணன்" என்று சொல்லப்படுகிறான் என்று ச்லோகார்த்தம். இவ்வர்த்தம் - யோக்யதானுகுணமாக நாரசப்தத்தை ஜீவமாத்ரவாசியாகிற இவ்வர்த்தம்.

மூ.—"எம்பிரானெந்தை" என்கையாலே-ஈஶ்வரனே எல்லா வுறவு முறையுமென்று சொல்லும். நாம் பிறர்க்கானவன்றும், அவன் நமக்காயிருக்கும்.

---

வ்யா.—கர்மணிவ்யுத்பத்திஸித்தமானப்ராப்யத்வத்துக்குஸங்கோசமில்லாமையாலும், ஸர்வப்ரகாரவிஶிஷ்டமாகையாலும், பந்துலாபம் ப்ராப்யமாகையாலும், ஈஶ்வரனுடைய ஸர்வவித பந்துத்வமும் இப்பதத்திலே சொல்லும்படியை யருளிச்செய்கிறார் (எம்பிரானென்று தொடங்கி.) அதாவது - நாராயண சப்தார்த்தத்தை யநுஸந்திக்கிற திருமங்கையாழ்வார், "எம்பிரானெந்தை யென்னுடைச்சுற்றமெனக் கரசென்னுடைவாணாள்" என்கையாலே-ஈஶ்வரனே இவ்வாத்மாக்களுக்கு ஸர்வவிதபந்துவுமென்று இப்பதத்திலே சொல்லுமென்கை. இப்படி பந்துபூதனையக்கொண்டு, இத்தலைக்கு அவன் செய்யும தேதென்னவருளிச்

---

அ.—அந்தர்யாமித்வமும்-அந்தர்யாமிப்ராஹ்மணாதிகளில்சொல்லுகிறபடியே அகிலசேதநாசேதநங்களிலும் அந்தராத்மதயா அவஸ்திதனையக்கொண்டு நியந்தாவாயிருக்கையாகிற அந்தர்யாமித்வமும், உபாயத்வமும் உபேயத்வமுமாகவுமாம் - அயநபதத்தில், கரணேவ்யுத்பத்தியாலும்கர்மணிவ்யுத்பத்தியாலும்ப்ரகாசிதமான உபாயத்வமும் உபேயத்வமுமாகவுமாமென்று மூலார்த்தம்.

ஸங்கோசமில்லாமையாலே என்றவநந்தரம் (அது) என்று கூட்டிக் கொள்ளவேணும்; அல்லாதபோது இவ்வாக்யம் அந்வயியாது. அது - கர்மணி வ்யுத்பத்தி ஸித்தமான ப்ராப்யத்வம். ஸர்வப்ரகார விசிஷ்டமாகையாலும் - மாத்ர்த்வாதி ஸர்வப்ரகார விசிஷ்டமாகையாலும். பந்துலாபம் ப்ராப்யமாகையாலும் - பந்துலாபம் உத்தேச்யமாகையாலும். இப்பதத்திலே - இவ்வயநபதத்திலே. [எம்பிரானித்யாதி] எம்பிரான் - எனக்கு உபகாரகன்; எந்தை - எனக்குத்தமப்பன்; என்னுடைச் சுற்றம் - மற்றுமுள்ள என்னுடையபந்துவர்க்கம்; எனக்கரது-எனக்குராஜா; என்னுடைவாணாள் - என்னுடையப்ராணன்.

"எம்பிரானெந்தை" என்கையாலே-நாராயண சப்தார்த்தத்தை யநுஸந்திக்கிற திருமங்கையாழ்வார் "எம்பிரானெந்தை யென்னுடைச்சுற்றம் எனக்கர சென்னுடைவாணாள்" என்கையாலே, ஈச்வரனே யெல்லாவுறவு முறையுமென்று சொல்லும்-ஈச்வரனே இவ்வாத்மாக்களுக்கு ஸர்வவித பந்துவுமென்று இப்பதத்தில் சொல்லும் என்று மூலார்த்தம்.

மூ.—இராமட மூட்டுவாரைப்போலே, உள்ளேபதிகிடந்து ஸத்தையேபிடித்துநோக்கிக்கொண்டுபோரும்.

செய்கிறார் (நாம் பிறர்க்கானவன்றும், அவன் நமக்காயிருக்கு மென்று.) அதாவது-நாம்தன்னோடு ஒட்டற்றுப் பிறர்க்குநல்லரா யிருந்தகாலத்திலும் அவன் நமக்கு நல்லனாயிருக்குமென்கை.

இப்படி நாம் அந்யபரரானவன்றும், நமக்கேயாயிருந்து அவன் செய்துபோருமதுதா னேதென்ன அருளிச்செய்கிறார் (இராமடமென்று தொடங்கி.) அதாவது - நேர்கொடுநேரே தங்கள்பக்கல்வந்து அபேக்ஷிதங்களைவாங்கி ஜீவியாதே, துர்மாநத் தாலே பட்டினியே திரியுமவர்களையும் விடமாட்டாமையாலே, அசலறியாதபடி ராத்ரிமடத்திலே புஜிப்பிப்பாரைப்போலே, தன்பக்கல்தலைசாயோம் என்றுஇச்சேதநர்ஸ்வாதந்த்ர்ய மடித்துத் திரியாநிற்க, இவர்கள்கண்காணாதபடி அந்தராத்மாவாய்க் கொ ண்டு உள்ளே மறைந்திருந்து, இவர்கள் ஸத்தையே தொடங்கி ரக்ஷித்துக்கொண்டு போரும் என்கை. ஆக இந்நாராயணபதத் தாலே-கைங்கர்ய ப்ரதிஸம்பந்தியான ஈஶ்வரன்படிகளை அருளிச் செய்தாராய்த்து.

அ.—இப்படி-ஸர்வவிதமான.தன்னோடொட்டற்று பிறர்க்கு நல் லராயிருந்தகாலத்தில் - தன்னோடே அநந்யார்ஹ சேஷத்வேந ஸம்பந்தியாமல் ஸம்ஸாரிகளோடே சேஷத்வேநஸம்பந்தித் திருந்தகாலத்திலே. அவன் நமக்கு நல்லனா யிருக்குமென்கை-நம் மோடு நிருபாதிக ஸம்பந்தமுடைய ஈச்வன் நமக்கு நன்மைகளை ஆசாஸித்திருக்கு மென்கை.

நாம் பிறர்க்கானவன்றும்-நாம்தன்னோடொட்டற்று பிறர்க்கு நல்லராயிருந்தகாலத்திலும், அவன் நமக்காயிருக்கும் – அவன் நமக்கு நல்லனாயிருக்கும் என்று மூலார்த்தம்.

இப்படி–கீழ்ச்சொன்னபடி. நேர்கொடுநேரே-எதிராக. ப்ரத் யக்ஷமாக என்றபடி. ஜீவியாதே-அநுபவியாதே. துர்மாநத்தாலே- அஹங்காரத்தாலே. ராத்ரிமடத்திலே - இராச்சோறிடும் ஸத்ரத் திலே. தன்பக்கல் தலைசாயோமென்று-தன்னை வணங்குகிறதில்லை யென்று. ஸ்வாதந்த்ர்யமடித்துத் திரியாநிற்க - ஸ்வாதந்த்ர்யத்தை கோஷித்துக்கொண்டு திரியாநிற்க. இந்நாராயண பதத்தாலே- சதுர்த்த்யந்தமான நாராயணபதத்திலே. படிகளை-அந்தர்யாமித் வாதி ப்ரகாரங்களை.

இராமட மூட்டுவாரைப்போலே-ராத்ரிமடத்திலே புஜிப்பிப் பாரைப்போலே தன்பக்கல் தலைசாயோமென்று இச்சேதநர் ஸ்வாதந்த்ர்ய மடித்துத் திரியாநிற்க, உள்ளேபதிகிடந்து-இவர் கள்கண்காணாதபடி அந்தராத்மாவாய்க்கொண்டு உள்ளே மறைந் திருந்து, ஸத்தையே பிடித்து - இவர்கள்ஸத்தையேதொடங்கி, நோக்கிக்கொண்டுபோரும் - ரக்ஷித்துக் கொண்டு போருமென்று மூலார்த்தம்.

மூ.—ஆயஎன்கிற இத்தால் — "சென்றாற்குடையாம்" என்கிறபடியே எல்லா அடிமைகளும் செய்யவேணும் என்று அபேக்ஷிக்கிறது. நமஸ்ஸாலே, தன்னோடுறவில்லையென்றுவைத்து கைங்கர்யத்தை ப்ரார்த்திக்கக் கூடுமோவென்னில்;

---

வ்யா.—இனி, இதில்விபக்த்யம்ஶத்தாலேகைங்கர்யத்தைப்ரார்த்திக்கிறபடியை அருளிச்செய்கிறார் (ஆயஎன்கிற இத்தாலென்று தொடங்கி.) அதாவது - ஆயவென்கிற இந்த சதுர்த்தியாலே - "சென்றாற்குடையாம்" என்கிறபாட்டிற் சொல்லுகிறபடியே - திருவனந்தாழ்வானைப்போலே ஸர்வவித கைங்கர்யங்களும்செய்யவேணுமென்று அபேக்ஷிக்கிறதென்கை. நமஸ்ஸாலே - தனக்கென்ன வொன்றை விரும்புகைக்கு ப்ராப்தியில்லாத அத்யந்தபாரதந்த்ர்யம் சொல்லியிருக்க, இங்கேகைங்கர்யத்தைத் தான்விரும்பி அபேக்ஷிக்கை ஸம்பவியாதென்றிருக்கு மவர்கள் பண்ணும் ப்ரஶ்நத்தை யநுவதிக்கிறார் (நமஸ்ஸாலே தன்னோடு உறவில்லையென்றுவைத்து கைங்கர்யத்தை ப்ரார்த்திக்கக்கூடுமோ வென்னிலென்று.)

---

அ.—இனி-நாராயணபதார்த்தமருளிச்செய்தவநந்தரம். இதில்-நாராயண சப்த்தத்திலே. விபக்த்யம்சத்தாலே - சதுர்த்தியாலே.

ஆவிஸ்யுஃ என்கிற அத்யாஹ்ர்தமான க்ரியாபதத்தைக் கடாக்ஷித்து, "எல்லா வடிமைகளும் செய்யவேணுமென் றபேக்ஷிக்கிறது" என்றருளிச்செய்கிறார்.

ஆயஎன்கிறவித்தால் - ஆயஎன்கிற இந்தசதுர்த்தியாலே, சென்றால் குடையாம் என்கிறபடியே – "சென்றால் குடையாம்" என்கிறபாட்டில் சொல்லுகிறபடியே, எல்லாவடிமைகளும் செய்யவேணுமென்றபேக்ஷிக்கிறது-திருவநந்தாழ்வானைப்போலே ஸர்வவித கைங்கர்யங்களும் செய்யவேணுமென்று அபேக்ஷிக்கிறதென்று மூலார்த்தம்.

தனக்கென்ன-ஸ்வார்த்தமாக. ப்ராப்தியில்லாத - ஸம்பந்தமில்லாத. அத்யந்த பார தந்த்ர்யம்-அசித்வத்அத்யந்த பாரதந்த்ர்யம். இங்கே-சதுர்த்தியிலே. விரும்பி அபேக்ஷிக்கை-ப்ரேமபூர்வகமாக அபேக்ஷிக்கை. ஸம்பவியாது - அத்யந்த பாரதந்த்ர்யம் ஸ்வரூபவிருத்தமாகையாலே கூடாதென்றபடி.

நமஸ்ஸாலே-நமஸ்ஸிலே, தன்னோ டுறவில்லையென்றுவைத்து-தன்னோடு தனக்கு ஸம்பந்தமில்லையென்று அத்யந்தபாரதந்த்ர்யத்தைச் சொல்லியிருக்க, கைங்கர்யத்தை-இக்கைங்கர்யத்தை, ப்ரார்த்திக்கக்கூடுமோ வென்னில் - தான் விரும்பி அபேக்ஷிக்கை ஸம்பவிக்குமோ வென்னில் என்றுமூலார்த்தம்.

மூ.—"படியாய்க்கிடந்துன் பவளவாய்காண்பேனே" என்கிற படியே - கைங்கர்யப்ரார்த்தனை வந்தேறியன்று,ஸ்வரூபப்ரயுக்தம். ஆகையால், "வழுவிலாவடிமைசெய்யவேண்டு நாம்" என்கிற ப்ரார்த்தனையைக்காட்டுகிறது.

---

வ்யா.—அதுக்கு உத்தரமருளிச்செய்கிறார்(படியாய்க்கிடந்தென்று தொடங்கி.) அதாவது - "படியாய்க்கிடந்துன்பவளவாய் காண்பேனே" என்று, அத்யந்தபாரதந்த்ர்யத்தோடே கைங்கர்ய ப்ரார்த்தனையையும் சொல்லுகிறபடியே, கைங்கர்ய ப்ரார்த்தனை, ஸ்வபோக்த்ர்த்வரூபாஹங்கார ப்ரயுக்தமாய்க் கொண்டு வந்தேறியானதன்று, ஶேஷிக்கதிஶயத்தை விளைத்தல்லது தான் தரியாத படியான தன்ஸ்வரூபத்தைப்பற்றிவந்ததென்கை.

உக்தத்தை ஹேதுவாகக்கொண்டு, சதுர்த்தியின் கைங்கர்ய ப்ரார்த்தநாப்ரகாஶகத்வத்தை அருளிச்செய்கிறார் (ஆகையாலென்று தொடங்கி.) அதாவது-கைங்கர்யப்ரார்த்தனை வந்தேறி யன்றிக்கே, ஸ்வரூப ப்ரயுக்தமாகையாலே, "வழுவிலாவடிமை செய்யவேண்டுநாம்" என்று, அடிமையிலொன்றும் நழுவாதபடி ஸகலகைங்கர்யங்களும் செய்யவேண்டும் நாமென்கிற ப்ரார்த்தனையை இச்சதுர்த்தி ப்ரகாஶிப்பிக்கிறதென்கை.

இனி, இந்த கைங்கர்ய ப்ரார்த்தனை இடைவிடாமல் நடக்கைக்குறுப்பானப்ராப்யருசியுடையார்படியை அருளிச்செய்கிறார்.

---

அ.—தன்ஸ்வரூபத்தைப்பற்றி-சேஷத்வமாகிற தன்ஸ்வரூபத்தைப்பற்றி. சேஷிக்கதிசயத்தை விளைத்தல்லது என்கிறவிடத்தில், அதிசயமாவது-கிஂசித்காரம்.

"படியாய்க்கிடந்துன்பவளவாய்காண்பேனே" என்கிறபடியே-அத்யந்தபாரதந்த்ர்யத்தோடே கைங்கர்யப்ரார்த்தனையும் சொல்லுகிறபடியே, கைங்கர்யப்ரார்த்தனைவந்தேறியன்று- கைங்கர்யப்ரார்த்தனை ஸ்வபோக்த்ர்த்வ ரூபாஹங்கார ப்ரயுக்தமாய்க் கொண்டுவந்தேறியானதன்று, ஸ்வரூபப்ரயுக்தம்-சேஷிக்கதிசயத்தை விளைத்தாலல்லது தரியாதபடியான தன் ஸ்வரூபத்தைப்பற்றி வந்ததென்கை என்று மூலார்த்தம்.

ஆகையால்-கைங்கர்ய ப்ரார்த்தனை வந்தேறியன்றிக்கே ஸ்வரூப ப்ரயுக்தமாகையால், - வழுவிலா - அடிமையில் ஒன்றும் நழுவாதபடி, அடிமை-ஸகல கைங்கர்யங்களும், நாம்செய்யவேண்டும் என்கிற - நாம்செய்யவேணுமென்கிற, ப்ரார்த்தனையை—, காட்டுகிறது-ப்ரகாசிப்பிக்கிறது என்று மூலார்த்தம்.

இனி-கைங்கர்ய ப்ரார்த்தனையைச்சொன்னவநந்தரம். இடைவிடாமல்-மத்யே விச்சேதியாமல். உறுப்பான – யோக்யமான. படியை-ரீதியை.

மூ.—"கண்ணாரக்கண்டு கழிவதோர்காதலுற்றார்க்கு முண்டோகண்கள் துஞ்சுதல்" என்கிறபடியே காண்பதற்குமுன்பு உறக்கமில்லை; கண்டால் * ஸதாபஶ்யந்தியாகையாலே உறக்கமில்லை. "பழுதேபலபகலும்போயின" என்று இழந்தநாளுக்குக் கூப்பிடுகிறவனுக்கு உறங்கவிரகில்லை.

---

வ்யா.—(கண்ணாரக்கண்டு என்றுதொடங்கி.) அதாவது-"இமையோர்கள்குழாந் தொழுவதுஞ் சூழ்வதுஞ்செய் தொல்லைமாலைக் கண்ணாரக்கண்டு கழிவதோர் காதலுற்றார்க்கு முண்டோகண்கள் துஞ்சுதல்" என்று - நித்யஸூரிகளுடைய திரளானது நிரந்தரம் அநுபவம்பண்ணுகிற ஸர்வேஶ்வரனைக் கண்கள் நிறையும்படி கண்டொழியக் கழியாதபடியான காதலிலே நிலைநின்றவர்களுக்கும், கண்களுறங்குதலுண்டோ என்னுமாப்போலே, விஷயத்தைக்காண்பதற்குமுன்பு ஜ்ஞாநஸங்கோசரூபமான வுறக்கமில்லை, கண்டகாலத்தில் "𑌸𑌦𑌾 𑌪𑌶𑍍𑌯𑌨𑍍𑌤𑌿" "ஸதாபஶ்யந்தி" என்கிறபடியே ஸதாநுபவம்பண்ணுகையாலே உறக்கமில்லை என்கை. இன்னமும் ஒரு ஹேதுவாலே இவனுக்கு உறக்கமில்லாமையை அருளிச்செய்கிறார் (பழுதே என்று தொடங்கி.) அதாவது - "செங்கணடலோதவண்ணரடி - அரவணைமேற்கண்டு தொழுதேன் - பலபகலும் - பழுதே-போயினவென்று-அழுதேன்" என்று - விஷயத்தைக்கண்டநுபவித்தவாறே.

---

அ.—காதலிலே - அபேக்ஷயிலே. நிலைநின்றவர்களுக்கு-நிலையாய் நின்றவர்களுக்கு. உறங்குதல்-நித்ரா.

கண்ணாரக்கண்டுகழிவது-நித்யஸூரிகள் கண்கள்நிறையும்படி கண்டாலொழியக்கழியாதபடியான, காதலுற்றார்க்கும்-காதலிலே நின்றவர்களுக்கும், கண்கள் துஞ்சுதலுண்டோ என்கிறபடியே-கண்களுறங்குதலுண்டோ என்னுமாப்போலே, காண்பதற்கு முன்பு-இவ்விஷயத்தைக்காண்பதற்கு முன்பு, உறக்கமில்லை-ஜ்ஞாநஸங்கோசரூபமான உறக்கமில்லை; கண்டால்-கண்டகாலத்தில், ஸதாபஶ்யந்தி யாகையாலே - ஸதாநுபவம் பண்ணுகையாலே, உறக்கமில்லை—, என்று மூலார்த்தம்.

இன்னமும்-இதுக்குமேலேயும். [செங்கணித்யாதி] செங்கண்-பரத்வத்தாலும் வாத்ஸல்யத்தாலும் சிவந்தகண்களை யுடையவராய், அடலோதவண்ணரடி - ஆஶ்ரிதவிரோதிநிரஸநத்துக்குடலான பராபிபவந ஸாமர்த்த்யத்தையுடையராய், ஸமுத்ரம்போன்ற காம்பீர்யத்தையும் திருமேனிவர்ணத்தையு முடையரான எம்பெருமானுடைய திருவடிகளை, திருவநந்தாழ்வானாகிறபடுக்கைமேலேகண்டுஸேவித்தேன்; இப்படிஸேவிக்கைக்குடலான அநேகதிநங்களும் வ்யர்த்தமே போய்த்தே! என்று க்லேசித்தேனென்று பாசுரார்த்தம்.

மூ.—"அன்றுநான்பிறந்திலேன்பிறந்தபின் மறந்திலேன்" என்னாநின்றார்களிறே.

---

வ்யா.—இப்படி யநுபவிக்கைக்குடலான அநேககாலமெல்லாம் வ்யர்த்தமேபோய்விட்டதே!என்று இழந்தநாளை நினைத்துக்லேபி த்துக் கூப்பிடுகிறவனுக்கு மேலுள்ளநாளில்உறக்கம்வரவழியில்லை என்கை.இன்னமும் இவ்விஷயத்தில் அறிவுபிறந்தார்க்கு மறக்கப் போகாதென்னுமத்தை இசைவிக்கிறார்(அன்று நானென்றுதொட ங்கி.)அதாவது-அவன்என்னைப் பெறுகைக்காகத் திருப்பதிகளிலே, நிற்பதுஇருப்பதுகிடப்பதாகாநிற்க,அக்காலத்தில்நான்ஜ்ஞாநலாப ரூபமான ஜந்மத்தையுடையேனாகப்பெற்றிலேன்;அந்தஜந்ம முண் டானபின்பு, அவனை ஒருக்காலும் மறந்திலேன் என்றுசொல்லா நின்றார்களிறேயென்கை. ஆக-ப்ராப்யவைலக்ஷண்ய ஜ்ஞாநம்பிறந் தார்படி யிதுவாகையாலே, இந்தகைங்கர்ய ப்ரார்த்தனை யிடைவி டாமல் நடக்குமென்றுகருத்து.

---

அ.—இப்படி-கண்டு. பலபகலும்-அநுபவிக்கைக்குடலானஅநேக காலமெல்லாம்,பழுதேபோயினவென்று-வ்யர்த்தமேபோய்விட்ட தென்று, இழந்தநாளுக்குக் கூப்பிடுகிறவனுக்கு-இழந்தநாளை நினை த்துக் கூப்பிடுகிறவனுக்கு, உறங்கவிரகில்லை - மேலுள்ளநாளில் உறக்கம்வர வழியில்லையென்று மூலார்த்தம்.

இன்னமும்-மேலேயும். இவ்விஷயத்தில்அறிவுபிறந்தார்க்கு-ப்ராப்யமான பகவத்விஷயத்தில் வைலக்ஷண்ய ஜ்ஞாநம்பிறந்த வர்களுக்கு. இசைவிக்கிறார் - அறிவிக்கிறார். பெறுகைக்காக-லபிக் கைக்காக. அக்காலத்தில் - நிற்பது இருப்பது கிடப்பதுசெய் கிறகாலத்திலே. அந்தஜந்மம் - ஜ்ஞாநலாபரூபமான ஜந்மம். அவனை - ப்ராப்யனான எம்பெருமானை. ஆக - கீழ்ச்சொன்ன ஹே துக்க ளெல்லாவற்றாலும். கீழ்ச்சொன்ன ஹேதுக்களாவன;- சதுர்த்தியினாலே கைங்கர்யப்ரார்த்தனையைச் சொல்லுகையும், கைங்கர்யந்தானில்லாதபோது சேஷத்வமில்லையாம்படி சேஷத் வோபஷ்டம்பகமாயிருக்கையும், இஶ்ஶேஷத்வந்தான் ஆத்மா வுக்கு அஸாதாரண நிரூபகமாயிருக்கையும், ஆத்மாதான்நித்யனா யிருக்கையும், ப்ராப்யவைலக்ஷண்யஜ்ஞாநமடியாக ப்ராப்யருசி யுடையராயிருக்கையும். ஆக-ப்ரமாணப்ரமேயப்ரமாதாக்களை யரு ளிச்செய்தாராய்த்து.

அன்று - அவன் இவனைப்பெறுகைக்காகத் திருப்பதிகளிலே நிற்பது இருப்பது கிடப்பதாகாநிற்கிறகாலத்திலே, நான் பிறந்தி லேன்-நான்ஜ்ஞாநலாபரூபமான ஜந்மத்தைஉடையேனாகப் பெற் றிலேன்; பிறந்தபின்-அந்தஜந்ம முண்டானபின்பு, மறந்திலேன் என்னாநின்றார்களிறே - அவனை ஒருக்காலும் மறந்திலேன் என்று சொல்லாநின்றார்களிறே என்று மூலார்த்தம்.

மூ.— இவ்வடிமைதான் "ஒழிவில்காலமெல்லாமுடனாய் மன்னி" என்கிறபடியே, ஸர்வதேஶஸர்வகால ஸர்வாவஸ்த்தைகளிலும் அநுவர்த்திக்கும்.

---

வ்யா.—இனி, இந்தகைங்கர்யத்துக்கு தேஶகாலாதிநியமமில்லாமையை அருளிச்செய்கிறார் (இவ்வடிமைதான் என்றுதொடங்கி.) அதாவது - இவ்வாத்மாவினுடைய ஸ்வரூபாநுரூப புருஷார்த்தமான இந்தகைங்கர்யந்தான், "ஒழிவில்காலமெல்லா முடனாய் மன்னி" என்று - ஒழிவில்லாதகாலமெல்லாம் - ஸர்வதேஶத்திலும் உடனாய் ஸர்வாவஸ்த்தையிலும் பிரியாது நின்று என்கிறபடியே, ஸர்வதேஶத்திலும், ஸர்வகாலத்திலும், ஸர்வாவஸ்த்தையிலும் நடந்துசெல்லுமென்கை.

பார்யைக்கு மங்களஸூத்ரதாரணம், பர்த்தாவுக்கு அநந்யார்ஹை என்று காட்டுமாப்போலே, திருமந்த்ரதாரணம், சேதநர்க்கு பகவதநந்யார்ஹத்வ ப்ரகாஶகமென்னுமிடம்தோற்ற, இத்தை யொருமங்களஸூத்ரமாக நிருபித் தருளிச்செய்கிறார்.

---

அ.—இனி-கைங்கர்யப்ரார்த்தனையை அருளிச்செய்தவநந்தரம். இந்த கைங்கர்யத்துக்கு-நித்யமான ஆத்மஸ்வரூபத்துக்கு நிருபகமான சேஷத்வத்துக்கு உபஷ்டம்பகமாய் அதஏவ நித்யப்ரார்த்தநாவிஷயமான கைங்கர்யத்துக்கு. ஸ்வரூபாநுரூபமானஎன்றது-சேஷத்வபாரதந்த்ர்யங்களாகிற ஸ்வரூபாநுரூபம் அதஏவ ஸ்வப்ரயோஜநத்வஸ்வகர்த்ர்கத்வ புத்த்யகோசரமாய் பரப்ரயோஜநத்வைகவேஷமாய் • பரநியோஜ்யமென்றபடி. புருஷார்த்தமான - புருஷார்த்தப்ரார்த்தநாவிஷயமான. உடனாய் மன்னிஎன்கையாலே-ஸர்வதேசத்திலும் ஸர்வாவஸ்தையிலும் என்கிற வர்த்தத்தைக்காட்டுமோவென்னில்; உடனாகையாவது - கூடியிருக்கையாகையாலும், மன்னுதலாவது - ஒருவஸ்து வென்னலாம்படியிருக்கையாகையாலும் அவனோடே ஏகவஸ்துவென்னலாம்படி கலந்திருக்கும் வஸ்துவுக்கு அவனிருக்கும்தேசத்திலும் அவனுக்குண்டா மவஸ்தைகள்தோறும் அவனோடு கூடியிருக்கைநியதமாகையாலும் "உடனாய்மன்னி" என்றால் ஸர்வதேச ஸர்வாவஸ்தைகளையும் காட்டும்.

இவ்வடிமைதான் - இவ்வாத்மாவினுடைய ஸ்வரூபாநுரூப புருஷார்த்தமான இந்தகைங்கர்யந்தான், ஒழிவில்காலமெல்லாம்-ஒழிவில்லாதகாலமெல்லாம், உடனாய் - ஸர்வதேசத்திலும் உடன்பட்டவனாய், மன்னி - ஸர்வாவஸ்தையிலும் பிரியாதபடி நின்று, என்கிறபடியே—, ஸர்வதேசஸர்வகாலஸர்வாவஸ்தைகளிலும்—, அநுவர்த்திக்கும் - நடந்துசெல்லும் என்று மூலார்த்தம். பகவதநந்யார்ஹத்வப்ரகாசகமென்னுமிடம்தோற்ற - உகாரத்திற்சொன்ன பகவதநந்யார்ஹத்வப்ரகாசகம்என்னுமர்த்தம்தோற்ற.

மூ.—எட்டிழையாய் மூன்றுசரடா யிருப்பதொரு மங்கள ஸூத்ரம்போலே. திருமந்த்ரம். இத்தால்-ஈஶ்வரன் ஆத்மாக்களுக்குப் பதியாய்நின்றுரக்ஷிக்கும் என்கிறது. ஆக, திருமந்த்ரத்தால், எம்பெருமானுக்கே யுரியேனான நான்.

---

வ்யா.—(எட்டிழையாயென்றுதொடங்கி.) அதாவது-பதினறிழையாய், இரண்டுசரடாயிருக்கும்லௌகிகமங்களஸூத்ரம்போலன்றிக்கே எட்டிழையாய் மூன்றுசரடாயிருப்பதொரு மங்கள ஸூத்ரம்போலே, எட்டுத்திருவக்ஷரமாய், மூன்றுபதமாயிருக்கிற இத்திருமந்த்ரமென்கை.

இப்படி நிரூபித்துச்சொன்ன இத்தால் எவ்வர்த்தம் சொல்லுகிறதென்ன அருளிச்செய்கிறார் (இத்தால என்றுதொடங்கி.) அதாவது,-இத்தை மங்கள ஸூத்ரமாகச்சொன்ன இத்தால் ஈஶ்வரன் இத்தோடந்வயமுடைய ஆத்மாக்களுக்குப் பதியாய்நின்றுகொண்டுரக்ஷிக்குமென்றுசொல்லுகிறதென்கை. இனிஇம்மந்த்ரத்தால் ப்ரதிபாதித்த அர்த்தத்தை ஸங்க்ரஹித்துச்சொல்லி இத்தை நிகமித்தருளுகிறார் (ஆகத்திருமந்த்ரத்தால் என்று தொடங்கி)

---

அ.—லௌகிகமங்களஸூத்ரம் - லோகத்திலுள்ளாராதரிக்கும் மங்களஸூத்ரம்.

எட்டிழையாய் மூன்றுசரடாயிருக்கும் மங்களஸூத்ரம் மதாந்தரஸ்தர்பக்கலிலேகாணலாம்;நம்மாசார்யர்கள், திருமந்த்ரம் எட்டுத்திருவக்ஷரமாய் த்விதீயமந்த்ரமாயிருக்கைக்கு ஸ்மாரகமாக வாய்த்து ஒன்பதுவடமான மங்களஸூத்ரத்தை தரிப்பது.

திருமந்த்ரத்தை மங்களஸூத்ரமாக நிரூபித்து அதிலே, த்வயமாகிற அச்சுத்தாலியையும் மூளைத்தாலியையும், வயிரமணிஸ்தாநத்திலே முப்பத்திரண்டெழுத்தான சரம்ச்லோகத்தையுஞ் சேர்த்து, ஆத்மாக்களுக்கு அநந்யார்ஹத்வப்ரகாசகமாகக் கட்டினான் என்றருளிச்செய்வர்.

எட்டிழையாய் மூன்றுசரடாயிருப்பதொரு மங்களஸூத்ரம் போலே - எட்டுத்திருவக்ஷரமாய் மூனறுபதமாயிருக்கும் இத்திருமந்த்ரமென்று மூலார்த்தம்.

இப்படி - மங்களஸூத்ரமாக. இத்தோடு - இந்த திருமந்த்ரத்தோடே. அந்வயமுடைய - ஆசார்யோபதேசத்வாரா ஸம்பந்தமுடைய. பதியாய் நின்றுகொண்டு ரக்ஷிக்கும் - தான்பெருகநின்றுகொண்டு ரக்ஷிக்கும்.

இத்தால் - இத்தை மங்களஸூத்ரமாகச்சொன்னவித்தால், ஈச்வரன் - ஸர்வேச்வரன், ஆத்மாக்களுக்கு – இத்தோடு அந்வயமுடைய ஆத்மாக்களுக்கு, பதியாய் நின்று ரக்ஷிக்குமென்கிறது-பதியாய்க்கொண்டு ரக்ஷிக்குமென்று சொல்லுகிறது என்று மூலார்த்தம்.

இனி - திருமந்த்ரத்துக்கு ப்ரதிபதம் விஸ்தரேண அர்த்தமருளிச்செய்த வநந்தரம். ப்ரதிபாதிதமான - விஸ்தரேண ப்ரதிபாதிதமான. ஸங்க்ரஹித்து - ஸம்க்ஷேபித்து. இத்தை – திருமந்த்ரார்த்தத்தை. நிகமித்தருளுகிறார் - முடிக்கிறார்.

மூ.—எனக்குரியனன்றிக்கே யொழியவேணும். ஸர்வஶேஷியான நாராயணனுக்கே எல்லாவடிமைகளும் செய்யப்பெறுவேனாக வேணுமென்றதாய்த்து.

பிள்ளைலோகாசார்யர் திருவடிகளேசரணம்.

---

வ்யா.—ஆகவென்றது-கீழ் பரக்கஅருளிச்செய்த எல்லாவற்றையும் தொகுத்தருளிச் செய்கிருரென்னு மிடந்தோற்ற.

(எம்பெருமானுக்கே யுரியேனான நான்) இதில் எம்பெருமானுக்கே என்று-சதுர்த்யந்தமான ப்ரதமாக்ஷரத்தின் அர்த்ததத்தையும், அவதாரணத்தாலே - மத்யமாக்ஷரத்தின் அர்த்தத்தையும், உரியேனான நான் என்று - த்ருதீயாக்ஷரத்தின் அர்த்தத்தையும் சொல்லுகையாலே, ப்ரதமபதார்த்தத்தை ஸங்க்ரஹித்தபடி.

(எனக்குரியனன்றிக்கே யொழியவேணும்) இதில், எனக்குரியன் என்று - ஷஷ்ட்ய்யந்தமான மகாரார்த்தத்தையும், அன்றிக்கேயொழிய எனகையாலே - நகாரார்த்தத்தையும், வேணும் என்கையாலே - இவ்வர்த்தம் சேதநனுக்கு ப்ரார்த்தநீயமென்னு மத்தையும் ப்ரதிபாதிக்கையாலே, மத்யமபதார்த்தத்தை ஸங்க்ரஹித்தபடி. ஸர்வஶேஷியான நாராயணனுக்கே எல்லாஅடிமைகளும் செய்யப்பெறுவேனாகவேணும்) இதில், ஸர்வஶேஷியான நாராயணனுக்கே என்று - கைங்கர்யப்ரதிஸம்பந்தியையும், கைங்கர்ய ப்ரார்த்தநா ப்ரகாஶிகையான சதுர்த்தியையும், (எல்லாஅடிமைகளும் செய்யப்பெறுவேனாகவேணும்)என்று கைங்கர்ய ப்ரார்த்தநா ப்ரகாரத்தையும் சொல்லுகையாலே த்ருதீயபதார்த்தத்தை ஸங்க்ரஹித்தபடி. என்றதாய்த்து என்றது-என்று சொல்லிற்றாயிற்றென்கை.

விஸ்தரேண அருளிச்செய்தத்தை மீளவும் இப்படி ஸங்க்ரஹித்தருளிச் செய்தது-இத்திருமந்த்ரார்த்தத்தை எல்லாருமறிந்தநுஸந்திக்கைக்காக.

---

அ.—ஆக - திருமந்த்ரத்தா லித்யாதிவாக்யத்ரயத்தாலே. ப்ரணவ நமோ நாராயணபதங்களை ஸங்க்ரஹித்தருளிச்செய்தபடியை விசதமாக வருளிச்செய்யாநின்றுகொண்டு ப்ரதமப்ரகரணார்த்தத்தை நிகமித்தருளுகிருர்.பரக்க—விஸ்தரமாக.தொகுத்து-சேர்த்து. இதில்-கீழ்ச்சொன்ன வாக்யத்தில். எம்பெருமானுக்கு-லுப்தசதுர்த்தியாலே சொல்லப்பட்ட சேஷத்வப்ரதிஸம்பந்தியான சேஷித்வமுடையவனுக்கு.

மீளவும் - புநः; மறுபடியுமென்றபடி. எல்லாரும் - பஹுஜ்ஞரும் அல்பஜ்ஞரும். பெண்களும் பேதைகளுமென்றபடியாகவுமாம். ஆகையால் - இது தன்னில் சொல்லுகிற வர்த்தமென்று தொடங்கி, இவ்வளவும் வர-ப்ரபந்தத்தாலே பரக்கவருளிச்செய்த திருமந்த்ரார்த்தத்தை ஸங்க்ரஹித்தருளிச்செய்து, எல்லாரும் மந்த்ரார்த்தத்தை எப்போது மநுஸந்திக்கவேணுமென்னும் திருவுள்ளத்தாலாகையால் என்றபடி. எல்லார்க்கும் - ஸர்வவர்ணங்களிலுமுள்ள ஸ்த்ரீகளுக்கும் புருஷர்களுக்கும்,

வ்யா.—ஆகையாலே எல்லார்க்கும் இவ்வர்த்தம்எப்போதும் அநுஸந்தேயம்.

பெரிய ஜீயர்திருவடிகளேஶரணம்.

---

அ.—எப்போதும்-அத்யயநாநத்யயநகாலமின்றியிலே நித்யங்களைப்போலே எல்லாக்காலத்திலுமென்றபடி. எப்போதும் என்றவநந்தரம் (இம்மந்த்ரார்த்தம்) என்று கூட்டிக்கொள்ளவேணும். அநுஸந்தேயம்-அநுஸந்திக்கவேணும்.

இப்படி யருளிச்செய்தத்தால்-நவவித ஸம்பந்தமும் ஸூசிதமாய்த்து; - அகாரத்தாலே-பிதாபுத்ரஸம்பந்தமும், "அவரக்ஷணே" என்கிறதாதுவாலே-ரக்ஷ்யரக்ஷக ஸம்பந்தமும், சதுர்த்தியாலே-சேஷசேஷிபாவ ஸம்பந்தமும், உகாரத்தாலே-பர்த்ர்பார்யா ஸம்பந்தமும், மகாரத்தாலே - ஜ்ஞாத்ர்ஜ்ஞேய ஸம்பந்தமும், நமஸ்ஸாலே - ஸ்வஸ்வாமிபாவ ஸம்பந்தமும், நாராயணபதத்தாலே-சரீரசரீரிஸம்பந்தமும், அயநபதத்தாலே - ஆதார ஆதேய ஸம்பந்தமும், ஆயபதத்தாலே - போக்த்ர்போக்ய ஸம்பந்தமும், சொல்லித் தலைக்கட்டுகிறது. இதில் அகாரம் ஸகலசப்தத்துக்கும் காரணமாய் ஸர்வரக்ஷகனான எம்பெருமானைச் சொல்லுகிறது என்றத்தாலே - பிதாபுத்ரஸம்பந்தமும், ரக்ஷ்யரக்ஷக பாவஸம்பந்தமும், சொல்லிற்றாய்த்து = இத்தால். ஈச்வரனுக்கு சேஷமென்றத்தாலே - சேஷத்வ ப்ரதிஸம்பந்தியான சேஷியும் அர்த்தாத் உக்தமாகையாலே சேஷசேஷிபாவ ஸம்பந்தமும்சொல்லிற்றாயிற்று; இத்தால் பிறர்க்கு சேஷமன்றென்கிறது என்கிறத்தாலே - பர்த்ர்பார்யா ஸம்பந்தம் சொல்லிற்றாய்த்து; இத்தால் ஆத்மாஜ்ஞாதா வென்கையாலே - ஜ்ஞாத்ர்ஜ்ஞேய ஸம்பந்தம் சொல்லிற்றாய்த்து; = இத்தால் தனக்குரிய னின்றென்கிறது என்றத்தாலே-ஸ்வஸ்வாமி பாவஸம்பந்தம் சொல்லிற்றாய்த்து;.= நாரங்களுக்கு அயநமென்றபடி என்கையாலே - ஆதாராதேய ஸம்பந்தம் சொல்லிற்றாய்த்து;=இவைதன்னை ஆச்ரயமாகவுடையனென்னவுமாம் என்றத்தாலே-சரீராத்மபாவஸம்பந்தம் சொல்லிற்றாய்த்து;=ஆயவென்கிற வித்தால் என்றத்தாலே – போக்த்ர் போக்யஸம்பந்தம் சொல்லிற்றாய்த்து என்று கண்டுகொள்வது.

ஆகதிருமந்த்ரத்தால்-கீழ்ச்சொன்னவெல்லாவற்றாலுமாக, எம்பெருமானுக்கே உரியேனான நான்-எம்பெருமானுக்கே சேஷமான நான், எனக்குரியனன்றிக்கே யொழியவேணும்-எனக்கு சேஷமன்றென்று ஒழியவேணும்; ஸர்வசேஷியான நாராயணனுக்கே-கைங்கர்யப்ரதி ஸம்பந்தியான நாராயணனுக்கே, எல்லாவடிமைகளும் - ஸர்வவிதகைங்கர்யங்களும், செய்யப்பெறுவேனாகவேணும்-செய்யக்கடவேனாகவேணும், என்றதாய்த்து-என்று சொல்லிற்றாய்த்து என்று மூலார்த்தம்

---

சுத்தஸத்வம்தொட்டாசார்யர்திருவடிகளேசரணம்.

முமுக்ஷுப்படி - வ்யாக்யாநம் திருமந்த்ரப்ரகரணம்.

முற்றிற்று.

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

முமுக்ஷுப்படி — வ்யாக்யாநம்

# த்வயப்ரகரணம்.

அவதாரிகை.—ப்ரதமரஹஸ்யமான திருமந்த்ரத்தினுடைய அர்த்தத்தை அருளிச்செய்த அநந்தரம், அதில் மத்யமபதத்தாலும் த்ரிதீய பதத்தாலும் ப்ரதிபாதிக்கப்பட்ட உபாயோபேயங்களை விஶதமாக ப்ரதிபாதியாநின்றுள்ள த்வயத்தினுடைய அர்த்தத்தை அருளிச்செய்கிறார். முன்பருளிச்செய்த மூன்று ப்ரபந்தத்திலும், திருமந்த்ராநந்தரம் சரமஶ்லோகத்தை அருளிசசெய்து, பின்பு த்வயத்தையருளிச்செய்தவர் இப்போது த்வயத்தை முந்தற அருளிச்செய்வானென்னென்னில், இரண்டு ப்ரகாரமுமருளிச்செய்யலா யிருக்கையாலே. ஆச்சான்பிள்ளை, ஜீயர் முதலானாரும், இப் ப்ரகாரமிறே அருளிச்செய்தது. இவ்விரண்டு ப்ரகாரந்தனக்கும் கருத்தென்னென்னில்; சரமஶ்லோகம் முன்னாக த்வயத்தைச் சொல்லுகிறது, வித்யநுஷ்ட்டாந ரூபங்களாயிருக்கையாலே, விதிமுன்னாக அநுஷ்ட்டாநத்தைச்சொல்லுகை.

---

## த்வயப்ரகரணம்.

அதில்-திருமந்த்ரத்தில். மத்யமபதத்தாலும் த்ரிதீயபதத்தாலும்-நமஃபதத்தாலும் நாராயணபதத்தாலும். ப்ரதிபாதிக்கப்பட்ட-அர்த்தபலத்தாலும் லக்ஷணையாலும் ப்ரதிபாதிக்கப்பட்ட. விசதமாக - ஸ்ரீமத்தாகவும் சாப்தமாகவும். மூன்று ப்ரபந்தத்திலும் - ஸ்ரீயஃபதிப்படியிலும் பரந்தபடியிலும், யாத்ர்ச்சிகப்படியிலும். திருமந்த்ராநந்தரம் - திருமந்த்ரார்த்தத்தை யருளிச்செய்தவநந்தரம். சரமச்லோகத்தை-சரமச்லோகார்த்தத்தை. த்வயத்தை-த்வயார்த்தத்தை. முந்தற-சரமச்லோகார்த்த மருளிச்செய்வதற்கு முன்பு. இரண்டுப்ரகாரமும்-சரமச்லோகார்த்தமருளிச்செய்தவநந்தரம் த்வயார்த்தமருளிச்செய்கையும், த்வயார்த்தம் முன்னாகசரமச்லோகார்த்தமருளிச்செய்கையும். ஜீயர்-வாதிகேஸரி அழகிய மணவாளச் சீயர். இப்ரகாரமிறே-இவ்விரண்டுப்ரகாரமிறே.

சரமச்லோகம்முன்னாக-சரமச்லோகாநந்தரம். வித்யநுஷ்டாந ரூபங்களா யிருக்கையாலே - "மாமேகம்ஶரணம்வ்ரஜ" என்று-விதிரூபமாயும், "சரணௌஶரணம்ப்ரபத்யே" என்று அநுஷ்டாந ரூபமாயு மிருக்கையாலே. விதிமுன்னாக-விதிபூர்வகமாக.

அ.—ப்ராப்தமாகையாலும், திருமந்த்ரம்ப்ராப்ய பரமாய், சரமஶ்லோகம் ப்ராபகபரமாய், த்வயம் உபயத்தி னுடையவும் அநுஷ்ட்டாந ப்ரதிபாதகமாயிருக்கையாலும். த்வயம்முன்னாக சரமஶ்லோகத்தைச் சொல்லுகிறது; — திருமந்த்ரத்தில் மத்யமதர்தீய பதங்களுக்கு வாக்யத்வயம் விவரணமாய், அதுதனக்கு சரமஶ்லோகத்தில் அர்த்தத்வயம் விவரணமா யிருக்குமாகாரத்தாலே. ஆனபின்பு இரண்டு ப்ரகாரமும் அநுஸந்திக்கத் தட்டில்லை. அதிலொரு ப்ரகாரத்தை மூன்று ப்ரபந்தத்திலும் அருளிச்செய்தவராகையாலே, மற்றை ப்ரகாரத்தையும் அருளிச்செய்யவேணுமென்று திருவுள்ளம்பற்றி திருமந்த் ரார்த்தம் அருளிச்செய்தவநந்தரம், த்வயார்த்தத்தை யருளிச்செய்கிறார்.

அதில் ப்ரதமத்திலே வைஷ்ணவனாயிருப்பானொருவனுக்கு ஸ்வாதிகாரார்த்தமாக அவஶ்யாபேக்ஷிதமாயுள்ளவற்றை,

---

அ.—ப்ராப்தமாகையாலும் — க்ரமமாகையாலும். உபயத்தினுடையவும் - ப்ராபகத்தினுடையவும் ப்ராப்யத்தினுடையவும். உபாயோபேயங்களிரண்டினுடையவு மென்னவுமாம். அநுஷ்டாந ப்ரதிபாதகமாய் - உபாயஸ்வீகாரத்துக்கும், ப்ராப்யாநுபவரூபகைங்கர்யத்துக்கும் ப்ரதிபாதகமாய். இருக்கையாலும் - சரமச்லோகம் முன்னாக த்வயத்தை யருளிச்செய்கிறது என்றதிேனோடே அந்வயம்.

மத்யமதர்தீயபதங்களுக்கு நமோநாராயண பதங்களுக்கு. வாக்யத்வயம்-வாக்யத்வயாத்மகமானத்வயம். அதுதனக்கு-த்வயத்துக்கு. அர்த்தத்வயம்-பூர்வோத்தரார்த்தங்கள். இருக்கு மாகாரத்தாலே - இருக்கையாலே. ஆனபின்பு-இரண்டுப்ரகாரமும் கூடினபின்பு. தட்டில்லை-ஔசித்யமான பாதையில்லை.

அதில் - இரண்டு ப்ரகாரத்திலும். ஒரு ப்ரகாரத்தை-சரமச்லோகம் முன்னாக த்வயார்த்தத்தை யருளிச்செய்கையாகிற ப்ரகாரத்தை. மற்றைப்ரகாரத்தையும்-த்வயம் முன்னாக சரமச்லோகமருளிச்செய்கிற ப்ரகாரத்தையும்.

அதில்-த்வயார்த்தமருளிச்செய்கிறவளவிலே. வைஷ்ணவனாயிருப்பானொருவனுக்கு-திருமந்த்ரத்தாலே ஸூசிக்ஷிதனாய் வைஷ்ணவனாயிருப்பானொருவனுக்கு. ஸ்வாதிகாரார்த்தமாக-வைஷ்ணவத்வஸித்த்யர்த்தமாக. அவச்யாபேக்ஷிதமா யுள்ளவற்றை - வைஷ்ணவத்வவ்யாப்யங்களாய் அவைஷ்ணவர்பக்கல் கிடையாததுகளாய் வைஷ்ணசிஹ்நங்களா யிருக்கையாலே அவச்யாபேக்ஷிதங்களாயுள்ளவற்றை.

மூ.—புறம்புண்டான பற்றுக்களையடைய வாஸனையோடே விடுகையும், எம்பெருமானையே தஞ்சமென்று பற்றுகையும்,

---

வ்யா.—ஸங்க்ரஹமாக அருளிச்செய்கிறார் (புறம்புண்டானபற்றுக்களையடையவாஸனையோடேவிடுகையும் என்றுதொடங்கி ஒரு சூர்ணையாலே.) புறம்புண்டான பற்றுக்களையடைய வாஸனையோடே விடுகையாவது - (పితరం మాతరం దారాన్) (பிதரம் மாதரம் தாராந்) இத்யாதிப்படியே, பாஹ்யவிஷய ஸங்கங்களையடைய மறுவலிடாதபடி ஸவாஸநமாகவிடுகை. எம்பெருமானையே தஞ்சமென்று பற்றுகையாவது - வேறொன்றுதஞ்சமென்கிற நினைவு கலசாதபடி நிருபாதிகரக்ஷகனான ஸர்வேச்வரனையே தஞ்சமாக ஸ்வீகரிக்கை. இவ்விரண்டு வாக்யத்தாலும், சரமச்லோகத்தில் பூர்வார்த்தத்தின் அர்த்தத்தைச் சொல்லுகிறதாகவுமாம்; எங்ஙனேயென்னில்;- புறம்புண்டான பற்றுக்களையடைய என்று - (సర్వధర్మాన్) (ஸர்வதர்மாந்) என்கிறபதத்தின் அர்த்தத்தையும், (வாஸனையோடேவிடுகையும்) என்று - (పరిత్యజ్య) (பரித்யஜ்ய) என்கிறபதத்தின் அர்த்தத்தையும், (எம்பெருமானை) என்று - (மாம்) என்கிறபதத்தின் அர்த்தத்தையும், (ஏ) என்று ஏவகாரத்தாலே-(ஏக) பதத்தில் அர்த்தத்தையும், (தஞ்சம்) என்று - (சரண) பதத்தினர்த்தத்தையும், (பற்றுகையும்) என்று-(వ్రజ) (வ்ரஜ) என்கிறபதத்தில் அர்த்தத்தையும் அடைவே சொல்லுகையாலே.

---

அ.—புறம்புண்டான பற்றுக்களை-இதரவிஷயங்களிலுண்டான ப்ராவண்யரூபஸம்பந்தங்களை. அடைய-எல்லாவற்றையும். வாஸனையாவது-புநஃப்ரவ்ர்த்திஹேதுவான ஸம்ஸ்காரவிசேஷம். இத்யாதிப்படியே-இத்யாதியில் சொல்லுகிறபடியே. இவ்விடத்தில், த்வயத்துக்கு அர்த்தமருளிச்செய்கிறபிள்ளைலோகாசார்யர், ப்ரதமத்திலே புறம்புண்டான பற்றுக்களை என்றருளிச்செய்ததும், வ்யாக்யாதாவான பெரியஜீயர், "புறம்புண்டான பற்றுக்களை" என்று தொடங்கி வாக்யங்களுக்கு அர்த்தமருளிச்செய்கிறபோது உதாஹரணமாக, "పితరం మాతరం దారాన్" "பிதரம் மாதரம் தாராந்" என்கிற வசநத்தை யருளிச்செய்ததும், உடையவர் சரணாகதிகத்யத்திலே, "பிதரம் மாதரம் தாராந்" என்கிறவசநத்தை ப்ரதமத்திலே உதாஹரித்தருளுகையாலே; இதுவும் சரணாகதி ப்ரகரணமாகையாலே, அதினர்த்தத்தை "புறம்புண்டான பற்றுக்களை என்கிற சூர்ணையாலே யருளிச்செய்தாரென்று தோன்றுகைக்காக.

மறுவலிடாதபடி—புநரந்வயம்வாராதபடி. ஸவாஸநமாக-ப்ராமாதிகவிஷயாந்தர ப்ரவ்ர்த்தி ஹேதுவான வாஸனையோடேகூட. வேறொன்று தஞ்சமென்கிற நினைவு - ஈச்வரவ்யதிரிக்தஉபாயங்களிலே உபாய ப்ரதிபத்தி. கலசாதபடி-கலவாதபடி. தஞ்சமாக ஸ்வீகரிக்கை-உபாயமாக ஸ்வீகரிக்கை. அடைவே - க்ரமமாக.

மூ.—பேறுதப்பாதென்று துணிந்திருக்கையும், பேற்றுக்குத்வரிக்கையும்,இருக்கும் நாள் உகந்தருளின நிலங்களிலே ப்ரவணனாய் குணாநுபவகைங்கர்யங்களே போதுபோக்காகையும்,

---

வ்யா.—பேறுதப்பாதென்று துணிந்திருக்கையாவது-உபாயபல்குத்வமும், உத்தேஶ்யதுர்லபத்வமும், ஸ்வக்ர்ததோஷபூயஸ்த்வமுமடியாகவரும் ஶங்காத்ரயமுமின்றிக்கே, பலம்தப்பாமல் ஸித்திக்குமென்று விஶ்வஸித்திருக்கை. பேற்றுக்குத்வரிக்கையாவது - இப்படி விஶ்வஸித்துப் பேறுஸித்தித்தபோதுகாண்கிறோமென்றிருக்கை யன்றிக்கே, “மாகவைகுந்தங் காண்பதற்கென்மந மேகமெண்ணும்,” “தாவிவையங்கொண்ட தடந்தாமரைகட்கே கூவிக்கொள்ளுங்காலமின்னங் குறுகாதோ” என்கிறபடியே, க்ரமப்ராப்தி பற்றாமற் பதறுகை. ஆக, இவை யிரண்டாலும் - உபாயோபேயாதிகாராபேக்ஷிதங்களான மஹாவிஶ்வாஸத்தையும், ப்ராப்யத்வரையையும் சொல்லுகிறது.

இருக்கும்நாள்உகந்தருளினநிலங்களிலேப்ரவணனாய்குணாநுபவ கைங்கர்யங்களே போதுபோக்காகையாவது - பரமபதத்திலே போய் பகவதநுபவகைங்கர்யங்களைப் பண்ணுகையாகிறபேற்றில் த்வரைநடவாநிற்கச் செய்தேயும், இஶ்ஶரீரத்தோடே யிருக்கும் நாள் “ தானுகந்தவூர் ” என்கிறபடியே - ஸர்வேஶ்வரன்உகந்து வர்த்திக்கிற திவ்யதேஶங்களிலே, * கண்டியூரரங்கம்மெய்யங்கச்சிபேர்மல்லையென்று மண்டுகையாகிற ப்ராவண்யத்தையுடையனாய், அவ்வோ திவ்யதேஶங்களிலே நிற்கிறவனுடையக்ல்யாண குணாநுபவமும் , அதடியாகக்கரணத்ரயத்தாலும்,

---

அ.—உபாயபல்குத்வமாவது-ஒருக்கால் அநுஷ்டிக்குமதாயிருக்கை. உத்தேச்யதுர்லபத்வமாவது- ப்ரஹ்மாதிகளுக்கும் துர்லபமாயிருக்கை. சங்காத்ரயமுமின்றிக்கே - பூர்வோக்த சங்காத்ரயமுமின்றிக்கே; - ஸ்ரீயஃபதித்வத்தை யநுஸந்திக்க ஸ்வகததோஷபூயஸ்த்வத்தைகண்டு அஞ்சவேண்டா; நிருபாதிகஸர்வஸ்வாமித்வத்தையநுஸந்திக்க உத்தேச்ய துர்லபத்வங்கண்டுஅஞ்சவேண்டா; நாராயணத்வத்தைக்கண்டு உபாயபல்குத்வத்துக்கு அஞ்சவேண்டா. நாராயணத்வத்தைக்கண்டு என்றது - அயநபதத்தில் கர்மணிவ்யுத்பத்திஸித்தமான அர்த்தத்தைக்கண்டென்றபடி.

இவையிரண்டாலும்-பேறுதப்பாதென்று துணிந்திருக்கையும் பேற்றுக்குத்வரிக்கையுமாகிற இரண்டுவாக்யத்தாலும். உபாயாதிகார்யபேக்ஷிதம்-மஹாவிச்வாஸம்;உபேயாதிகார்யபேக்ஷிதம்-ப்ராப்யத்வரை. அதிகாராபேக்ஷிதங்களான-அதிகாரிகளாலே விரும்பப்பட்ட.தானுகந்த - தானாயுகந்த. அவ்வோ - அந்தந்த. அதடியாக-கல்யாணகுணாநுபவமடியாக. கரணத்ரயத்தாலும்-மநோவாக்காயரூபமானகரணத்ரயத்தாலும்.

மூ.—இப்படி யிருக்கும் ஸ்ரீவைஷ்ணவர்களேற்றமறிந்து உகந்திருக்கையும், திருமந்த்ரத்திலும் த்வயத்திலும் நியதனாகையும்,

---

வ்யா.—அவன்விஷயத்திற் பண்ணுங் கைங்கர்யமுமே காலக்ஷேபவிஷயமாம்படியிருக்கை.

இப்படி யிருக்கும் ஸ்ரீவைஷ்ணவர்க ளேற்றமறிந்து உகந்திருக்கையாவது-கீழ்ச்சொன்ன இவ்வாகாரங்க ளெல்லா முடையராயிருக்கும் ஸ்ரீவைஷ்ணவர்களைக் கண்டால், இந்தளத்திலே தாமரைபூத்தாப்போலே இந்தவிபூதியிலே இங்ஙனேயிருப்பார் சிலருண்டாவதே! என்று அவர்கள்வைபவத்தை யறிந்து அவர்களளவில் ப்ரீதியுக்தனாயிருக்கை. கீழ்ச்சொன்னவையெல்லாமுண்டானாலும்உண்டாக அரிதாயிருப்பதொன்றிறேயிது.

திருமந்த்ரத்திலும் த்வயத்திலும்நியதனாகையாவது-மந்த்ராந்தரங்களினுடைய அருகு மறந்தும்போகாதேத்யாஜ்யோபாதேயங்களைத் தெளியவறிவிக்குந் திருமந்த்ரத்திலும், அதினர்த்தத்துக்கு விவரணமான த்வயத்திலும் நிஷ்டனாயிருக்கை.

---

அ.—கைங்கர்யமுமேகாலக்ஷேபவிஷயமாம்படி-மற்றொன்றால் போதுபோக்குகை யன்றிக்கே கைங்கர்யமுமேகாலயாபநத்துக்கு விஷயமாம்படி யிருக்கை.

கீழ்ச்சொன்ன-புறம்புண்டானபற்றுக்களை என்று தொடங்கி இவ்வளவும்வரச் சொன்ன.இவ்வாகாரங்களையெல்லாம்-ஸர்வதர்ம பரித்யாக பூர்வகமாக எம்பெருமானையே உபாயமாகப் பற்றுகையும், விச்வாஸ பாஹுள்யமும், ப்ராப்யத்வரையும், திவ்யதேசங்களில் ப்ராவண்யமும், அங்குள்ள எம்பெருமானுடைய குணாநுபவகைங்கர்யங்களுமே பொழுதுபோக்காகையுமாகிற ஆகாரங்களையெல்லாம். இந்தளத்திலே-கும்பிட்டியிலே. இவ்விபூதியிலே-அஹங்காரமமகாரவர்த்தகமான இவ்விபூதியிலே. இங்ஙனே யிருப்பார் - கீழ்ச்சொன்ன ஆகாரங்களையுடையராயிருப்பார். சிலருண்டாவதே!என்கையாலே-அதிகாரிகளுடைய தௌர்லப்யமும் ப்ரார்த்தநீயத்வமும் தோற்றுகிறது. வைபவத்தை - ஜ்ஞாநவைபவத்தை; அவர்களளவிலுண்டான பகவத்விஷயீகார வைபவத்தை என்னவுமாம். அவர்களளவில் - அந்தஸ்ரீவைஷ்ணவர்கள்விஷயத்தில். ப்ரீதியுக்தனா யிருக்கை-அஸூயையின்றிக்கே ப்ரேமயுக்தனாயிருக்கை.

அருகும்-ஸமீபத்திலேயும். (த்யாஜ்யோபாதேயங்களை)த்யாஜ்யங்களாவன - ஸ்வரக்ஷணே ஸ்வாந்வயமும், கைங்கர்யத்திலே ஸ்வப்ரயோஜநத்வபுத்தியும்; உபாதேயங்களாவன - பகவதேகோபாயத்வமும், தத்விஷயகைங்கர்யமும்.

மூ.—ஆசார்யப்ரேமம் கனத்திருக்கையும், ஆசார்யன்பக்கலிலும் எம்பெருமான் பக்கலிலும் க்ருதஜ்ஞனாய்ப் போருகையும், ஜ்ஞாநமும், விரக்தியும், ஶாந்தியுமுடையனாயிருக்கும்பரமஸாத்விகனோடே ஸஹவாஸம்பண்ணுகையும்,

---

வ்யா.—ஆசார்யப்ரேமம் கனத்திருக்கையாவது-கீழ்ச்சொன்ன ஆகாரங்களையெல்லாம்உபதேஶத்தாலேதனக்குண்டாக்கின ஆசார்யவிஷயத்தில், (𑌯𑌸𑍍𑌯𑌦𑍇𑌵𑍇𑌪𑌰𑌾𑌭𑌕𑍍𑌤𑌿𑌰𑍍𑌯𑌥𑌾𑌦𑍇𑌵𑍇𑌤𑌥𑌾𑌗𑍁𑌰𑍌) (யஸ்யதேவே பராபக்திர்யதாதேவே ததாகுரௌ) என்கிறபடியே ப்ரேமம் அதிஶயித்திருக்கை. ஆசார்யன்பக்கலிலும், எம்பெருமான் பக்கலிலும் க்ருதஜ்ஞனாய்ப் போருகையாவது - நித்யஸம்ஸாரியான தன்னை நித்யஸூரிகள்பேற்றுக்கர்ஹனாம்படி, இரும்பைப் பொன்னாக்குவாரைப்போலே திருத்தின ஆசார்யன்பக்கலிலும், அத்வேஷாதிகளை விளைத்துக்கொண்டுவந்து, ஆசார்ய விஷயத்தோடே சேர்த்த எம்பெருமான்பக்கலிலும், உபகாரஸ்ம்ருதி யுடையனாய்ப் போருகை.

ஜ்ஞாநமும் விரக்தியும் ஶாந்தியுமுடையனா யிருக்கும் பரமஸாத்விகனோடேஸஹவாஸம்பண்ணுகையாவது - தான் கலங்கினாலும் கலங்காமல் நோக்குகைக் குறுப்பாகவும், கீழ்ச்சொன்ன ஆகாரங்கள் தனக்குவர்த்திக்கைக்குறுப்பாகவும், தத்வயாதாத்ம்ய ஜ்ஞாநமும், அப்ராப்த விஷய விரக்தியும் இவைதானிரண்டும் நமக்குண்டென்று இறுமாப்பற்றிருக்கையாகிற ஶாந்தியுமுடையனாயிருக்கும் பரம ஸத்வநிஷ்டனாயிருப்பானொரு பாகவதனோடேகூட வஸித்துப்போருகை.

---

அ.—கீழ்ச்சொன்ன ஆகாரங்களையெல்லாம்-புறம்புண்டானபற்றுக்களை என்றுதொடங்கி இவ்வளவாகச்சொன்ன ஆகாரங்களையெல்லாம். உபதேசத்தாலே-சிக்ஷாபூர்வகமான உபதேசத்தாலே.

[𑌯𑌸𑍍𑌯𑌦𑍇𑌵𑍇 - யஸ்யதேவேஇதி] யாவனொருவனுக்கு தேவன் பக்கலிலே பரையான பக்தியிருக்கிறதோ, அந்ததேவன்பக்கலிலேபோலே குருவின்பக்கலிலே பரையான பக்தியிருக்கிறதோ, அந்த மஹாத்மாவுக்குச் சொல்லப்பட்ட அர்த்தங்கள் ப்ரகாசியாநிற்கும். நித்யஸம்ஸாரியான - தேஹாத்மாபிமாநியாய் சப்தாதிவிஷயாநுபவமே யாத்ரையாயிருக்கிற. நித்யஸூரிகள்பேற்றுக்கு - "ஸதாபஶ்யந்திஸூரய:" என்கிறபடியே - நித்யஸூரிகளுடைய பரமபுருஷார்த்தமான பகவதநுபவத்துக்கு.

கலங்கினாலும் – திருமந்த்ரத்திலும் த்வயத்திலும் நியதனாகையாலே கலங்கமாட்டான், ஒருவேளை ப்ரக்ருதிஸம்பந்தத்தாலே கலங்கினாலும். தத்வயாதாத்ம்யஜ்ஞாநமும் - சிதசிதீச்வரதத்வங்களுடைய யதாவஸ்திதஜ்ஞாநமும். அப்ராப்தவிஷயம் - சப்தாதிவிஷயம். இறுமாப்பு-கர்வம். பரமஸத்வநிஷ்டனாய் - சுத்தஸத்வநிஷ்டனாய்.

மூ.—வைஷ்ணவாதிகாரிக் கவஶ்யாபேக்ஷிதம். இந்த அதிகாரிக்கு ரஹஸ்யத்ரயமும் அநுஸந்தேயம். எல்லாப்ரமாணங்களிலும் தேஹத்தாலே பேறென்கிறது; திருமந்த்ரத்தில் ஆத்மாவாலே பேறென்கிறது; சரமஶ்லோகத்தில்,

---

வ்யா.—வைஷ்ணவாதிகாரிக்கு அவஶ்யாபேக்ஷிதம என்றது-இவையித்தனையும் வைஷ்ணவனென்றிருப்பானொரு அதிகாரிக்கு அவச்யமுண்டாகவேணுமென்கை. இப்படியிருக்கும் இவனுக்கு அநுஸந்தாநவிஷயத்தை வகுத்தருளிச் செய்கிறார்மேல் (இந்த என்றுதொடங்கி.) அதாவது-கீழ்ச்சொன்ன ஆகாரங்களையுடையனாயிருக்கும் இவ்வதிகாரிக்கு, அந்த ஜ்ஞாநாநுஷ்டாநங்களுக்கு வர்த்தகமான ரஹஸ்யத்ரயமும் அநுஸந்தாந விஷயமாகவேணுமென்கை.

இனி, த்வயத்திற்சொல்லுகிற அர்த்தத்தின் வீறுடைமையையறிவிக்கைக்காக, ஶாஸ்த்ரம், திருமந்த்ரம், சரமஶ்லோகம், இவற்றிற்சொல்லுகிற ப்ரகாரங்களை அருளிச்செய்துகொண்டு சென்று, பின்னை அதுதன்னை அருளிச்செய்கிறார் (எல்லாப்ரமாணங்களிலுமென்று தொடங்கி.) அதாவது-சேதநனுடைய விஶிஷ்டவேஷத்திலே நோக்கான ஸகல ஶாஸ்த்ரங்களிலும், ஸாதநாநுஷ்டாந யோக்யமான தேஹத்தாலே இவனுக்கு புருஷார்த்தலாபம் என்கிறது.

நிஷ்க்ர்ஷ்டவேஷத்திலே நோக்கான திருமந்த்ரத்தில், இவன் ஸ்வரக்ஷணத்தில் நின்றும் கைவாங்கினாலொழிய ஈஶ்வரனுடைய ரக்ஷகத்வம் ஜீவியாமையாலே, தத்ப்ரவர்த்திவிரோதியான ஸ்வப்ரவர்த்தியை விட்டிருக்கும் ஆத்மாவாலே புருஷார்த்தலாபம் என்கிறது.

ஈஶ்வரஸ்வாதந்த்ர்யத்திலே நோக்கான சரமஶ்லோகத்தில், இவனுடைய ஸ்வீகாரமும் மிகையாம்படி தானே கைக்கொண்டு,

---

அ.—இப்படியிருக்கும்-கீழ்ச்சொன்ன வைஷ்ணவலக்ஷணலக்ஷிதனாயிருக்கும். வகுத்து-விபஜித்து. இந்த-கீழ்ச்சொன்ன.

வீறுடைமை-அதிசயம். சாஸ்த்ரம்-வேதம். சென்று-போய். பின்னை-அநந்தரம். அதுதன்னை - த்வயாதிசயத்தை. விசிஷ்டவேஷத்திலே நோக்கான-சரீரவிசிஷ்ட வேஷத்திலே நோக்கான. இவனுக்கு - இச்சேதநனுக்கு. நிஷ்க்ர்ஷ்டவேஷம் - சேஷத்வபாரதந்த்ர்யங்கள். ஈச்வரனுடைய – ஸஹாயாந்தரஸம்ஸர்க்காஸஹனாய் உபாயபூதனான ஈச்வரனுடைய. தத்ப்ரவர்த்தி - ஈச்வரப்ரவர்த்தி.

ஈச்வரனுடைய ஸ்வாதந்த்ர்யமாவது-ஸகல சாஸ்த்ரங்களிலும் ஸாதநதயாவிஹிதங்களான ஸர்வதர்மங்களையும் ஸவாஸநமாகத்யஜித்துத் தன்னைப்பற்றச்சொல்லுகை. ஸ்வீகாரமும் மிகையாம்படி-இவன் பண்ணும் ஸ்வீகாரமும் அநுபாயமாம்படி; அதிகமாம்படி யென்னவுமாம். கைக்கொண்டு-அங்கீகரித்து.

மூ.—ஈஸ்வரனாலே பேறென்கிறது; த்வயத்தில் பெரிய பிராட்டியாராலே பேறென்கிறது. பெரியபிராட்டியாராலே பேறுகையாவது - இவள் புருஷகாரமானாலல்லது ஈஸ்வரன் கார்யஞ் செய்யானென்கை. த்வயத்துக்கதிகாரி, ஆகிஞ்சந்யமும், அநந்யகதித்வமு முடையவன்.

---

வ்யா.—ப்ராப்திப்ரதிபந்தக ஸகலபாபங்களையும் தள்ளிப்பொகட்டு, தன் திருவடிகளிலே சேர்த்துக்கொள்ளும் ஈஸ்வரனாலே புருஷார்த்தலாபம் என்கிறது. ஈஸ்வரனுடைய லக்ஷ்மீ விஸிஷ்டவேஷத்திலே நோக்கான த்வயத்தில், விஸேஷணபூதையான பெரியபிராட்டியாராலே புருஷார்த்தலாபமென்கிறதென்கை.

உபாயம் ஈஸ்வரனாயிருக்க, இவளாலே பேறுகையாவதென் என்கிற ஸங்கையிலே அருளிச்செய்கிறார் (பெரியபிராட்டியாராலேயென்றுதொடங்கி.) அதாவது-இஷ்டாநிஷ்ட ப்ராப்தி பரிஹாரங்களிரண்டும் பண்ணுவான் ஈஸ்வரனேயாயிருக்க, பெரிய பிராட்டியாராலே இவனுக்குப் பேறுகையாகிறது-இவனுடைய அபராதத்தைப் பாராதே ரக்ஷிக்கும்படி இவள் புருஷகாரமானாலொழிய, ஈஸ்வரன் இவன்கார்யஞ்செய்யானென்றபடியென்கை.

கீழ்-ஸாமாந்யத்திலே வைஷ்ணவாதிகாரிக்கு அபேக்ஷிதங்களிறே சொல்லிற்று; விஸேஷித்து த்வயத்துக் கதிகாரியா மவனுக்கு அபேக்ஷிதத்தை அருளிச்செய்கிறார் (த்வயத்துக்கென்று தொடங்கி.) அதாவது-ஸித்தோபாயவரண ப்ரதிபாதகமான த்வயத்துக்கதிகாரி, (అకిఞ్చనోఽగతిః। త్వమేవోపాయభూతో మే భవ) (அகிஂசநோகதி:-த்வமேவோபாயபூதோமேபவ) என்றும்,

---

அ.—கார்யம்-அநிஷ்ட நிவர்த்தியும் இஷ்டப்ராப்தியு மென்கிற கார்யம். கீழ்என்றது-ப்ரதம சூர்ணை. ஸாமாந்யத்திலே - திருமந்த்ர த்வய சரமச்லோகாதிகாரிகளுக்குப்பொதுவிலே. விசேஷித்து-மிகவும். புருஷார்த்தலாபம்-புருஷார்த்தஸித்தி. விசேஷணபூதையான - நாராயணபதப்ரதிபாதித உபாயபூதனான ஈச்வரனுக்கு விசேஷணபூதையான. புருஷகாரமானாலொழிய - (ఘటకై) கடகையானாலொழிய.

அபேக்ஷிதங்களிறே சொல்லிற்று-அபேக்ஷிதங்களானகுணங்களிறேசொல்லிற்று.

ஸித்தோபாயம்-ஸ்ரீயபதியானஸர்வேச்வரன். (అహమస్మ్యపరాధానా మాలయోఽకిఞ్చనోఽగతిః। త్వమేవోపాయభూతో మే భవేతి ప్రార్థనామతిః) [అహమస్మి-அஹமஸ்மீதி] நான் அபராதங்களுக்கெல்லாம் ஆலயமாகாநின்றேன்; அகிஂசநனாய் அகதிகனாகாநின்றேன்; நீ எனக்கு உபாயமாகவேணுமென்கிற ப்ரார்த்தநாரூப புத்தி சரணாகதியாகிறது; அது இந்ததேவன்பக்கலிலே ப்ரயோகிக்கப்படுவது.

வ்யா.—(𑌅𑌕𑌿𑌞𑍍𑌚𑌨𑍋𑌽𑌨𑌨𑍍𑌯𑌗𑌤𑌿𑌶𑍍𑌶𑌰𑌣𑍍𑌯) (அகிஂசநோநந்யகதிஶ்ஶரண்ய) என்றும், “புகலொன்றில்லாவடியேன்” என்றும் சொல்லுகிற படியே

---

(𑌨𑌧𑌰𑍍𑌮𑌨𑌿𑌷𑍍𑌠𑍋𑌽𑌸𑍍𑌮𑌿𑌨𑌚𑌾𑌤𑍍𑌮𑌵𑍇𑌦𑍀𑌨𑌭𑌕𑍍𑌤𑌿𑌮𑌾𑌂𑌸𑍍𑌤𑍍𑌵𑌚𑍍𑌚𑌰𑌣𑌾𑌰𑌵𑌿𑌨𑍍𑌦𑍇। 𑌅𑌕𑌿𑌞𑍍𑌚𑌨𑍋𑌽𑌨𑌨𑍍𑌯𑌗𑌤𑌿𑌶𑍍𑌶𑌰𑌣𑍍𑌯𑌤𑍍𑌵𑌤𑍍𑌪𑌾𑌦𑌮𑍂𑌲𑌂𑌶𑌰𑌣𑌂𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑍇) [𑌨𑌧𑌰𑍍𑌮𑌨𑌿𑌷𑍍𑌠𑍋𑌽𑌸𑍍𑌮𑌿 - நதர்மநிஷ்டோஸ்மி] தார்மிகனாகிறிலேனென்கிறேனல்லேன்; நாஸ்திகனன்றென்கிறேனல்லேன்; தர்மத்திலே நிஷ்டையுடையேனல்லேன்; சிலர், தார்மிகனென்று நினைக்கைக்கும், நானும் எனக்கு நன்மையுண்டென்று ப்ரமிக்கைக்கும நானே சிலப்ரவர்த்தியாநின்றேனாகில் தானே செய்திடுக என்று நினைவிடுகைக்கு ஹேதுவாம்படியான ப்ரவர்த்தியில் நிஷ்டையில்லையென்கை.

[𑌨𑌚𑌾𑌤𑍍𑌮𑌵𑍇𑌦𑍀-நசாத்மவேதீ]ஆத்மதர்சநம்பண்ணிப்போருமவர்கள்போலே செல்லாநிற்பன், தச்சீலனல்லேன்; கர்மயோகாநுஷ்டானத்தாலே க்ஷீணபாபனானவனுக்கு ஆத்மயாதாத்ம்ய தர்சநமாயிருக்க அதில்லை என்றபோதே தத்ஸாத்யமானஜ்ஞாநமில்லாமை அர்த்தாத்ஸித்தமாயிருக்க, ஜ்ஞாநமில்லையென்கிறது, (𑌬𑌹𑍂𑌨𑌾𑌂𑌜𑌨𑍍𑌮𑌨𑌾𑌮𑌨𑍍𑌤𑍇𑌜𑍍𑌞𑌾𑌨𑌵𑌾𑌨𑍍) என்று ஜந்மாந்தர ஸஂஸ்காரத்தாலே ஜ்ஞாநம் பிறக்கலாமிறே, அதுவு மில்லையென்கிறார். (𑌤𑍍𑌵𑌚𑍍𑌚𑌰𑌣𑌾𑌰𑌵𑌿𑌨𑍍𑌦𑍇- 𑌨𑌭𑌕𑍍𑌤𑌿𑌮𑌾𑌨𑍍) (த்வச்சரணாரவிந்தே நபக்திமாந்) இவ்வாத்மாவுக்கு நாதனாயிருந்துள்ள உன்னுடைய நிரதிசய போக்யமானதிருவடிகளில் அநவரதபக்தியை யுடையேனல்லேன். கர்மஜ்ஞாநங்களை அங்கமாகவுடைத்தான பக்த்யங்கந்தானு மில்லைஎன்றபோதே அதுவுமில்லையன்றோவென்னில், பூர்வோக்தப்ரகாரத்தாலே ஜந்மாந்தர ஸஂஸ்காரத்தாலே உண்டாகலாமிறேயென்னில் அதுவுமில்லையென்கை. (𑌅𑌕𑌿𑌞𑍍𑌚𑌨𑌃 - அகிஞ்சநஃ) இவையில்லையென்னுமநுதாபமென்ன, இவையுண்டாகைக்குறுப்பான ஆத்மகுணமென்ன, அதிகார சக்திவாஞ்சாதிகளென்ன, இவற்றை யுடையே னல்லேன். [𑌅𑌨𑌨𑍍𑌯𑌗𑌤𑌿𑌃-அநந்யகதிஃ] இப்படி நம்மைக்கிட்டுகைக்கு முதலில்லையாகில், புறம்போரக்ஷகராயிருப்பார்பக்கலிலே போனாலோவென்னில்; புறம்பொருபுகலில்லையென்னுதல்; “உன்னைவிட்டு ஒன்றும் ஆற்றகிற்கின்றிலேன்” என்கிறபடியே - உன்னையொழியச் செல்லாதென்னுதல். [𑌶𑌰𑌣𑍍𑌯-ஶரண்ய] தம்பக்கல் முதலில்லாதார்க்கும் ஶரணவரணார்ஹரிறே தேவரீர். நிருபாதிக ஶரண்யராகையாலே ருசியேவேண்டுவது, தேவரீரைப்பெறுகைக்கு ஒருமுதல் வேண்டாவிறே.[𑌤𑍍𑌵𑌤𑍍𑌪𑌾𑌦𑌮𑍂𑌲𑌮𑍍-த்வத்பாதமூலம்]“மாமேகஂஶரணஂவ்ரஜ” என்றதேவரீர் திருவடிகளே மூலமென்றது-ஸௌலப்யாதிகுணங்களையும் இதராவயவங்களையுமொழியத் திருவடித்தாமரைகளையே நினைக்கிறது. [𑌶𑌰𑌣𑌂𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑍇 - ஶரணஂப்ரபத்யே] விரோதிநிவர்த்திபூர்வகமான கைங்கர்யஸித்திக்கு உபாயமாக அத்யவஸிக்கிறேன்.

மூ.—இவை யிரண்டும் ப்ரபந்நபரித்ராணத்திலே சொன்னோம். இதில் முற்கூற்றால், பெரியபிராட்டியாரை முன்னிட்டு ஈஶ்வரன் திருவடிகளையுபாயமாகப்பற்றுகிறது; பிற்கூற்றால், அச்சேர்த்தியிலே அடிமையிரக்கிறது.

---

வ்யா.—ஆகிஞ்சந்யமும் அநந்யகதித்வமுமாகிறவிரண்டுமுடையவனென்கை.

இவையிரண்டின் வேஷமுந் தானெங்ஙனேயென்ன அருளிச்செய்கிறார்(இவையிரண்டுமென்றுதொடங்கி.)அதாவது-உபாயாந்தரராஹித்யமாகிற ஆகிஞ்சந்யத்தின்வேஷமும், ரக்ஷகாந்தரராஹித்யமாகிறஅநந்யகதித்வத்தின்வேஷமும்,ப்ரபந்நபரித்ராணமாகிற ப்ரபந்தத்திலே ஸுஸ்பஷ்டமாகச்சொன்னோம், அதிலே கண்டுகொள்வதென்கை.

இனி, த்வயத்துக்கு வாக்யார்த்தமருளிச்செய்கிறார் (இதில் முற்கூற்றாலென்று தொடங்கி.) அதாவது-இந்தத்வயத்தில் பூர்வகண்டத்தாலே, ஸ்ரீமத் என்று - பெரியபிராட்டியாரை முன்னிட்டு, நாராயணசரணௌ என்று - ஈஶ்வரன் திருவடிகளை, ஶரணம்ப்ரபத்யே என்று - உபாயமாகப்பற்றுகிறது. உத்தரகண்டத்தாலே, ஸ்ரீமதே என்று - பெரியபிராட்டியாரும் அவனுமான சேர்த்தியிலே, நாராயணாய என்கிற சதுர்த்தியாலே - கைங்கர்யத்தை அர்த்திக்கிறதென்கை. நமஸ்ஸு, கைங்கர்யவிரோதிநிவ்ர்த்தி ப்ரதிபாதக மாகையாலே, அடிமையை இரக்கிற என்றவிதிலே அந்தர்ப்பூதம்.

---

அ —ஆகிஞ்சந்யமாவது-உபாயாந்தரராஹித்யம். அநந்யகதித்வமாவது - ரக்ஷகாந்தரராஹித்யம். ஆகிஞ்சந்யம் - பூர்வவாக்யாதிகாரம். அநந்யகதித்வம்- உத்தரவாக்யாதிகாரம்..

(ஆகிஞ்சந்யமாவது)-ப்ரபந்நபரித்ராணே;- ஆகிஞ்சந்யமாவது-கர்மஜ்ஞாநபக்திகளிலும் அவற்றுக்கு ஹேதுவான ஆத்மகுணங்களிலும் அந்வயமின்றிக்கே, அவற்றுக்கு விபரீதங்களானவற்றால் தான் பரிபூர்ணனாயிருக்கிற விருப்பையும் தன்னுடைய ஸ்வரூபம் ஸர்வ ப்ரகாரத்தாலும் ஈச்வரனுக்கு அத்யந்தபாரதந்த்ரமாயிருக்கிற விருப்பையும் அநுஸந்தித்து நம்கார்யத்துக்கு நாம் கடவோமல்லோம் என்றிருக்கை.

ஸ்ரீசப்தத்துக்கு இன்னும் அநேக வ்யுத்பத்திகளிருக்க, இவ்விடத்தில் கர்மணிகர்த்திரி வ்யுத்பத்திகளைமாத்ரத்தை யருளிச்செய்தது - புருஷகாரத்துக் கேகாந்தமான ஸ்வபாவ ப்ரதிபாதகமாகையாலே. புருஷகாரமாம்போது க்ருபையும் பாரதந்த்ர்யமும், அநந்யார்ஹத்வமும் வேணும்; கையாலே இவ்விரண்டு வ்யுத்பத்திகளை அருளிச்செய்தார் என்றும் அருளிச்செய்வர்கள். அநந்யகதித்வமாவது – "களைவாய்துன்பங் களையாதொழிவாய் களைகண் மற்றிலேன்" என்கிறபடியே - ஈச்வரனையொழிய வேறொரு ரக்ஷகரில்லையென்றிருக்கை.

வேஷமுந்தான் - இருப்புத்தான். இனி – அதிகாரத்தைச் சொன்ன வநந்தரம். முன்னிட்டு-புருஷகாரமாகமுன்னிட்டு.

மூ.—(ஸ்ரீ) என்று - பெரியபிராட்டியார்க்குத் திருநாமம். ஸ்ரீயதே, ஶ்ரயதே.

---

வ்யா.—இனி, ப்ரதிபதம் அர்த்தமருளிச்செய்வதாகத் திருவுள்ளம்பற்றி, ஸ்ரீமத்பதார்த்தமருளிச்செய்ய உபக்ரமிக்கிறார் (ஸ்ரீ என்று பெரியபிராட்டியார்க்குத் திருநாமமென்று.) அதாவது - ஸ்ரீஶப்தம், ஸம்பதாதிகளுக்கும் வாசகமாக லோகத்திலே நடந்துபோரக் காண்கையாலே, அத்தை வ்யாவர்த்திக்கைக்காக(ஸ்ரீ)என்கிறது பெரியபிராட்டியார்க்குத் திருநாமமென்கிறார். ஆகையிறே, (𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌃 𑌪𑌦𑍍𑌮𑌾𑌲𑌯𑌾 𑌪𑌦𑍍𑌮𑌾 𑌕𑌮𑌲𑌾 𑌶𑍍𑌰𑍀𑌰𑍍𑌹𑌰𑌿𑌪𑍍𑌰𑌿𑌯𑌾) (லக்ஷ்மீꞏபத்மாலயாபத்மாகமலாஸ்ரீர்ஹரிப்ரியா) என்று திருநாமங்களோடே ஸஹபடிதமாயிற்று. இதுதான் எல்லாத்திருநாமங்கள்போலன்றிக்கே, (𑌶𑍍𑌰𑍀𑌰𑌿𑌤𑌿 𑌪𑍍𑌰𑌥𑌮𑌂 𑌨𑌾𑌮 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍍𑌯𑌾𑌃) (ஸ்ரீரிதிப்ரதமம்நாமலக்ஷ்ம்யா꞉) என்கிறபடியே,இவளுக்கு ப்ரதமாபிதானமாயிருக்கும்.(𑌅 𑌇𑌤𑌿 𑌭𑌗𑌵𑌤𑍋 𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌥𑌮𑌾𑌭𑌿𑌧𑌾𑌨𑌮𑍍) (அஇதிபகவதோநாராயணஸ்யப்ரதமாபிதானம்) என்று - அகாரம் ஈஶ்வரனுக்கு ப்ரதமாபிதானமானுப்போலேயாயிற்று,இவளுக்கும்இதுப்ரதமாபிதானமாயிருக்கும்படி. அது அவனுடையரக்ஷகத்வத்துக்குஏகாந்தமான ஸ்வபாவங்களைச் சொல்லக்கடவதாயிருக்கும்; இது, இவளுடையபுருஷகாரத்வத்துக்கு ஏகாந்தமான ஸ்வபாவங்களைச் சொல்லக்கடவதாயிருக்கும்.

இனி, இந்த ஸ்ரீஶப்தத்துக்கு அர்த்தமருளிச்செய்வதாக, ப்ரதமம் இதின்மேல் வந்த வ்யுத்பத்தித்வயத்தை யருளிச்செய்கிறார்(ஸ்ரீயதே,ஶ்ரயதே என்று.) அதாவது-(𑌶𑍍𑌰𑍀𑌞𑍍 𑌸𑍇𑌵𑌾𑌯𑌾𑌮𑍍)(ஸ்ரீஞ் ஸேவாயாம்) என்கிறதாதுவிலே, (𑌶𑍍𑌰𑍀𑌯𑌤 𑌇𑌤𑌿 𑌶𑍍𑌰𑍀𑌃) (ஸ்ரீயதஇதிஸ்ரீ꞉) (𑌶𑍍𑌰𑌯𑌤 𑌇𑌤𑌿 𑌶𑍍𑌰𑍀𑌃) (ஶ்ரயதஇதிஸ்ரீ꞉) என்று ஸித்தமான கர்மணிவ்யுத்பத்தியையும், கர்த்தரிவ்யுத்பத்தியையும் சொன்னபடி.

---

அ.—இனி-வாக்யார்த்த மருளிச்செய்த வநந்தரம்.ப்ரதிபதம்-பதங்கள்தோறும்.

ஆகையிறே-ஸ்ரீசப்தம் ஸம்பதாதிகளுக்கும் வாசகமாயிருக்கிற தன்றிக்கே பெரியபிராட்டியார்க்கும் வாசகமாகையாலே. இதுதான் - ஸ்ரீஎன்கிற திருநாமந்தான். எல்லாத்திருநாமங்கள்போலன்றிக்கே.-“லக்ஷ்மீꞏபத்மாலயா” இத்யாதி திருநாமங்கள்போலன்றிக்கே. அது-“அ꞉” என்கிற ப்ரதமாபிதானம். ரக்ஷகத்வத்துக்கேகாந்தமான ஸ்வபாவங்கள்-சேஷசேஷிபாவஸம்பந்தமும், பிராட்டியோடு நித்யஸம்பந்தமும். இது-“ஸ்ரீ꞉” என்கிற ப்ரதமாபிதானம். புருஷகாரத்வத்துக்குஏகாந்தமான ஸ்வபாவங்களை - மாத்ருத்வேநசேதநரோடு நித்யஸம்பந்தமும், பத்நீத்வேந நித்யஸம்பந்தமுமாகிற ஸ்வபாவங்களையென்றபடி

மூ.—இதுக்கு அர்த்தம், எல்லார்க்கும்இவளைப்பற்றி ஸ்வரூப லாபமாய், இவள்தனக்கும் அவனைப்பற்றி ஸ்வரூபலாபமாயிருக் கும் என்று. இப்போது இவளைச்சொல்லுகிறது புருஷகாரமாக.

---

வ்யா.—இவ்வுத்பத்தித்வயத்துக்கும் அர்த்தமருளிச்செய்கிறார் (இதுக்கர்த்தமென்றுதொடங்கி.) அதாவது - இவ்வுபய வ்யுத்ப த்திக்கும்அர்த்தம், (ஸ்ரீயதே) என்று, எல்லாராலும் ஸேவிக்கப்ப டாநின்றாள் என்கையாலே - ஸகலசேதநர்க்கும் இவளைப்பற்றித் தங்களுடைய ஶேஷத்வரூப ஸ்வரூபலாபமாய், (ஶ்ரயதே) என்று, ஈஶ்வரனை ஸேவியாநின்றாள் என்கையாலே - இவள் தனக்கும் ஈஶ்வரனைப்பற்றித் தன்னுடைய ஸ்வரூபலாபமாயிருக்கும்என்று என்கை. இவள் தனக்கு, சேதநவிஷயத்தில் ஶேஷித்வமும், ஈஶ்வரவிஷயத்தில் ஶேஷத்வமும் என்றுமுண்டாயிறே யிருப் பது. ஆகையால், இந்தஸேவ்யத்வ ஸேவகத்வங்கள் இரண்டும் இவளுக்கு நித்யமாய்ச்செல்லாநிற்கும். ஈஶ்வரனுக்கு உபாயத்வ மும் உபேயத்வமுமாகிற ஆகாரத்வயமுண்டானாப்போலே இவ ளுக்கும் புருஷகாரத்வமும் ப்ராப்யத்வமுமாகிற ஆகாரத்வயமும் உண்டாகையாலே, அதில் எவ்வாகாரத்தை நினைத்து இவளை இப்போது சொல்லுகிறதென்ன அருளிச்செய்கிறார் (இப்போதிவ ளைச்சொல்லுகிறது புருஷகாரமாக என்று.) (புருஷகாரமாக) என்கையாலே- உபாயவஸ்து விஶேஷணமாயிருக்கிற ஆகாரத்தை யிட்டு, இவளுக்கும் உபாயத்வத்தில் அந்வயஞ்சொல்லும்பக்ஷம் நிரஸ்தம்.

---

அ.—இவளைப்பற்றி-பெரியபிராட்டியாரை கடகையாகப்பற்றி. தன்னுடைய - சேஷபூதனான தன்னுடைய. ஆகையால்-பிராட் டிக்கு சேதநவிஷயத்திலே சேஷித்வமும், ஈச்வரவிஷயத்தில் சேஷத்வமும் என்றுமுண்டாகையாலே. இந்த ஸேவ்யஸேவகத் வங்கள்-சேஷித்வ சேஷத்வங்கள். அதில் - புருஷகாரத்வப்ராப்யத் வங்களிரண்டிலும். இப்போது-ஈச்வரனை உபாயமாகப் பற்றுகிற போது. உபாயவஸ்து விசேஷணமாயிருக்கிற-உபாயவஸ்துவாசக மான நாராயணபதத்துக்கு "ஸ்ரீமத்" என்கிறபதம்விசேஷணமா யிருக்கிற.இட்டு - ஹேதுவாகவைத்து. இவளுக்கும் - ஈச்வரனுக் கும். உபாயத்தில் - இஷ்டப்ராப்திபரிஹாரங்களில். அந்வயம் - ஸாக்ஷாதந்வயம்.

மூ.—நீரிலே நெருப்புக்கிளருமாப்போலே, குளிர்ந்ததிருவுள்ளத்திலே அபராதத்தால் சீற்றம்பிறந்தால்பொறுப்பதிவனுக்காக.

---

வ்யா—ஈஸ்வரனுடைய நாராயணத்வ ப்ரயுக்தமான ஸ்வாபாவிக ஸம்பந்தாதி ஜ்ஞாநத்தையுடையனுய்க்கொண்டு, அவனை யாஸ்ரயிக்கிற விச்சேதநனுக்கு இவனைப்புருஷகாரமாக முன்னிடவேண்டுகிறது தானென்னென்ன வருளிச்செய்கிருர் (நீரிலே யென்று தொடங்கி.) அதாவது - ஶீதளமான ஜலத்திலே சென்றணுக வொண்ணுதபடியான நெருப்புக்கிளருமாப்போலே, (సుహృదం సర్వ భూతానామ్)(ஸுஹ்ருதம்ஸர்வபூதாநாம்)(సమోऽహం సర్వభూతేషు)(ஸமோஹம் ஸர்வபூதேஷு) என்கிறபடியே, ஸர்வபூதஸுஹ்ர்த்வம் ஸமாஶ்ரயணீயத்வே ஸமத்வமாகிற ஸ்வபாவ விஶேஷங்களாலே ப்ரஸந்நமாய், குளிர்ந்திருக்கிற திருவுள்ளத்திலே, (పరిపూర్ణాగసి జనే హిత స్రోతోవృత్త్యాభవతి చ కదాచిత్కలుషధీః). (பரிபூர்ணுகஸிஜநே ஹித ஸ்ரோதோவ்ர்த்யாபவதிச கதாசித்கலுஷதீ:) என்கிறபடியே, சேதநன் தீரக்கழியப்பண்ணின அபராதமடியாக,

---

அ.—நாராயணத்வப்ரயுக்தமான-நாராயண சப்தார்த்த ப்ரயுக்தமான. ஸ்வாபாவிக ஸம்பந்தமாவது-ஸ்வாபாவிகமான சேஷசேஷிபாவஸம்பந்தமாதல்; ஸ்வஸ்வாமிபாவஸம்பந்தமாதல். ஸம்பந்தாதிஜ்ஞாநத்தை - சரீரிசரீரபாவ ஸம்பந்தவாத்ஸல்யாதி குணஜ்ஞாநத்தை. ஆதிசப்தத்தாலே- ஸர்வபூதஸுஹ்ர்த்வத்தையும், ஸர்வஸமாச்ரயத்வத்தையும் சொல்லுகிறது. முன்னிடவேண்டுகிறது "முன்னே" ஆச்ரயிக்கை. சென்றணுக-சென்று கிட்ட. கிளருமாப்போலே - வ்யாபிக்குமாப்போலே. ஜ்வலிக்குமாப்போலே. கிளருமாப்போலே. கீதையிலே; (భోక్తారం యజ్ఞతపసాం సర్వలోకమహేశ్వరమ్। సుహృదం సర్వభూతానాం జ్ఞాత్వా మాం శాన్తిమృచ్ఛతి)யஜ்ஞதபஸ்ஸுக்களுக்குபோக்தாவாய், ஸர்லோகமஹேச்வரனுய், ஸர்வபூதங்களுக்கும் ஸுஹ்ர்த்தான என்னை யடைந்து சாந்தியையடையா நிற்கும்; (సమోऽహం సర్వభూతేషు న మే ద్వేష్యోస్తి న ప్రియః। యే భజన్తి తు మాం భక్త్యా మయి తే తేషు చాప్యహమ్)நான் எல்லார்க்கும் ஸமனுயிருப்பேன், எனக்கு ஜாத்யாதிகளாலே நிக்ர்ஷ்டனென்று வெறுக்கப்படுமவனு மில்லை, ஜாத்யாதிகளாலே உத்க்ர்ஷ்டனென்று எனக்கு ப்ரியனுமில்லை; யாவர் சிலர் என்னை விசேஷித்து பக்தியாலே பஜிக்கிருர்கள், அவர்கள் என்பக்கலிலேயா யிருப்பர்கள், நானும் அவர்கள்பக்கலிலேயாயிருப்பன். தீரக்கழிய-மிகவும். சீற்றம்-நிக்ரஹம்.

ஶ்ரீகுணரத்நகோஶே; - (పితేవ త్వత్ప్రేయాన్ జనని పరిపూర్ణాగసి జనే। హితస్రోతోవృత్త్యా భవతి చ కదాచిత్కలుషధీః) தாயே! பிதாவைப்போலே உன்னுடைய ப்ரியதமனுனவன், பரிபூர்ணமான அபராதத்தையுடைய ஜநத்தின்பக்கலிலே ஹிதத்தை நடத்தவேண்டுகையாலே ஒருக்கால் திருவுள்ளம் சீறுநிற்கும்.

வ்யா.—(క్షిపామి) (க்ஷிபாமி) (న క్షమామి) (நக்ஷமாமி) என்னும் படியான சீற்றம்பிறந்தால் அவ்வபராதத்தைப் பொறுப்பது, (కిమేతన్నిర్దోషః క ఇహ జగతి) (கிமேதந்நிர்த்தோஷ꞉க இஹஜகதி) இத்யாதிப்படியே தன்னுடைய உபதேஶாதிகளாலே.

---

அ.—கீதையிலே;-(న మాం దుష్కృతినో మూఢాః ప్రపద్యన్తే నరాధమాః। మాయయాపహృతజ్ఞానా ఆసురం భావమాశ్రితాః॥ తానహం ద్విషతః క్రూరాన్ సంసారేషు నరాధమాన్। క్షిపామ్యజస్రమశుభా నాసురీష్వేవ యోనిషు) துஷ்க்ர்திகள் மூடராய், நராதமராய், மாயையாலே அபஹ்ர்தஜ்ஞாநஸ்வபாவத்தையுடையராய், ஆஸுரமான ஸ்வபாவத்தை ஆச்ரயித்துக்கொண்டு என்னையடையாதிருப்பர்கள்.

மூடராவார்- ஜ்ஞாநமில்லாத அஜ்ஞர். நராதமராவார்-அறிந்தாலும் ஆபிமுக்யமில்லாதார். மாயயாஉபஹ்ர்தஜ்ஞாநராவார்-பிறந்ததத்வஜ்ஞாநம்,அநாதியானப்ரக்ர்தி ஸம்பந்தத்தாலே அழுந்தினவர்கள். ஆஸுரீம்பாவமாச்ரிதராவார் - பிறர்க்குப் பிறந்த ஜ்ஞாநத்தையும் தங்களாலே அழிக்குமவர்கள். என்னளவிலே வெறுத்திருப்பாராய் க்ரூரராய்ப் பொல்லாரான நராதமரை ஸம்ஸாரங்களில் ஆஸுரயோநிகளிலே நான் எப்போதும் தள்ளா நிற்பனென்று சொல்ல; அப்படியன்று, க்ஷமாகுணங்களுக்கு விஷயமாக்கியருளவேணுமென்று சொல்ல; வராஹபுராணே; - (మద్భక్తం శ్వపచం వాపి నిన్దాం కుర్వన్తి యే నరాః। పద్మకోటిశతేనాపి న క్షమామి కదాచన) ச்வபசனேயாகிலும் என்னுடையபக்தனை யாவர்சிலமநுஷ்யர் நிந்தையைப் பண்ணுகிறார்கள், அவர்கள் நூறுகோடி பத்மமிட்டு ஆராதித்தாலும் அவர்களை ஒருக்காலும்பாரேன்; அவர்களை ஒருக்காலும் க்ஷமியேன் என்ன; ஸ்ரீகுணரத்நகோஶே, (பிதேவத்வத்ப்ரேயாந்) இதிஶ்லோகஸ்ய உத்தரார்த்த;- (కిమేతన్నిర్దోషః క ఇహ జగతీతి త్వముచితైరుపాయైర్విస్మార్య స్వజనయసి మాతా తదసి నః) அத்தசையிலே, இச்சீற்றத்துக்கு அடியென்னென்பது, இவன் தீரக்கழியச் செய்தவபராதமென்று அவன் சொன்னால், மணற்சோற்றிலே கல்லாய்வாருண்டோ, இந்த ஜகத்தில் அபராதமற்றிருப்பாரார் என்பதாய் உசிதோபாயங்களாலே தோஷங்களைவிஸ்மரிப்பித்து ஸ்வஜநமாக்காநிற்புதி, ஆகையாலே எங்களுக்கு மாதாவாகா நின்றாய்.

உபதேசமாவது- இச்சேதநனுடைய அபராதங்களைக்கணக்கிட்டு, நீர் இப்படித் தள்ளிக் கதவையடைத்தால் இவனுக்கு வேறொருபுகலுண்டோ;உமக்கும் அவனுக்குமுண்டானஸம்பந்தவிசேஷத்தைப்பார்த்தால், "உறவேல் நமக்கிங்கொழிக்க வொழியாது" என்கிறபடியே குடநீர் வழித்தாலும் போகாததொன்றன்றோ: ஸ்வம்மான இவனை லபிக்கை ஸ்வாமியான உம்முடைய பேறன்றோ விருப்பது, * எதிர்சூழல்புக்குத்திரிகிற வுமக்கு

வ்யா.—அச்சீற்றத்தையாற்றி, தயையைஜநிப்பிக்கும் இவளுக்காக என்கை. ஆகையாலே, ஸம்பந்தஜ்ஞாநம் பிறந்தவனுக்கும் அபராதபயத்தாலே புருஷகாரபுரஸ்கரணம் அபேக்ஷிதமென்று கருத்து.

இத்தலையில்கார்யம் தான்ஏறிட்டுக்கொண்டும், அத்தலையை வஶீகரித்தும், இரண்டுதலையையும் பொருத்துகைக்கு,இவள்தான் கண்ணழிவற்றபுருஷகாரமோவென்ன அருளிச்செய்கிறார்

---

அ.—நான்சொல்லவேணுமோ;ரக்ஷணஸாபேக்ஷனாய்வந்தவிவனை ரக்ஷியாதபோது உம்முடைய ஸர்வரக்ஷகத்வம் விகலமாகாதோ; அநாதிகாலம் நம்முடைய ஆஜ்ஞாதிலங்கநம்பண்ணி நம்முடைய சீற்றத்துக்கு இலக்காய்ப்போந்தவிவனை அபராதோசிததண்டம் பண்ணாதே அத்தைப்பொறுத்து அங்கீகரித்தால் சாஸ்த்ரமர்யாதை குலையாதோ என்றன்றோ உம்முடைய திருவுள்ளத்திலோடுகிறது, இவனை ரக்ஷியாதே அபராதாநுகுணமாக நியமித்தால் உம்முடைய க்ர்பாதிகுணங்கள் ஜீவிக்கும்படியென், அவை ஜீவித்ததாவது இவனைரக்ஷித்தாலன்றோ. நியமியாதபோது சாஸ்த்ரம் ஜீவியாது, ரக்ஷியாதபோது க்ர்பாதிகுணங்கள் ஜீவியாது, என் செய்வோமென்ன வேண்டா, சாஸ்த்ரத்தை விமுகவிஷயமாக்கில் இரண்டும் ஜீவிக்கும்; ஆனபின்பு இவனை ரக்ஷித்தருளீர் என்று சொல்லுகை.

ஆதிசப்தத்தாலே- அழகைச்சொல்லுகிறது. அதாவது-“ஒங்காஎன்போ, உனக்குப்பணியன்றோவிது” என்று உபதேசத்தை உதறினவாறே, கண்ணைப்புரட்டுதல், கச்சைநெகிழ்க்குதல்செய்து தன்னழகாலே அவனைப் பிச்சேற்றி, தான் சொன்னபடி செய்தல்லது நிற்கமாட்டாதபடிபண்ணி அங்கீகாரோந்முகனாக்குகை. அச்சீற்றத்தை - க்ஷிபாமி, நக்ஷமாமி என்னும்படியான அந்தச் சீற்றத்தை. ஆற்றி-போக்கி. இவ்விடத்தில் தயையாவது-ஆபத்திலே ரக்ஷிக்கவேண்டுமென்கிற தயை. புருஷகார புரஸ்கரணம்-புருஷகாரத்தை முன்னிடுகை.

இத்தலையில்கார்யம் - சேதநவிஷயத்தில்கார்யம். தானேறிட்டுக்கொண்டு - தன்கார்யமாக அத்யவஸித்துக்கொண்டு. அத்தலையை வஶீகரித்தும்-ஈச்வரனை கீழ்ச்சொன்ன உபதேசாதிகளாலே வஶீகரித்தும். இரண்டு தலையையும் - சேதநேச்வரரிருவரையும். பொருத்துகைக்கு-பொருந்தவிடுகைக்கு-சேர்க்கைக்கு. என்றபடி. கண்ணழிவற்ற புருஷகாரமோ-கார்யஸாதகமானபுருஷகாரமோ

மூ.—இவள் தாயாய், இவர்கள்க்லேஶம்பொறுக்கமாட்டாதே அவனுக்குப் பத்நியாய், இனியவிஷயமாயிருக்கையாலே கண்ணழிவற்றபுருஷகாரம்.

---

வ்யா.—(இவள்தாயாயென்றுதொடங்கி) அதாவது-(త్వమ్మాతా సర్వలోకానామ్)(த்வம்மாதாஸர்வலோகாநாம்)என்றும், (అఖిలజగన్మాతరమ్)(அகிலஜகந்மாதரம்) என்றும் சொல்லுகிறபடியே, இச்சேதநர்க்கு இவள்மாதாவாய், "தந்தம்மக்களழுதுசென்றால் தாய்மாராவார் தரிக்ககில்லார்" என்கிறபடியே, அந்தஸம்பந்தமடியாக இவர்களுடையக்லேஶங்கண்டால் ஸஹிக்கமாட்டாதே, (విష్ణుపత్నీ) (விஷ்ணுபத்நீ) என்கிறபடியே, அவனுக்கு பத்நியாய், "பித்தர்பனிமலர் மேற்பாவைக்கு" என்கிறபடியே, அவன் தன்வைலக்ஷண்யத்தைக் கண்டுபிச்சேறித் தன்சொல்வழிநடக்கும்படி அபிமதவிஷயமாயிருக்கையாலே, கண்ணழிவற்ற புருஷகாரம் என்கை.

எல்லாம்செய்தாலும், நிரங்குஶஸ்வதந்த்ரனான ஈச்வரன், "சேதநருடைய அபராதங்களைநிறுத்தறுத்துத்தீர்த்துவன்" என்று நிற்குமளவில், இவளாலே பொறுப்பிக்கப்போமோவென்ன அருளிச்செய்கிறார்

---

அ.—விஷ்ணுபுராணே; - (త్వం మాతా సర్వలోకానాం దేవదేవో హరిః పితా। త్వయైతద్విష్ణునా చాంబ జగద్వ్యాప్తం చరాచరమ్) ஸர்வலோகத்துக்கும் நீ மாதா, தேவதேவனானஹரி பிதா; உன்னாலேயும் அந்த விஷ்ணுவினாலேயும் சராசராத்மகமான இந்தஜகத்தானது போஷிக்கப்பட்டிருக்கும்.

அந்த ஸம்பந்தம் - மாதர்த்வஸம்பந்தம். அவனுக்கு- விஷ்ணுவுக்கு. பித்தர் - வ்யாமோஹி. பனிமலர் - ஜலத்திலே யிருக்கிற மலர். பாவைக்கு-பெண்ணுக்கு. அவன்-ஈச்வரன். பிச்சேறி-வ்யாமோஹம் தலையெடுத்து.

அபிமதவிஷயமாயிருக்கையாலே - பத்நியாயிருந்து அநபிமத விஷயமாயிருக்கையன்றிக்கே அத்யந்தாபிமதவிஷயமா யிருக்கையாலே. புருஷகாரம் - ஈச்வரனை சேதநவிஷயத்தில் பஹுப்ரதனாக்குமவள்.

எல்லாம்செய்தாலும்-இப்படி உபதேசித்தும் தன்வைலக்ஷண்யத்தைக்காட்டிப் பிச்சேறும்படி பண்ணினபோதிலும். நிறுத்து-கணக்கிட்டு. அறுத்து - தகும்படி சிக்ஷபண்ணி. தீர்த்துவன்-கோபத்தைத் தீர்த்துக்கொள்வேன். நிற்குமளவில் - இருக்கும்போது. இவளாலே-பெரியபிராட்டியாராலே.

மூ.—திருவடியைப் பொறுப்பிக்குமவள், தன்சொல்வழிவருமவனைப் பொறுப்பிக்கச்சொல்லவேண்டாவிறே.

---

வ்யா.—(திருவடியையென்று தொடங்கி.) அதாவது - தன்னைப்பத்துமாஸம் தர்ஜநபர்த்ஸநம் பண்ணிநலிந்தராக்ஷஸிகளுடைய அபராதங்களைக்கணக்கிட்டு சித்ரவதம்பண்ண உத்யோகித்து நின்றசொல்மிறுங்கனான திருவடியுமுட்பட (కఃకుప్యేత్) (க:குப்யேத்) என்றும், (నకశ్చిన్నాపరాధ్యతి) (நகஶ்சிந்நாபராத்யதி) என்றும் இத்யாத்யுபதேஶத்தாலே பொறுப்பிக்குமிவள், "மலராள்தனத்துள்ளான்" என்றும், "மாமலர்மங்கைமணநோக்கமுண்டான்" என்றும், "அல்லிமலர்மகள்போகமயக்குக்களாகியுநிற்கும்" என்றும் சொல்லுகிறபடியே, தன் போக்யதையிலே

---

அ.—(தர்ஜநபர்த்ஸநங்களில்) தர்ஜநமாவது-ஆயுதத்தாலே அடிக்கப்போகை. அதவா, தர்ஜநி முத்ரையாலே மிரட்டுகை. பர்த்ஸநமாவது - க்ரூரவாக்யங்களாலே மிரட்டுகை. நலிந்த - பாதித்த. சொல்மிறுங்கனான-தன் சொல்வழியேபோகவேண்டும்படி மூர்க்கனான; சொல்கேளாதவனான என்றபடி. மர்க்கடமாகையாலே பிடித்தத்தை விடாதிறே. திருவடியும் உள்பட; திருவடியையுங்கூட; தன்நியமநத்துக்குள்ளேயாம்படி;விதேயனாம்படி யென்னவுமாம். மங்கை-யுவதி. (மணநோக்கம்)மணத்தை-கல்யாணகுணத்தையுண்டாக்கும் நோக்கமென்றபடி. "மலராள் தனத்துள்ளான்" (மங்கைமணநோக்கமுண்டான்"என்று சொல்லுகையாலே-தததீநஸத்தாகத்வததேகதாரகத்வங்கள்தோற்றுகிறன. அல்லிமலர்மகள் போகமயக்குக்களாகியும் நிற்கும்-இதழ்களையுடைத்தான தாமரைப்பூக்களான பெரியபிராட்டியாருடைய அநுபவத்தாலுண்டான சித்தவிப்ரமமுடையனாயிருக்கும்.

(ఏవముక్త్వాతువైదేహీహనుమన్తంయశస్వినీ! రాజసంశ్రయవశ్యానాం కుర్వన్తీనాంపరాజ్ఞయా। విధేయానాఞ్చదాసీనాంకఃకుప్యేద్వానరోత్తమ) ராஜாவான ராவணனைப்பற்றியிருக்கையாலே பரதந்த்ரராய் அவனுடைய ஆஜ்ஞையாலே ப்ரவ்ர்த்தியாநிற்பாராய் அவனுக்கு விதேயராய் அடியராயிருக்கிறவர்களை, ஸ்வாமிகார்யம் செய்தார்களென்று உகக்கைக்குப்ராப்தராயிருக்ககோபிப்பானொருவனுண்டோ; வாநரோத்தமனாகையாலே உன்குரங்காட்டத்தின மிகுதியிறேயிது.

(పాపానాంవాశుభానాంవా వధార్హాణాంప్లవఙ్గమ। కార్యంకరుణమార్యేణ నకశ్చిన్నాపరాధ్యతి) நீ, வதிக்கைக்குயோக்யரென்று கொண்டு இவர்கள் உன்நினைவாலே பாபிகளாகவுமாம்; என்நினைவாலே சுபைகளாகவுமாம்; அறிவுடையவனானால் இவர்களுக்கு க்ர்பைபண்ணுகைகாண் ப்ராப்தம், ஆர்தான் அபராதம் பண்ணாதார்; அவ்வருக்கு இவ்வருகுதொற்றித்திரிகிற வுனக்கு தர்மஸூக்ஷ்மம் தெரியாதிறே; அயோத்யாஜநபதத்தை துடிக்கப்பண்ணிப்போந்த பெருமாளை ஸாதித்தன்றோ இங்குவருவது, பெருமாள் திருவுள்ளத்திலே நோவுபட வார்த்தைசொன்ன என்னை நலிந்தன்றோ இவர்களை நலிவது, ஓங்காண் !, பெருமாள் உன்னை விஜயம்சொல்லச்சொல்லி விட்டாரோ, நலியச்சொல்லிவிட்டாரோ.

மூ.—மதுப்பாலே இருவர்சேர்த்தியும் நித்யமென்கிறது.

வ்யா—குமிழிநீருண்டு, "நின்னன்பின் வழிநின்று சிலைபிடித்தெம் பிரானேக" என்கிறபடியே மாயாம்ர்கத்தின்பின்னே போவென்னிலும் விளைவதறியாதே அதின்பின்னேபோம்படி தன்சொல்வழி வருமவனைப் பொறுப்பிக்க வல்லளென்னுமிடம் ஸீதாவ்ருத்தாந்தத்திலே ஸித்தமிறே என்கை. "செய்தகவினுக்கில்லைகைம்மாறு" என்னும்படி இரண்டுதலைக்குந் தலைதடுமாறாக உபகரித்துத் தன்சொல்வழி போக வேண்டும்படியான திருவடியோடே மறுதலைக்கு மவள். "தான்மயங்கும்" என்னும்படியான போக்யதைக்குத்தோற்று, எத்தைச்செய்வோம் என்று தலைதடுமாறி, "நின்னன்பின்வழி நின்று" "அதனின்பின்னே படர்ந்தான்" என்னும்படி விளைவதறியாதே, முறுவலுக்குத்தோற்றுச் சொல்வழிபோ மவனைப் பொறுப்பிக்கும் என்னு மிடஞ்சொல்லவேண்டாவிறே" என்று இதுதன்னை இவர்திருத்தம்பியாரும் அருளிச்செய்தாரிறே.

ஆக, ஸ்ரீமத்பதத்தில் ப்ரகர்த்யம்சத்தை அருளிச்செய்தார் கீழ், ப்ரத்யயாம்சத்தை அருளிச்செய்கிறார் மேல் (மதுப்பாலே யென்றுதொடங்கி.)

அ.—குமிழ்நீருண்டு-குமிழ்எழும்படியாக நீருண்டவனுக்கு தேஹம்பரவசமா யிருக்குமாப்போலே போகபரவசனாய்க்கொண்டு. குமிழ்-புத்புதம். விளைவதறியாதே-மேல்ஸீதாபஹாராதிகளால் தமக்கு வருகிற அநர்த்தமறியாதே. அதனின் பின்னே-மாயாம்ர்கத்தின் பின்னே. வல்லள்-ஸமர்த்தை.

செய்தகவினுக்கு-செய்யப்பட்டஉபகாரத்துக்கு. கைம்மாறு-ப்ரத்யுபகாரம். இரண்டுதலைக்கும்-பெருமாளுக்கும் பிராட்டிக்கும். தலைதடுமாறாக-ஸ்வரூபஹாநிவாராதபடி. மறுதலைக்குமவள்-எதிரிடுமவள்; சண்டைபண்ணுமவள் என்னவுமாம். தான்மயங்கும்படியான என்னும்பாடத்தில் - தன்னைத்தானே கண்டுமயங்கும்படியான. போக்யத்திலே-அழகிலே. தலைதடுமாறுகை-தலையாலே தடுமாறுகை; அதாவது ரக்ஷிக்கை. நின்னன்பின்வழிநின்று-உன்னுடைய ப்ரீதிமார்க்கத்திலே நின்று. அதனின்பின்னே படர்ந்தான் - அந்தமாயாம்ர்கத்தின்பின்னே போனான். முறுவலுக்கு-மந்தஸ்மிதத்துக்கு. சொல்வழி உக்திமார்க்கத்திலே. இதுதன்னை-உபாயபூதனான ஈச்வரன், புருஷகார பூதையான பிராட்டிசொல்வழி நடக்குமிதுதன்னை. இவர் திருத்தம்பியாரும் அருளிச்செய்தாரிறே - இவர் திருத்தம்பியாரான அழகியமணவாளப் பெருமாள் நாயனாரும், ஸ்வகர்த்ருகமான அருளிச்செயல் ரஹஸ்யத்திலே அருளிச்செய்தாரிறே.

ஆக - ஸ்ரீஎன்றுபெரியபிராட்டியார்க்குத் திருநாமமென்று தொடங்கி இவ்வளவான ப்ரபந்தத்தாலே. ப்ரகர்த்யம்சத்தை-ப்ரகர்த்யம்சமான ஸ்ரீமச்சப்தார்த்தத்தை. ப்ரத்யயாம்சத்தை-மதுப்பர்த்தத்தை.

மூ.—இவளோடேகூடியே வஸ்துவினுடையவுண்மை. ஈஶ்வர ஸ்வாதந்த்ர்யத்தையும், சேதநனுடைய அபராதத்தையுங்கண்டு அகலமாட்டாள்.

---

வ்யா.—அதாவது-இம்மதுப்புநித்யயோகமதுப்பாகையாலே, இத்தால் புருஷகார பூதையான பிராட்டியும் ஈஶ்வரனுமான இருவருடைய சேர்த்தியும் எப்போது முண்டென்னு மிடம் சொல்லுகிறதென்கை. இந்நித்யயோகத்தை உபபாதிக்கிறார் (இவளோடேகூடியேவஸ்துவினுடையஉண்மையென்று.) அதாவது-(శ్రియఃపతిర్నిఖిలహేయ ప్రత్యనీక కల్యాణైకతానస్స్వేతరసమస్తవస్తువిలక్షణానన్తజ్ఞానానన్దైకస్వరూపః)(ஶ்ரியঃபதிர்நிகிலஹேய கல்யாணைகதாநஸ்ஸ்வேதர ஸமஸ்தவஸ்து விலக்ஷணாநந்தஜ்ஞாநாநந்தைக ஸ்வருப:) என்று - ஸ்வரூபநிரூபகமான ஜ்ஞாநாநந்தாதிகளுக்கு முன்னே ஶ்ரியঃபதித்வத்தைச் சொல்லும்படி, அவன்ஸ்வரூபத்துக்கு ப்ர தாநநிரூபகையாகையாலே, இவளோடேகூடியேவஸ்துவினுடைய ஸத்பாவமிருப்பதென்கை. ஆக-ஸ்வரூபாநுபந்தித்வப்ரயுக்தமான நித்யயோகத்தை அருளிச்செய்தாராயிற்று.

இனி, இவளுடைய குணப்ரயுக்தமானநித்யயோகத்தை அருளிச்செய்கிறார் (ஈஶ்வரஸ்வாதந்த்ர்யத்தையுமென்றுதொடங்கி.) அதாவது - அபராதங்களைப் பத்தும்பத்தாகக் கணக்கிட்டு, நிறுத்தறுத்துத் தீர்க்கும் ஈஶ்வரஸ்வாதந்த்ர்யத்தையும், (యద్బ్రహ్మకల్పనియుతానుభవేప్యనాశ్యమ్)(யத்ப்ரஹ்மகல்பநியுதாநுபவேப்யநாஶ்யம்)

---

அ.—இம்மதுப்புத்தான் - பெரியபிராட்டியார்க்கு வாசகமான ஶ்ரீமச்சப்த்தத்தின்மேலே வந்த இம்மதுப்புத்தான். எப்போதும்-காலத்ரயத்திலும்.

இந்நித்யயோகம் - பிராட்டியும் அவனுமான இருவருடையவும் நித்யயோகத்தை. (இவளோடேகூடியே) என்று அவதரிக்கையாலேயென்று கருத்து. ஆக-பிராட்டி அவனுக்கு ஸ்வரூப நிரூபகையாகையாலே, இவளையொழிய வஸ்துஸத்பாவமில்லை. ஸ்வரூபாநுபந்தித்வ ப்ரயுக்தமான-ஸ்வரூப நிரூபகையாகையாலே ஈச்வரஸ்வரூபத்தோடே சேர்ந்திருக்கையாலே உண்டான. அநுபந்தித்வம்-நிரூபகத்வேநஸம்பந்தித்வம்.

இனி-ஸ்வரூபநிரூபகத்வ ப்ரயுக்தமான நித்யயோகத்தையருளிச்செய்த வநந்தரம். இவளுடைய குணப்ரயுக்தமான - மாதாவானபிராட்டியினுடைய க்ர்பாகுண ப்ரயுக்தமான; வாத்ஸல்ய குணப்ரயுக்தமான என்னவுமாம். பத்தும் பத்தாகக்கணக்கிட்டு-பத்திலும் ஒன்று மறவாமல் பத்தாகவேகணக்கிட்டு. நிறுத்து-கணக்கிடுகைய்ன்றிக்கே ஸர்ஷபமாத்ரம் குலையாமல் நிறுத்து. ஸர்ஷபம் - கடுகு. தீர்க்குமென்றது - சிக்ஷிக்குமென்றபடி.

மூ.—சேதநனுக்குஇவையிரண்டையும்நினைத்து அஞ்சவேண்டா. இத்தால்-ஆஶ்ரயிக்கைக்குருசியேவேண்டுவது, காலம்பார்க்கவேண்டா என்கிறது.

---

வ்யா.—இத்யாதிப்படியே,காலதத்வமுள்ளதனையும் அநுபவியாநின்றாலும், சிறிதுவரையிட்டுக் காட்டக்கடவதல்லாதபடி பண்ணிவைத்த இச்சேதநனுடைய அக்ருத்யகரணாத்ய பராதத்தையுங்கண்டு,என்னாய்விளையப்புகுகிறதோவென்னும் பயத்தாலே, ஈஶ்வரனைவிட்டு ஒருக்ஷணகாலமும் அகலமாட்டாள் என்கை.

இத்தால் சேதநனுக்குப் பலிக்குமத்தை அருளிச்செய்கிறார் (சேதநனுக்கென்றுதொடங்கி.) அதாவது - இப்படி இவளிருந்து நோக்குகையாலே சேதநனுக்கு, ஈஶ்வரஸ்வாதந்த்ர்யமும், ஸ்வாபராதமுமாகிற இவை இரண்டையும் நினைத்து என்னாய்விளையப்புகுகிறதோவென்று அஞ்சவேண்டாவென்கை. இனி, இம்மதுப்பின் தாத்பர்யார்த்தத்தை அருளிச்செய்கிறார் (இத்தாலென்று தொடங்கி.) அதாவது - இப்படி புருஷகாரோபாய வஸ்துக்களினுடைய நித்யயோகத்தை ப்ரதிபாதிக்கிற விம்மதுப்பால், இவ்விஷயத்தை ஆஶ்ரயிப்பார்க்கு, ஆஶ்ரயிக்கையில் ருசியேவேண்டுவது, இரண்டுதலையுங்கூடி யிருக்குந்தசையிலேஆஶ்ரயிக்கவேணுமேயென்று, ஆஶ்ரயணத்துக்குக் காலம்பார்த்திருக்க வேண்டாவென்கிறதென்கை.

---

அ.—இத்யாதிப்படியே - இத்யாதியில் சொல்லுகிறபடியே. சிறிது வரையிட்டு - அல்பாம்சமாகிலும் குறையாமலென்றபடி. அக்ருத்யகரணமாவது -பரஹிம்ஸை, பரஸ்தோத்ரம், பரதாரபரிக்ரஹம், பரத்ரவ்யாபஹாரம், அஸத்யகதநம், அபக்ஷ்யபக்ஷணம் தொடக்கமானவை. ஆதிசப்தத்தாலே - பகவத்பாகவதாஉஸஹ்யாபசாரங்களைச் சொல்லுகிறது. என்னாய் விளையப் புகுகிறதோ- என்னவிதமாய் பலிக்கப்போகிறதோ. பயத்தாலே - ஆகாமியான துக்கத்தாலே.

இத்தால் - இந்நித்யயோகத்தாலே. நோக்குகையாலே-ரக்ஷிக்கையாலே. அஞ்சவேண்டா - பயப்படவேண்டா. இனி - ஸ்வரூபப்ரயுக்தமான நித்யயோகத்தையும், குணப்ரயுக்தமான நித்யயோகத்தையும், அதின் தாத்பர்யார்த்தத்தையும் அருளிச்செய்தவநந்தரம். மதுப்பின் தாத்பர்யார்த்தத்தை-மதுபர்த்தமான நித்யயோகத்தினுடைய தாத்பர்யார்த்தத்தை. ருசி-ரஸாந்தரத்தாலும் மாற்றவொண்ணாமல் ஒன்றிலே செல்லும்விருப்பம். இரண்டுதலையும் - பிராட்டியும் அவனும். தசையிலே-ஸமயத்திலே.

மூ.—இவள் ஸந்நிதியாலே காகம்தலைபெற்றது, அது இல்லாமையாலே ராவணன் முடிந்தான். புருஷகாரபலத்தாலே ஸ்வாதந்த்ர்யம் தலைசாய்ந்தால் தலையெடுக்குங் குணங்களைச் சொல்லுகிறது நாராயணபதம்.

---

வ்யா.—இனி, இவள் புருஷகாரத்வத்தின் அவஸ்யாபேக்ஷிதத்வத்தைஅறிவிக்கைக்காக, இவள்ஸந்நிதிக்கும் அஸந்நிதிக்கு முண்டானவாசியையருளிச்செய்கிறார் (இவள்ஸந்நிதியாலேயென்றுதொடங்கி.) அதாவது-(దేవ్యా కారుణ్యరూపయా)(தேவ்யாகாருண்யரூபயா) என்கிறபடியே, க்ர்பைதான் ஒருவடிவுகொண்டாப்போலேயிருப்பாளாய், ஸ்வதந்த்ரனான ஈஶ்வரனுக்கும் ஸ்வாதந்த்ர்யத்தையமுக்கி க்ர்பையைக் கிளப்புமவளான இவள்ஸந்நிதியாலே, அபராதத்தைத் தீரக்கழியச்செய்து, ப்ரஹ்மாஸ்த்ரத்துக் கிலக்காய்த் தலையறுப்புண்ணத்தேடின காகம், (కృపయాపర్యపాలయత్) (க்ர்பயாபர்யபாலயத) என்கிறபடியே, க்ர்பாவிஷயமாய்த் தலைபெற்றுப் போயிற்று; அப்படியிருக்கிற இவள்ஸந்நிதி யில்லாமையாலே போக்கற்றுச் செயல்மாண்டுநின்றநிலை ஒத்திருக்கச் செய்தேயும், காகத்தோபாதி அபராதமுமின்றிக்கேயிருக்க, ராமஶரத்துக்கிலக்காய் ராவணன் முடிந்துபோனானென்கை. ஆகையால், ஆஶ்ரயிப்பார்க்கு இவள்ஸந்நிதியே வேணுமென்றுகருத்து. ஆக, ஶ்ரீமத்பதார்த்தத்தை யருளிச்செய்தாராயிற்று.

அநந்தரம், நாராயணபதார்த்தத்தை அருளிச்செய்கிறார் (புருஷகாரபலத்தாலே யென்றுதொடங்கி.) அதாவது - உபதேஶத்தாலும், அழகாலும் கண்ணழிவற வசீகரித்துக் கார்யங்கொள்ளவல்ல புருஷகாரபலத்தாலே ஆஶ்ரயணோந்முகனானசேதநன் அநாதிகாலம்பண்ணின அபராதங்களைப்பார்த்துச்சீறி, "அங்கிகரியேன்" என்றிருக்கு மீஶ்வரஸ்வாதந்த்ர்யம் தலைமடிந்தால், அதின்கீழ் தலையெடுக்கப்பெறுதசெறுப்புத்தீர்ந்து, தலையெடுக்குங் குணங்களைச்சொல்லுகிறது நாராயணபதம் என்கை.

---

அ.—இனி-மதுபர்த்தமருளிச்செய்தவநந்தரம். வாசியை-தரதமபாவத்தை. ஈச்வரனுக்கும்-ஈச்வரனுடைய. அமுக்கி - அடங்கும்படிபண்ணி. தீரக்கழியச்செய்து-பூர்ணமாகப்பண்ணி. இலக்காய்-விஷயமாய். அப்படியிருக்கிற-க்ர்பாப்ரதாநையாய், ஸ்வதந்த்ரனானஈச்வரனுக்கும் ஸ்வாதந்த்ர்யத்தை யமுக்கி க்ர்பையைக் கிளப்புமவளாயிருக்கிற. போக்கற்று-போகைக்கிடமற்று; கதியற்றுஎன்றபடி. செயல்மாண்டுநின்றநிலை- வ்யாபார ஶூந்யனாயிருக்குமிருப்பு. ஒத்திருக்கச்செய்தேயும்-காகத்துக்கும் ராவணனுக்கும் ஸமாநமாயிருக்கச்செய்தேயும். கண்ணழிவற-தனக்கிடமுண்டாம்படி. தலைமடிந்தால்-தலைசாய்ந்தால். அதாவது-ஸ்வாதந்த்ர்ய ப்ரயுக்தமான சீற்றம் சமித்தால். செறுப்புத்தீர்ந்து-ஸங்கோசம்போய்.

மூ.— அவையாவன - வாத்ஸல்யமும்,

---

வ்யா.—அவைதானவையென்ன அருளிச்செய்கிறார் (அவையாவனவென்று தொடங்கி.)இவற்றிலே வாத்ஸல்யமாவது-வத்ஸத்தின்பக்கல் தேநுவிருக்கும் இருப்பு; அதாகிறது - அதினுடைய தோஷத்தைப் போக்யமாகக் கொள்ளுகையும், க்ஷீரத்தைக்கொடுத்து வளர்க்கையும், எதிரிட்டவரைக் கொம்பிலும் குளம்பிலுங்கொண்டு நோக்குகையுமிறே. அப்படியே ஈஶ்வரனும், தோஷத்தைபோக்யமாகக்கொண்டு(பாலேபோற்சீர்)என்கிறகுணங்களாலே தரிப்பித்து, (కథఞ్చన-నత్యజేయమ్) (கதஂசந-நத்யஜேயம்) (అభయంసర్వభూతేభ్యః) (அபயஂஸர்வபூதேப்ய꞉) என்றும் சொல்லுகிறபடியே, அநுகூலர் நிமித்தமாகவும், ப்ரதிகூலர் நிமித்தமாகவும் நோக்கும்.

---

அ.—அவைதான்-தலையெடுக்குங்குணங்கள்தான். இவற்றிலே-தலையெடுக்குங் குணங்களிலே. அதாகிறது-வத்ஸத்தின்பக்கலிலே தேநுவிருக்குமிருப்பாவது. குளம்பிலும் - குளம்படியிலும். அப்படியே - ரக்ஷிக்குமாப்போலே. (సకృదేవప్రపన్నాయ తవాస్మీతిచయాచతే। అభయంసర్వభూతేభ్యో దదామ్యేతద్వ్రతంమమ) (ஸக்ர்தேவப்ரபந்நாயதவாஸ்மீதிசயாசதே - அபயஂஸர்வபூதேப்யோததாம்யேதத்வ்ரதஂமம.) "మిత్రభావేన" "மித்ரபாவேந" என்கிறச்லோகத்திலே - ப்ரக்ர்தியையருளிச்செய்தாராய், இதில் - ததநுகுணமாக ப்ரதிஜ்ஞைபண்ணுகிறார். [సకృదేవప్రపన్నాయ-ஸக்ர்தேவப்ரபந்நாய]ஸக்ர்ச்சப்தத்துக்கு-ஸஹஸாஆதேஶமாய் ஸஹஸைவப்ரபந்நாய என்றபடி. அதாகிறது - தன் அயோக்யதையைப்பாராமல் என்குணத்தையே விச்வஸித்துப்ரபந்நனுகை;இது ஆழ்வான்நிர்வாஹம். கீழ் அநாதிகாலம் ஸஂஸரித்துப் போந்தவன்,மேல்அநந்தகாலம் பலாநுபவம் பண்ணப்புகுகிறவனுகையாலேயாவதாயுஷம்அநுவர்த்தித்தாலும் "ஸக்ர்த்" என்கைக்குப் போருமத்தனையன்றோவென்று எம்பார் நிர்வாஹம். ஈச்வரவிஷயீகாரத்துக்கு ஒருக்காலமையும், பின்பு ஆவர்த்திக்கிறதுஉபாயவைபவத்தால்வந்த ரஸ்யதையாலேஎன்று பட்டர்நிர்வாஹம். ஸக்ர்தேவ என்கையாலே - உபாயத்துக்கு விஹிதமான அஸக்ர்தாவர்த்தியை வ்யாவர்த்திக்கிறது. [తవాస్మీతిచ యాచతే - தவாஸ்மீதிசயாசதே] என்கிறவர்த்தமாந நிர்த்தேசத்தாலே-அநவரதபாவநாரூபமான பக்தியைச் சொல்லுகிறதென்று நிர்வஹிப்பாருமுண்டு. [అభయంసర్వభూతేభ్యోదదామి - அபயஂ ஸர்வபூதேப்யோததாமி] பூதங்கள் நிமித்தமாக பயநிவ்ர்த்தியைப் பண்ணிக்கொடுப்பன். (భీతార్థానాంభయహేతురితిహేతౌపఞ్చమీ) (பீதார்த்தாநாஂபயஹேதுரிதிஹேதௌபஂசமீ.) மஹாராஜர் எதிரிடிலும் காட்டிக்கொடோம், இவன்றான் அகலுமளவிலும் இவன்கையிலுங்காட்டிக்கொடோம். [ఏతద్వ్రతంమమ - ஏதத்வ்ரதஂமம] நமக்கு அநுபாலநீயமான ஸங்கல்பமிது. அமோகஸங்கல்பனான நமக்கு ஸங்கல்பங்களடையக் குலையிலும்குலையாதஸங்கல்பமிது.

மூ.—ஸ்வாமித்வமும்,ஸௌஶீல்யமும், ஸௌலப்யமும்,

வ்யா.—ஸ்வாமித்வமாவது - இவன் விமுகனான தசையி லும் விடாதே நின்று, ஸத்தையைநோக்கிக்கொண்டு போருகை க்கு ஹேதுவான ஒருபந்தவிஶேஷம்; அதாகிறது-உடையவனா யிருக்குமிருப்பு; அத்வேஷந்தொடங்கி கைங்கர்யபர்யந்தமாக வுண்டான ஸ்வபாவவிஶேஷங்களையெல்லாம் உண்டாக்குகிறது, இந்தபந்தவிஶேஷம்டியாக. ஸௌஶீல்யமாவது - உபயவிபூதி யோகத்தாலும், பெரியபிராட்டியாரோட்டைச் சேர்த்தியாலும், நிரங்குஶமாயிருக்கிற ஈஶ்வரனுடைய மேன்மையையும், தங்கள் சிறுமையையும் பார்த்து, "அவனெவ்விடத்தான்யானார்" என்று பிற்காலியாதபடிஎல்லாரோடும் ஒக்கமேல்விழுந்து புரையறக்கலக் கையும், அதுதன்பேறாகவிருக்கையும்,எதிர்த்தலையிலே அபேக்ஷை யின்றியிலே யிருக்கக் கலக்கையும். ஸௌலப்யமாவது-கண்ணுக்கு விஷயமன்றிக்கேயிருக்கிற தான், கண்ணாலேகண்டு ஆஶ்ரயிக்க லாம்படி எளியனாயிருக்கை.

---

அ.—இவன்விமுகனான தசையிலும்-அவன்பக்கல்தலைசாயே னென்று ஸ்வதந்த்ரனாய் சப்தாதி விஷயாந்தரப்ரவணனான தசை யிலும். விடாதேநின்று - அந்தர்யாமியாய் நின்று. ஸத்தையை- ஸ்வரூபத்தை. அதாகிறது - பந்தவிசேஷமாவது. பந்தவிசேஷ மடியாக - ஸ்வாமித்வமடியாக.

உபயவிபூதியோகத்தாலும் - உபயவிபூதியோடும் தனக்குண் டானஸ்வாமித்வரூபஸம்பந்தத்தாலும். மேன்மையையும்-பரத்வத் தையும். சிறுமையையும் - நிகர்ஷத்தையும். பிற்காலியாதபடி-பின் னே கால்வையாதபடி; பின்வாங்காதபடி என்றுமாம். ஒக்க-துல்ய மாக. மேல்விழுந்து - அவர்கள் பிற்காலிக்குந் தசையிலும் தான் மேல்விழுந்து. புரையற - ஸ்வோத்கர்ஷமும்பரநிகர்ஷமும் நெஞ் சில் தட்டாதபடி; பேதமின்றிக்கே என்றபடி. அது - புரையறக் கலக்கை. தன்பேறாக - தனக்கு புருஷார்த்தமாக. எதிர்த்தலையி லே - சேதநனிடத்திலே. ஆகஸௌசீல்யமாகிறது - ஸர்வசேதந ரோடும்தாரதமபாவமன்றியிலேதன்பேறாகப்புரையறக்கலக்கையும், எதிர்த்தலையில் அபேக்ஷையின்றியிலேயிருக்க புரையறக்கலக்கை யுமென்று இரண்டுவிதமாகவிருக்கும்;- முதல்சொன்னது ஜ்ஞாநி கள்விஷயம்; இரண்டாவது - ஸம்ஸாரிகள் விஷயம். கண்ணுக்கு விஷயமன்றிக்கே - ப்ராக்ருதசக்ஷுர்விஷயமன்றிக்கே.

கண்ணாலே - ப்ராக்ருதசக்ஷுஸ்ஸாலே. எளியனாயிருக்கை. அர்ச்சாரூபேணஸுலபனாயிருக்கை.

மூ.—ஜ்ஞாநமும், ஶக்தியும். குற்றங்கண்டு வெருவாமைக்கு வாத்ஸல்யம்; கார்யம்செய்யும் என்று துணிகைக்கு ஸ்வாமித்வம்.

---

வ்யா.—ஜ்ஞாநமாவது - இச்சேதநனுக்குக் கழிக்க வேண்டும் அநிஷ்டங்களையும், கொடுக்கவேண்டும் இஷ்டங்களையும் நேராக அறிகைக்கீடாக ஸ்வவ்யதிரிக்த ஸமஸ்தபதார்த்தங்களையும், ஒருக்காலே அபரோக்ஷிக்கவல்ல அறிவு. ஶக்தியாவது- ஹேயரான நித்யஸம்ஸாரிகளை, உபாதேயதமரான நித்யஸூரிகளோடு ஒருகோவையாக்கவல்ல அகடிதகடநாஸாமர்த்த்யம். இவற்றில் வாத்ஸல்யாதிகள் நாலும், ஆஶ்ரயணஸௌகர்யாபாதகம்; ஜ்ஞாநாதிகள் இரண்டும், ஆஶ்ரிதகார்யாபாதகம்; "நிகரில் புகழாய்" என்றுதொடங்கி வாத்ஸல்யாதிகள் நாலையுமிறே, ஆஶ்ரயணத்துக்குடலாக ஆழ்வார் அருளிச்செய்தது. ஜ்ஞாநஶக்திகள் இரண்டுஞ்சொன்னவிது ப்ராப்தி பூர்த்திகளுக்கும் உபலக்ஷணம்; கார்யகரத்வத்துக்கு அவையும் அபேக்ஷிதங்களாகையாலே.

இக்குணங்களுக்கு இவ்விடத்தில் விநியோகங்கள் எவையென்ன அருளிச்செய்கிறார் (குற்றங்கண்டென்றுதொடங்கி.) அதாவது-ஆஶ்ரயணோந்முகனான இச்சேதநன், தன்தோஷத்தைப்பார்த்து அஞ்சாமைக்குறுப்பு, தோஷத்தைப் போக்யமாகக் கொள்ளும் வாத்ஸல்யம். நங்கார்யம் செய்யுமோ, செய்யானோவென்று ஶங்கியாதே கார்யஞ்செய்யுமென்று விஶ்வஸிக்கைக்குறுப்பு, இழவுபேறு தன்னதாம்படியான ஸ்வாமித்வம்; ,

---

அ.—நேராக - ப்ரத்யக்ஷமாக. ஈடாக-யோக்யமாக. அபரோக்ஷிக்கவல்ல - ப்ரத்யக்ஷமாக அறிகைக்குசக்தமான. ஹேயரான- த்யாஜ்யரான. உபாதேயதமரான - பரமோத்தேச்யதமரான. ஒருகோவையாக்கவல்ல - ஒருசேர்த்தியாக்கவல்ல. அதாவது - விஜாதீயர் சேர்ந்தாப்போலிருக்கையன்றிக்கே ஸஜாதீயர் அநேகர் சேர்ந்தாப்போலேயிருக்கை.

நிகர் - த்ர்ஷ்டாந்தம். உடலாக-யோக்யமாக. ப்ராப்தியாவது- பிதாவைப்போலே நியாமகனாயிருக்கையாதல்; நிருபாதிக ஶேஷித்வமாதல். பூர்த்தியாவது-உபயவிபூதிநிர்வாஹகனாயிருக்கையாதல்; நாராயணத்வத்தால் வந்த ஸமஸ்தகுணவிபூதிகளையுடையவனாயிருக்கையாதல்.

இக்குணங்களுக்கு - வாத்ஸல்யாதிகுணங்களுக்கு. இவ்விடத்தில் - எம்பெருமானை உபாயமாக ஆச்ரயிக்கிற விடத்தில். அஞ்சாமைக்கு - பயப்படாமைக்கு. உறுப்பு - யோக்யம். இழவுபேறுகள்- நாஶலாபங்கள்.

மூ.—ஸ்வாமித்வங்கண்டகலாமைக்குஸௌஶீல்யம்;கண்டுபற்றுகைக்கு ஸௌலப்யம்; விரோதியைப்போக்கித் தன்னைக்கொடுக்கைக்கு ஜ்ஞாநஶக்திகள்.இங்குச்சொன்னஸௌலப்யத்துக்கெல்லைநிலம் அர்ச்சாவதாரம்;

---

வ்யா.— உபய விபூதிக்கும் கடவனாயிருக்கும் பெருமைக்கு ப்ரகாஶகமான ஸ்வாமித்வத்தைக்கண்டு, ஸ்வநிகர்ஷாநு ஸந்தாநத்தாலே அகலாமைக்குறுப்பு, தாழநின்றவர்களோடேபுரையறக்கலக்கும் ஸ்வபாவமான ஸௌஶீல்யம்; அதீந்த்ரியன் என்று பிற்காலியாமல்கண்ணாலேகண்டு ஆஶ்ரயிக்கைக்குறுப்பு, தன்வடிவை சக்ஷுர்விஷயமாக்குகையாகிற ஸௌலப்யம். (సర్వపాపేభ్యోమోక్ష యిష్యామి) (ஸர்வபாபேப்யோமோக்ஷயிஷ்யாமி) என்கிறபடியே, ப்ராப்திவிரோதியைப்போக்கி ப்ராப்யனான தன்னை உபகரிக்கைக்குறுப்பு, ப்ராப்தாவான இவன் கீழ்நின்றநிலையும் மேல்போக்கடியும் அறிகைக்கும் அறிந்தபடியே செய்துதலைக்கட்டுகைக்கும் ஏகாந்தங்களான ஜ்ஞாநஶக்திகள்என்கை.

ஸௌகர்யாபாதககுண சதுஷ்கத்திலும் ஸௌலப்யம்ப்ரதாநமாகையாலே, அந்தஸௌலப்யகாஷ்ட்டையை யருளிச்செய்கிறார் (இங்குச்சொன்னவென்று தொடங்கி.) அதாவது இப்பதத்திலே ஆஶ்ரயணோபயோகியாகச் சொன்ன ஸௌலப்யத்துச்கு ஸீமாபூமி, "தமருகந்ததெவ்வுருவம் அவ்வுருவந்தானே" என்கிறபடியே, ஆஶ்ரிதர்உகந்ததொன்றைத் திருமேனியாகக்கொண்டு ஸதாஸந்நிதிபண்ணியிருக்கும் அர்ச்சாவதாரமென்கை.

---

அ.—கடவனாயிருக்கும் - ப்ராப்தனாயிருக்கும். அகலாமைக்கு - விடாமைக்கு. அதீந்த்ரியன் - கண்ணாலே காணப்படாதவன். உபகரிக்கைக்கு-கொடுக்கைக்கு. ப்ராப்தாவான - ஆச்ரயிக்கிற. இவன் - இச்சேதநன். கீழ்நின்ற நிலையாவது-ப்ராப்திப்ரதிபந்தகபூயிஷ்டனாயிருக்கை. மேல்போக்காவது - பரமபதத்தேறப்போருகை. அடி-இரண்டுக்கும்ஹேது. போக்கடி-ப்ராப்யதேசம். ப்ராப்தி-பிதா புத்ரனை நியமிக்குமோ பாதிநியமிக்கைக் குறுப்பான ஸம்பந்தம். ஏகாந்தங்களான - அவச்யாபேக்ஷிதங்களான.

ஸௌகர்யாபாதகங்கள் - ஆச்ரயண ஸௌகர்யாபாதகங்கள். ஸௌலப்யம் ப்ரதாநமாகையாலே - ஸௌலப்ய மில்லாதபோது வாத்ஸல்ய ஸ்வாமித்வ ஸௌசீல்யங்கள் ஸௌகர்யா பாதகமாகமாட்டாமையாலே அக்குணங்களில் ஸௌலப்யம் ப்ரதாந மென்றபடி. அந்தஸௌலப்ய காஷ்ட்டையை - அந்தஸௌலப்யஸீமாபூமியை. இப்பதத்திலே – பூர்வகண்டஸ்த்த நாராயணபதத்திலே. தமர்-பக்தர். உருவம்-திருமேனி. அவ்வுருவம் - ஆச்ரிதருகந்தவிக்ரஹம். தானேயாம் - ஆச்ரிதருகந்த திவ்யமங்கள விக்ரஹத்தையே தனக்குஅஸாதாரணமாய் அப்ராக்ர்தமான விக்ரஹமாகவுடையனாயிருக்கும்.

மூ.—இதுதான் பரவ்யூஹவிபவங்கள்போ லன்றிக்கே கண்ணாலே காணலாம்படியிருக்கும்.

---

வ்யா.—இதுதன்னையுபபாதிக்கிறார் (இதுதானென்றுதொடங்கி.) அதாவது-இவ்வர்ச்சாவதாரந்தான் தேஸவிப்ரக்ர்ஷ்டதையாலே கண்ணுக்கு விஷயமாகாதபரவ்யூஹங்களும்,காலவிப்ரக்ர்ஷ்டதையாலேகண்ணுக்கு விஷயமாகாதபடிபோன விபவமும் போலன்றிக்கே, ஆஸந்நமாய் அநவரத ஸந்நிதிபண்ணிக் கொண்டிருக்கையாலே, அநவரதம் கண்ணாலே காணலாம்படி யிருக்குமென்கை.

---

அ.—இவ்வர்ச்சாவதாரந்தான்-ஆச்ரிதருகந்ததிருமேனியைத் தனக்கு அஸாதாரண திவ்யமங்கள விக்ரஹமாகக்கொண்டு ஸதாஸந்நிதிபண்ணியிருக்கும் இவ்வர்ச்சாவதாரந்தான். தேசவிப்ரக்ர்ஷ்டதையாலே-தேசதூரத்தாலே. மோக்ஷதர்மத்திலே;-நாமிருக்கிற பூமிமுதற்கொண்டு கீழ்சேஷலோக பர்யந்தம்பூலோகமென்று வ்யவஹரிக்கப்படும்; இந்த பூமிமுதற்கொண்டு ஸூர்யமண்டலபர்யந்தம் லக்ஷயோஜநபர்யந்தவிப்ரக்ர்ஷ்டதையை யுடைத்தாயிருக்கும்; புவர்லோகம் ஸூர்யலோகம் முதற்கொண்டு சந்த்ரமண்டல பர்யந்தம் பதினாலு லக்ஷம்யோஜநையையுடைத்தாயிருக்கும்; ஸுவர்லோகம், த்ருவமண்டலத்துக்குமேல் கோடியோஜநையை யுடைத்தாயிருக்கும்; மஹர்லோகம், அதுக்குமேல் இரண்டுகோடி யோஜநையையுடைத்தாயிருக்கும்; ஜநோலோகம், அதுக்குமேல் எட்டுகோடி யோஜநையையுடைத்தாயிருக்கும்;தபோலோகம், அதுக்குமேல்பன்னிரண்டுகோடியோஜநையை யுடைத்தாயிருக்கும்;ஸத்யலோகம்,அதுக்குமேல் கொஞ்சம் குறைச்சலாக இரண்டுகோடியோஜநையையுடைத்தாயிருக்கும்;அதுக்குமேல் அந்தம்தமஸ்ஸு; அதுக்குமேல் அண்டகடாஹம், கோடியோஜநையையுடைத்தாயிருக்கும்; அதுக்குமேல் ஜலாவரணம், பத்துக்கோடியோஜநையை யுடைத்தாயிருக்கும்; இந்தப்ரகாரம் அவ்யக்தபர்யந்தம் பத்துப்பத்துகோடியோஜநைதூரமுள்ளதாக அறியத்தக்கது; இதுக்குமேல் ஸ்வயம் ப்ரகாசமானபரமபதத்திலே பஞ்சோபநிஷண்மயமான திவ்யமங்கள விக்ரஹ விசிஷ்டனாய் ஸர்வ வ்யாபகனான பரவாஸுதேவன் தீர்க்கமாய் அதிவிசாலமான இந்தலோக ஸ்திதியைப்பாராநின்றுகொண்டு ஹ்ர்ஷீகேசனாய் எழுந்தருளி யிருக்கிறான்; இது வாய்த்து-பரத்வம். காலவிப்ர க்ர்ஷ்டதையாலே-காலாதிக்ரமணத்தாலே காலவ்யவதாநத்தாலே என்றுமாம். விபவமும்-விபவாவதாரமும்; அதாவது-ராமக்ர்ஷ்ணாத்யவதாரங்கள். ஆஸந்நமாய்-ஸந்நிஹிதமாய்; ஸந்நிக்ர்ஷ்டமாய்.

மூ.—இவை யெல்லாம் நமக்கு நம்பெருமாள் பக்கலிலே காணலாம்.

---

வ்யா.—இக்குணங்களெல்லாம அர்ச்சாவதாரத்திலே காணலாமோவென்ன அருளிச்செய்கிறார்(இவையெல்லாம்நமக்குநம்பெருமாள் பக்கலிலே காணலாமென்று.) அதாவது-ஸௌகர்யாபாதகமாகவும், கார்யாபாதகமாகவும் சொன்ன இக்குணங்களெல்லாம், இவை காண்கையிலே அபேக்ஷையுடைய நமக்கு நம்முடைய பெருமாள்பக்கலிலேகாணலாம்என்கை.

---

அ.—இக்குணங்களெல்லாம்-ஆச்ரயணஸௌகர்யாபாதகங்களான வாத்ஸல்யாதி குணங்களும், ஆச்ரிதகார்யாபாதகங்களான ஜ்ஞாநசக்த்யாதிகளும். ஸௌகர்யாபாதகமாகவும்- ஆச்ரயண ஸௌகர்யாபாதகமாகவும். கார்யாபாதகமாகவும் - ஆச்ரிதகார்யாபாதகமாகவும்.

நமக்கு-ஆத்மநிபஹு வசநமாக அருளிச்செய்தாராகவுமாம்; ஸ்வஸம்பந்தபரம்பரையைச்சேர்த்துக்கொண்டு அருளிச்செய்தாராகவுமாம்.

நம்பெருமாள் என்னு மதுக்கு ஐதிஹ்யம்; - முன்பொரு காலத்திலே - கலாபத்திலே க்ரூரராயிருப்பார்சிலர் பெருமாளையும் அத்தேசத்திலுள்ள எம்பெருமான்களையும் வாரிக்கொண்டு போர, அப்போது பெருமாள்திருவடிகளுக்கு நல்லராயிருக்கிற ராஜாகண்டகோபாலரென்கிற விண்ணப்பம் செய்வார், பெருமாளைப்பிரியக்ஷமரன்றிக்கே அங்கேசென்று அவனைக்கண்டு தம்முடைய பண்களாலே அவனை வசீகரிக்க அவனும் அதிப்ரீதனாய் உமக்கு வேண்டுவதென்னென்ன; நம்முடைய பெருமாள் இங்கே வந்தார், அவரைத்தரவேணும் என்ன; ஆகில் கொண்டு போம் என்று பலவிக்ரஹங்களைக்காட்ட; அப்போது அவர்கள் நடுவே தேடிக்காணமல் க்லேசித்திருக்க; அப்போது அவனுடைய பெண்பிள்ளை அழகிய மணவாளப்பெருமாளான இவரைதன் அந்தப்புரத்திலே ஆதரித்துக்கொண்டுபோராநிற்க அச்செய்தியை யறிந்து, அவன், அவளறியாமல் கொண்டுவந்து இவரோ உம்முடைய பெருமாள் என்றுகாட்டிக்கொடுக்கக்கண்டு, "இவர்தான் நம்பெருமாள்" என்று அணைத்தெடுத்துக்கொண்டு அதித்வரையுடனே கோயிலேற எழுந்தருளப்பண்ணிக் கொண்டு வந்தாரென்று ப்ரஸித்தமிறே. அப்போது அனைவரும் பெருமாளன்று என்று சங்கித்ததுக்கு திருவாழியாழ்வான் பிள்ளையும், "இவர் நம்முடையபெருமாள்" என்று மேலெழுத்திட் டருளினாராம். அன்று தொடங்கிஅவர்க்குஅதுவேநிரூபகமாய்த்தென்று மருளிச்செய்வர்கள்.

மூ.—திருக்கையிலேபிடித்த திவ்யாயுதங்களும், வைத்தஞ்சல் என்றகையும், கவித்தமுடியும், முகமும் முறுவலும், ஆஸநபத்மத்திலே யழுத்தின திருவடிகளுமாய் நிற்கிற நிலையேநமக்குத்தஞ்சம். ரக்ஷகத்வ போக்யத்வங்களிரண்டும் திருமேனியிலே தோற்றும்.

---

வ்யா.—பெருமாள்பக்கலிலே இக்குணங்களுக்குப்ரகாஶகங்களாயுள்ளவற்றைச்சொல்லி,இவற்றுடனேநிற்கிறநிலையேநமக்குத்தஞ்சமென்கிறார்(திருக்கையிலேயென்றுதொடங்கி.) அதாவது-கார்யகரத்வோபயோகியான ஜ்ஞாநஶக்திகளுக்கு ப்ரகாஶகமாம்படி, திருக்கைகளிலேதரித்துக்கொண்டிருக்கிற ஶங்கசக்ராதி திவ்யாயுதங்களும், வாத்ஸல்யப்ரகாஶகமாம்படி வைத்து அஞ்சலென்றகையும், ஸ்வாமித்வப்ரகாஶகமாகக் கவித்தமுடியும், ஸௌஶீல்யப்ரகாஶகமானமுகமும் முறுவலும், அனைவர்க்கும் கண்டுபற்றலாம்படியான ஸௌலப்யப்ரகாசகமாக ஆஸநபத்மத்திலே அழுத்தின திருவடிகளுமாய்க்கொண்டு எழுந்தருளி நிற்கிற நிலையே அநந்யகதிகளான நமக்குரக்ஷகம் என்கை. உபாயோபேயநிஷ்டர்க்கு அபேக்ஷிதமான ஆகாரங்கள் இரண்டும் கீழ்ச்சொன்னபடியே நிற்கிற திருமேனியிலே தோற்றுமென்கிறார் (ரக்ஷகத்வ போக்யத்வங்க ளிரண்டுந்திருமேனியிலே தோற்றுமென்று.)

---

அ.—கவித்த-கவ்விக்கொண்டுகிடக்கிற.இத்தால்-த்ர்டாஸக்தியையும், ஸுகடிதத்வத்தையும் சொல்லுகிறது. ஸ்வர்மிக்கிறே முடியுள்ளது; ஆகையாலே, முடி ஸ்வாமித்வப்ரகாசகம். அபிமத விஷயத்தைக்கண்டாலிறே முகவிகாஸமும் மந்தஸ்மிதமுமுண்டாவது; ஆகையாலே, முகமும் முறுவலும்-ஸௌசீல்ய ப்ரகாசகம். அனைவர்க்கும்-ஸர்வாதிகாரிகளுக்கும். பற்றலாம்படி - ஆச்ரயிக்கலாம்படி. ஆஸநபத்மத்திலே - பத்மாஸநத்திலே. நிற்கிறநிலே-இருக்கிறவிருப்பு.ஆஸநபத்மத்திலேதிருவடி அழுந்தியிருக்கை, அனைவரும் கண்டு ஆச்ரயிக்கலாம்படியான ஸௌப்லய ப்ரகாசகமென்கை. அநந்யகதிகளான-அகிஞ்சநாநந்யகதிகளான.

உபாயநிஷ்டர் என்கிறது-உபாயாத்யவஸாய நிஷ்டனை;உபேயநிஷ்டர் என்கிறது-ப்ராப்யத்வரா நிஷ்டனை. உபாயநிஷ்டனென்கிறது-த்ர்ப்தப்ரபந்நனை; உபேயநிஷ்டரென்கிறது-ஆர்த்தப்ரபந்நனை.உபாயநிஷ்டர்க்க பேக்ஷிதங்களான ஆகாரங்கள்-வாத்ஸல்யாதிகளும் ஜ்ஞாந சக்த்யாதிகளும்; உபேயநிஷ்டர்க்க பேக்ஷிதங்களான ஆகாரங்கள்-திவ்யாயுதங்கள்.

மூ.—(சரணௌ)திருவடிகளை. இத்தால்-சேர்த்தியழகையும் உபாயபூர்த்தியையுஞ் சொல்லுகிறது. பிராட்டியும் அவனும்விடிலும் திருவடிகள்விடாது. திண்கழலாயிருக்கும்.

---

வ்யா.—அதாவது-ரக்ஷணபரிகரமானதிவ்யாயுதங்களோடும், ரக்ஷணத்துக்குக் கவித்தமுடியோடுங் கூடியிருக்கையாலே ரக்ஷகத்வம் தோற்றுகையாலும், "அணியாராழியுஞ் சங்கமும்" "முடிச்சோதியா யுனதுமுகச்சோதிமலர்ந்ததுவோ" என்கிறபடியே, அவைதானே அழகுக்குடலாய் வைத்து அஞ்சல் என்றகையும், முகமும், முறுவலும், ஆஸநபத்மத்திலே அழுத்தின திருவடிகளும் ஒரொன்றே அழகுக்கு எல்லைநிலமா யிருக்கையாலே போக்யத்வம் தோற்றுகையாலும், இரண்டும்திருமேனியிலே ப்ரகாஶிக்குமென்கை. ஆக, நாராயணபதார்த்தத்தை அருளிச்செய்தாராயிற்று.

இனி, (𑌚𑌰𑌣𑍌) (சரணௌ) என்கிற பதத்துக்கு அர்த்தமருளிச்செய்கிறார் (சரணௌ-திருவடிகளையென்று.) இந்த த்விவசநத்தால் சொல்லுகிற அர்த்தத்தை அருளிச்செய்கிறார் (இத்தாலென்றுதொடங்கி.) அதாவது - (𑌚𑌰𑌣𑍌) (சரணௌ) என்று-இரண்டுதிருவடிகளையும் சொல்லுகிற இத்தால் -(இணைத்தாமரையடி) என்கிறபடியே-இரண்டுதாமரைப்பூவை நிரைத்துவைத்தாப்போலேயிருக்கிறசேர்த்தியழகையும்,த்விவசநம், இரண்டுக்குமேல் மற்றொன்றுபுகுரா ஸஹியாமையாலே, ஸஹாயாந்தர நிரபேக்ஷமான உபாயபூர்த்தியையுஞ் சொல்லுகிறதென்கை. இனி,உபாயத்வைகாந்தமான இதின்குணதிக்யத்தை அருளிச்செய்கிறார் (பிராட்டியுமென்றுதொடங்கி.)

---

அ.—ரக்ஷணத்துக்கு-ரக்ஷிக்கைக்கு. அணியாராழியும்சங்கமும்-ஆபரணதயா பூர்ணமான ஆழியும் சங்கும். அஞ்சலென்றகையும்—அபயப்ரதாந ஹஸ்தமும். அழகுக்கு எல்லை நிலமாயிருக்கையாலே—தன்னோடொத்த அழகியதும் தனக்குமேற்பட்ட வழகியதும்இன்றிக்கேயிருக்கையாலே. இரண்டும்-ரக்ஷகத்வமும்,போக்யத்வமுமாகிற இரண்டும்.

இனி - நாராயணபதார்த்தத்தை அருளிச்செய்தவநந்தரம். இந்தத்விவசநத்தால் - சரணபதத்தின்மேல்வந்த த்விவசநத்தால். இணைத்தாமரை - பரஸ்பரதுல்யங்களாய் ஒன்றோடொன்று சேர்ந்திருக்கிற. நிரைத்துவைத்தாப்போலே-பங்தியாகச் சேர்த்துவைத்தாப்போலே.

இனி-சரணபதத்தினுடைய த்விவசநார்த்தத்தை யருளிச்செய்தவநந்தரம். உபாயத்வைகாந்தமான - உபாயத்வத்துக்கு அவச்யாபேக்ஷிதமான. இதின்-திருவடிகளுடைய.

மூ.—ஶேஷிபக்கல் ஶேஷபூதனிழியும்துறை, ப்ரஜை முலையிலேவாய்வைக்குமாப்போலே. இத்தால்-பிராட்டிக் கிருப்பிடமாய் குணப்ரகாஶகமுமாய் ஶிஶுபாலனையுமகப்படத் திருத்திச்சேர்த்துக்கொள்ளுந் திருமேனியை நினைக்கிறது..

---

வ்யா.—அதாவது - ஸ்ரீமத்பதத்திலே புருஷகாரபூதையாகச் சொன்ன பிராட்டியும், அவள்தானே சிதகுரைக்கிலும் "என்னடியாரதுசெய்யார்" என்னும்படி, நாராயணபதத்தில் சொன்ன குணவிஶிஷ்டனான அவனும் கைவிடிலும், திருவடிகள் தன் வைலக்ஷண்யத்தாலே துவக்கிக்கொள்ளுகையாலே கைவிடாது. "வண்புகழ்நாரணன்றிண்கழல்" என்கிறபடியே - பற்றினாரை நழுவவிடாததிண்மையையுடைத்தாயிருக்குமென்கை.

இந்த குணாதிக்யத்தைப்பற்றவுமன்றிக்கே, இவன் தன்ஸ்வரூபாநுகுணமும், திருவடிகளிலே இழிகை யென்னுமத்தை ஸத்ர்ஷ்டாந்தமாகஅருளிச்செய்கிறார்(ஶேஷிபக்கலென்று தொடங்கி.) அதாவது - ஶேஷிபக்கல் ஆஶ்ரயிக்க விழியும் ஶேஷபூதன் தன்ஸ்வரூபாநுகுணமாக இழியுந்துறை திருவடிகள்; ஸ்தநந்தய ப்ரஜை தாயினுடைய அவயவமெல்லாங் கிடக்க, தனக்குவகுத்த தாயுள்ள முலையிலே வாய்வைக்குமாப்போலேயென்கை. திருவடிகளைச்சொன்னவிது திருமேனிக்கு உபலக்ஷணமென்கிறார் மேல் (இத்தாலென்றுதொடங்கி.) அதாவது - (చరణౌ) (சரணௌ) என்று-விக்ரஹைகதேஶமான திருவடிகளைச்சொன்ன இத்தால்-"திருவிருந்தமார்பன்" என்னும்படி, ஸ்ரீமத்பத்த்தில்சொன்ன,

---

அ.—அவள்தானே - கடகையானவள்தானே. சிதகு-தோஷத்தை. குணவிசிஷ்டனான - வாத்ஸல்யாதிகுணவிசிஷ்டனான. தன்வைலக்ஷண்யத்தாலே— தன்னழகாலே. துவக்கிக்கொள்ளுகையாலே - வ்யாமுக்தமாக்கிக் கொள்ளுகையாலே; தன்னை அரைக்ஷணம் பிரியிலும்வாடிப்போம்படிபண்ணுகையாலே யென்றபடி. திண்மை-தார்ட்யத்தை. திண்கழல்-த்ர்டமான வீரக்கழலையுடைய திருவடிகள்.

இந்த குணாதிக்யத்தைப்பற்றவு மன்றிக்கே - இப்படி ஆச்ரிதர்களை நழுவவிடாம லிருக்கையாகிற குணாதிக்யத்தைப்பற்ற ஆச்ரயிக்கையன்றிக்கே. இந்த-இப்படி. (திருவடிகளிலேயிழிகை-இவன். தன்ஸ்வரூபாநு குணமும்) என்றுஅந்வயிப்பது. இழியும் துறை-ப்ரவேசிக்கும்ஸ்த்தலம். அதாவது - திருவடிகள். (ப்ரஜை - முலையிலே வாய்வைக்குமாப்போலே - சேஷிபக்கல் - சேஷபூதன்- இழியும் துறை) என்றந்வயம். இத்தால் - சரணசப்தத்தாலே. திருவிருந்தமார்பன் - திருவாலே - பெரியபிராட்டியாராலே வஸிக்கப்பட்ட மார்வையுடையவன்.

மூ.—(ஶரணம்) இஷ்டப்ராப்திக்கும் அநிஷ்ட நிவாரணத்துக்கும் தப்பாத உபாயமாக.

---

வ்யா.—புருஷகாரபூதையானபிராட்டிக்கிருப்பிடமாய், நாராயண பதத்தில்சொன்ன குணங்களுக்கு ப்ரகாஶகமாய், "பலபலநாழுஞ் சொல்லிப் பழித்த சிசுபாலன்" என்கிறபடியே, ப்ரத்வேஷபரனாய் நிந்தோக்திகளைப்பண்ணித் திரிந்த ஶிஶுபாலனையுமுட்பட, (அலைவலைமைதவிர்த்தவழகன்) என்கிறபடியே, தன்னழகாலே த்வேஷாதிகள் போம்படி திருத்தி, (திருவடிதாட்பாலடைந்த) என்கிறபடியே சேர்த்துக்கொள்ளும் ஸ்வபாவத்தையுடைத்தான திவ்யமங்களவிக்ரஹத்தைநினைக்கிறது என்கை.

அநந்தரம், ஶரணபதார்த்தத்தை அருளிச்செய்கிறார் (ஶரணம் என்றுதொடங்கி.) அதாவது - (ఉపాయేగృహరక్షిత్రోశ్శబ్ద శ్శరణమిత్యయమ్ । వర్తతేసామ్ప్రతంచైష. ఉపాయార్థైకవాచకః) (உபாயேக்ருஹ ரக்ஷித்ரோஶ் ஶப்தஶ்ஶரணமித்யயம் - வர்த்ததேஸாம்ப்ரதம் சைஷ உபாயார்த்தைகவாசகః) என்கிறபடியே - ஶரணஶப்தம், ரக்ஷிதாவுக்கும், க்ருஹத்துக்கும், உபாயத்துக்கும் வாசகமேயாகிலும், இவ்விடத்தில் உபாயத்துக்கே வாசகமாகையாலும், உபாயக்ருத்யம் இஷ்டாநிஷ்டப்ராப்தி பரிஹாரகரணமாகையாலும், இஷ்டப்ராப்திக்கும், அநிஷ்டநிவாரணத்துக்கும் தப்பாத உபாயமாக என்று, இப்பதத்துக்கு அர்த்தமருளிச்செய்கிறார். இஷ்டாநிஷ்டங்கள்தான் இன்னதென்னுமத்தைப் பரந்தபடியிலே விஸ்தரேண அருளிச்செய்தார்.

---

அ.—குணங்களுக்கு - வாத்ஸல்யாதிகுணங்களுக்கு. நாழ்- தோஷம். பழித்த - தூஷித்த, உள்பட - கூட. அலைவலைமை- பஹுஜல்பம். திருவடிதாட்பாலடைந்த-எம்பெருமானுடைய திருவடியிடத்தையடைந்த.

அநந்தரம்-சரணசப்தார்த்தத்தையருளிச்செய்தவநந்தரம். இந்தஶரணசப்தார்த்தமானது, உபாயத்திலும், க்ருஹத்திலும், ரக்ஷிதாவிலும், ஸ்வவாச்யத்வ ஸம்பந்தேநவர்த்திக்கும். இப்போது இதில் என்றால்-அர்த்தத்ரயவாசகமான இஶ்ஶரணஶப்தம்உபாயமாகிற அர்த்தத்துக்கேவாசகமாகக்கடவது. தப்பாத- அவ்யபிசாரியான.

பரந்தபடியிலே;-அநிஷ்டமாவது - "நீர்நுமதென்றிவைவேர் முதல்மாய்த்து" என்றும், "அநாத்மந்யாத்மபுத்திர்யா" என்றுஞ் சொல்லுகிறபடியே – அநாத்மந்யாத்ம புத்திரூபமாயும் அஸ்வேஸ்வத்வப்ரதிபத்திரூபமாயுமிருக்கிற அவித்யையும், அவித்யாகார்யமானராகத்வேஷங்களும், கரணத்ரயத்தாலும் கூடுபூரித்துவைத்து தத்கார்யங்களான புண்யபாபரூப கர்மங்களும், கர்மத்வயத்தி

மூ.—இத்தால் - ப்ராப்யந்தானே ப்ராபகமென்கிறது.

வ்யா.—ஸ்ரீயப்பதிப்படியிலும், "அநிஷ்டமாகிறது - அவித்யையும், அவித்யாகார்யமானராகத்வேஷங்களும், புண்யபாபரூபமான கர்மங்களும், தேவாதிசதுர்விதசரீரங்களும், ஆத்யாத்மிகாதிதுக்கபரம்பரைகளும்; இஷ்டமாகிறது - அர்ச்சிராதிமார்க்ககமநமும், பரமபதப்ராப்தியும், பரமாத்மதர்சநமும், குணாநுபவகைங்கர்யங்களும்" என்று ஸங்க்ரஹேண அருளிச்செய்தார்; ஆகையால் இவ்விடத்திலும் அவை வக்தவ்யங்கள்.

கீழ் நிர்த்தேசித்தவஸ்துவை உபாயமாகச்சொன்னதின் தாத்பர்யத்தை அருளிச்செய்கிறார் (இத்தால் ப்ராப்யந்தானே ப்ராபகமென்கிறதென்று.) அதாவது - கீழ்ச்சொன்னவிஷயத்தை உபாயமாகச் சொல்லுகிற இத்தால், ப்ராப்யவஸ்துதானே, ப்ராபகமென்னுமிடஞ் சொல்லுகிறது என்கை.

னுடைய பலபோக்த்ரர்த்தமாக பரிக்ரஹிக்கும் தேவதிர்யகாதியான நாநாவிதசரீரங்களும், அஶரீரங்களைபரிக்ரஹித்து அநுபவிக்கும்ஆத்யாத்மிகாதி துக்கபரம்பரைகளும்தொடக்கமானவை.

இஷ்டமாகிறது - புண்யபாப விதூநநப்ரகாரமும், ஹார்த்தமார்க்கவிசேஷணப்ரகாரமும், ஹ்ருதயகுஹாநிர்க்கமநமும், அர்ச்சிர்வாஸராஶுக்லபக்ஷாத்யாதி வாஹிக ஸத்காரமும், ஸலிலதஹநபவநாத்யாவரணஸப்தகாத்யதிலங்கநமும், த்ரிகுணாதிக்ரமணமும், விரஜாக்ய அப்ராக்ருத நதீவிசேஷாவகாஹநமும், ஸூக்ஷ்ம ஶரீர விமோசநமும், அமாநவகரஸ்பர்சமும், அபஹத பாப்மத்வாதிகுணதாச்ரய ஸ்வரூப ப்ரகாரமும், பஞ்சோபநிஷண்மய திவ்ய மங்கள விக்ரஹமும், ஐரம்மதீய திவ்யஸரஃப்ராப்தியும், ஸூரி ஸத்காரமும், ராஜமார்க்ககமநமும், ப்ரஹ்மவேச்ம ப்ரவேஶமும், திவ்யமண்டபப்ராப்தியும், திவ்யபர்யங்க நிரீக்ஷணமும், ஸபத்நீக ஸர்வேச்வரதர்சநமும், ஆநந்தமயபரமாத்ம ஸமீபஸ்த்திதியும், பாதபீடபர்யங்கோத் ஸங்காரோஹணமும், ஆலோகாலிங்கநாத்யநுபவமும், ஸ்வரூபகுண விக்ரஹாத்யநுபவஜநித ப்ரீதிப்ரகர்ஷமும், நாநாவிதவிக்ரஹபரிக்ரஹ பூர்வக ஸர்வதேச ஸர்வகால ஸர்வாவஸ்த்தோசித ஸர்வப்ரகார கைங்கர்யகரணமும். இதில் ப்ரதாநமாக இஷ்டமாயிருப்பது-கைங்கர்யமும், அதுக்கு உபயுக்தங்களாகையாலே இஷ்டங்களாயிருக்கும் மற்றுமுள்ளவை. ஆக இப்படிக்கொத்த அநிஷ்டத்தை நிவர்த்திப்பித்து இஷ்டப்ராப்தியைப் பண்ணுகை.

கீழ்நிர்த்தேசித்தவஸ்து - ஸ்ரீயப்பதியாய்ஸமஸ்தகல்யாண குணாத்மகனாய் திவ்யமங்களவிக்ரஹவிசிஷ்டனான நாராயணன்.

மூ.—கீழ்ச்சொன்ன மூன்றும் ப்ராப்யமிறே. இவன் செயலறுதியாலே உபாயமாக்குகிருனித்தனே. (சரணௌஶரணம்) என்கையாலே-உபாயாந்தர வ்யாவ்ர்த்தமான உபாயமென்கிறது.

---

வ்யா.—கீழ், ப்ராப்யப்ரஸங்கமுண்டோவென்ன அருளிச்செய்கிருர் (கீழ்ச்சொன்னமூன்றும்ப்ராப்யமிறேயென்று.) அதாவது-ஸமஸ்தமான பூர்வபதத்தில்சொன்ன லக்ஷ்மீவிஶிஷ்டத்வமும், கல்யாணகுணயோகமும், திவ்யமங்கள விக்ரஹோபேதத்வமுமாகிற மூன்றும், (శ్రియాం సార్థమ్-ఆస్తే) (ஶ்ரீயாஸார்த்தம்-ஆஸ்தே) (సర్వాన్ కామాన్-అశ్నుతే) (ஸர்வாந்காமாந் - அஶ்நுதே)( సదా పశ్యన్తి) (ஸதாபஶ்யந்தி) என்று,இவனுக்கு அநுபவவிஷயமாகச்சொல்லப்படுகிறவையாகையாலே ப்ராப்யமிறேயென்கை.

ஆனாலும் இத்தை உபாயமாக்குகிறதுதானென்னென்ன அருளிச்செய்கிருர் (இவன்செயல் அறுதியாலே உபாயமாக்குகிருனித்தனையென்று.)அதாவது - அகிஞ்சநனாய், அநந்யகதியாய்நிற்கிறஇவன் செயல்மாட்சியாலேபோக்யமானபாலே மருந்தாக்குவாரைப்போலே, ப்ராப்யமானதுதன்னையே ப்ராபகமாக்குகிருனித்தனையென்கை. இதுதன்னாலே இவ்வுபாயத்துக்கு ஓரதிஶயம் சொல்லுகிறதென்கிருர் (சரணௌஶரணமென்கையாலேயென்று தொடங்கி.)அதாவது - (చరణౌ శరణమ్)(சரணௌஶரணம்)என்று, ப்ராப்யவஸ்துதன்னையே ப்ராபகமாகச்சொல்லுகையாலே, ப்ராப்யம்வேறும், தான் வேறுமாயிருக்கும் உபாயாந்தரங்களிற்காட்டில் வ்யாவ்ர்த்தமான உபாயம் ஈதென்னுமிடம் சொல்லுகிறதென்கை.

---

அ.—கீழ்-ஸ்ரீமந்நாராயண சரணௌ ஶரணம்என்கிறபதத்திலே. ஸமஸ்தமான - அவிபக்தமான. பூர்வபதத்தில் - ஸ்ரீமந்நாராயணசரணௌஎன்கிறபதத்தில்.

ஆனாலும்-கீழ்ஸ்ரீமத்பதத்தாலும், நாராயணபதத்தாலும்,சரணபதத்தாலும் சொல்லப்பட்டவர்த்தங்கள்மூன்றும் ப்ராப்யமானாலும். இத்தை-ப்ராப்யமான அர்த்தத்ரயத்தை. என்-எந்தப்ரயோஜநத்துக்காக. உபேயந்தன்னையேஉபாயமாகப்பற்றுகையாலே-உபாயமாகப்பற்றுகிறபோதே உபேயமாகப்புகுந்திருக்கையாலே.பரிக்ர்ஹீதோபாயத்துக்கு ஸாத்யமான பலமென்றுகருத்து. அகிஞ்சநனாய் அநந்யகதியாய்நிற்கிற இவன்செயல் மாட்சியாலே-அகிஞ்சனன இவன்செயல்மாட்சியாலும் அநந்யகதியான இவன் செயல்மாட்சியாலும். மருந்தாக்குவாரைப்போலே-பித்தரோகத்துக்கு மருந்தாக்குவாரைப்போலே.

இதுதன்னாலே-ப்ராப்யந்தன்னையே ப்ராபகமாகச்சொல்லுகையாலே. இவ்வுபாயத்துக்கு - ஈச்வரோபாயத்துக்கு. வ்யாவ்ர்த்தமான - விலக்ஷணமான. ஆகஇவ்வாக்யத்தால் உபாயத்துக்குச்சொன்ன அதிசயமாவது-உபாயாந்தரங்களில் காட்டில் வேறுபட்டிருக்கை.

மூ —(ப்ரபத்யே) பற்றுகிறேன். வாசிகமாகவும், காயிகமாக வும்பற்றிநுலும்பேற்றுக்கு அழிவில்லை; ஜ்ஞாநாந்மோக்ஷமாகை யாலே மாநஸமாகக்கடவது.

---

வ்யா —அநந்தரம், க்ரியாபதத்துக்கு அர்த்தமருளிச்செய்கிறுர் (ப்ரபத்யே - பற்றுகிறேனென்று.) அதாவது-இப்பதம் (పదగతౌ) (பதகதௌ) என்கிற தாதுஸித்தமாகையாலே, கதிவாசியாகை யாலும், உத்தமனுகையாலும் பற்றுகிறேன் என்று, இதுக்கு அர்த்தமருளிச்செய்கிறுர்.

இதுதான் மாநஸவாசிக கரயிகரூபையான த்ரிவிதகதியையும் காட்டவற்றுகையாலே, அதில் எந்தகரணத்தாலுண்டானபற்று தலைச்சொல்லுகிறதென்ன அருளிச்செய்கிறுர் (வாசிகமாகவு மென்றுதொடங்கி.) அதாவது - (భవశరణమ్) (பவஶரணம்) இத் யாதிப்படியே, ரக்ஷிக்கவேணும்என்று ப்ரார்த்திக்கையாகிற கேவல வாசிகமாகவும், (అఞ్జలిః పరమా ముద్రా క్షిప్రం దేవప్రసాదినీ) (அஞ்சலிஃபரமாமுத்ரா க்ஷிப்ரஂதேவப்ரஸாதிநீ)என்கிறபடியே, பகவத்ப்ரஸாத ஹேதுபூதமான அஞ்சலியைப்ரயோகித்தல், நிஷாதகாகாதிகளைப் போலே, ரக்ஷகவஸ்து இருந்த விடத்தே வருதல் செய்கையாகிற கேவல காயிகமாகவும் பற்றிநுலும் பலஸித்திக்கு அழிவில்லை; (జ్ఞానాన్మోక్షమ్) (ஜ்ஞாநாந்மோக்ஷம்) என்கிறபடியே, ஜ்ஞாநத்தாலே மோக்ஷம் என்கையாலே மாநஸமான பற்றுதலாகக் கடவது என்கை. அதாவது- ஒரு புத்திவிஶேஷம். இந்த புத்திவிஶேஷந் தன்னைப் பரந்தபடியிலே விஸ்தரேண அருளிச்செய்தார்.

---

அ.—அநந்தரம்-ஶரணசப்தார்த்த மருளிச்செய்தவநந்தரம். க்ரியாபதத்துக்கு - ப்ரபத்யே என்கிற பதத்துக்கு. இப்பதம்-ப்ர பத்யே என்கிறபதம். உத்தமனுகையாலும் - உத்தமபுருஷதாது வாகையாலும்.

இதுதான்-ப்ரபத்யே என்கிற க்ரியாபதந்தான். காட்டவற் றுகையாலே - காட்டக்கடவதாகையாலே. அதில்-கதித்ரயத்தில். அழிவில்லை-ஹாநியில்லை. அதாவது-மாநஸமான பற்றுதலாவது.

பரந்தபடியிலே;-இந்த புத்திவிசேஷமாகிறது - அநந்யார்ஹ சேஷத்வஜ்ஞாநாத்யநந்தர பாவியாய், ஸாத்யஸாதந வ்யாவர்த்த மாய், தேவாநாஂகுஹ்யமாய், பகவத்ரக்ஷகத்வாநுமதிரூபமாய், ஸக்ருதநுஷ்டேயமாய், அவிளம்பபலப்ரதமாய், ஸர்வாதிகாரமாய், ஸ்வரூபாநுரூபமாய், அந்திமஸ்ம்ருதிநிரபேக்ஷமாய், த்ருடாத்யவ ஸாயரூபமாயிருப்பதொரு ஜ்ஞாநவிசேஷம். இதரோபாயவ்யா வர்த்தமாய் - கர்மஜ்ஞாநாத்யுபாயவிலக்ஷணமாய்.

மூ.—உபாயம் அவனுகையாலும், இவை கேரோஉபாயமல்லா மையாலும், இம்மூன்றும் வேணுமென்கிறநிர்ப்பந்தமில்லை.

---

வ்யா.—ஸ்ரீபஂபதிப்படியிலும்,இந்த புத்தி விஶேஷமாகிறது- அநந்யார்ஹஶேஷத்வ ஜ்ஞாநகார்யமாய், இதரோபாயவ்யாவர்த் தமாய்,பகவத்ரக்ஷகத்வாநுமதிரூபமாய், ஸக்ருதநுஷ்ட்டேயமாய், வ்யபிசாரவிளம்பவிதுரமாய்,ஸர்வாதிகாரமாய்,நியமஶூந்யமாய், அந்திமஸ்ம்ருதி நிரபேக்ஷமாய், ஸுஶகமாய், யாச்ஞாகர்ப்பமாய், த்ருடாத்யவஸாயரூபமாயிருப்பதொரு ஜ்ஞாநவிஶேஷம்'' என்று அருளிச்செய்தார்; ஆகையால், இவ்விடத்தில் அதுவும் அநுஸந்தேயம்.

இப்படி மாநஸமாத்ரமே யமையுமோ, "சிந்தையாலும்" இத்யாதிப்படியே,த்ரிவிதகரணத்தாலும்ஸ்வீகரிக்கவேண்டாவோ என்ன அருளிச்செய்கிறார் (உபாயம் அவனுகையாலுமென்று தொடங்கி.) அதாவது-பலஸித்திக்கு உபாயம் பற்றப்படுகிறவன் ஈஶ்வரனுகையாலும், கரணத்ரயத்தாலு முண்டானபற்றுதல் களான இவை ஆபாதப்ரதீதியில் உபாயம்போல் தோற்றிக் கழியுண்டுபோமதொழிய, ஸாக்ஷாத் உபாயம் அல்லாமையாலும், பலஸித்திக்கு அத்யவஸாயாத்மகமான ஸ்வீகாரம் ஒன்றுமே யமையும் ; இம்மூன்றும் வேணும் என்கிற நிர்ப்பந்தமில்லை யென்கை. அதவா, இப்படி ஓரொன்றிலே ஒதுக்கிச்சொல்லுகிற தென், த்ரிவிதகரணத்தாலும் பற்றுதலைச்சொன்னாலோ வென்ன; (உபாயம்) இத்யாதியாலே அருளிச்செய்கிறாராகவுமாம். அப்போ தைக்கும் ஓரொன்றேயமையும், இம்மூன்றும் வேணும் என்கிற நிர்ப்பந்தமில்லை யென்கை.

---

அ.—வ்யபிசாரமாவது - அநவரதஸ்ம்ருதிக்கு அந்தராயமா யிருக்கும்ஸமாதிபங்கம்.விளம்பமாவது-பலவிளம்பம்.விதுரமாய்- ரஹிதமாய். இவ்விடத்தில்-இந்தக்ரந்தத்தில். அதுவும்-அந்தபுத்தி விசேஷஸ்வரூபமும்.

மாநஸமாத்ரமே-மாநஸமான பற்றுதல்மாத்ரமே. அமையு மோ-போருமோ. ஸ்வீகரிக்கவேண்டாவோ-பற்றவேண்டாவோ. பற்றப்படுகிறவன் ஈச்வரனுகையாலும் - பற்றுதல் உபாயமன்றி க்கே பற்றப்படுகிற ஈச்வரனுகையாலும். ஆபாதப்ரதீதியில்-மேலெ ழப்பார்த்தபோது. ஸாக்ஷாதுபாய மல்லாமையாலும்—அத்வார கோபாயமல்லாமையாலும். பலஸித்திக்கு-பலப்ராப்திக்கு. மூன் றும்-த்ரிவிதமான பற்றுதலும். நிர்ப்பந்தமில்லை-நியமமில்லை.

அப்போதைக்கும்-அப்படி அவதாரிகையான போதைக்கும். ஓரொன்றேயமையும்-கரணத்ரயத்தாலுண்டான பற்றுதல்களிலே ஒருகரணத்தாலுண்டான பற்றுதலேயமையும்.

மூ.—வர்த்தமாநநிர்த்தேஶம் ஸத்வம்தலையெடுத்து அஞ்சின போது அநுஸந்திக்கைக்காக.

---

வ்யா.— நிர்ப்பந்தமில்லை என்கையாலே - இந்தஸ்வீகாரம் த்ரிவிதகரணத்தாலும் உண்டானாலும் குறையில்லையென்னுமிடந் தோற்றுகிறது. "இப்ரபதநம் கரணத்ரயத்தாலும் உண்டாகவுமாம்; ஏககரணத்தாலே உண்டாகவுமாம்;பலஸித்திக்குக் குறையில்லை; அதிகாரிபூர்த்திக்குக் கரணத்ரயமும்வேணும்; பலஸித்திக்கு ஏககரணமே அமையும்; உபாயபூர்த்திக்கு, ஸ்ரீயபதித்வமும், வாத்ஸல்யாதிகுணயோகமும், திவ்யமங்கள விக்ரஹமும் அபேக்ஷிதமாயிருக்கிறப்போலே, அதிகாரபூர்த்திக்குக் கரணத்ரயமும் அபேக்ஷிதமாயிருக்கும்" என்றிறே, பரந்தபடியில் இவர் தாம் அருளிச்செய்தது.

(సకృదేవహిశాస్త్రార్థః కృతోయం తారయేన్నరమ్)(ஸக்ர்தேவஹிசாஸ்த்ரார்த்தః க்ர்தோயம்தாரயேந்நரம்) (సకృదేవప్రపన్నాయ) (ஸ்க்ர்தேவப்ரபந்நாய) இத்யாதிகளிற் சொல்லுகிறபடியே - ப்ரபத்தி ஸக்ர்த் கரணீயையாயிருக்க, வர்த்தமாநமாகச் சொல்லுகிறது ஏதுக்காகவென்ன அருளிச்செய்கிறார் (வர்த்தமாந நிர்த்தேஶமென்று தொடங்கி.) அதாவது-(లోకవిక్రాన్తచరణౌశరణన్తేవ్రజమ్) (லோகவிக்ராந்தசரணௌஶரணம்தேவ்ரஜம்)(நின்னடியிணையடைந்தேன்)(அடிக்கீழமர்ந்துபுகுந்தேன்) என்கிறபடியே சொல்லாதே,

---

அ.—குறை-பலஸித்தியில் குறை. கரணத்ரயமும்-கரணத்ரயத்தாலுண்டான ப்ரபத்தியும். ஏககரணமே-ஏககரணத்தாலுண்டானப்ரபத்தியே. உபாயபூர்த்திக்கு-உபாயத்வபூர்த்திக்கு.

"நின்னடியிணை யடைந்தேன்" "அடிக்கீழமர்ந்து புகுந்தேன்" இத்யாதி ப்ரமாணங்களில் சரணாகதி ஸ்வகர்த்ர்கமாகச் சொல்லப்பட்டது சிஷ்டாசாரம் - ஆசார்யர்கள் செய்தருளக் காணாநின்றோம். இதுக்கடியென்னென்னில்;-(పుత్రవత్ప్రేష్యస్తథాశిష్య ఇత్యేవఞ్చ నివేదయేత్) (புத்ரவப்ரேஷ்யஸ்ததாஶிஷ்ய இத்யேவஞ்ச நிவேதயேத்) ஶாண்டில்ய ஸ்ம்ர்தியில் விசேஷித்து ஆசார்யனநுஷ்டித்த ஶரணாகதியே முக்யமென்று சொல்லுகையாலே இதுவே ஸத்ஸம்ப்ரதாயமாக நம்மாசார்யர்கள் அநுஷ்டித்துப் போருவர்கள். அதிலும், (அடிக்கீழமர்ந்து புகுந்தேன்) என்று-பரமாசார்யரான நம்மாழ்வார் செய்தளிருளின ப்ரபத்திதானே தச்சிஷ்யபரம்பரைக்கெல்லாம்போருமென்று சில ஆசார்யர்கள் நிர்வஹிப்பர்கள். (కాలత్రయేపికరణత్రయనిర్మితాతి పాపక్రియస్యశరణం భగవత్క్షమైవ। సాచత్వయైవకమలారమణేర్థితాయత్క్షేమస్సఏవహియతీన్ద్రభవచ్ఛ్రితానామ్॥) (காலத்ரயேபிகரணத்ரய நிர்மிதாதி பாபக்ரியஸ்ய ஶரணம்பகவத்க்ஷமைவ - ஸாசத்வயைவகமலாரமணேர்த்திதாயக்ஷேமஸ்ஸயேவஹியதீந்த்ரபவச்ச்ரிதாநாம்=)

அ.—(విష్ణోశ్శేషీ తదీయశ్శుభగుణనిలయో విగ్రహశ్శ్రీశఠారిః శ్రీమాన్ రామానుజార్యః పదకమలయుగం భాతి రమ్యం తదీయమ్। తస్మిన్ రామానుజార్యే గురురితి చ పదం భాతి నాన్యత్ర తస్మాచ్ఛిష్టం శ్రీమద్గురూణాం కులమిదమఖిలం తస్య నాథస్య శేషః) என்கிறபடியே ஆசார்யபதம் உடையவரிடத்திலே பூர்ணமாய், அவர்செய்தருளின ப்ரபத்தியே அஸ்மதாதிகளுக்கும் உத்தேச்யமென்னுமத்தை யருளிச்செய்கிறார்(కాలత్రయేఽపి-காலத்ரயே பீத்யாதியாலே.) பூதபவிஷ்யத்வர்த்தமானரூபேண மூன்றுவகைப்பட் டிருந்துள்ள காலத்ரயத்திலும். (కాలత్రయేఽపి - காலத்ரயேபி) ஒருகாலமல்லா ஒருகாலத்திலே யாகிலும் ஸதநுஷ்டாநமின்றிக்கே எல்லாக்காலத்திலும் பாபங்களையாய்த்து இவன்செய்வது.(కరణత్రయ-கரணத்ரய) மநோவாக்காய ரூபேண மூன்றுவகைப்பட் டிருக்கிற கரணத்ரயத்தாலும். அதுதானும் ஒருகாரணத்தாலன்றிக்கே கரணத்ரயத்தாலும் பாபங்களையாய்த்துச்செய்வது. (నిర్మిత-நிர்மித) கல்பித்துவிடுகையன்றிக்கே அநுஷ்டாநபர்யந்தமாக்குகை. (అతిపాపక్రియస్య-அதிபாபக்ரியஸ்ய) செய்யப்பட்ட மஹாபாதக உபபாதகங்களையுடையவனுக்கு. அன்றிக்கே, (యద్బ్రహ్మకల్పనియుతానుభవేఽప్యనాశ్యం తత్కిల్బిషమ్) (யத்ப்ரஹ்மகல்ப நியுதாநுபவேப்யநாஶ்யம் தத்கில்பிஷம்) என்றுசொல்லப்பட்ட மஹாபாபத்தை யுடையவனுக்கு. (శరణమ్-ஶரணம்) அநிஷ்ட நிவர்த்திக்கும் இஷ்டப்ராப்திக்கும் தப்பாத உபாயம். (భగవత్క్షమైవ - பகவத்க்ஷமைவ) ஆச்ரிதகார்யகரத்வோபயோகிகளான ஜ்ஞாந சக்த்யாதி கல்யாணகுணங்களையுடையனான ஸர்வேச்வரனுடைய, "பொறுத்தோம்" என்கிற க்ஷமைதானே. ஏவகாரத்தாலே - மற்றொன்றில்லை யென்கிறது. அன்றிக்கே, தமக்கு பூர்வகாலத்திலும், தமக்கு ஸமகாலத்திலும், தமக்குஉத்தரகாலத்திலுமுள்ள ஸாபராத சேதநர்க்கு என்றுமொக்க பகவத்க்ஷமையேஇஷ்டாநிஷ்டப்ராப்திபரிஹாரங்களுக்கு உபாயமென்று அநுஸந்திக்கிறாராகவுமாம்.(సాచ-ஸாச)எப்படிப்பட்ட அபராதங்களுக்கும் புகலிடமாக ப்ரஸித்தமான அந்தக்ஷமைதானும்.(త్వయైవ-த்வயைவ) ஸம்ஸாரிகள் துர்க்கதியைக்கண்டுபொறுக்கமாட்டாதே, இவர்கள் துர்க்கதியில்நின்றும் நிவர்த்தராய் ஸ்வரூபாநுரூபமான தாஸ்யத்திலே அந்வயித்து வாழும்படி எங்ஙனே! என்று கரைபுரண்டக்ருபையையுடைய தேவரீராலேயே. ஏவகாரத்தாலே - இன்று ஒருவனறிவுடையனாய் ப்ரார்த்திக்கவேண்டாதபடி ஸ்வாச்ரிதஸகல சேதநவிஷயமாக தேவரீராலே ப்ரார்த்திக்கப்பட்டதென்கிறது. இத்தால்-எம்பெருமானார்தாமே ஸ்வஸம்பந்தி ஸகல சேதநவிஷயமாக ப்ரபத்தி செய்தருளுகையாலே, தனித்துஒருவர் ப்ரபத்தி பண்ணவேண்டாவென்கிறது.

அ.—எம்பெருமானார், தம்சரமதசையிலே பெரியபெருமாள் திருமுன்பே சென்று ஸேவித்து நிற்க, அவ்வளவிலே பெரியபெருமாளும் அருள்பாடிட்டு ஒன்றுசொல்லுவான்போலே யிருந்தாயீ! என்ன, நாயன்! தே! (அடியேனுடையஸம்பந்தி ஸம்பந்திகளும் தேவரீர் க்ஷமைக்கு விஷயராய் உஜ்ஜீவிக்கும்படி க்ர்பைசெய்தருளவேணும்) என்ன; பெருமாளும், அப்படியே ஆகக்கடவதென்று, "உமக்கும் உம்முடையார்க்கும் உபயவிபூத்யை ஶ்வர்யத்தையும் தந்தோம்" என்றருளிச்செய்தாரென்றும் ப்ரஸித்தமிறே. நாம்ப்ரார்த்தித்தமையுண்டு, அவன் ஸ்வாதந்த்ர்யத்தாலே செய்யாவிடில் செய்வதென்னென்ன; (కమలారమణే-கமலாரமணே) தேவரீர் சொல்லிற்றை மறக்கும் விஷயத்திலேயோ தேவரீர் ப்ரார்த்தித்தது, அவன் தேவரீர் ப்ரார்த்தித்தபடியே செய்யாவிடில், பிராட்டியார் அவனுக்கு முகங்கொடுப்பாரோவென்னுதல்; தேவரீர் ப்ரார்த்தனையைச் செய்விக்கும் ஸாக்ஷியுண்டென்னுதல். கமலத்தில் திருவவதரிக்கையாலே (கமலே) என்று திருநாமமுடைய பெரியபிராட்டியார்க்கு வல்லபனான எம்பெருமானிடத்திலே என்னுதல்; கஶ்ச மஶ்ச கமௌ; கமௌ லாதீதி கமலா என்று வ்யுத்பத்தியாய் - ஸுகப்ரதானனான ஈச்வரனையும் ஜ்ஞாநப்ரதானனான சேதநனையும் உபதேசத்தாலும் ஸௌந்தர்யாதிகளாலும் ஸ்வவசமாக்கிக்கொள்ளும் பெரியபிராட்டியார்க்குவல்லபனானஎம்பெருமானிடத்திலேயென்னுதல். (అర్థితా-அர்த்திதா) (మనో వాక్కాయైః) (மனோவாக்காயை:) என்னும் சூர்ணையாலே ப்ரார்த்திக்கப்பட்டது. (ఇత్యత్రైవ) - (இதியத்ரைவ). லிங்கவ்யத்யயம் விதேயப்ராதாந்யத்தாலே, (மனோவாக்காயை: என்றுதொடங்கி, க்ர்தாந் க்ரியமாணாந் கரிஷ்யமாணாம்ஶ்ச ஸர்வாநஶேஷத: க்ஷமஸ்வ) என்று-இருவருமானசேர்த்தியிலே ஸ்வஸம்பந்திஸர்வசேதநவிஷயமாகவன்றோ தேவரீர் ப்ரார்த்தித்த ப்ரார்த்தனை தான். (క్షేమః - க்ஷேம:) ரக்ஷை. (భవచ్ఛ్రితానామ్-பவச்ச்ரிதாநாம்) ஸ்வாநுவ்ர்த்தி நிரபேக்ஷராய் க்ர்பாமாத்ர ப்ரஸந்நாசார்யரான தேவரீரை ஆச்ரயித்தவர்களுக்கென்னுதல்; தேவரீர்ஸம்பந்திபரம்பரையும் உஜ்ஜீவிக்கும்படி பகவத்விஷயீகாரம்பெற்ற தேவரீரை ஆச்ரயித்தவர்களுக்கென்னுதல்.

இத்தால்-எம்பெருமானார்ஸம்பந்தமுண்டாகவே பகவத்க்ஷமை இவன் ப்ரார்த்திக்கவேண்டாதபடி தன்னடையே உண்டாகுமென்கிறது. இத்தால்-ஈச்வரஸம்பந்திகளுக்கு ஸ்வாபராதங்களை ஈச்வரன் க்ஷமிப்பானோ க்ஷமியானோவென்று ஸம்ஶயிக்கவுங்கூடும், அஸ்ஸம்ஶயமுமில்லை எம்பெருமானார்ஸம்பந்திகளுக்கு என்கிறது. (సిద్ధిర్భవతివా నేతి సంశయోచ్యుతసేవినామ్। నసంశయోస్తితద్భక్తపరిచర్యారతాత్మనామ్) என்னக்கடவதிறே. ஏவகாரத்தாலே – இதாநீந்தந ப்ரார்த்தனை ரக்ஷகமன்றென்கிறது. (హి - ஹி) இவ்வர்த்தம் அடியேன் விண்ணப்பம் செய்யவேணுமோ, (அர்வாஞ்ச) இத்யாதியில் ப்ரஸித்தமன்றோ.

மூ.—உபாயாந்தரங்களில் நெஞ்சுசெல்லாமைக்கும், காலக்ஷேபத்துக்கும், இனிமையாலே விடவொண்ணாமையாலும் நடக்கும்.

---

வ்யா.—(ப்ரபத்யே) என்று - வர்த்தமாநமாகச்சொல்லுகிறது, ப்ரக்ருதியோடேயிருக்கிற இவன் ரஜஸ்தமஸ்ஸுக்களாலே கலங்கி, உபாயாஉபாயங்களில் ஏதேனுமொன்றிலே அந்வயித்து, பின்னை ஸத்வந்தலையெடுத்து அநுதாபம்பிறந்துபயப்பட்டகாலத்தில், (ప్రాయశ్చిత్తిరియం సాత్ర యత్పునశ్శరణం వ్రజేత్) (ப்ராயஶ்சித்திரியம்ஸாத்ரயத்புநஶ்ஶரணம்வ்ரஜேத்) என்கிறபடியே - ப்ரபத்தியொழிய அதுக்கு பரிஹாரமில்லாமையாலும், அதுதான் ஸக்ருத்கர்தமான பின்பு புநஃகரணமாகாமையாலும், பூர்வப்ரபதநத்தை அநுஸந்த்திக்கைக்காகக் கொழுந்துபட்டுக்கிடக்கிறதென்கை.

இன்னமும் இவ்வர்த்தமாநத்துக்குச்சிலப்ரயோஜநங்களை அருளிச்செய்கிறார் (உபாயாந்தரங்களிலென்று தொடங்கி.) அதாவது- பூர்வவாஸனையாலே, அவஶமாக உபாயாந்தரங்களிலே மநஸ்ஸு செல்லாமைக்காகவும், இவ்வநுஸந்தாநத்தாலேயொழியப்போது போக்கவரிதாகையாலே காலக்ஷேபத்துக்காகவும், இதினுடைய ரஸ்யதையாலே விடமாட்டாமையாலும், இவ்வநுஸந்தாநம் இடைவிடாமல் நடக்கக்கடவதாயிருக்குமென்கை.

---

இத்தால்-ஆசார்யாபிமாநமே உத்தாரகமென்கிறது.(யம்யம்ஸ்ப்ரஶதி-ஆசார்யவத்தயாமுக்தௌ.) இவர் இப்படி விண்ணப்பம்செய்தவாறே நம்யத்நம் ஸபலமாயிற்றென்று திருவுள்ளமுகந்தபடியிருக்கக்கண்டு "யதீந்த்ர" என்கிறார். [భవచ్చరితానాం-பவச்சரிதாநாம்] ஸ்வயத்நமேஸ்வாச்ரிதரக்ஷகமாம்படியிருக்கிற தேவரீர்ஸம்பந்திகளுக்கென்னவுமாம். "ஒருமலையில்நின்றும் ஒருமலையிலே தாவும் ஸிம்ஹசரீரத்தில்ஜந்துக்கள்போலே, பாஷ்யகாரர் ஸம்ஸாரலங்கநம்பண்ண அவரோடுண்டான குடல்துடக்காலே நாமும் உத்தீர்ணராவுதோம்" என்று முதலியாண்டானருளிச்செய்வர்.

அ.—ப்ரக்ருதியோடே - சரீரத்தோடே. உபாயங்களாவன- கர்மஜ்ஞாநபக்திகள். அபாயங்களாவன - ஹிம்ஸாஸ்தேயாதிகள். பின்னை - பின்பு. கொழுந்துபட்டுக் கிடக்கிறது - வர்த்தகமாகக் கிடக்கிறது.

இன்னமும்-வர்த்தமாநநிர்த்தேசத்துக்குக்கருத்துப்ராயஶ்சித்தார்த்தமாக பூர்வப்ரபத்திக்குஸ்மரணம் என்றருளிச் செய்ததுக்குமேலே.பூர்வவாஸனையாலே-ப்ரபத்திபண்ணுவதற்குமுன்னே உபாயாந்தரங்களை யநுஷ்டித்த அப்யாஸத்தாலே. அவசமாக - ப்ராமாதிகமாக. அநுஸந்தாநத்தாலேயொழிய-அநுஸந்தாநத்தை விட்டு. இதினுடைய ரஸ்யதையாலே-த்வயத்தினுடைய ரஸ்யதையாலே. இவ்வநுஸந்தாநம்-த்வயாநுஸந்தாநம்.

மூ.—பேற்றுக்குப்பலகால்வேணுமென்றுநினைக்கில்உபாயம் நழுவும். உத்தரவாக்யத்தாலேப்ராப்யாந்தரத்துக்கன்றென்கை.

---

வ்யா.—இங்ஙனன்றிக்கேபலஸித்திக்குப்பலகாலும்அநுஸந்திக்க வேணுமென்றாலோ என்ன அருளிச்செய்கிறார் (பேற்றுக்கென்று தொடங்கி.) அதாவது - கீழ்ச்சொன்ன ப்ரயோஜநங்களுக்காக வன்றிக்கே, பேற்றுக்கு உறுப்பாகப் பலகாலும் அநுஸந்திக்க வேணுமென்று ப்ரதிபத்திபண்ணில், ஸஹாயாந்தரஸம்ஸர்க்கா ஸஹமான ஸித்தோபாயம், சணற்கயிறுகண்ட ப்ரஹ்மாஸ்த்ரம்போலே, தன்னைக்கொண்டுநழுவும் என்கை. ஆக,பூர்வவாக்யத்துக்குஅர்த்தம்அருளிச்செய்தாராயிற்று.

இனி, உத்தரவாக்யத்துக்கு அர்த்தமருளிச் செய்வதாக உபக்ரமிக்கிறார் (உத்தரவாக்யத்தாலே ப்ராப்யஞ் சொல்லுகிறது என்று.) ப்ராப்யமாவது-ஸ்ரீயஃபதியாய் ஸர்வஸ்வாமியாயிருக்கிற ஸர்வேஶ்வரன்திருவடிகளிற்பண்ணும் கைங்கர்யம்.

ப்ராபகவரணாநந்தரம் ப்ராப்யம் சொல்லுகிற விதுக்கு அபிப்ராயமருளிச்செய்கிறார் (ப்ராப்யாந்தரத்துக்கு அன்றெகை யென்று.) அதாவது - பூர்வவாக்யத்தில் ப்ரதிபாதிதமான ஸாதநம், பலசதுஷ்டய ஸாதாரணமாகையாலே, கீழ்ப்பண்ணின ப்ராபகவரணம் ப்ராப்யாந்தரத்துக்கு அன்று என்னுமிடஞ்சொல்லுகை, இப்போது ப்ராப்யஞ் சொல்லுகிற விதுக்கு ப்ரயோஜநம் என்றபடி.

---

அ.—ஆக-இவ்வதிகாரிக்கு உபாயாந்தரங்களில் நெஞ்சு செல்லாமைக்கும்,பொழுதுபோகைக்காகவும்,போக்யதயாத்யாஜ்யமாகைக்காகவும் வர்த்தமாநநிர்த்தேசமாகக் கிடக்கிறதென்றுகருத்து.

இங்ஙனன்றிக்கே - கீழ்ச்சொன்ன ப்ரகாரங்களிலன்றிக்கே. அவையாவன-ப்ராயஶ்சித்தமாக பூர்வ ப்ரபத்திஸ்மரணம் முதலானவை. பலஸித்திக்கு - பலப்ராப்திக்கு. பேற்றுக்குறுப்பாக-புருஷார்த்தஸித்திக்கு யோக்யமாக. சணற்கயிறு - நாணற்புற்கயிறு. தன்னைக்கொண்டு - நிரபேக்ஷமான தன்னைக்கொண்டு. ச்ரியஃபதியாய் என்கையாலே - "ஸ்ரீமதே" என்கிற சப்தார்த்தமும், ஸர்வேச்வரன்திருவடிகள் என்கையாலே-நாராயணசப்தார்த்தமும், கைங்கர்யமென்கையாலே-ஆயஎன்கிறசதுர்த்த்யர்த்தமும் அருளிச்செய்தாராய்த்து.

இனி - பூர்வவாக்யத்துக்கு அர்த்தமருளிச்செய்த வநந்தரம். ப்ராபகவரணாநந்தரம்என்றது - "சரணௌ ஶரணம்ப்ரபத்யே" என்கிறபடியேஉபாயவரணாநந்தரமென்றபடி.பலசதுஷ்டயஸாதாரணமாகையாலே - "ஐஹலௌகிகம்" இத்யாதி பலசதுஷ்டய ஸாதாரணமாகையாலே.ப்ராப்யாந்தரத்துக்கன்று- "ஐஹலௌகிகமைஶ்வர்யம்ஸ்வர்க்காத்யம் பாரலௌகிகம்-கைவல்யம்" என்கிற ப்ராப்யாந்தரங்களுக்கன்று.

மூ.—உபாயாந்தரங்களைவிட்டு சரமோபாயத்தைப் பற்றினுப் போலே, உபேயாந்தரமானஐஸ்வர்யகைவல்யங்களைவிட்டு எல்லை யான ப்ராப்யத்தை அர்த்திக்கிறது. இவன் அர்த்திக்கவேணுமோ, ஸர்வஜ்ஞன் இவன் நினைவறியானே வென்னில்; இவன்பாசுரம் கேட்டவாறே திருவுள்ளமுகக்கும்.

---

வ்யா.—ப்ராப்யாந்தரங்களைவிட்டு இந்தப்ராப்யத்தைஅபேக்ஷிக்கவேண்டுவா-னென்னென்கிற ஶங்கையிலே அருளிச்செய்கிறுர் (உபாயாந்தரங்களைவிட்டென்றுதொடங்கி.) அதாவது-உபாயவரணம் பண்ணுகிற வளவில் அநந்யஶரணத்வரூபமான ஸ்வரூபத்துக்கு அநுகுணமாக கர்மஜ்ஞாநபக்திகளாகிற உபாயாந்தரங்களை விட்டு சரமமானஸித்தோபாயத்தைப் பற்றினுப்போலே, உபேய ப்ரார்த்தனை பண்ணுகிற வளவிலும் அநந்யபோகத்வரூபமான ஸ்வரூபத்துக்கநுகுணமாக உபேயாந்தரமான ஐஸ்வர்ய கைவல்யங்களைவிட்டு சரமமான ப்ராப்யத்தை அர்த்திக்கிறது என்கை. நினைவறியும் ஈஸ்வரன்பக்கல் ப்ரார்த்தனைமிகை யென்றிருப்பார் பண்ணும் ப்ரஸ்நத்தை அநுவதிக்கிறுர் (இவன் அர்த்திக்க வேணுமோ, ஸர்வஜ்ஞன் இவன்நினைவறியானே வென்னில் என்று.) அதுக்கு உத்தரமருளிச்செய்கிறுர் (இவன்பாசுரங்கேட்டவாறே திருவுள்ள முகக்குமென்று.) அதாவது -ருக்ணதையாலே சோற்றில்ஆசையற்றுக்கிடந்தப்ரஜை,ரோகம் தீர்ந்துபசிவிளைந்து, (சோறு) என்று அபேக்ஷிக்கும் பாசுரங்கேட்டால் பெற்றதாய் உகக்குமாப்போலே, அநாதிகாலம் ப்ராப்யாந்தரப்ராவண்யமாகிற நோய்கொண்டு இந்த ப்ராப்யத்தில் நசையற்றுக் கிடந்தவன், இதிலே ருசிபிறந்து தன்பக்கலிலேவந்து இத்தைஅபேக்ஷிக்கிற பாசுரங்கேட்டவாறே ஶேஷியான வவன் திருவுள்ளமுகக்கும், அதுக்காக அர்த்திக்கிறுனித்தனையென்கை.

---

அ.—ப்ராப்யாந்தரங்களை-ஐச்வர்யகைவல்யங்களை. இந்தப்ராப்யத்தை-பகவத் கைங்கர்யத்தை. உபாயவரணம்பண்ணுகிறவளவில்-ஈச்வரனை உபாயமாகப் பற்றுகிறபோது. இத்தால்- உபாயோபேயங்களுக்கு ஆநுரூப்யமும், இரண்டுக்கும் ஸ்வரூபாநுரூபத்வமும் சொல்லிற்றாய்த்து.

ருக்ணதையாலே-ரோகத்தாலே. நோய்கொண்டு-வ்யாதிகொண்டு. இந்தப்ராப்யத்தில்-பகவத்கைங்கர்யத்தில். நசையற்று-ருசியற்று. இதில்-பகவத்கைங்கர்யத்தில். பாசுரம்-வாக்யம். அதுக்காக-எம்பெருமானுடைய முகமலர்த்திக்காக. இவனுடைய ப்ரார்த்தநாவிஷயமான கைங்கர்யம் அவனுக்குஉறுப்பானுப்போலேஇவனுடைய ப்ரார்த்தனையும் அவன்முகமலர்த்திக்கு உறுப்பாகையாலே இவ்வதிகாரிக்கு அவச்யாபேக்ஷிதமாய்த்து.

மூ.—(ஸ்ரீமதே) பெரியபிராட்டியாரோடே கூடியிருந்துள்ளவனுக்கு. அவன்உபாயமாமிடத்தில் தான் புருஷகாரமாயிருக்கும்; அவன் ப்ராப்யனுமிடத்தில் தான் ப்ராப்யையுமாய், கைங்கர்ய வர்த்தகையுமாயிருக்கும்.

---

வ்யா.—இனி,இவ்வாக்யத்துக்குப்ரதிபதம் அர்த்தமருளிச்செய்வதாகத் திருவுள்ளம்பற்றி, ப்ரதமபதத்தை உபாதாநம்பண்ணுகிறுர் (ஸ்ரீமதே யென்று.) அதுக்கு அர்த்தமருளிச்செய்கிறுர் (பெரியபிராட்டியாரோடே கூடியிருந்துள்ளவனுக்கு என்று.) இங்கும், ஸ்ரீஶப்தத்துக்கு பூர்வவாக்யத்தில் சொன்ன வ்யுத்பத்தித்வயமும், அதினர்த்தமும், மதுபர்த்தமான நித்யயோகமும் அநுஸந்தேயம்.

இரண்டிடத்திலும் நித்யயோகம் ஒத்திருக்கச் செய்தே, அவ்வவதஶாநுகுணமாகஇவளிருக்குமிருப்பை யருளிச்செய்கிறுர் (அவனுபாயமாமிடத்திலென்றுதொடங்கி.) அதாவது - அவன் சேதநர்க்கு அநிஷ்ட நிவ்ர்த்தீஷ்ட ப்ராப்திகளுக்கு உபாயமாமிடத்தில் ஸஹாயாந்தரஸம்ஸர்க்கத்தை ஸஹியாமையாலே தான் உபாயபாவத்தில் அந்வயமின்றிக்கே, ஸாபராத சேதநருடைய அபராதங்களைப்பார்த்து, அவன் சீறுமளவில், அத்தை ஸஹித்து அங்கீகரிக்கும்படியாகப்பண்ணும் புருஷகாரமாயிருக்கும்: அவன் சேதநர்க்குக் கைங்கர்யப்ரதிஸம்பந்திதயா ப்ராப்யனுமிடத்தில் அவனேபாதிகைங்கர்யப்ரதிஸம்பந்தியாய்க்கொண்டு தான் ப்ராப்யையுமாய், இவர்கள் செய்யுங் கைங்கர்யத்தை அவன் திருவுள்ளத்திலே ஒன்றுபத்தாகப்படுத்தி உகப்பிக்கையாலே கைங்கர்ய வர்த்தகையுமாயிருக்குமென்கை.

---

அ.—இனி-உத்தரவாக்யத்துக்கு மஹாவாக்யார்த்தமும்,தாத்பர்யார்த்தமும், சரமப்ராப்ய ப்ரார்த்தநாஹேதுவும், அருளிச்செய்தவநந்தரம்.

இங்கும்-உத்தரவாக்யத்திலும். வ்யுத்பத்தித்வயம்-கர்மணி வ்யுத்பத்தியும், கர்த்தரிவ்யுத்பத்தியுமாகிற இரண்டும். அதினர்த்தமும் - எல்லார்க்கும் இவளைப்பற்றி ஸ்வரூபலாபமாய் இவள்தனக்கும் அவனைப்பற்றிஸ்வரூபலாபமாயிருக்குமென்னு மர்த்தம்.

இரண்டிடத்திலும்-பூர்வோத்தர கண்டத்திலும். அவ்வவதசாநுகுணமாக-ஈச்வரனுடைய உபாயதசைக்கும் ப்ராப்யதசைக்குமடியாக. இவள் - பெரியபிராட்டியார். அவன் - ஸர்வேச்வரன். உபாயபாவத்தில் - உபாய கார்யமான இஷ்ட ப்ராபண அநிஷ்ட நிவாரணத்தில். அந்வயமின்றிக்கே-ஸாக்ஷாத்கர்த்ர்த்வேந அந்வயமின்றிக்கே ஸத்வாரகாந்வயமுண்டிறே இவளுக்கு. அவனேபாதி-அவனைப்போலே. ஒன்றுபத்தாக-ஒன்று அநேகமாக.

மூ.—இதிலே-திருமந்த்ரத்தில் சொன்ன ப்ராப்யத்தைவிஶதமாக அநுஸந்திக்கிறது.

---

வ்யா.—இதுதன்னைப் பரந்தபடியிலே "பூர்வவாக்யத்தில், ஸ்ரீமச்சப்தம் சேதநருடைய அபராதத்தையும், ஈச்வரனுடையஸ்வாதந்த்ர்யத்தையுங் கண்டு, இவர்கள் அவனுடையக்ரோதத்துக்கு விஷயபூதராய் நஶித்துப் போகாதே, இவனைக்கிட்டி உஜ்ஜீவித்துப்போகவேணும் என்று, ஸாபராதரான சேதநனை ஈச்வரனோடே சேர்க்கைக்காக என்றுமொக்கவிடாதே யிருக்குமிருப்பைச் சொல்லுகிறது; இங்குத்தை ஸ்ரீமச்சப்தம் கைங்கர்ய ப்ரதிஸம்பந்தித்வத்தைப்பற்றவும், இவர்கள் பண்ணுங் கைங்கர்யத்தை ஈச்வரன்திருவுள்ளத்திலே ஒன்றுபத்தாகப்படுத்துகைக்காகவும், அநுபவவிச்சேதத்தில் தனக்கு ஸத்தாஹாநி பிறக்கும்படி யிருக்கையாலே நிரந்தரஸம்ஶ்லேஷத்துக்காகவும், அவனை க்ஷணகாலமும்பிரியாதே ஸர்வகாலமும் ஸம்ஶ்லிஷ்டையாயிருக்கு மிருப்பைச் சொல்லுகிறது" என்று விஸ்தரேண அருளிச்செய்தார்.

திருமந்த்ரத்தில் உத்தரபதத்துக்கு இவ்வுத்தரவாக்யம் விவரணமா யிருக்கிறபடியை அருளிச்செய்கிறார் (இதிலே யென்று தொடங்கி.) அதாவது - கைங்கர்ய ப்ரதிஸம்பந்தி ஒருமிதுநமென்னுமிடத்தை ஶாப்தமாகப்ரதிபாதிக்கிற இந்தவாக்யத்திலே, திருமந்த்ரத்தில் "நாராயணாய" என்று கைங்கர்ய ப்ரதிஸம்பந்தி ஒருமிதுநமென்னுமிடம் ஆர்த்தமாகையாலே, அவிஶதமாகச் சொன்னப்ராப்யத்தைவிஶதமாக அநுஸந்திக்கிறதுஎன்கை.

அங்கு, (நாராயணனுக்கே அடிமை செய்யப் பெறுவேனாக வேணும்) என்கிற இவ்வளவொழிய, அடிமைகொள்ளுமவன் ஸ்ரீமானாகவேணும் என்றும், அடிமை செய்யுமவன், நிர்மமனாகவேணுமென்றும் சொல்லாமையாலும், அவையிரண்டும் இங்குச்சொல்லுகையாலுமிறே இப்பதத்துக்கு இவ்வாக்யம் விவரணமாயிற்று.

---

அ.—இதுதன்னை-பிராட்டி த்வயத்தில் பூர்வோத்தர கண்டங்களிலே புருஷகாரமாகவும் ப்ராப்யமாகவும ப்ரதிபாதிக்கப்படாநின்றாளென்று இது தன்னை. இங்குத்தை - உத்தரவாக்யத்தில். கைங்கர்யப்ரதிஸம்பந்தித்வத்தைப் பற்றவும் - சேதநர் பண்ணும் கைங்கர்யத்துக்குத்தான் ப்ரதிஸம்பந்தியாகைக்காகவும். அநுபவவிச்சேதத்திலே-சேதநர்பண்ணும் கைங்கர்யத்தை ஒன்று பத்தாகத்திருவுள்ளம்பற்றி ஆநந்தநிர்பரனா யிருக்கும் ஈச்வராநுபவவிச்சேதத்தில்.

உத்தரபதத்துக்கு-நாராயணபதத்துக்கு. இந்தவாக்யத்திலே-த்வயோத்தர வாக்யத்திலே.

அங்கு-திருமந்த்ரத்தில். இங்கு உத்தரவாக்யத்தில். அப்பதத்துக்குஇவ்வாக்யம்-அந்தநாராயணபதத்துக்கு இவ்வுத்தரவாக்யம்.

மூ.—இளையபெருமாளைப்போலே இருவருமானசேர்த்தியிலே அடிமைசெய்கை முறை; அடிமைதான்ஸித்திப்பதும் ரஸிப்பதும் அச்சேர்த்தியிலே. (நாராயணுய)

---

வ்யா.—இம்மிதுநத்துக்கேஅடிமைசெய்யவேணும்என்கிறநிர்ப்பந்தந்தானென்னென்ன அருளிச்செய்கிறுர் (இளையபெருமாளைப்போலேயென்றுதொடங்கி.) அதாவது - (భవాంస్తు సహ వైదేహ్యా గిరి సానుషు రంస్యతే। అహం సర్వం కరిష్యామి జాగ్రతః స్వపతశ్చ తే) (பவாꣳஸ்துஸஹ வைதேஹ்யாகிரிஸாநுஷுரꣳஸ்யதே-அஹꣳஸர்வꣳகரிஷ்யாமிஜாக்ரதஸ்ஸ்வபதஶ்சதே) என்று-பெருமாளும்பிராட்டியுமான சேர்த்தியிலே அடிமைசெய்தஇளையபெருமாளைப்போலே, இருவருமான சேர்த்தியிலே அடிமைசெய்கைஇவ்வாத்மாவுக்கு ஸ்வரூபப்ராப்தமென்கை. மிதுநஶேஷத்வம்ஸ்வரூபமாளுல், மிதுநகைங்கர்யமிறே ஸ்வரூபப்ராப்தம். இன்னமும் இச்சேர்த்தியிலே அடிமை செய்யுமளவிலுள்ள வாசியை அருளிச்செய்கிறுர் (அடிமைதானென்று தொடங்கி.) அதாவது - ஸ்வதந்த்ரனுன ஈச்வரன் உபேக்ஷியாமல்கைங்கர்யங்கொண்டருளும்படிபண்ணுமவள்இவளாகையாலே, (సీతామువాచ) (ஸீதாமுவாச) (సీతా సమక్షం కాకుత్స్థ మిదం వచన మబ్రవీత్)(ஸீதாஸமக்ஷꣳகாகுத்ஸ்தமிதꣳவசநமப்ரவீத்)என்று,இவள் முன்னிலையாகத் தம்முடைய ஸ்வரூபாநுரூபமான அடிமையை அபேக்ஷித்துப்பெற்ற இளையபெருமாளைப்போலே, இவன்ப்ரார்த்திக்கிற அடிமைதான் ஸித்திப்பதும் மாதாபிதாக்களிருவருமான சேர்த்தியிலே ஶுஶ்ரூஷைபண்ணும் புத்ரனுக்குப் போலே, செய்கிற அடிமைதான் ரஸிப்பதும் பிராட்டியும் அவனுமான சேர்த்தியிலேயென்கை.

இனி, இரண்டாம்பதத்தை உபாதாநம் பண்ணுகிறுர் (நாராயணுயவென்று.)

---

அ.—நிர்ப்பந்தந்தான் - நியமந்தான். மிதுநசேஷத்வம் ஸ்வரூபமாளுல் - திருமந்த்ரத்தில் ப்ரதமபதமானப்ரணவத்தில் ப்ரதமாக்ஷரமான அகாரத்தால் ப்ரதிபாதிதமான மிதுநசேஷத்வம் ஸ்வரூபமாளுல்.

இன்னமும் - மிதுந கைங்கர்யம் ஸ்வரூப ப்ராப்தமென்று அருளிச்செய்ததுக்குமேலே. வாசியை - அதிசயத்தை. ஸீதாஸமக்ஷம் - ஸீதைக்குமுன்னே. மாதாபிதாக்கள்-ப்ராப்தரான மாதாபிதாக்கள். சுச்ரூஷைபண்ணும்-பித்ர்சுச்ரூஷைபண்ணும்.

ரஸிப்பதும்-ஈச்வரனுக்கு ரஸாவஹமாகிறதும்.

இனி-ஸ்ரீமத்பதார்த்தமருளிச்செய்தவநந்தரம்.

மூ.— ஸர்வஶேஷியாயுள்ளவனுக்கு. இதிலே திருமேனியையுங் குணங்களையுஞ் சொல்லும்.

---

வ்யா.—அதுக்கர்த்தமருளிச்செய்கிறார் (ஸர்வஶேஷியாயுள்ளவனுக்கு என்று.) நாராயணத்வம், உபயவிபூதிநாதத்வமாகையாலே, (ஸர்வஶேஷியாயுள்ளவனுக்கு) என்கிறார். கைங்கர்ய ப்ரதிஸம்பந்தியாவான் ஶேஷியிறே. கைங்கர்யந்தான் அநுபவஜநித ப்ரீதிகாரிதமாகையாலும், அந்தப்ரீதிதான் அநுபாவ்ய விஷயாதீநையாகையாலும், அநுபாவ்யவிஷயஞ் சொல்லவேண்டுகையாலே அருளிச்செய்கிறார் (இதிலே திருமேனியையுங் குணங்களையுஞ் சொல்லுமென்று.) அதாவது - கைங்கர்ய ப்ரதிஸம்பந்தியைச் சொல்லுகிற இப்பதத்திலே, கைங்கர்யத்துக்கு பூர்வபாவியாயிருக்கும் அநுபவத்துக்கு விஷயமான திவ்யமங்கள விக்ரஹத்தையும், கல்யாண குணங்களையும் சொல்லுமென்கை.

(సదాపశ్యన్తిసూరయః)(ஸதாபஶ்யந்திஸூரய:) என்றும்,(సోఽశ్నుతే సర్వాన్ కామాన్) (ஸோஶ்நுதேஸர்வாந்காமாந்) என்றும் இத்யாதிகளில் சொல்லுகிறபடியே, திவ்யமங்களவிக்ரஹமும், கல்யாண குணங்களும், (రసంహ్యేవాయంలబ్ధ్వానన్దీభవతి) (ரஸம்ஹ்யேவாயம்லப்த்த்வாநந்தீபவதி) என்கிறஸ்வரூபத்தோபாதிகைங்கர்ய வர்த்தகங்களுமாய், போக்யங்களுமாயிறே யிருப்பது; குணங்கள் என்று ஸாமாந்யேநசொல்லுகையாலே, ஜ்ஞாநஶக்த்யாதிகுணங்களோடு வாத்ஸல்யாதிகுணங்களோடு, ஶௌர்யாதிகுணங்களோடு வாசியற எல்லாகுணங்களும் அநுபாவ்யங்களாயிருக்கையாலே, பூர்வவாக்யத்தில் நாராயணபதத்தில், உபாயவரணத்துக்கு உபயுக்ததயா அநுஸந்தேயங்களான குணவிஶேஷங்களும் இப்பதத்தில் ப்ராப்யதயா அநுஸந்தேயங்கள்;

---

அ.—நாராயணத்வம் உபயவிபூதி நாதத்வமாகையாலே-நாரங்களாவன என்று தொடங்கி, பரமாகாசமும் என்னுமளவாக நித்யவிபூதியையும், ப்ரக்ருதியுமென்றுதொடங்கி, தேவாதிபதார்த்தங்களும் என்னுமளவாக-லீலாவிபூதியையும், நாரபதம் சொல்லுகையாலே-உபயவிபூதிநாதத்வமாகையாலே என்றபடி.

ஸர்வஸ்வாமியாயுள்ளவனுக்கு என்னுதே "ஸர்வசேஷியாயுள்ளவனுக்கு" என்றதுக்கு அபிப்ராயத்தை யருளிச்செய்கிறார் (கைங்கர்யப்ரதிஸம்பந்தியாவான் சேஷியிறேயென்று.) கைங்கர்ய ப்ரதி ஸம்பந்தி-கைங்கர்ய ப்ரதி க்ரஹீதா.

ஸ்வரூபத்தோபாதி - திவ்யாத்ம ஸ்வரூபத்தோபாதி. கைங்கர்யவர்த்தகங்களாய் போக்யங்களாயிறே யிருப்பது-ரஸசப்தவாச்யமான திவ்யாத்மஸ்வரூபம் அநுகூலமாய்த் தோற்றுகையாலே இவ்விஷயத்தில் எத்தைச்செய்வோமென்று தடுமாறி மேன்மேலும் கைங்கர்யத்திலே அந்வயிப்பித்து போக்யமாயிருப்பன்.

மூ.—ஶேஷித்வத்திலே நோக்கு. ப்ராப்தவிஷயத்தில்கைங்கர்ய மிறே ரஸிப்பது;

---

வ்யா.—ஆச்ரயமான ஸ்வரூபத்துக்கு ஆகாரத்வய முண்டா யிருக்கிறுப்போலே, ஆச்ரயிகளான குணவிஶேஷங்களுக்கும் ஆகாரத்வயமும் உண்டாயிறே யிருப்பது.'' இவையெல்லாம் பரந்தபடியிலே அருளிச்செய்தார்.

இனி, இப்பதத்துக்கு தாத்பர்யம் இன்னதிலேயென்கிறுர் (ஶேஷித்வத்திலே நோக்கு என்று.) அதாவது-அநுபாவ்யத்வம் அவிஶிஷ்டமாகையாலே ஸகலகுணங்களும் ப்ரதிபாதிதமாயிருந் ததே யாகிலும், சதுர்த்த்யംஶத்தில் சொல்லுகிற வ்ர்த்திவிஶே ஷத்துக்கு மிகவும் அந்தரங்கமாயிருப்பது ஶேஷித்வமாகையாலே, அதிலே இப்பதத்துக்கு நோக்கு என்கை.

இந்தஶேஷித்வ கதநத்துக்கு ப்ரயோஜந மருளிச்செய்கிறுர் (ப்ராப்தவிஷயத்தில் கைங்கர்யமிறே ரஸிப்பது என்று.) அதா வது - (సర్వం పరవశం దుఃఖమ్) (ஸர்வംபரவசംதுஃகம்) என்றும், (సేవా శ్వవృత్తిః)(ஸேவாஶ்வவ்ர்த்திஃ)என்றும்சொல்லுகிறபடியே, நிஷித்த மான அப்ராப்தவிஷயத்தில் கைங்கர்யம்போலன்றிக்கே, (ఛాయావా సత్వమనుగచ్ఛేత్) (சாயாவாஸத்வமநுசச்சேத்) என்றும், (సాకిమర్థం న సే వ్యతే) (ஸாகிமர்த்தംநஸேவ்யதே) என்றும் சொல்லுகிறபடியே- விஹிதமான ப்ராப்தவிஷயத்தில் பண்ணுங் கைங்கர்யமிறே இவனுக்கு ரஸிப்பது என்கை.

---

அ.—ஆச்ரயமான ஸ்வரூபத்துக்கு-ஜ்ஞாநசக்த்யாதி குணங்களு க்கு. ஆச்ரயமான திவ்யாத்மஸ்வரூபத்துக்கென்றபடி. ஆகாரத்வய முண்டாயிருக்குமாப்போலே - குணவிசேஷங்களுக்குஆகாரத்வய முண்டாயிருக்குமாப்போலே. ப்ராப்யத்வமும்ப்ராபகத்வமுமாகிற ஆகாரத்வயமுண்டாயிருப்பது - ஆச்ரயண ஸௌகர்யாபாதகத்வ மும் ப்ராப்யத்வமுமாகிற ஆகாரத்வயமுண்டாயிருப்பது. ஸ்வ ரூபத்துக்கு-திவ்யமங்கள விக்ரஹத்துக்குஎன்றபடிஎன்னவுமாம்.

இனி-நாராயணபதத்துக்கு சேஷித்வமும், விக்ரஹத்வமும், குணங்களும் என்று அர்த்தம்சொன்ன அநந்தரம். இப்பதத்து க்கு-திவ்யமங்கள விக்ரஹத்துக்கும் திவ்யாத்மஸ்வரூபத்துக்கும், ஜ்ஞாநசக்த்யாதிகுணங்களுக்கும் வாசகமான இந்தநாராயண பத த்துக்கு. அவிஶிஷ்டமாகையாலே-ஸமாநமாகையாலே. அந்தரங் கமாயிருப்பது- ஆவச்யகமாயிருப்பது.

சதுர்த்த்யംசத்தில் - சதுர்த்தியிலே. நோக்கு-தாத்பர்யம்.

இந்த-இப்பதத்துக்கு தாத்பர்யமான. பரவசம் துஃகம்-பரவ ஶத்வம் துஃகம். சாயாவா-சாயேவ. விஹிதமான - சாஸ்த்ரவிஹித மான,

மூ.—இந்த சதுர்த்தி, கைங்கர்யத்தைப்ரகாஶிப்பிக்கிறது.

---

வ்யா.—இனி, இப்பதத்தில் விபக்த்யம்ஶத்துக்கு அர்த்தமருளிச் செய்கிறார்(இந்தசதுர்த்தியென்றுதொடங்கி.) அதாவது - ஶேஷத்வஜ்ஞானகார்யமான உபாயபரிக்ரஹத்துக்கு அநந்தரம் ப்ராப்தமாயுள்ளது ஆகையாலே, தாதர்த்யப்ரதிபாதகமன்றிக்கே, இந்த சதுர்த்தி, பரிக்ரஹித்த உபாயத்தினுடைய பலமான கைங்கர்யத்தை ப்ரகாஶிப்பிக்கிறது என்கை.

கைங்கர்யத்தை ப்ரகாஶிப்பிக்கையாவது - கைங்கர்ய ப்ரார்த்தனையை ப்ரதிபாதிக்கை. கைங்கர்யமாவது - பகவந்முகவிகாஸஹேதுவான வ்ர்த்திவிஶேஷம். இக்கைங்கர்யந்தான், (ఏతత్సామగాయన్నాస్తే) (ஏதத்ஸாமகாயந்நாஸ்தே) என்றும், (నమఇత్యేవవాదినః) (நமஇத்யேவவாதிநः)என்றும், (యేనయేనధాతాగచ్ఛతి తేనతేనసహగచ్ఛతి) (யேநயேநதாதாகச்சதிதேநதேநஸஹகச்சதி) என்றும் இத்யாதிகளில் சொல்லுகிறபடியே, வாசிககாயிகரூபமாயிருக்கும்.

---

அ.—இனி-நாராயணபதத்துக்குப்ரகர்த்யர்த்தமருளிச்செய்தவநந்தரம். இப்பதத்தில்-நாராயணபதத்தில். விபக்த்யம்சத்துக்கு-சதுர்த்திக்கு. உபாயபரிக்ரஹத்துக்கு - உபாயஸ்வீகாரத்துக்கு. தாதர்த்யப்ரதிபாதகமன்றிக்கே-தாதர்த்யே சதுர்த்தியன்றிக்கே. இந்த சதுர்த்தி–உத்தரவாக்யத்தில் சதுர்த்தி.

வ்ர்த்திவிசேஷம்-சேஷத்வசேஷித்வங்களுக்கு ஹாநிவாராமல் பண்ணும் வ்ர்த்தியன்றியே தன்சேஷத்வத்தை யழியமாறிவரும் வ்ர்த்திவிசேஷம். அதாவது, தன்னை சேஷியாகவைக்க இசைகை - சேஷிக்கதி சயத்தை விளைக்கை. ஸ்வரூபம் எவ்வழியாலே வருமோ அவ்வழி உபாதேயமிறே.

* [ఏతత్సామగాయన్నాస్తే - ஏதத்ஸாமகாயந்நாஸ்தே தொடங்கி, అహంవిశ్వం భువనమభ్యభవాం - அஹம்விச்வம்புவநமப்யபவாம் என்னுமளவும் இந்தஸாமத்தைப் பாடிக்கொண்டிராநிற்கும், ஹாஉவ் ஹாஉவ் ஹாஉவ் என்று ஆஶ்சர்யப்படும், (அஹமந்நமஹமந்நமஹமநநம்) என்று தன்போக்யதையைப் பலகாலும்சொல்லும், (அஹமந்நாதோஉஹமந்நாதோஉஹமந்நாதः) என்று கொண்டு நான்போக்தாவானேனென்று பலகாலும் சொல்லும், நான் ஸுக்ர்தத்துக்கு முற்பாடனாகா நின்றேனென்றும், தேவர்களானநித்யஸூரிகளுக்கு முன்னே அம்ர்தத்துக்கு நடுவாகாநின்றேன் என்றும், யாவனொருவன் என்னை உனக்குத்தந்தான் அவனாலேயிறே நீ என்னைப்பெற்றது, அந்நமாயிருக்கிறநான், அந்நமாயிருக்கிறவென்னை புஜிக்கிற பகவானை புஜியாநின்றேனென்றும், நான் எல்லாபுவநத்தையும் அமுக்கி மேலானேனென்றும் இப்படிப்பாடி ஆஶ்சர்யப்பட்டு ஸ்தோத்ரம் பண்ணினபடியைச் சொல்லுகிறது.

[యేనయేన-யேநயேநஇதி] ஸர்வேச்வரன் யாதொரு யாதொரு நினைவாலே நடக்கிறான், அந்நினைவோடேகூட நடவாநிற்பன்.

மூ.—கைங்கர்யந்தான் நித்யம். நித்யமாக ப்ரார்த்தித்தே பெறவேணும். ஶேஷிக்கு அதிஶயத்தைவிளைக்கை ஶேஷபூதனுக்கு ஸ்வரூபலாபமும், ப்ராப்யமும்.

---

வ்யா—இக்கைங்கர்யம் ப்ரார்த்தநீயமாகில் காதாசித்கமாகாதோ என்ன அருளிச்செய்கிறார் (கைங்கர்யந்தான் நித்யம் என்று.) அதாவது - ஶேஷத்வமே ஆத்மாவுக்கு ஸ்வரூபமாகையாலும், (అకిఞ్చిత్కరస్య శేషత్వానుపపత్తిః) (அகிஞ்சித்கரஸ்யசேஷத்வாநுபபத்திः) என்கிறபடியே கிஞ்சித்காராபாவத்தில் அதுதான் அநுபபந்நமாகையாலும், கைங்கர்யம் ஆத்மாவுக்கு நித்யமென்கை. ஆகையிறே, (నిత్యకింకరః ప్రహర్షయిష్యామి) (நித்யகிங்கரஃப்ரஹர்ஷயிஷ்யாமி) என்றும், (నిత్యకింకరో భవాని) (நித்யகிங்கரோபவாநி) என்றும் ஆசார்யர்கள் அருளிச்செய்தது. நித்யமாயிருக்குமாகில் ப்ரார்த்திக்கவேணுமோ என்ன அருளிச்செய்கிறார் (நித்யமாகப்ரார்த்தித்தே பெறவேணுமென்று.) அதாவது - விஷயம் உத்துங்கமாகையாலும், ஆஶ்ரயபூதனான சேதநன் அத்யந்த பரதந்த்ரனாகையாலும், ப்ரார்த்தநாவிஶேஷம் இல்லாதபோது கைங்கர்யம் ஸித்தியாமையாலும் நித்யமாகப்ரார்த்தித்தே பெறவேணுமென்கை.

இது நித்யப்ரார்த்தநீயமாகைக்கு நிதாநத்தையருளிச்செய்கிறார் (ஶேஷிக்கு என்று தொடங்கி.)

---

அ.—ஸ்வரூபமாகையாலும்-ஸ்வரூபநிரூபகமாகையாலும். அதுதான் அநுபபந்நமாகையாலும்-நித்யமான ஆத்மஸ்வரூபத்துக்கு ப்ரதாந நிரூபகமான சேஷத்வம் ஸித்தியாமையாலும். ஆகையிறே-கைங்கர்யம் நித்யமாகையாலேயிறே.

விஷயம் உத்துங்கமாகையாலும்-கைங்கர்யத்துக்கு விஷயபூதனான ஈச்வரன் ஸர்வஸ்மாத்பரனாகையாலும். ஆச்ரய பூதனான-கைங்கர்யத்துக்கு கர்த்ர்த்வேந ஆச்ரயமான. அத்யந்தம்-அசித்வத்; அதாவது-ஜ்ஞாத்ர்த்வபலத்தாலே ஸ்வதந்த்ரனாயும், சேஷத்வபலத்தாலே பரதந்த்ரனாயு மிருக்கையன்றிக்கே, நமஃபதோக்த ஸ்வாதந்த்ர்ய நிவ்ர்த்தி பலத்தாலே பரதந்த்ரனாயே யிருக்கை. ப்ரார்த்தநாவிசேஷம்-சேஷபூதனான அடியேனை சேஷியான தேவரீர் முகமலர்த்திக்குறுப்பாக விநியோகங்கொண்டு அடியேனை ஸத்தைபெற்றேனாம்படி க்ர்பைசெய்தருளவேணுமென்கிற ப்ரார்த்தனை. பெறவேணும்-லபிக்கவேணும்.

இது-கைங்கர்யம். நிதாநத்தை-மூலகாரணத்தை.

மூ.—(நம:) கைங்கர்யத்தில் களையறுக்கிறது. களையாவது-தனக்கென்னப் பண்ணுமது.

---

வ்யா.—அதாவது - (𑌨𑌾𑌕𑌿𑌞𑍍𑌚𑌿𑌤𑍍𑌕𑍁𑌰𑍍𑌵𑌤𑌃𑌶𑍇𑌷𑌤𑍍𑌵𑌮𑍍)(நாகிஞ்சித்குர்வதஶ் ஶேஷத்வம்)என்கிறபடியே-ஶேஷிக்கு அதிஶயகரமல்லாத வஸ்துவுக்கு ஶேஷத்வம் இல்லாமையாலே, சேஷியான ஈஶ்வரனுக்குத் தன்னுடைய வ்ர்த்திவிஶேஷங்களாலே ப்ரீதிரூபமான அதிஶயத்தை விளைக்கைஶேஷபூதனானவனுக்குத்தன்ஸ்வரூபலாபமுமாய், அவனுடைய முகோல்லாஸாநுபவத்துக்கு உறுப்பாயிருக்கையாலே, ப்ராப்யமுமாயிருக்குமென்கை. ஆகையாலே, நித்யப்ரார்த்தநீயமாயிருக்கும் என்றுகருத்து.

அநந்தரம், சரமபதத்தை யுபாதாநம் பண்ணுகிறார் (நம:என்று.) அதுக்கு அர்த்தம் அருளிச்செய்கிறார் (கைங்கர்யத்தில் களையறுக்கிறது என்று.) அதாவது - நமஶ்ஶப்தம் ஸாமாந்யேந அஹங்கார மமகாரங்களைக் கழிக்கையாலே, திருமந்த்ரத்தில் மத்யமபதமான நமஶ்ஶப்தம்போலே, ஸ்வரூபோபாய புருஷார்த்தவிரோதிகள் மூன்றையுங் கழிக்க வற்றாயிருந்ததேயாகிலும்,இங்குஅங்ஙனன்றிக்கே,கைங்கர்யப்ரார்த்தநாநந்தரோக்தமாகையாலே, இந்த கைங்கர்யத்தில் விரோதியைக்கழிக்கிறது என்கை. கைங்கர்யத்துக்குக் களையேதென்ன அருளிச்செய்கிறார் (களையாவது தனக்கென்னப்பண்ணுமது என்று.) தனக்கென்னப் பண்ணுகையாவது-(𑌭𑍋𑌕𑍍𑌤𑌾𑌹𑌂𑌮𑌮𑌭𑍋𑌗𑍋𑌯𑌮𑍍)(போக்தாஹம்மமபோகோயம்) என்கிற இத்தைத் தன்னுடைய ரஸத்துக்குறுப்பாக நினைத்துப் பண்ணுகை; பகவந்முகவிகாஸ ஹேதுவாகையாலே இது நமக்காதரணீயம் என்கிற ப்ரதிபத்தியொழிய இதில் போகத்ர்த்வப்ரதிபத்தியும், மதீயத்வப்ரதிபத்தியும் நடக்குமாகில், அபுருஷார்த்தமாயிறேயிருப்பது.

---

அ.—தன்ஸ்வரூபலாபமுமாய் - தனக்கு அஸாதாரண தாமமான சேஷத்வமாகிற ஸ்வரூபலாபமாய்.உறுப்பாயிருக்கையாலே-காரணமாயிருக்கையாலே.

அநந்தரம் - சதுர்த்த்யர்த்தமருளிச்செய்த வநந்தரம். சரமபதத்தை-இவ்வாக்யத்தில் சரமபதமான நம:பதத்தை.

அதுக்கு-நம:பதத்துக்கு. இங்கு-உத்தரவாக்யத்தில். அங்ஙனன்றியே - திருமந்த்ரத்தில் போலன்றிக்கே. இந்த-ஸங்நிஹிதமான.களையாவது-ஸ்ஸ்யவர்த்திவிரோதியான பூண்டாகையாலே, இங்கு, களைஎன்றது - கைங்கர்ய விரோதியைச் சொல்லுகிறது. இத்தை - கைங்கர்யத்தை. தனக்குறுப்பாக - ஈச்வரமுகமலர்த்திக்குறுப்பாக்காதேதன்னுடையப்ரீதிக்குறுப்பாக.ஒழிய-அன்றிக்கே.

மூ.—இதிலே அவித்யாதிகளுங் கழியுண்ணும். "உனக்கே நாமாட்செய்வோம்" என்னும்படியே ஆகவேணும்.

---

வ்யா.—இன்னமும் இந்த கைங்கர்யப்ராப்திக்குவிரோதிகளானவையும் இதிலேதள்ளுண்ணுமென்கிறார் (இதிலேஅவித்யாதிகளுங் கழியுண்ணுமென்று.) அதாவது-அஹங்கார மமகார நிவர்த்தியை ப்ரார்த்திக்கிற இந்நமஸ்ஸிலே, (అనాత్మన్యాత్మబుద్ధిర్యా అస్వేస్వమితియా మతిః । అవిద్యాతరుసమ్భూతిబీజమేతద్ద్విధాస్థితమ్) (அநாத்மந்யாத்மபுத்திர்யா அஸ்வேஸ்வமிதியாமதிః - அவித்யாதருஸம்பூதி பீஜமேதத்விதாஸ்திதம்) என்கிறபடியே, அநாத்மந்யாத்மபுத்த்யாதிகளை வடிவாகவுடைத்தாய், கர்மோத்பத்திகாரணமாயிருந்துள்ளஅவித்யையும், தத்கார்யமான கர்மங்களும், தத்கார்யமாய்வரும் ப்ரக்ருதிஸம்பந்தமுமெல்லாங் கழியுண்ணுமென்கை.

ஆகையிறே, த்வயவிவரணமான கத்யத்திலே நமஶ்ஶப்தார்த்தத்தை அநுஸந்தித்தருளுகிறவளவிலே,(మనోవాక్కాయైః)(மனோவாக்காயைః) இத்யாதி சூர்ணையாலே, அக்ர்த்யகரணாத்யகில கர்மநிவர்த்தியையும், (అనాదికాలప్రవృత్త) (அநாதிகாலப்ரவர்த்த) இத்யாதிசூர்ணையாலே, அவித்யாநிவர்த்யையும், (మదీయానాది) (மதீயாநாதி) இத்யாதி சூர்ணையாலே, ப்ரக்ர்திஸம்பந்த்த நிவர்த்தியையும் பாஷ்யகாரர்ப்ரார்த்தித்தருளிற்று. ஆனாலும், இதுக்குப் ப்ரதாநார்த்தம் கைங்கர்யத்தில் ஸ்வப்ரயோஜந நிவர்த்தியாகையலே அத்தை உபபாதிக்கிறார்மேல்.

அதில் ப்ரதமத்திலே கைங்கர்யம்பண்ணும்போது தான்எப்படியாகவேணுமென்ன அருளிச்செய்கிறார் ("உனக்கேநாமாட்செய்வோம்" என்னும்படியே யாகவேணுமென்று.) அதாவது - கைங்கர்யம் பண்ணுமளவில் "உனக்கேநாமாட்செய்வோம்" என்று, உனக்கும் எங்களுக்குமிருக்குமிருப்புத்தவிர, உனக்கே யுகப்பாக நாங்கள் அடிமைசெய்யவேணும் என்கிறபடியே, மோக்ஷிக்கே உகப்பாகப்பண்ணவேணும் என்கை. "தனக்கேயாக எனைக்கொள்ளுமீதே" என்றிறே ஆழ்வாரும் அருளிச்செய்தது.

---

அ.—இன்னமும்-கைங்கர்யவிரோதியைக்கழிக்கைக்குமேலே. ஆகைஇறே-உத்தரவாக்யத்தில் நமஸ்ஸு ப்ராப்தி விரோதிகளான அவித்யாதிகளுக்கும் நிவர்த்தகமாகையாலிறே. அளவு-போது.

ஆனாலும் - இந்நமஸ்ஸு ப்ராப்தி விரோதி நிவர்த்தகமாகிலும். அக்ர்த்யகரணாதி ப்ரக்ர்திஸம்பந்தாயத்தமான வற்றினுடைய நிவர்த்தியைச்சொன்னபோதிலும். அத்தை-ஸ்வப்ரயோஜந நிவர்த்தியை. அதில் - கைங்கர்யத்தில். ப்ரதமத்தில் - கைங்கர்யத்தை உபக்ரமிக்கிறபோது. தான்-கைங்கர்யகர்த்தாவானதான். எப்படியாகவேணும்-யாதர்ஶப்ரதிபத்தி விசிஷ்டனாகவேணும். உனக்கும் எங்களுக்குமாய்-உன்ப்ரீதிக்கும் எங்கள்ப்ரீதிக்குமாய்.

மூ.—ஸௌந்தர்யம் அந்தராயம்; கீழ்ச்சொன்ன கைங்கர்யமும் அப்படியே. கைங்கர்யப்ரார்த்தனைபோலே இப்பதத்தில் ப்ரார்த்தனையும் என்றுமுண்டு. "மருந்தேநங்கள்போகமகிழ்ச்சிக்கு" என்னாநின்றதிறே.

பிள்ளைலோகாசார்யர்திருவடிகளே ஶரணம்.

---

வ்யா.—இனி, இந்த கைங்கர்யத்துக்கு விக்நங்களை அருளிச்செய்கிறார் (ஸௌந்தர்யமித்யாதிவாக்யத்வயத்தாலே.) அதாவது-அவனுடைய விக்ரஹஸௌந்தர்யமும், சித்தாபஹாரியாய்க் கைசோரப் பண்ணுகையாலே கைங்கர்யத்துக்கு விக்நம்; இந்நமஸ்ஸுக்கு, கீழேசதுர்த்தியில்சொன்னகைங்கர்யமும் அபிமதவிஷய பரிசர்யைபோலே ஸ்வரஸத்துக்குஉடலாயிருக்கையாலே, அவனுடைய முகமலர்த்தியே ப்ரயோஜநமாகவிருக்குமதுக்கு அதுவும் விக்நமென்கை.

இப்படியாகையால் இவ்விரோதிநிவர்த்திப்ரார்த்தனை இடைவிடாமல் நடக்கும்படியை யருளிச்செய்கிறார் (கைங்கர்யப்ரார்த்தனைபோலே யென்றுதொடங்கி.) அதாவது-சதுர்த்தியில் சொல்லுகிற கைங்கர்யப்ரார்த்தனை காதாசித்கமன்றிக்கே நித்யமாய்ச் செல்லுமாப்போலே, இப்பதத்தில் சொல்லுகிறகைங்கர்யவிரோதி நிவர்த்திப்ரார்த்தனையும், இங்கிருக்கும் காலத்தோடு, ப்ராப்ய பூமியில்போனகாலத்தோடுவாசியற எல்லாக்காலமும்நடக்கக்கடவதாயிருக்குமென்கை.

கந்தல் கழிந்த வந்நிலத்திலும் ஸ்வபோக்த்ர்த்வோதயமுண்டாமோவென்ன அருளிச்செய்கிறார் (மருந்தேநங்கள்போக மகிழ்ச்சிக்கு என்னாநின்றதிறே யென்று.)

---

அ.—இனி-நமஸ்ஸுக்குப்ரதாநார்த்தம்ஸ்வப்ரயோஜநநிவர்த்தி என்றருளிச்செய்தவநந்தரம். கைசோரப்பண்ணுகையாலே-கைங்கர்யத்தில் கைவாங்கும்படி பண்ணுகையாலே. லக்ஷணயா ஸ்வப்ரயோஜநபுத்தியைப் பண்ணுகையாலே யென்றபடி. ஸ்வப்ரயோஜநபுத்தியைப் பண்ணிக்கொடுத்து அந்த ஸுகவிசேஷத்தாலே பரவசமாகச் சோரும்படி பண்ணுகையாலே யென்றுமாம்.

இப்படி யாகையாலே-ஸ்வப்ரயோஜநமாகப் பண்ணும் கைங்கர்யமும் தர்மமும் கைங்கர்யவிரோதியாகையாலே. இப்பதத்தில்-நமஃபதத்தில்.

கந்தல்என்றது-ஜீர்ணவஸ்த்ரமாய், அத்தால்-அத்தோடொத்த ப்ரக்ருதியைச்சொல்லி, கழிந்தவிடத்திலும் என்று - பரமபதத்திலுமென்கிறது. ஸ்வபோக்த்ர்த்வத்துக்கு - "மமாஉயம்போக:" என்கிறநினைவுக்கு. அப்ராக்ருத தேசத்திலும் ப்ரக்ருதி ஸம்பந்த கார்யமான அஜ்ஞாநமுண்டோவென்று கருத்து.

வ்யா.—அதாவது-உன்னுடைய அநுபவத்தாலேஎங்களுக்குவரும்ஆநந்தத்துக்கு ஸ்வபோக்த்ர்த்வபுத்தியைவிளைவித்து, ஸ்வரூபத்தைஅழியாதபடிஸாத்தாகப்பண்ணும் பேஷஜமானவனே என்று நித்யஸூரிகள்பேசும் பாசுரமாகச்சொல்லாநின்றதிறே யென்கை.

ஆகையால், அவ்விஷயவைலக்ஷண்யப்ரயுக்தமாய்வரும் ஸ்வபோக்த்ர்த்வபுத்தி அங்கும் விளைகையாலே, இப்பதத்தில் ப்ரார்த்தனை என்றுமுண்டு என்னுமிடம் ஸித்தமென்றதாயிற்று. ஆகையிறே, முக்தர்க்கு லக்ஷணம் சொல்லுகிறவிடத்திலே (𑌨𑌮𑌇𑌤𑍍𑌯𑍇𑌵 𑌵𑌾𑌦𑌿𑌨𑌃) (நமஇத்யேவவாதிந:) என்றது.

ஆக, புருஷகாரத்தையும், தந்நித்யயோகத்தையும், ததுத்ப்பாவிதமான வாத்ஸல்யாதி குணங்களையும், அந்தகுணப்ரகாஶகமான திவ்யமங்கள விக்ரஹத்தையும், குணவிக்ரஹ விஶிஷ்ட வஸ்துவினுடைய உபாயத்வத்தையும், அவ்வுபாயஸ்வீகாரத்தையும், தத்பலமான கைங்கர்யத்துக்கு ப்ரதிஸம்பந்தி ஒருமிதுநமென்னுமத்தையும், அவ்வஸ்துவினுடைய ஸர்வஶேஷித்வத்தையும் தத்விஷயகைங்கர்யத்தையும், கைங்கர்யவிரோதி நிவ்ர்த்தியையு சொல்லிற்றாயிற்று.

பெரியஜீயர் திருவடிகளே ஶரணம்.

---

அ.—ஸாத்தாகப்பண்ணும்-ஸ்வபோக்த்ர்த்வ புத்திவாராம பண்ணும். இத்தால்-இவன் சேதநனானவாசியாலே. பகவதநுப கைங்கர்யங்களில் இவன் றனக்கும் ஆநந்தமுண்டாம், அது இ னுக்கும் புருஷார்த்தமன்று என்றதாய்த்து. பரமபதத்தில் ப்ர க்ர்தமான அஜ்ஞாநம் இல்லையேயாகிலும் விஷயவைலக்ஷண்ய தீநமாய்வரும் அஜ்ஞாநமுண்டென்னுமத்தை யருளிச்செய்கிறா (ஆகையாலித்யாதி.) ஆகையால் - நித்யஸூரிகளுக்கும் விரோ நிவ்ர்த்தி ப்ரார்த்தனை இடைவிடாமல் நடக்கையாலே. இப்பத தில் ப்ரார்த்தனை - இப்பதத்தில் சொல்லுகிற விரோதி நிவ்ர்த் ப்ரார்த்தனை. ஆகையிறே - பரமபதத்திலும் விரோதி நிவ்ர்த் ப்ரார்த்தனை யுண்டாகையாலே. ஆக-கீழ்ச்சொன்ன வைலக்ஷண் யத்தாலும். ஆகஇரண்டாம்ப்ரகரணார்த்தமருளிச்செய்தாராய்த்து.

சுத்தஸத்வம்தொட்டாசார்யர்திருவடிகளேசரணம்.

---

முமுக்ஷுப்படிவ்யாக்யாநம்
த்வயப்ரகரணம்,
முற்றிற்று.

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

முமுக்ஷுப்படி—வ்யாக்யாநம்.

# சரமஶ்லோகப்ரகரணம்.

அவதாரிகை.

மத்யமரஹஸ்யமான த்வயத்தினுடைய அர்த்தத்தை யருளிச்செய்த அநந்தரம், அதில் பூர்வ வாக்யத்தில் சொல்லுகிற உபாயவரணம் ஸர்வேஶ்வரன்தானே விதிக்கையாலே தததபிமத மென்னு மத்தையும், வரணாங்கமான ஸாதநாந்தர பரித்யாகத்தையும், வரணத்தில் ஸாதநத்வபுத்தி ராஹித்யத்தையும் ஶாப்தமாக பூர்வார்த்தத்தாலே ப்ரதி பாதிக்கையாலும்; உத்தர வாக்யத்தில்சொல்லுகிற கைங்கர்யத்துக்கு பூர்வபாவியான ப்ராப்தி ப்ரதிபந்தக ஸகலபாப விமோசநத்தையும், உத்தரார்த்தத்தாலே ஶாப்தமாக ப்ரதிபாதிக்கையாலும்; த்வயத்துக்கு விவரணமாய், பஞ்சமவேதஸார பூத கீதோபநிஷத்தாத்பர்யமாய், சரமரஹஸ்யமா யிருந்துள்ள சரமஶ்லோகத்தினுடைய அர்த்தத்தை ஸம்ஶயவிபர்யயமற அருளிச்செய்கிறார்.

இதினர்த்தங் கேட்கைக்காகவிறே, எம்பெருமானார் பதினெட்டுப்பர்யாயம் திருக்கோட்டியூர்நம்பிபக்கல் எழுந்தருளிற்று;

---

இரண்டாம் ப்ரகரணத்துக்கு அர்த்தமருளிச்செய்தவநந்தரம் மூன்றாம் ப்ரகரணத்துக்கு அர்த்தமருளிச்செய்வதாகத் திருவுள்ளம்பற்றி,கீழ்ப்ரகரணத்துக்கும்இதுக்கும்ஸங்கதியருளிச்செய்கிறார்(மத்யமரஹஸ்யமான வென்றுதொடங்கி.)அதில்-அந்தத்வயத்தில். பூர்வவாக்யத்தில் சொல்லுகிற உபாயவரணம்-"சரணௌ ஶரணம்ப்ரபத்யே"என்கிற உபாயவரணம். விதிக்கையாலே-"மாம்வ்ரஜ" என்று விதிக்கையாலே. தததபிமதமென்னு மத்தையும்-ஸர்வேச்வராபிமதமென்னு மத்தையும். வரணாங்கமான-உபாயவரணாங்கமான. சாப்த்தமாக என்றது - ஸர்வதர்மாந் பரித்யஜ்ய ஏகம் என்று சப்ததஃ என்றபடி. பூர்வபாவியான ப்ராப்தி ப்ரதிபந்தகம்-பூர்வக்ஷணத்திலுண்டான பகவதநுபவ ப்ரதிபந்தகம். அற-இவையிரண்டுமின்றிக்கே.

(இதினர்த்தமித்யாதி) உடையவர் பெரியநம்பி திருமாளிகைக்கெழுந்தருளி தண்டன் ஸமர்ப்பித்து ஆளவந்தார்ஸ்ரீபாதத்தில் ஸேவியாத இழவெல்லாம் தீரும்படி தேவரீர்திருவடிகளிலே ஆச்ரயிக்கப்பெற்றேன், தேவரீர்திருவுள்ளத்திலுண்டான அர்த்தவிசேஷங்களை அடியேனுக்கு ப்ரஸாதிக்கவேணுமென்று விண்ணப்பம் செய்ய; நம்பியும் அப்படியே யாகிறதென்று மந்த்ரரத்நமான த்வயார்த்தத்தைப்ரஸாதித்தருளி,இன்னமும்சிலஅர்த்தவிசேஷங்களுண்டு,அவற்றை,ஆளவந்தாரபிமாநாந்தர்ப்பூதரானதிருக்கோட்டியூர்நம்பிஸ்ரீபாதத்திலேசென்று கேளுமென் றருளிச்செய்ய;

வ்யா.—நம்பிதாமும் இதின் அர்த்தத்தினுடையகௌரவத்தையும்,

---

அ.—ராமாநுசனும் அப்படியே திருக்கோட்டியூர்நம்பிஸ்ரீபாதத்திலேசென்றுஸேவித்து ரஹஸ்யார்த்த விசேஷங்களையெல்லாம் ப்ரஸாதித்தருளவேணுமென்று விண்ணப்பம்செய்ய ; நம்பியும், இவருடைய ஆஸ்திக்யாதர பரீக்ஷார்த்தமாகப் பதினெட்டாவர்த்தி நடத்தி திருமந்த்ரார்த்தத்தை யருளிச்செய்ததாயிருக்க, இங்கு சரமச்லோக விஷயமாக அருளிச்செய்தது, அப்போதே, அநந்தரம்வாரீர் எம்பெருமானாரே! இன்னமொரு சரம ரஹஸ்யார்த்த விசேஷம் சொல்லுவதாகப் பாராநின்றோம், இவ்வளவிலே நீர் த்ர்ப்தராகாநின்றீர்,உம்முடைய அத்யவஸாயத்தைச் சொல்லிக்காணீர் என்ன; எம்பெருமானாரும் தேவரீரருளிச்செய்த அர்த்தத்தின்மேல் ஓரர்த்தமுண்டென்றிருந்தேனாகில் அவிச்வாஸியாவேன், கேளாதிருந்தேனாகில் அருளிச்செய்த வர்த்தம் நெஞ்சில் பட்டதில்லை, விரகறியாமல் ச்ரோதவ்யஸாபேக்ஷனாயிராநின்றேனென்றுவிண்ணப்பம்செய்ய; நம்பியும்இப்போதுபோய் ஏகாந்தமாய் ஒருவருமே வாருமென்ன; எம்பெருமானாரும் ஒருவருமே வந்து ஸ்ரீபாதத்திலே தண்டன் ஸமர்ப்பித்து நிற்க, நம்பியும் கையைப்பிடித்துக்கொண்டுபோய் ஏகாந்தமான மேல்தளத்திலே படிக்கதவைவிழவிட்டுஎழுந்தருளியிருந்துஒருவர்க்கும்சொல்லாதபடி திருவடிகளைத் தொடுவித்து சூழறவுகொண்டு தம்முடைய நிர்ஹேதுக க்ர்பையாலே ஸர்வகுஹ்யதமமான சரமரஹஸ்யார்த்தத்தையும் அருளிச்செய்து பகவத் விமுகரான நாஸ்திகர் செவிப்படாதபடி பேணிக்கொண்டுபோருமென்றுநியமித்தருள, இவரும் அப்படிப்பட்டபேருக்குச் சொல்லக்கடவேனல்லேன், பகவத்ப்ரவணரானகூரத்தாழ்வானுக்குச்சொல்லாமல் நிற்கக்கூடாதுஎன்று விண்ணப்பம்செய்ய; நம்பியும், இவ்வர்த்தம் கேட்கைக்குஅதிகாரமுண்டாகில், "సంవత్సరం తదర్ధం వా మాసత్రయమథాపి వా। పరీక్ష్య వివిధోపాయైః కృపయా నిస్స్పృహో వదేత్" "ஸம்வத்ஸரம்ததர்த்தம்வாமாஸத்ரய மதாபிவா, பரீக்ஷ்யவிவிதோபாயைஃ க்ர்பயாநிஸ்ப்ர்ஹோவதேத்" என்கிறபடியே சுச்ரூஷை கொண்டு சொல்லுமென்று நியமித்தருளினார். பதினெட்டு பர்யாயம் திருக்கோட்டியூர்நம்பி * நடத்தினது பதினெட்டாமத்யாயத்தில் அர்த்தம் ப்ரஸாதிக்கைக்காகவென்றுகருத்து. ஆகையாலே இதினர்த்தங் கேட்கைக்காக விறே எம்பெருமானார் பதினெட்டுப் பர்யாயம் திருக்கோட்டியூர் நம்பி பக்கல் எழுந்தருளிற்று என்றருளிச்செய்தது. அர்த்தத்தினுடைய கௌரவத்தையும் என்றது - "ఏతద్వై మహోపనిషదం దేవానాం గుహ్యమ్" (ஏதத்வைமஹோபநிஷதம்தேவாநாம்குஹ்யம்) என்கிற கௌரவத்தையு மென்றபடி.

வ்யா.—இதுக்கதிகாரி இல்லாமையையும்பார்த்திறே,இவருடைய ஆஸ்திக்யாதர பரீக்ஷார்த்தமாகவும் பலகால் நடந்துதுவளப்பண்ணி, சூழரவுகொண்டு மாஸோபவாஸங் கொண்டுஅருமைப்படுத்தி அருளிச்செய் தருளிற்று. நிஷ்க்ர்ஷ்ட ஸத்வநிஷ்ட்டனாய், பரமாத்மநிரக்தனாய், அபரமாத்மநி வைராக்யமுடையனாய்,ப்ரமாண பாரதந்த்ரனாய், பகவத்வைபவம் ஶ்ருதமானால் இது உபபந்நம் என்னும்படியான விஸ்ரம்ப பாஹுள்யமுடையனாய், ஆஸ்திகாக்ரேஸரனாயிருப்பானொருவனுண்டாகில் அவன்இஶ்ஶ்லோகார்த்த ஶ்ரவணாநுஷ்ட்டாநத்துக் கதிகாரி ஆகையாலே, அதிகாரிதுர்லபத்வத்தாலும், அர்த்தகௌரவத்தாலும், இத்தை வெளியிடாதே மறைத்துக்கொண்டுபோந்தார்கள் எம்பெருமானாருக்கு முன்புள்ளார்; ஸம்ஸாரிகள் துர்க்கதிகண்டு பொறுக்கமாட்டாதபடி க்ர்பை கரைபுரண்டிருக்கையாலே, அர்த்தத்தின் சீர்மைபாராதே அநர்த்தத்தையேபார்த்து வெளியிட்டருளினார் எம்பெருமானார்.

அப்படி உபதேஶித்துவிடுகிற மாத்ரமன்றிக்கே, இவ்வர்த்தத்தை எல்லாரும் அறிந்து உஜ்ஜீவிக்கவேணுமென்னும் பரமக்ர்பையாலேயிறே, இதுதன்னைப் பலப்ரபந்தங்களிலும் ஸங்க்ரஹவிஸ்தாரரூபேண இவரருளிச்செய்தது. மற்றுள்ள ப்ரபந்த்தங்களெல்லாவற்றிலும்போலன்றிக்கே, ஸ்த்ரீபாலர்களுக்கும் அதிகரிக்கலாம்படி தெளிய அருளிச்செய்தது இப்ப்ரபந்த்தத்திலேயிறே.

---

அ.—அதிகாரியில்லாமையையும்-அதிகாரிகிடையாமையையும். ஆஸ்திக்யமாவது - ஶாஸ்த்ரவிஶ்வாஸம். ஆதரமாவது-அர்த்தம் கேட்கையில் ப்ரேமம். துவளப்பண்ணி- ஆர்த்தராம்படி பண்ணி. அதாவது-அர்த்தத்தைக்கேளாவிடில்தரிக்கமாட்டாதபடிபண்ணி. சூழரவுகொண்டு-ப்ரமாணம்பண்ணிவைத்துக்கொண்டு. மாஸோபவாஸங்கொண்டு - எம்பெருமானாரும், நம்பி நியமநத்தாலே ஆழ்வானை ஸம்வத்ஸர சுச்ரூஷாஸமமாக மாஸோபவாஸங்கொண்டு சரமச்லோகார்த்தத்தை யருளிச்செய்தாராகையாலே அத்தைத் திருவுள்ளம்பற்றி யருளிச்செய்தார். அருமைப்படுத்தி - ச்ரமப்படுத்தி.

நிஷ்க்ர்ஷ்ட ஸத்வநிஷ்டனாய்-சுத்த ஸத்வநிஷ்டனாய். பரமாத்மநிரக்தனாய் - பகவத் விஷயத்தில் ப்ரேமமுடையனாய். அபரமாத்மநி வைராக்ய முடையனாய்-பகவத்வ்யதிரிக்தவிஷயத்தில் வீதராகனாய். பகவத்வைபவம் ச்ருதமானால் – பகவததிசயம் ச்ருதமானால். இது - கீழ்ச்சொன்ன வதிசயம், உபபந்நம் - அகடிதகடநாரூபஸாமர்த்த்ய விசேஷத்தை யுடையவனுக்கு யுக்தமென்றபடி. (ஆஸ்திகாக்ரேஸரனாய்) ஆஸ்திகனாகிறான் - உள்ளோடு புறம்போடு வாசியற ஏகரூபனாயிருக்குமவன். இச்லோகார்த்த ச்ரவணாநுஷ்டாநத்துக்கு-இச்லோகத்தினுடைய அர்த்தம் கேட்கைக்கும், ச்லோகார்த்தத்தின்படியே அநுஷ்டிக்கைக்கும்.

மூ.—கீழே சில உபாயவிஶேஷங்களை உபதேஶிக்க, அவை துஶ்ஶகங்கள் என்றும், ஸ்வரூபவிரோதிகள் என்றும் நினைத்து ஶோகாவிஷ்டனான அர்ஜ்ஜுநனைக்குறித்து அவனுடைய ஶோக நிவர்த்யர்த்தமாக இனி இதுக்கு அவ்வருகில்லை என்னலாம்படியான சரமோபாயத்தை அருளிச்செய்கையாலே சரமஸ்லோகம் என்று இதுக்குப் பேராயிருக்கிறது.

இதில், பூர்வார்த்தத்தாலே அதிகாரிக்ருத்யத்தை அருளிச்செய்கிறான்; உத்தரார்த்தத்தாலே உபாயக்ருத்யத்தை அருளிச்செய்கிறான்.

வ்யா.—இதில்ப்ரதமத்திலேஇந்தஸ்லோகார்த்தத்தினுடையகௌரவத்தைஎல்லாருடைய நெஞ்சிலும்படுத்துகைக்காக இதுதனக்கு சரமஸ்லோகம் என்று திருநாமமாகைக்கு ஹேதுவை யருளிச்செய்கிறார் (கீழே சிலஉபாயவிஶேஷங்களை யென்று தொடங்கி.) அதாவது - இந்தஸ்லோகத்துக்குக் கீழே - அநேகாத்யாயங்களிலே, கர்மஜ்ஞாநாதிகளான சில உபாயவிஶேஷங்களை ஸ்வப்ராப்தி லக்ஷணமோக்ஷஸாதநமாக விஸ்தரேணவுபதேசித் தருளக்கேட்டு, காயக்லேஶரூபமாகையாலும், இந்த்ரியஜயம் அரிதாகையாலும் ஸாவதாநமாகச் சிரகாலம் ஸாதிக்கவேண்டி யிருக்கையாலும், அவை அநுஷ்ட்டிக்க அஶக்யங்கள் என்றும், ஸ்வஶரீரத்வகதநாதிகளாலே ப்ரதிபாதிக்கப்பட்ட பரதந்த்ரமான ஸ்வரூபத்துக்கு ஸ்வயத்நரூபங்களான இவை, விரோதிகள் என்றும்புத்திபண்ணி, இவற்றால் எம்பெருமானைப் பெறவேணும் என்ப தொன்றில்லை, இனி இழந்தேபோமித்தனை யாகாதே! என்கிற ஶோகத்தாலே ஆவிஷ்டனான அர்ஜுநனைக் குறித்து, அவனுடைய அந்தஶோகம் போகைக்காக ஸுஶகத்வத்தாலும், ஸ்வரூபாநுரூபதையாலும், இனி இதுக்கு மேலில்லை யென்னும்படியான சரமமான உபாயத்தை அருளிச்செய்கையாலே சரமஸ்லோகம் என்றுஇதுக்குத் திருநாமமாயிருக்கிறது என்கை.

இனி, இஸ்ஸ்லோகத்துக்கு வாக்யார்த்தம் அருளிச்செய்கிறார் (இதில் பூர்வார்த்தத்தாலே யென்றுதொடங்கி.)

அ.—கர்மஜ்ஞாநாதிகளானஎன்கிறவிடத்தில்,ஆதிசப்தத்தாலே- அவதார ரஹஸ்ய ஜ்ஞாநமும் புருஷோத்தம வித்யையும் சொல்லப்படுகிறது. ஸ்வப்ராப்தி லக்ஷண மோக்ஷ ஸாதநமாக-ஸ்வப்ராப்தி ஸ்வரூப மோக்ஷத்துக்கு ஸாதநமாக. பரதந்த்ரமான ஸ்வரூபத்துக்கு - பரதந்த்ரமான ஆத்மஸ்வரூபத்துக்கு. இவற்றால்-ஸ்வரூப விருத்தங்களான இந்த கர்மஜ்ஞாநாதிகளாலே. இவற்றால் என்றுதொடங்கி, இழந்தேபோமித்தனையாகாதே என்னுமளவும் க்ரந்தத்துக்குக்கருத்து - க்ர்தமென்று பெரை யுடைத்தான கர்மத்தால் அக்ர்தனான ஆத்மாவித்தியான் என்றபடி.

மூ.—அதிகாரிக்கு க்ர்த்யமாவது உபாயபரிக்ரஹம். அத்தை ஸாங்கமாக விதிக்கிறுன்.

ராகப்ராப்தமான உபாயந்தானே வைதமானுல் கடுகபரிக்ரஹிக்கைக்கு உடலாயிருக்குமிறே.

---

வ்யா.—அதாவது - அர்த்தத்வயாத்மகமான இந்தஶ்லோகத்தில் பூர்வார்த்தத்தாலே - இவ்வுபாயத்துக்கு அதிகாரியானவன் செய்யுமம்ஶத்தை யருளிச்செய்கிறுன்; உத்தரார்த்தத்தாலே - உபாயபூதனுன தான் இவனுக்குச்செய்யு மம்ஶத்தை அருளிச்செய்கிறுனென்கை.

அதிகாரி க்ர்த்யமாவதேதென்ன அருளிச்செய்கிறுர் (அதிகாரிக்கு க்ர்த்யமாவது உபாயபரிக்ரஹமென்று.) அதாவது - அதிகாரியானவனுக்குஇங்குச்செய்யத்தக்க இவ்வுபாயத்தை ஸ்வீகரிக்கையென்கை.

ஆனுல் அவ்வளவை விதியாதே உபாயாந்தர பரித்யாகஞ் சொல்லுவானென்னென்ன அருளிச்செய்கிறுர் (அத்தை ஸாங்கமாக விதிக்கிறுனென்று.) அதாவது - அந்த உபாயஸ்வீகாரத்தை உபாயாந்தர பரித்யாகமாகிற அங்கத்தோடே கூட விதிக்கிறுனென்கை. (ప్రక్షాళ్యపాదావాచామేత్ స్నాత్వావిధివదర్చయేత్। స్థిత్వార్ఘ్యంధ్యానవేదత్యాత్ ధ్యాత్వాదేవంజపేన్మనుమ్)(ப்ரக்ஷாள்யபாதாவாசாமேத்ஸ்நாத்வா விதிவதர்ச்சயேத்।ஸ்த்தித்வார்க்க்யம் பாநவேதத்யாத் த்யாத்வாதேவம்ஜபேந்மநும்) என்று - ஆசமநாதிகளுக்கு அங்கமாகச்சொன்ன பாதப்ரக்ஷாளநாதிகளையொழிய அவை அநுஷ்டிக்க வொண்ணுதாப்போலே, இங்கும் ல்யபந்தபதத்தாலே அங்கமாகச்சொல்லுகிற உபாயாந்தரத்யாகத்தையொழிய ஸ்வீகாரம் அநுபபந்நம் என்னுமிடம் ஸித்தமிறே. ஆகையால் (సర్వధర్మాన్ పరిత్యజ్య-స్థితశ్చేత్) (ஸர்வதர்மாந்பரித்யஜ்யஸ்த்திதஶ்சேத்) என்று, துஷ்கரத்வ புத்தியாலே ஸ்வதஃ ப்ராப்தமான உபாயாந்தரபரித்யாகத்தை அநுவதித்து, ஸித்தோபாய ஸ்வீகாரத்தை விதிக்கிறது, என்கிறஅநுவாதபக்ஷம் அயுக்தம் என்றதாயிற்று.

ஆனுல், ஸௌமுகத்வாதிகளாலே ராகப்ராப்தமான இதுக்கு விதிதான் வேணுமோவென்ன அருளிச்செய்கிறுர் (ராகப்ராப்தமான வென்றுதொடங்கி.)

---

அ.—(அநுவதித்து)அநுவாதமாவது-ஜ்ஞாதவ்யார்த்த ஜ்ஞாபநம். ஸௌசகத்வாதிகளான என்கிறவிடத்தில், ஆதிசப்தத்தாலே-ஸ்வரூபாநுரூபதையைச் சொல்லுகிறது. ராகப்ராப்தமான விதுக்கு-அநுராக ப்ராப்தமான இந்த ஸித்தோபாய ஸ்வீகாரத்துக்கு.

மூ.—இதில் பூர்வார்த்தம் ஆறுபதம். (ஸர்வதர்மாந்) எல்லா தர்மங்களையும். தர்மமாவது - பலஸாதநமாயிருக்குமது. இங்குச் சொல்லுகிற தர்மஶப்தம் த்ர்ஷ்டபலஸாதநங்களைச் சொல்லுகை யன்றிக்கே, மோக்ஷபலஸாதநங்களைச் சொல்லுகிறது.

---

வ்யா.—அதாவது - போக்யதையாலே ராகப்ராப்தமான க்ஷீரத்தை பித்தரோகத்துக்கு மருந்தாகக் கொடுக்கச்சொல்லி விதித்தால் ஶீக்ரமாகக்கைக்கொள்ளுகைக்கு உடலாமாப்போலே; உபாயாந்தரங்களில் காட்டில் இதுக்குண்டான வைலக்ஷண்யத்தாலே, சேதநனுடைய ராகத: ப்ராப்தமாயிருந்துள்ள உபாயந் தானே இத்தை ஸ்வீகரியென்னும் விதி ப்ரயுக்தமுமானால் ஶீக்ரமாக ஸ்வீகரிக்கைக்குடலா யிருக்குமிறே யென்கை.

இனி, இதுக்கு ப்ரதிபதம், அர்த்தமருளிச்செய்வதாக பூர்வார்த்தபதஸங்க்யையை யருளிச்செய்கிறார் (இதில் பூர்வார்த்தம் ஆறுபதமென்று.) அதில் ப்ரதமபதத்தை உபாதாநம்பண்ணுகிறார் (ஸர்வதர்மாந்என்று.) அதுக்கு அர்த்தமருளிச்செய்கிறார் (எல்லா தர்மங்களையும் என்று.) இதுதான் தர்மமும் பஹுவசநமும் ஸர்வஶப்தமுமாய், த்ரிப்ரகாரமா யிருக்கையாலே, மூன்றுக்கும் அர்த்தமருளிச்செய்வதாக ப்ரதமம் தர்மலக்ஷணத்தை அருளிச்செய்கிறார் (தர்மமாமது பலஸாதநமாயிருக்குமது என்று.) தர்மஶப்தம் த்ர்ஷ்டபலஸாதநத்திலும் வ்யாப்தமாகையாலே அத்தை வ்யாவர்த்திக்கிறார் (இங்குச் சொல்லுகிற தர்மஶப்த மென்று தொடங்கி.) அதாவது - பூர்வோபாயங்கள்தன்னை உபதேசிக்கிற போதே த்ர்ஷ்ட பலஸாதநங்கள் வ்யாவர்த்தங்க ளாகையாலும், மோக்ஷோபாயங்களை உபதேசித்து வருகிற ப்ரகரண மாகையாலும் இவ்விடத்தில் சொல்லுகிற தர்மஶப்தம் புத்ரபஶ்வந்நாத்யைஹிகமாயும், ஸ்வர்க்காத்யாமுஷ்மிகமாயு மிருந்துள்ள த்ர்ஷ்ட பலங்களுக்கு ஸாதநங்களானவற்றைச் சொல்லுகை யன்றிக்கே பகவத்ப்ராப்திரூபமான மோக்ஷபலத்துக்கு ஸாதநமாயுள்ளவற்றைச் சொல்லுகிறது என்கை.

---

அ.—விதித்தால்-வைத்யசாஸ்த்ரம் விதித்தால். வைலக்ஷண்யத்தால்-ஸுஶகத்வ, ஸ்வரூபாநுரூபத்வ, பலப்ரதத்வரூப வைலக்ஷண்யத்தால்.

பூர்வார்த்தம் ஆறுபதம் என்றத்தால்-உத்தரார்த்தம் ஆறுபதம் என்னும்பக்ஷம் நிரஸ்தம்;-திருமந்த்ரம் மூன்றுபதமாயும் அதுக்கு விவரணமான த்வயம் ஆறுபதமாயும், அதுக்கு விவரணமான சரமலோகம் பன்னிரண்டு பதமாயும் இருக்கவேண்டுகையாலே.

வ்யாப்தமாகையாலே - வர்த்திக்கையாலே. அதாவது - ப்ரதிபாதிக்கை. வ்யாவர்த்தங்களாகையாலும்-கழியுண்கையாலும்.

மூ.—அவை தான் ஶ்ருதி ஸ்ம்ருதி விஹிதங்களாய்ப் பலவாயிருக்கையாலே பஹுவசநப்ரயோகம் பண்ணுகிறது. அவையாவன; – கர்மஜ்ஞாநபக்தியோகங்களும்,

---

வ்யா.—இனிமேல் பஹுவசநார்த்தத்தை அருளிச்செய்கிறார் (அவைதானென்று தொடங்கி.) அதாவது - அந்த மோக்ஷபலஸாதநங்கள்தான் உபப்ரும்ஹணோப ப்ரும்ஹணங்களாயிருந்துள்ள ஶ்ருதிஸ்ம்ருதிகளாலே விஹிதங்களாய்க்கொண்டு அநேகங்களாயிருக்கையாலே (தர்மாந்) என்று - பஹுவசநப்ரயோகம் பண்ணுகிறது என்கை.

அப்படியிருந்துள்ளவை தானேவையென்ன அருளிச்செய்கிறார் (அவையாவனவென்று தொடங்கி.) அதாவது - கீழ் பலவாகச் சொல்லப்பட்ட அவையாவன; - (కర్మణైవహిసంసిద్ధిమాస్థితాజనకాదయః) (கர்மணைவஹிஸம்ஸித்திமாஸ்திதாஜநகாதய:)(తస్మాదసక్తస్సతతంకార్యం కర్మసమాచర) (தஸ்மாதஸக்தஸ்ஸததம்கார்யம்கர்மஸமாசர) என்று - ஸ்வதந்த்ரஸாதநமாக உக்தமான கர்மயோகமும், (సర్వంకర్మాఖిలం పార్థ జ్ఞానేపరిసమాప్యతే) (ஸர்வம்கர்மாகிலம்பார்த்த ஜ்ஞாநேபரிஸமாப்யதே) (నహిజ్ఞానేనసదృశంపవిత్రమిహవిద్యతే) (நஹிஜ்ஞாநேநஸத்ருஶம்பவித்ரமிஹவித்யதே)(జ్ఞానాగ్నిస్సర్వకర్మాణి భస్మసాత్కురుతేతథా) (ஜ்ஞாநாக்நிஸ்ஸர்வகர்மாணி பஸ்மஸாத்குருதேததா) என்று சொல்லப்பட்ட கர்மஸாத்யமான ஜ்ஞாநயோகமும்,

---

அ.—[గీ-౩-౨౦] (కర్మణైవహిసంసిద్ధి మాస్థితాజనకాదయః। లోకసఙ్గ్రహమేవాపి సమ్పశ్యన్కర్తుమర్హసి) (కర్మణా-கர்மணேதி) ஜநகாதிகளான ராஜரிஷிகள் கர்மயோகத்தாலேயே மோக்ஷத்தை யடைந்தார்கள்; ஆகையால், ஸங்க்ரஹிதனுய்க் கொண்டு யாவதாத்ம ப்ராப்தி அவஶ்யம் கர்த்தவ்யமான கர்மத்தை ஆசரி. ஸங்க்ரஹிதனுய் - தாத்ர்சப்ரதிபத்திரஹிதனுய்.

[గీ-౪-౩౩] (సర్వంకర్మాఖిలంపార్థజ్ఞానేపరిసమాప్యతే) (ஸர்வம்கர்மாகிலம்பார்த்தஜ்ஞாநோபரிஸமாப்யதே.) (సర్వమ్-ஸர்வமிதி) ஸர்வம் - ஸர்வப்ரகாரமித்யர்த்த:; ஸர்வப்ரகாரமான – ஸமஸ்தமான கர்மமும் ஜ்ஞாநயோகத்திலே பரிஸமாப்தமாம்.

[గీ-౪-౩౮] (నహిజ్ఞానేనసదృశంపవిత్రమిహవిద్యతే) (நஹிஜ்ஞாநேநஸத்ருஶம்பவித்ரமிஹவித்யதே) யாதொரு காரணத்தாலே இந்த ஜகத்திலே ஜ்ஞாநயோகத்தோடே ஸமாநமான சுத்திகரமான வஸ்து கிடையாது.

[గీ-౪-౩౭] (యథైధాంసిసమిద్ధోఽగ్నిర్భస్మసాత్కురుతేఽర్జున। జ్ఞానాగ్నిస్సర్వకర్మాణి భస్మసాత్కురుతేతథా)(யதைதாம்ஸிஸமித்தோக்நிர்ப்பஸ்மஸாத்குருதேர்ஜுந – ஜ்ஞாநாக்நிஸ்ஸர்வகர்மாணி பஸ்மஸாத்குருதே ததா.) (యథైధాంసీతి - யதைதாம்ஸீதி) வாராய் அர்ஜுநனே! எந்த ப்ரகாரம் நன்றாக ப்ரஜ்வலியாநிற்கிற அக்நியானது இந்தநங்களை பஸ்பமாகப் பண்ணுகிறதோ, அந்தப்ரகாரம் ஜ்ஞாநாக்நியானது ப்ராப்தி ப்ரதிபந்தகமான ஸர்வகர்மங்களையும் பஸ்மமாகப் பண்ணாநிற்கிறது.

மூ.—அவதார ரஹஸ்யஜ்ஞாநம், புருஷோத்தமவித்யை, தேஶவாஸம்,

---

வ்யா.—(భక్త్యాత్వనన్యయాశక్యః) (பக்த்யாத்வநந்யயாஶக்ய:) (మన్మనాభవమద్భక్తః) (மந்மநாபவமத்பக்த:) இத்யாதிகளாலே சொல்லப்பட்டகர்மஜ்ஞாநஸஹக்ர்தமானபக்தியோகமும் ஆகிற இவையும், (జన్మకర్మచమేదివ్యంమేవంయోవేత్తితత్త్వతః।త్యక్త్వాదేహంపునర్జన్మనైతిమామేతిసోర్జున) (ஜந்மகர்மசமேதிவ்யம் ஏவம்யோவேத்திதத்த்வத:, த்யக்த்வா தேஹம்புநர்ஜந்ம நைதிமாமேதிஸோர்ஜுந) என்று - விரோதி நிவர்த்தி பூர்வகமான பகவத்ப்ராப்திக்கு ஸாதநமாகச் சொல்லப்பட்ட அவதார ரஹஸ்யஜ்ஞாநம்,

(ఏతద్బుద్ధ్వాబుద్ధిమాన్స్యాత్కృతకృత్యశ్చభారత) (ஏதத்புத்த்வாபுத்திமாந்ஸ்யாத் க்ர்தக்ர்த்யஶ்சபாரத) என்று - அபிமதபல லாபத்தாலே க்ர்தக்ர்த்ய ஞக்குமென்கிற புருஷோத்தமவித்யை,

---

அ.—[கீ-௧௧-௫௪] (భక్త్యాత్వనన్యయాశక్య అహమేవంవిధోర్జున। జ్ఞాతుంద్రష్టుంచతత్త్వేన ప్రవేష్టుంచపరంతప) (பக்த்யாத்வநந்யயாஶக்ய அஹமேவம் விதோர்ஜுந - ஜ்ஞாதும்த்ர்ஷ்டும்சதத்த்வேநப்ரவேஷ்டும்சபரம்தப) (భక్త్యా-பக்த்யேதி) வாராய் பரம்தபனுன அர்ஜுநனே! யதார்த்தமாக இப்படிப்பட்ட அநந்யையான பக்தியாலே அறியவும் காணவும் ப்ராபிக்கவும் ச்க்யன், நான் இப்படிப்பட்டவன் என்றான்.

[கீ-௯-௩௪] (మన్మనాభవమద్భక్తో మద్యాజీమాంనమస్కురు। మామేవైష్యసియుక్త్వైవమాత్మానంమత్పరాయణః॥ (மந்மநாபவமத்பக்தோமத்யாஜீமாம் நமஸ்குரு - மாமேவைஷ்யஸியுக்த்வைவ மாத்மாநம்மத்பராயண:.) (మన్మనాభవ - மந்மநாபவேதி) மத்பக்தனுய்க்கொண்டு என் பக்கல்மநஸ்ஸாய் த்யாநம்பண்ணி என்னை ஆராதி, என்னை நமஸ்கரி; இப்படி யோகத்தைப்பண்ணி என்னைப்பற்றின நீ என்னையே ப்ராபியாநிற்புதி. (జన్మకర్మచ - ஜந்மகர்ம சேத்யாதி) வராய் அர்ஜுநனே! என்னுடைய ஜந்மத்தையும் கர்மத்தையும் இப்படி திவ்யமாக உள்ளபடியே யறிகிறுன் யாவனொருவன், தேஹத்தைவிட்டு பின்னையொரு ஜந்மத்திலே புகான்; என்னையேப்ராபியாநிற்கும்.

[கீ-௧௫-௨௦] ఇతిగుహ్యతమంశాస్త్రమిదముక్తంమయానఘ। ఏతద్బుద్ధ్వాబుద్ధిమాన్స్యాత్కృతకృత్యశ్చభారత॥ (இதிகுஹ்யதமம்ஶாஸ்த்ர மிதமுக்தம் மயாநக - ஏதத்புத்த்வாபுத்திமாந்ஸ்யாத்க்ர்தக்ர்த்யஶ்சபாரத.)

(ఏతద్బుద్ధ్వా - ஏதத் புத்த்வேதி) இப்படி குஹ்யதமமான இந்த சாஸ்த்ரமானது என்னலே உனக்குச் சொல்லப்பட்டது, அது அறிந்தால் பார்த்தனே! புத்திமானுமாய் க்ர்தக்ர்த்யனுமாம்.

மூ.—திருநாமஸங்கீர்த்தநம், திருவிளக்கெரிக்கை, திருமாலை யெடுக்கை தொடக்கமான உபாயபுத்த்யா செய்யுமவையும், ஸர்வ ஶப்தத்தாலே - அவ்வோஸாதந விசேஷங்களை அநுஷ்ட்டிக்கு மிடத்தில் அவற்றுக்குயோக்யதாபாதகங்களான நித்யகர்மங்களைச் சொல்லுகிறது.

---

வ்யா.—(దేశోయంసర్వకామధుక్)(தேஶோயம்ஸர்வகாமதுக்) என்று ஸர்வகாமபலப்ரதமாகச்சொல்லுகிற புண்யக்ஷேத்ரவாஸம், (సర్వపాపవిశుద్ధాత్మాయాతిబ్రహ్మసనాతనమ్)(ஸர்வபாபவிஶுத்தாத்மாயாதிப்ரஹ்ம ஸநாதநம்) என்று-ஸர்வபாப விமோசந பூர்வகமானபகவத்ப்ராப்தியை பலமாகச்சொல்லுகிற திருநாமஸங்கீர்த்தநம், (ఘృతేనవాథ తైలేన దీపంయోజ్వాలయేన్నరః। విష్ణవేవిధివద్భక్త్యా తస్యపుణ్యఫలంశృణు॥ విహాయ సకలంపాపం సహస్రాదిత్యసన్నిభః। జ్యోతిష్మతావిమానేన విష్ణులోకేమహీయతే)
(க்ர்தேநவாததைலேந தீபம்யோஜ்வாலயேந்நர:, விஷ்ணவேவிதிவத்பக்த்யா தஸ்யபுண்யபலம்ச்ருணு விஹாயஸகலம்பாபம் ஸஹஸ்ராதித்யஸந்நிப: । ஜ்யோதிஷ்மதா விமாநேந விஷ்ணுலோகே மஹீயதே) என்று - பாபநிவர்த்திபூர்வகமான பகவத்ப்ராப்திக்கு ஸாதநமாகச் சொல்லப்படுகிற திருவிளக் கெரிக்கை, அப்படி விரோதிநிவர்த்தி பூர்வகபகவத் ப்ராப்தி ஸாதநமாகச்சொல்லப் படும் திருமாலையெடுக்கை முதலாக ஸாதந புத்த்யாசெய்யப்படு மவையும் என்கை.

இனி, ஸர்வஶப்தார்த்தத்தை அருளிச்செய்கிறார்(ஸர்வஶப்தத் தாலே யென்றுதொடங்கி.) அதாவது - தர்மவிஶேஷணமான ஸர்வஶப்தத்தாலே பஹுவசநோக்தமான அவ்வோஸாதநவிசேஷங்களை அநுஷ்ட்டிக்குமிடத்தில், (సంధ్యాహీనోశుచిర్నిత్య మనర్హస్సర్వకర్మసు) (ஸந்த்யாஹீநோஶுசிர்நித்யமநர்ஹஸ் ஸர்வகர்மஸு) என்கிறபடியே அயோக்யனாகாமல் தன்னை அநுஷ்ட்டிக்கையாலே அவற்றுக்கு யோக்யன் ஆகையை உண்டாக்கிக் கொடுக்கும்

---

அ.—[భా-అను - ౧౪౯-౧౩౧] (స్తువన్నామసహస్రేణ నిత్యంభక్తిసమన్వితః। వాసుదేవాశ్రయోమర్త్యోవాసుదేవపరాయణః॥ సర్వపాపవిశుద్ధాత్మా యాతిబ్రహ్మసనాతనమ్) (స్తువన్నామ-ஸ்துவந்நாமேதி) எப்போதும் எழுந்திருந்து நாமஸஹஸ்ரத்தாலே ஸ்தோத்ரம்பண்ணுகிற புருஷனானவன் வாஸுதேவனை ஆச்ரயித்து, வாஸுதேவபராயணனாய் ஸர்வபாபங்களையும் விட்டு பரிசுத்தமான ஸ்வரூபத்தையுடையனாய்க் கொண்டு ஸநாதநமான ப்ரஹ்மத்தை ப்ராபியாநிற்கும், முதலாக-நூபாதிகளைச் சொல்லுகிறது. ஸாதநபுத்த்யா செய்யப்படுமவை என்கையாலே-கைங்கர்யபுத்த்யாபண்ணப்படுமவற்றை வ்யாவர்த்திக்கிறது.

மூ.—ஆக, ஸ்ருதிஸ்ம்ருதி சோதிதங்களாய், நித்யநைமித்திகாதிரூபங்களான கர்மயோகாத்யுபாயங்கள் என்றபடி. இவற்றை தர்மம் என்கிறது ப்ரமித்த அர்ஜுநன்கருத்தாலே.

---

வ்யா.—ஸந்த்யாவந்தந பஞ்சமஹாயஜ்ஞாதிகளான நித்ய கர்மங்களைச் சொல்லுகிறது என்கை.

உக்தத்தை நிகமிக்கிறார் (ஆக என்றுதொடங்கி.) அதாவது-ஆக, கீழ்ச்சொன்ன எல்லாவற்றாலும் (చోదనాలక్షణోర్థో ధర్మః) (சோதநா லக்ஷணோர்த்தோதர்ம:) என்று - சோதனையாகிற விதிவாக்யத்தை ப்ரமாணமாக வுடைத்தான அர்த்தம் தர்மம் என்கையாலே, ஸ்ருதிஸ்ம்ருதிகளாகிற ப்ரமாணங்களாலே விதிக்கப்பட் டுள்ளவையாய், நித்யநைமித்திகம் முதலானவற்றை வடிவாக வுடைத்தான கர்மயோகம் தொடக்கமான உபாயங்களை யென்றபடியென்கை.

ஸ்வரூப விருத்தத்வாத் அதர்மமாகச் சொல்லவேண்டுமவற்றை தர்மம் என்கிறத்துக்கு ஹேதுவை அருளிச்செய்கிறார் (இவற்றையென்றுதொடங்கி.) அதாவது -பகவதத்யந்த பாரதந்த்ர்யமாகிற உத்தேஸ்யத்துக்கு விரோதியா யிருக்கையாலே, அதர்மஶப்தவாச்யங்களாக ப்ராப்தங்களாயிருக்கிற இவற்றை தர்மமென்று சொல்லுகிறது, ஸ்வதர்மமானயுத்தத்தை அதர்மம் என்றும், இவற்றை தர்மம் என்றும் ப்ரமித்த அர்ஜுந னுடைய நினைவாலேயித்தனையென்கை. ஆக, ப்ரதமபதார்த்தத்தை அருளிச்செய்தாராயிற்று.

---

அ.—பஞ்சமஹாயஜ்ஞம்-ப்ரஹ்மயஜ்ஞம், தேவயஜ்ஞம், பித்ருயஜ்ஞம், பூதயஜ்ஞம், மநுஷ்யயஜ்ஞம். ஆதிசப்தத்தாலே-தர்சாதி தர்ப்பணத்தைச் சொல்லுகிறது. நித்யகர்மங்களென்கிறது-நித்யமாகப்பண்ணப்படும் கர்மங்களாகையாலே.

நைமித்திகமென்கிறது - உபராகாதிகளை. உபராகம் - க்ரஹணம். முதலானவற்றை - காம்யகர்மங்களைச் சொல்லுகிறது. இத்தால் நித்யகர்மங்களைச்சொல்லுகிறது என்கிறவிடத்தில், நித்யகர்மங்கள் என்று-நைமித்திககர்மங்களையும் காம்யகர்மங்களையும் சொல்லுகிறதென்று கொள்ளவேணும். வடிவாகவுடைத்தான-ஸ்வரூபமாகவுடைத்தான.

ஸ்வரூப விருத்தத்வாத் - பகவதத்யந்த பாரதந்த்ர்யஸ்வரூப விருத்தத்வாத். உத்தேச்யத்துக்கு-புருஷார்த்தத்துக்கென்னுதல்; அபிமதத்துக் கென்னுதல். தர்மமென்று சொல்லுகிறது - "యస్సర్వజ్ఞస్సర్వవిత్", "யஸ்ஸர்வஜ்ஞஸ்ஸர்வவித்" என்கிறபடியே ஸாமாந்ய விசேஷஜ்ஞாநவானான க்ருஷ்ணன் தர்மமென்றுசொல்லுகிறது. இத்தனையென்கை - சொல்லுகிறா னித்தனையென்கை.

மூ.—(பரித்யஜ்ய.) த்யாகமாவது - உக்தோபாயங்களை அநுஸந்தித்து, ஶுக்திகையிலே, ரஜதபுத்தி பண்ணுவாரைப்போலேயும், விபரீததிஶாகமநம் பண்ணுவாரைப் போலேயும், அநுபாயங்களிலே உபாயபுத்தி பண்ணினோம் என்கிற புத்திவிஶேஷத்தோடே த்யஜிக்கை. (பரி) என்கிற உபஸர்க்கத்தாலே பாதகாதிகளை விடுமாப்போலே, ருசிவாஸனைகளோடும், லஜ்ஜையோடுங்கூட மறுவலிடாதபடிவிடவேணும் என்கிறது.

---

வ்யா.—அநந்தரம், த்விதீயபதத்தை உபாதாநம் பண்ணுகிறார் (பரித்யஜ்ய என்று.) இதுவும் த்யாகமும், ல்யப்பும், உபஸர்க்கமுமாய், த்ரிப்ரகாரமா யிருக்கையாலே, அதில் த்யாகவேஷத்தை முந்துற அருளிச்செய்கிறார் (த்யாகமாவது என்று தொடங்கி.) அதாவது - இவ்விடத்தில் சொல்லுகிற த்யாகமாவது கேவலம் விடுகை யன்று, கீழ்ச்சொல்லப்பட்ட உபாயங்களின் படியை அநுஸந்தித்து ரஜதமல்லாத ஶுக்தியிலே ரஜதபுத்தி பண்ணுவாரைப்போலேயும் ஸ்வகார்யஸித்திக்குடலான ஒருதிக்கிலே போகக்கோலி, தத்விபரீதமான திக்கை அதுவாக நினைத்துப் போவாரைப்போலேயும், பகவத்ப்ராப்த் யுபாயாபேக்ஷரான நாம், உபாய மல்லாதவற்றிலே உபாயபுத்தி பண்ணினோம்என்கிற புத்திவிஶேஷத்தோடேவிடுகை என்றபடி.

இனி, உபஸர்க்கார்த்தத்தை அருளிச்செய்கிறார் (பரி என்கிற என்றுதொடங்கி.) அதாவது- (పరిసాకల్యే) (பரிஸாகல்யே) என்று, ஸாகல்யபரமாகக்கொள்ளுமளவில், அதுஸர்வஶப்தத்திலே உக்தமாகையாலே அபேக்ஷிதமல்லாமையாலே, மிகுதிக்குவாசகமான

---

அ.—உபாதாநம்பண்ணுகிறார்-எடுக்கிறாரென்றபடி. அதில்-த்ரிப்ரகாரத்திலே. கேவலம் விடுகையன்றென்றது - ஸ்வரூபேண விடுகையன்றென்றபடி; வெறுமனே விடுகையன் றென்னவுமாம். இத்தால்-தாமஸ ராஜஸத்யாகவ்யாவ்ர்த்தி சொன்னபடி. * உபாயங்களின்படியை யநுஸந்தித்து - உபாய்ங்களினுடைய ஸ்வரூபத்தை நன்றாக விசாரித்து.

உபஸர்க்கார்த்தத்தை - "பரி" என்கிற உபஸர்க்கார்த்தத்தை. அதுஸர்வசப்தத்திலே உக்தமாகையாலே என்றத்தாலே, ஸர்வசப்தம்-ஸந்த்யாவந்தநாதி யோக்யதாபாதக கர்மவாசியாயிருக்கையன்றிக்கேஸாகல்யவாசியாயிருக்குமென்னுமதுவும் கீழேஸித்தம். மிகுதிக்குவாசகமான - "அவ்யயாநா மநேகார்த்தத்வாத்" என்கிறந்யாயத்தாலே, "பரிசேஷே,, என்று - சேஷத்துக்கு வாசகமானவென்றபடி.

மூ.—ல்யப்பாலே, "ஸ்நாத்வாபுஞ்ஜீத"என்னுமாப்போலே, உபாயாந்தரங்களைவிட்டே பற்றவேணும் என்கிறது. "சசால சாபஞ்சமுமோசவீர:"என்கிறபடியே, இவை அநுபாயங்களான மாத்ரமன்றிக்கே கால்கட்டுஎன்கிறது.

---

வ்யா.—பரியென்கிற இந்தவுபஸர்க்கத்தாலே * (బ్రహ్మహత్యాసురా పానం స్తేయంగుర్వఙ్గనాగమః) (ப்ரஹ்மஹத்யாஸுராபாநம் ஸ்தேயம்குர்வங்கநாகம:) என்கிற பாதகங்கள் முதலானவற்றை விடுமளவில், அவற்றில் புநரந்வயத்துக்கு உறுப்பான ருசிவாஸனைகளோடே கூட நாம் இத்தைச்செய்வதே! என்கிற லஜ்ஜா ஸஹிதனுய்க் கொண்டு விடுமாப்போலே, (అథపాతకభీతస్త్వమ్) (அதபாதகபீதஸ்த்வம்)என்று-தர்மதேவதைபாதகமாகச்சொன்னஉபாயாந்தரங்களை விடுமளவில், புத்திபூர்வகமாக அவற்றிலே ப்ரவர்த்திக்கைக்கு உறுப்பான ருசியும், அபுத்திபூர்வகமாக மூளுகைக்கு உறுப்பான வாஸனையும் ஆகிற அவற்ளுேடேகூட பகவதேகஸாதநதைக வேஷமான ஸ்வஸ்வரூபத்துக்கு அத்யந்தவிருத்த மானவற்றை நாம்செய்வதே! என்கிற லஜ்ஜாஸஹிதனுய்க்கொண்டு, மீளவும் அவற்றில் அந்வயம் வாராதபடி விடவேணும் என்று, சொல்லுகிறது என்கை.

இனி, ல்யபர்த்தத்தைஅருளிச்செய்கிருர்(ல்யப்பாலேயென்று தொடங்கி.) அ.தாவது - (த்யஜ்ய) என்கிற ல்யப்பாலே, (భుక్త్వా చాన్ద్రాయణం చరేత్) (புக்த்வாசாந்த்ராயணம்சரேத்)என்னுமாப்போலன்றிக்கே,(స్నాత్వా భుఞ్జీత)(ஸ்நாத்வாபுஞ்ஜீத)என்கிறவிதி, புஜிக்குமளவில் ஸ்நாநம்பண்ணியே புஜிக்கவேணும் என்கிற நியமத்தைச் சொல்லுமாப்போலே, ஸித்தோபாயத்தை பரிக்ரஹிக்குமளவில் த்யாஜ்யமான உபாயாந்தரங்களை த்யஜித்தே பரிக்ரஹிக்கவேணும் என்கிற நியமத்தைச் சொல்லுகிறது என்கை.

இப்படிவிட்டேபற்றவேணும் என்கிற இதின் கருத்தையருளிச் செய்கிருர் (చచాల - சசால என்றுதொடங்கி.) அதாவது -(యో వజ్రపాతాశనిసన్నిపాతాన్న చుక్షుభే నాపి చచాల రాజా । స రామబాణాభిహతో భృశార్తశ్చచాల చాపఞ్చ ముమోచ వీరః) (யோவஜ்ரபாதாஶநிஸந்நிபாதாந்நசுக்ஷுபேநாபிசசாலராஜா | ஸராமபாணுபிஹதோப்ர்ஶார்த்த ஶ்சசால சாபம்சமுமோசவீர:) என்கிற ஶ்லோகத்தில், ராவணன் ராமஶரங்களாலே மிகவும் ஈடுபட்டு, நிலைகலங்கி, போகப்பார்த்தவளவிலும் கையில் வில்லிருக்குமளவும் பெருமாள் போகவொட்டாமையாலே பின்பு பொகட்டவில்லு, கையில் இருந்தபோது,

---

அ.—த்யாஜ்யமான உபாயாந்தரங்களை-பகவதேகபரதந்த்ரமான ஸ்வரூபத்துக்கு விரோதிகளாகையாலே த்யாஜ்யமான உபாயாந்தரங்களை. நியமத்தைச்சொல்லுகிறது - நியமத்தைவிதிக்கிறது. பொகட்டவில்லு-ஒடிந்தவில்லை.

மூ.—சக்ரவர்த்தியைப்போலே இழக்கைக்குறுப்பு. ஸர்வதர்மங்களையும் விட்டென்று சொல்லுகையாலே சிலர் அதர்மங்கள் புகுரும் என்றார்கள்;

வ்யா.—ப்ரதிபக்ஷஜயத்துக்கு ஸாதநமாகாத மாத்ரமன்றிக்கே, (గచ్ఛానుజానామి)(கச்சாநுஜாநாமி)என்று-பின்புபண்ணின அநுமதி, பெருமாள் அப்போது பண்ணக்காணாமையாலே, போகவுமொண்ணாதபடி கால்கட்டினமையைச் சொல்லுகிறபடியே, உபாயாந்தரங்களான இவற்றிலே, ஈஷதந்வயங்கிடக்கிலும் இவை பேற்றுக்கு ஸாதநமாகாத மாத்ரமன்றிக்கே, பேற்றுக்கு ப்ரதிபந்தகமாய்த் தலைக்கட்டுமென்றபடி.

இன்னமும், இவற்றில் அந்வயம் இழவுக்குடலாம் என்னுமத்தை ஸத்ருஷ்டாந்தமாக அருளிச்செய்கிறார் (சக்ரவர்த்தியைப்போலே இழக்கைக்குறுப்பு என்று.) அதாவது - முன்பேவாப்ரதாநத்தைப் பண்ணிவைத்து இப்போதாக மறுக்கவொண்ணாது என்று, ஆபாஸமான ஸத்யதர்மத்தைப்பற்றிநின்று, (రామోవిగ్రహవాన్ ధర్మః) (ராமோவிக்ரஹவான் தர்மஃ) என்கிற பெருமாளோடேகூடி வாழவிருந்த பேற்றையிழந்த சக்ரவர்த்தியைப்போலே, ஆபாஸமான உபாயாந்தரங்களிலே அந்வயித்து நிற்கையாகிறது, (కృష్ణంధర్మంసనాతనమ్) (க்ர்ஷ்ணம்தர்மம்ஸநாதநம்) என்று - ஸநாதநதர்மமான பகவத் விஷயத்தோடேகூடி வாழுகையாகிற பேற்றை இழக்கைக்கு உறுப்பாய்விடுமென்கை.

இனி, இங்குச்சொன்ன ஸர்வதர்ம பரித்யாகத்தின் கருத்தறியாதார் சொல்லும் தூஷணத்தைப் பரிஹரிக்கைக்காக, தத்பக்ஷத்தை உத்க்ஷேபிக்கிறார் (ஸர்வதர்மங்களையுமென்று தொடங்கி.)

அ.—ப்ரதிபந்தகமாய்த் தலைக்கட்டும் - உபாயாந்தரங் களினுடையவும் அபாயங்களினுடையவும் ஸம்யோகத்தில் இவ்வதிகாரியினுடைய ப்ரபத்திநிஷ்டைகொலையும்.

ஆபாஸமான-அபகர்ஷமான. ஸத்யதர்மத்தைப்பற்றி நின்று-ஸத்யரூபதர்மத்தைப் பற்றிநின்று.

ஸர்வதர்மபரித்யாகத்தின் கருத்தறியாதார் - ஸர்வதர்மபரித்யாகத்தினுடைய ஹேதுவை அறியாதார். த்யாகத்துக்கு ஹேது வேதென்னில்; ஸ்வரூபவிரோதித்வமும் ஸஹாயாந்தரநைரபேக்ஷ்யமும். இப்போது, தர்மசப்த விசேஷணமான ஸர்வசப்தத்துக்கு ஸாகல்யவாசித்வம் அர்த்தமாகக்கொள்ளவேணும். தத்பக்ஷத்தை-த்யாகத்தின் கருத்தறியாதார் தூஷிக்கும்பக்ஷத்தை. உத்க்ஷேபிக்கிறார்-எடுக்கிறார்.

மூ.—அதுகூடாது, அதர்மங்களைச் செய்யென்று சொல்லாமையாலே. தன்னடையேசொல்லிற்ருகாதோவென்னில்; ஆகாது, தர்மஶப்தம் அதர்மநிவர்த்தியைக்காட்டாமையாலே.

---

வ்யா.—அதாவது-த்யாஜ்யமான தர்மந்தான், (ఇదంకురు, ఇదం మాకార్షీః) (இதம்குரு, இதம்மாகார்ஷீ:) என்று, விதிநிஷேதாத்மகமாயிருக்கையாலே, ஸர்வதர்மங்களையும்விட்டு என்று சொல்லுகையாலே, விஹிதாநுஷ்டாநத்தோபாதி நிஷித்தபரிஹாரமும் ஒக்கத் தள்ளுண்ணுமளவில், அடைத்தகதவைத் திறந்தால் நிஹீந பதார்த்தங்கள் புகுருமாப்போலே, அதர்மங்களான நிஷித்த ப்ரவர்த்திகள் புகுரும் என்று சிலர்சொன்ருர்கள் என்கை.

அத்தைப்பரிஹரிக்கிருர் (அது கூடாது, அதர்மங்களைச் செய்யென்று சொல்லாமையாலே யென்று.) அதாவது - ஸர்வ தர்மங்களையும் விடச்சொன்ன இத்தால் அதர்மங்கள் புகுரும் என்கிற விது ஸம்பவியாது; தர்மங்களை விடச்சொன்ன மாத்ர மொழிய, அதர்மங்களைச்செய்யென்று சொல்லாமையாலேஎன்கை.

அதர்மநிவர்த்தியும் தர்மஶப்தவாச்யமாகையாலே, அத்தை விடச்சொன்ருல், அதர்மத்தைச் செய்யென்னுமிடம் அர்த்தாதுக்தமாகாதோ என்கிற ப்ரதிவாத்யுக்தியை அநுவதிக்கிருர் (தன்னடையே சொல்லிற்ருகாதோ வென்னில் என்று.) அதுக்கு உத்தரமருளிச்செய்கிருர் (ஆகாது, தர்மஶப்தம் அதர்மநிவர்த்தியைக் காட்டாமையாலே யென்று.) அதாவது - தர்மங்களைவிடச் சொன்ன இத்தால், அதர்மங்களைச் செய்யென்னுமிடம் தன்னடையே சொல்லிற்ருகாது, தர்மஶப்தம், அதர்ம நிவர்த்யாத்யங்க ஸஹிதமாய் ப்ரதாநமாயிருந்துள்ள விஹிதாநுஷ்ட்டாநத்தைக் காட்டுமதொழிய, ஸாமாந்யேந அதர்மநிவர்த்தி மாத்ரத்தைக் காட்டாமையாலேயென்கை.

---

அ.—நிஹீநபதார்த்தங்கள்-ஶ்வாநகர்த்தபங்கள். தர்மங்களை விடச்சொன்னமாத்ரமொழிய - "ஸர்வதர்மாந்பரித்யஜ்ய" என்று தர்மங்களைவிடச் சொன்னமாத்ரத்தை விட்டு. இவ்விடத்தில், மாத்ரசப்தத்தாலே - அதர்மநிவர்த்தி சாப்தமன்றென்றபடி. அதர்மங்களைச் செய்யென்று சொல்லாமையாலே - அதர்மங்களைப் பண்ணென்று சாப்தமாகச் சொல்லாமையாலே. அதர்மநிவர்த்தியும் தர்மசப்தவாச்ய மாகையாலே - அதர்மநிவர்த்யங்க ஸஹித மான விஹிதாநுஷ்டாநம் தர்மசப்தவாச்யமாகையாலே. அத்தை விடச்சொன்ருல் - அதர்ம நிவர்த்தியை விடச்சொன்ருல்.

மூ.—காட்டினாலும், அத்தையொழிந்தவற்றைச் சொல்லிற்றாமித்தனை. தன்னையும், ஈஶ்வரனையும், பலத்தையும் பார்த்தால் அவை புகுரவழியில்லை. (மாம்) ஸர்வரக்ஷகனாய், உனக்குக்கையாளாய், உன்னிசைவுபார்த்து, உன்தோஷத்தைப் போக்யமாகக்கொண்டு, உனக்குப்புகலாய், நீர் சுடுமாப்போலே சேர்ப்பாரோ பிரிக்கும்போதும் விடமாட்டாதே ரக்ஷிக்கிற என்னை.

---

வ்யா.—அதர்மநிவர்த்திக்கு தர்மஶப்தவாச்யத்வம்முக்யமாகவில்லையேயாகிலும், ஸர்வஶப்த ஸாஹித்யத்தாலே தர்மஶப்தம், விஶேஷண பூதமான இதுதன்னையுங்காட்டாதோ என்ன அருளிச்செய்கிறார் (காட்டினாலுமென்று தொடங்கி.) அதாவது - அப்படி காட்டிற்றாகிலும், அது இவ்விடத்தில் விவக்ஷிதமல்லாமையாலே, அத்தையொழிந்த விஹிதாநுஷ்டாநரூபதர்மங்களானவற்றைச் சொல்லிற்றாமித்தனை யென்கை.

இங்ஙன் ஒதுக்குகிறது என்கொண்டென்ன அருளிச்செய்கிறார் (தன்னையுமென்று தொடங்கி.) அதாவது - அதர்மாநுஷ்டாநம் ஶேஷிக்கு அநிஷ்டமாகையாலே, அவனுக்கு அதிஶயகரனாமதொழிய அநிஷ்டகரனாகை சேராதபடியான ஸ்வரூபத்தையுடைய தன்னைப்பார்த்தாலும் ஸஹாயாந்தர ஸம்ஸர்க்காஸஹதையாலே, இத்தலையில் ஸ்வயத்நநிவர்த்தியொழிய ப்ரவர்த்யம்ஶத்தில் ஒன்றையும்பொறாத உபாய பூதனான ஈஶ்வரனைப் பார்த்தாலும் இவனுடைய ப்ரவர்த்திக்கு பலம் அவனுடைய ப்ரீதியாகையாலே தாத்ர்ஶமான பலத்தைப்பார்த்தாலும் இம்மூன்றுக்கும் விருத்தங்களான அவைபுகுரவழி யில்லையென்கை. ஆகையால் தர்மஶப்தம் அதர்மநிவர்த்தியைக்காட்டிற்றாகிலும், அத்தைஒழிந்தவற்றைச் சொல்லிற்றாகக் கொள்ளவேணுமென்று கருத்து. ஆக, த்விதீயபதார்த்தத்தை அருளிச்செய்தாராயிற்று.

அநந்தரம், த்ர்தீயபதத்தை உபாதாநம் பண்ணுகிறார் (மாம் என்று.) அதுக்கு அர்த்தமருளிச்செய்கிறார் (ஸர்வரக்ஷகனாயென்று தொடங்கி.) அதாவது-நம்முடைய ரக்ஷணம் இவன் பண்ணுமோ பண்ணானோ என்று ஸம்ஶயிக்கவேண்டாதபடி ஸர்வருடையவும் ரக்ஷணத்திலே தீக்ஷிதனாய், தன் பெருமையையும், நம் சிறுமையையும் பார்த்து நம்மோடு கலப்பற்றிருக்குமோ என்ன வேண்டாதபடி, (సేనయోరుభయోర్మధ్యేరథంస్థాపయ) (ஸேநயோருபயோர்மத்யேரதம்ஸ்த்தாபய) என்று, ஏவிக்கார்யங்கொள்ளலாம்படி உனக்குக் கையாளாய் உன்னை ரக்ஷிக்கையில் உண்டான நசையாலே,

---

அ.—நம்மோடு கலப்பற்றிருக்குமோவென்ன வேண்டாதபடி-நம்மோடு கலந்திருக்கமாட்டானென்ன வேண்டாதபடி. ஏவி-நியமித்து. கையாளாய்-ஹஸ்தகனாய்.

மூ.—இத்தால்-பரவ்யூஹங்களையும், தேவதாந்தர்யா மித்வத்தையும் தவிர்க்கிறது. தர்மஸம்ஸ்த்தாபநம் பண்ணப் பிறந்தவன் தானே ஸர்வதர்மங்களையும் விட்டு என்னைப்பற்று என்கையாலே, ஸாக்ஷாத்தர்மம், தானேயென்கிறது.

---

வ்யா.—(రక్ష్యాపేక్షాం ప్రతీక్షతే)(ரக்ஷ்யாபேக்ஷாம்ப்ரதீக்ஷதே)என்கிறபடியே ரக்ஷ்யபூதனான உன்னிசைவுபார்த்து நங்குற்றங்கண்டு இகழுமோஎன்று அஞ்சவேண்டாதபடி (అస్థానస్నేహకారుణ్యధర్మాధర్మధియాకులమ్) *அஸ்த்தாநஸ்நேஹகாருண்யதர்மாதர்மதியாகுலனான உன்தோஷத்தை போக்யமாகக்கொண்டு அஶரண்ய ஶரண்யனாகையாலே நீயும், பிறரும் உனக்குத் தஞ்சமல்லாத தஶையில் ஒதுங்கலாம்படியான புகலாய், ஶைத்யமே ஸ்வபாவமான ஜலம் ஔஷ்ண்யத்தைப் பஜிக்குமாப்போலே, அபராதக்ஷாமணம் பண்ணி கடிப்பிக்கும்புருஷகாரபூதரே, "தாமரையாளாகிலும்சிதகுரைக்குமேல்" என்கிறபடியே, குற்றத்தைக்காட்டி அகற்றும்போதும், விடக்ஷமனன்றிக்கே, "என்னடியாரது செய்யார்" என்று மறுதலித்து ஒருதலைநின்று ரக்ஷிக்கும் என்னைஎன்கை.

(மாம்) என்று-விபவரூபத்தைக் காட்டுகையாலே வ்யாவர்த்திக்கப்படுகிறவற்றை அருளிச்செய்கிறார் (இத்தாலென்று தொடங்கி.) அதாவது - என்னை என்று, அவதரித்துக் கண்ணுக்கிலக்காய் அணுகிநிற்கிற தன்னை, வரணீயனாகச்சொன்ன வித்தாலே, தேஶவிப்ரக்ர்ஷ்டதையாலே காணவுங் கிட்டவும் ஒண்ணாதபடியிருக்கிற பரவ்யூஹங்களையும், அஸாதாரண விக்ரஹ யுக்தமன்றிக்கே, உபாயாந்தர நிஷ்ட்டர்க்கு உத்தேஶ்யமாயிருக்கிற அக்நீந்த்ராதி தேவதாந்தர்யாமித்வத்தையும் வ்யாவர்த்திக்கிறது என்கை.

தர்மங்களையெல்லாம் விட்டுத் தன்னைப் பற்றச்சொல்லுகையாலே, பலிதமானதொரு அர்த்தவிஶேஷத்தை அருளிச்செய்கிறார் (தர்மஸம்ஸ்த்தாபநமென்று தொடங்கி.) அதாவது - (ధర్మసంస్థాపనార్థాయసమ్భవామి) (தர்மஸம்ஸ்த்தாப நார்த்தாய ஸம்பவாமி) என்கிறபடியே ஸ்வப்ராப்திக்கு உடலான தர்மத்தை ஸ்த்தாபிப்பதாகப் பிறந்தவன்தானே, (ஸர்வதர்மாந்பரித்யஜ்ய) என்று - மோக்ஷஸாதநதயா ஶாஸ்த்ரஸித்தங்களான ஸர்வதர்மங்களையும்விட்டு என்னைப்பற்று என்று சொல்லுகையாலே, அவை ஸாக்ஷாத் தர்மங்களன்று, ஸ்த்தாபநீயமான ஸாக்ஷாத்தர்மம் (కృష్ణంధర్మంసనాతనమ్) (க்ர்ஷ்ணம்தர்மம்ஸநாதநம்) என்று - ஸநாதந தர்மமான தானே என்னுமிடம் சொல்லுகிறதென்கை.

---

அ.—இசைவு - ஸமாதாநம். அதாவது - அப்ரதிஷேதம். இகழுமோ-கைவிடுவனோ. தோஷத்தை - தர்மத்தை அதர்மமாக நினைக்கையாகிறதோஷத்தை. புகலாய்-ப்ரவேசிக்கும்ஸ்த்தலமாய். அகற்றும்போது - பிரிக்கும்போது. மறுதலித்து-யுத்தம்பண்ணி. ஒருதலைநின்று-ஒருபக்கமேயிருந்து.

அணுகிநிற்கிற - ஸஹிதனாய்நிற்கிற - கிட்டிநிற்கிற.

[గీ - ౪ - ౮] (పరిత్రాణాయసాధూనాం వినాశాయచదుష్కృతామ్। ధర్మసంస్థాపనార్థాయసమ్భవామియుగేయుగే) [భా - ఆ-౮౮] (యేచవేదవిదోవిప్రాః యేచాధ్యాత్మవిదోజనాః। తేవదన్తిమహాత్మానం కృష్ణంధర్మంసనాతనమ్.)

மூ.—இத்தால்-விட்ட ஸாதநங்களின் ஏற்றஞ்சொல்லுகிறது. அதாவது - ஸித்தமாய், பரமசேதநமாய், ஸர்வஶக்தியாய், நிரபாயமாய், ப்ராப்தமாய், ஸஹாயாந்தர நிரபேக்ஷமாயிருக்கை. மற்றை உபாயங்கள் ஸாத்யங்களாகையாலே, ஸ்வரூபஸித்தியில் சேதநனை அபேக்ஷித்திருக்கும்; அசேதநங்களுமாய் அஶக்தங்களுமாயிருக்கையாலே கார்யஸித்தியில் ஈஶ்வரனை யபேக்ஷித்திருக்கும்; இந்தஉபாயம் அவற்றுக்கெதிர்த்தட்டாயிருக்கையாலே இதரநிரபேக்ஷமாயிருக்கும்.

---

வ்யா.—இத்தாலென்சொல்லுகிறதென்ன அருளிச்செய்கிறார் (இத்தால்விட்டஸாதநங்களின்ஏற்றஞ்சொல்லுகிறதென்று.) அதாவது - இப்படிச்சொன்ன இத்தால், கீழ் விட்டஸாதநங்களில் காட்டில், இந்தஸாதநத்துக்குண்டான ஏற்றஞ்சொல்லுகிறது என்கை.

அதுதானேதென்ன அருளிச்செய்கிறார் (அதாவதென்று தொடங்கி.) இத்தால் - கீழ்விட்டஸாதநங்களிற் காட்டில், இதுக்கு ஏற்றமாவது, சேதநப்ரவ்ர்த்தியாலே தன்ஸ்வரூபஸித்தியாம்படி யிருக்கையன்றிக்கே, ஸநாதநதர்மமாகையாலே ஸித்தமாய், (యస్సర్వజ్ఞస్సర్వవిత్) (யஸ்ஸர்வஜ்ஞஸ்ஸர்வவித்) இத்யாதிகளிற்சொல்லுகிற ஸர்வஜ்ஞ விஷயமாகையாலே, பரமசேதநமாய், (పరాస్య శక్తిర్వివిధైవ శ్రూయతే) (பராஸ்யஶக்திர்விவிதைவஶ்ரூயதே) என்கிறபடியே, ஸர்வஶக்தியாய், சேதநஸாத்யமாய், நடுவே அபாயங்கள் புகுருகைக்கு அவகாஶமுண்டாம்படியிருக்கையன்றிக்கே ஸித்தவஸ்துவா யிருக்கையாலே நிரபாயமாய், பரதந்த்ரனான இச்சேதநனுடைய ஸ்வரூபத்துக்கு அப்ராப்தமாயிராதே ப்ராப்தமாய், கீழ்ச்சொன்ன பரமசேதநத்வாதிகளாலே, ஸஹாயாந்தர நிரபேக்ஷமாயிருக்கை யென்றபடி.

இந்தஸஹாயாந்தர நிரபேக்ஷத்வத்தை 'ஸஹேதுகமாக ஸ்தாபிக்கிறார் (மற்றை உபாயங்களென்று தொடங்கி மேல்மூன்று வாக்யத்தாலே.) அதாவது-இத்தையொழிந்த உபாயங்கள் சேதநப்ரவ்ர்த்தியாலேஸாதிக்கப்படுமவை யாகையாலே, தன்னுடைய ஸ்வரூபஸித்தியில் ப்ரவர்த்தகனான சேதநனை அபேக்ஷித்திருக்கும்; இவனுக்குச் செய்யவேண்டுமவை அறிகைக்கும், அதுதன்னைச்செய்துதலைக்கட்டுகைக்கும் யோக்யதையில்லாத அசேதநங்களுமாய், அஶக்தங்களுமா யிருக்கையாலே, சேதநனுடைய இஷ்டாநிஷ்டப்ராப்தி பரிஹாரரூபமான கார்யத்தினுடைய ஸித்தியில் (ఫలమత ఉపపత్తేః) (பலமத உபபத்தே:) என்கிறபடியே, பலப்ரதத்வோப யோகியான, ஸர்வஶக்தித்வாத் யுபபத்தியையுடையனான ஈஶ்வரனை யபேக்ஷித்திருக்கும்; இந்த உபாயம் ஸித்தத்வ, பரமசேதநத்வ, ஸர்வஶக்தித்வங்களாலே அவற்றுக்கு எதிர்த்தட்டாயிருக்கையாலே, அந்யநிரபேக்ஷமாயிருக்குமென்கை.

மூ.—இதிலே வாத்ஸல்ய ஸ்வாமித்வ ஸௌஶீல்ய ஸௌலப்யங்களாகிற குணவிஶேஷங்கள் நேராகப்ரகாஶிக்கிறது. கையும் உழவுகோலும், பிடித்த சிறுவாய்க்கயிறும், ஸேநாதூளி தூஸரிதமான திருக்குழலும், தேருக்குக்கீழே நாற்றின திருவடிகளுமாய் நிற்கிற ஸாரத்யவேஷத்தை (மாம்) என்று காட்டுகிறான். (ஏகம்.) இந்த ஏகஶப்தம் ஸ்த்தாநப்ரமாணத்தாலே அவதாரபூர்த்தத்தைக் காட்டுகிறது.

---

வ்யா.—இனி, இப்பதத்திலே ஆஶ்ரயண ஸௌகர்யாபாதகங்களான குணவிசேஷங்களெல்லாம் ப்ரகாஶிக்கிறபடியை அருளிச்செய்கிறார் (இதிலேயென்றுதொடங்கி.) அதாவது - அதர்மபுத்தியாலே தர்மத்தில்நின்றும் நிவர்த்தனான அர்ஜுநனுக்கு, குற்றம் பாராதே அபேக்ஷிதார்த்தங்களை அருளிச்செய்கையாலே, வாத்ஸல்யம் ப்ரகாஶிக்கிறது; தன்னுடைய பரத்வத்தைப் பலகாலும் அருளிச்செய்தவளவன்றிக்கே, அர்ஜுநன் ப்ரத்யக்ஷிக்கும்படி பண்ணுகையாலே, ஸ்வாமித்வம் ப்ரகாஶிக்கிறது; (హేకృష్ణహేయాదవ) (ஹேக்ர்ஷ்ண ஹேயாதவ) என்று, அர்ஜ்ஜுநன் தானேசொல்லும்படி இவனோடேகலந்து பரிமாறுகையாலே ஸௌஶீல்யம் ப்ரகாஶிக்கிறது; அப்ராக்ர்தமான திருமேனியைக் கண்ணுக்கிலக்காம்படி பண்ணுகையாலே, ஸௌலப்யம் ப்ரகாசிக்கிறது என்கை; குணவிஶேஷங்கள் என்றது - ஆஶ்ரயணத்துக்கு அபேக்ஷிதங்களானவையென்றுதோற்றுகைக்காக. நேராகப்ரகாஶிக்கிறது என்றது - ஸ்ப்புடமாக ப்ரகாஶிக்கிறதென்றபடி.

இவை எல்லாவற்றிலும் வைத்துக்கொண்டு, மிகவும் அபேக்ஷிதம் ஸௌலப்யமாகையாலே, அவதாரப்ரயுக்தமான ஸௌலப்யத்தள வன்றிக்கே, ஸாரத்யேவஸ்த்திதனாய்நிற்கிற ஸௌலப்யாதிஶயத்தை தர்ஶிப்பித்தமையை அருளிச்செய்கிறார் (கையும் உழவுகோலுமென்று தொடங்கி.) அதாவது - குதிரைகளை ப்ரேரித்துநடத்துகைக்காகத்திருக்கையிலேதரித்தஉழவுகோலும், அவற்றை இடவாய் வலவாய்த் திருப்புகைக்காகவும், நிறுத்தவேண்டுமிடத்திலே தாங்கி நிறுத்துகைக்காகவும் பிடித்த சிறுவாய்க்கயிறும், திருமுடியில் ஒன்று ஆச்சாதியாமல் நிற்கையாலே ஸேநாதூளியாலே புழுதிபுடைத்த திருக்குழலும், "தேர்கடவிய பெருமான்கனைகழல்" என்கிறபடியே, சாத்தின சிறுச்சதங்கையுந் தானுமாகத் தேருக்குக்கிழே நாற்றின திருவடிகளுமாய் நிற்கிற ஸாரத்யவேஷத்தை என்னை என்று காட்டுகிறான் என்கை. ஆக, த்ரீயபதார்த்தத்தை அருளிச்செய்தாராய்த்து.

அநந்தரம், சதுர்த்தபதத்தை உபாதாநம் பண்ணுகிறார் (ஏகமென்று.) அதுக்கு அர்த்தம் அருளிச்செய்கிறார் (இந்தஏகஶப்தமென்று தொடங்கி.)

---

அ.—உழவுகோல்-கசை. சிறுவாய்க்கயிறு-ஸூக்ஷ்மகலீநாஜ்ஜு:.

மூ.—"மாமேவயேப்ரபத்யந்தே" "தமேவ சாத்யம்" "த்வமேவோபாய பூதோமேபவ" "ஆறெனக்கு நின்பாதமே சரணாகத்தந் தொழிந்தாய்" என்று சொல்லுகிறபடியே. இத்தால் - (வ்ரஜ) என்கிற ஸ்வீகாரத்தில் உபாயபாவத்தைத் தவிர்க்கிறது.

---

வ்யா.—அதாவது - இவ்வுபாய விஶேஷத்தைச் சொல்லுமிடங்களிலே பலவிடங்களிலும் அவதாரண ப்ரயோகம் உண்டாகையாலே, உகாரம்போலே இந்த ஏகஶப்தமும் ஸ்த்தாந ப்ரமாணத்தாலே அவதாரணமாகிற அர்த்தத்தைக்காட்டுகிறது என்கை.

இவ்வுபாயத்தை நிர்த்தேசித்த அநந்தரம், அவதாரண ப்ரயோகம்பண்ணின வசநங்கள் பலவற்றையும் இதுக்கு உதாஹரணமாக அருளிச்செய்கிறார் (மாமேவ என்றுதொடங்கி.) அதாவது - (మామేవయేప్రపద్యన్తే) (மாமேவ யேப்ரபத்யந்தே) என்று - என்னையே யாவர்சிலர் ப்ரபத்திபண்ணுகிறார்கள் என்றும், (తమేవ చాద్యంపురుషంప్రపద్యే)(தமேவசாத்யம் புருஷம்ப்ரபத்யே)என்று-ஆத்யனான அந்தபுருஷனையே ப்ரபத்திபண்ணுகிறேன் என்றும், (త్వమేవోపాయభూతోమేభవ) (த்வமேவோபாயபூதோமேபவ) என்று-நீயே எனக்கு உபாயமாகவேணும் என்றும், "ஆறெனக்கு நின்பாதமே சரணாகத்தந் தொழிந்தாய்" என்று-எனக்கு உபாயம்தருகிற விடத்தில் உன்திருவடிகளையே உபாயமாகத் தந்தாயென்றும் சொல்லுகிற இவ்விடங்களில்,(மாமேவ, தமேவ், த்வமேவ, நின்பாதமே) என்று, ஸ்வீகார்யவஸ்து நிர்த்தேஶாநந்தரம் அவதாரணத்தைச் சொல்லுகிற ப்ரகாரத்திலே என்கை.

ஏதத்வ்யாவர்த்யம் ஏதென்ன அருளிச்செய்கிறார் (இத்தாலென்றுதொடங்கி.) அதாவது – உபாயாந்தரங்கள் வ்யாவர்த்யமாமளவில், பௌநருக்த்யம் ப்ரஸங்கிக்கையாலும், தேவதாந்தரங்கள் வ்யாவர்த்யமாமளவில், மாம் என்று - அஸாதாரணாகாரத்தைச் சொல்லுகையாலே அது கீழே ஸித்தமாகையாலும், இந்த அவதாரணத்தால், (வ்ரஜ) என்று - மேல்சொல்லுகிற ஸ்வீகாரத்தில் உபாயத்வத்தைக் கழிக்கிறது என்கை. இந்த ஸ்வீகாரந்தான் அந்வய வ்யதிரேகத்தாலே ஸாதநம் என்று நினைக்கலா யிருக்கையாலே, இதில் ஸாதநத்வம் அவஸ்யம் கழிக்கவேணுமிறே.

---

அ.—அந்வயமாவது-ஸ்வீகாரமுண்டானால்பகவத்ப்ராப்தி உண்டென்னுமது. வ்யதிரேகம் - ஸ்வீகாரமில்லாதபோது பகவத் ப்ராப்தி யில்லையென்னுமது. ஸாதநம்-உபாயம். இதில்-இந்தஸ்வீகாரத்தில். அவச்யம்கழிக்கவேணுமிறே-ஸித்தோபாயம் ஸஹாயாந்தரஸம்ஸர்க்காஸஹமாகையாலே.

மூ.—ஸ்வீகாரந்தானும் அவனாலேவந்தது. ஸ்ர்ஷ்ட்யவதாராதிமுகத்தாலேபண்ணினக்ர்ஷிபலம். "அதுவுமவனதின்னருளே."

---

வ்யா.—ஸ்வீகாராநந்தரமொழிய உபாயம் கார்யகரமாகாமையாலேபேற்றுக்கு இது அவஶ்யம் வேண்டியிருக்க, இதில்உபாயத்வத்தைக் கழிக்கிறபடி தானெங்ஙனே யென்ன அருளிச்செய்கிறார் (ஸ்வீகாரந்தானும் அவனாலேவந்தது என்று.) அதாவது-ஸ்வீகாராநந்தரம் இவனுக்கு அநிஷ்டநிவர்த்தியும், இஷ்டப்ராப்தியும் பண்ணுகையாகிற விது அவனாலேயானாப்போலே, தத்பூர்வபாவியான ஸ்வீகாரந்தானும் அவனாலேயுண்டானது என்கை. இத்தால் – ஸ்வீகாரத்துக்குஉபாயகார்யத்வமொழிய உபாயத்வமில்லையென்றதாயிற்று.

அவனாலே வருகையாவதென்னென்ன அருளிச்செய்கிறார் (ஸ்ர்ஷ்டியென்று தொடங்கி.) அதாவது - கரணகளேபரவிதுரனாய், போகமோக்ஷஶூந்யனாய், அசிதவிஶேஷிதனாய்க் கிடக்கிற தஶையிலே, கரணகளேபரவிஶிஷ்டனாய், ஜ்ஞாநவிகாஸயுக்தனாம்படி ஸ்ர்ஷ்டித்து, "எதிர் சூழல்புக்கு" என்கிறபடியே, இவனை அங்கீகரிக்கைக்காக அநேகாவதாரங்களைப் பண்ணி அவதரித்தவிடங்களிலே, ஆஶ்ரயணருசி விஶ்வாஸஜநகமான தன்குணசேஷ்டிதாதிகளை ப்ரகாஶிப்பித்து, இவ்வழியாலே அவன் பண்ணினக்ர்ஷியாலே பலித்தது இதுவென்கை. இவ்வர்த்தத்தில் ப்ரமாணம் காட்டுகிறார் (அதுவுமவனதின்னருளேயென்று.) அதாவது- "உணர்விலும்ப ரொருவனை யவனதருளா லுறற்பொருட்டென்னுணர்வினுள்ளே யிருத்தினேன்" என்று - உணர்வுமிக்கிருக்கக்கடவரான நித்யஸூரிகளுடைய ஸத்தாதிகளுக்கு நிர்வாஹகனாய் அத்விதீயனானவனை, அவனுடைய அருளாலே ப்ராபிக்கைக்காக என்னுடைய அபேக்ஷாரூப ஜ்ஞாநத்துக்குள்ளே யிருத்தினேனென்று தம்முடைய ஸ்வீகாரத்தை யருளிச்செய்த வநந்தரம், "அதுவுமவனதின்னருளே" என்று, அந்த ஸ்வீகாரந்தானும் அவனுடைய நிர்ஹேதுக க்ர்பையினாலே யுண்டானதென்று ஆழ்வாரருளிச் செய்கையாலே ஸ்வீகாரம் அவனுடைய க்ர்ஷிபலமென்றேகொள்ளவேணுமென்கை.

---

அ.—இவனுக்கு - சேதநனுக்கு. அவனாலே - உபாயபூதனான ஈஶ்வரனாலே. தத்பூர்வபாவியான - அநிஷ்ட நிவர்த்திக்கும் இஷ்டப்ராப்திக்கும்முன்னே உண்டாயிருக்கிற. உபாயகார்யத்வம் - உபாயகார்யோபயோகித்வம்.

போகம் - ஐஹலௌகிகமாயும் பாரலௌகிகமாயு மிருக்கிற ஸுகாநுபவம். விஶ்வாஸமாவது-ஸுத்ர்டமானமதி. குணசேஷ்டிதாதிகளை என்கிறவிடத்தில், குண என்று-ஸௌலப்யாதிகுணங்களையும், சேஷ்டித என்று-வ்யாபாரங்களையும், ஆதிஶப்தத்தாலே-திவ்யமங்கள விக்ரஹங்களையும் சொல்லவுமாம். இவ்வழியாலே-இந்தவுபாயத்தாலே; இந்த மார்க்கத்தாலே யென்னவுமாம்.

மூ.—இத்தையொழியவும் தானே கார்யஞ்செய்யும் என்று நினைக்கக்கடவன். அல்லாதபோது உபாயநைரபேக்ஷ்யம்ஜீவியாது. இதுஸர்வமுக்திப்ரஸங்கபரிஹாரார்த்தம், புத்திஸமாதாநார்த்தம், சைதந்யகார்யம், ராகப்ராப்தம், ஸ்வரூபநிஷ்ட்டம், அப்ரதிஷேதத்யோதகம்.

---

வ்யா.—இப்படியாகையால் இந்தஸ்வீகாரத்தில் சரக்கறநினைக்கக்கடவனென்கிறார் (அத்தையொழியவுமென்றுதொடங்கி.) அதாவது - இந்தஸ்வீகாரத்துக்கும் தானேகர்ஷிபண்ணுவானொருவனுகையாலே, இதுக்காகவன்று அவன் நமக்குக் கார்யஞ்செய்கிறது, இத்தையொழியவும் இவ்வாத்மோஜ்ஜீவநகரனான தானே நம்முடைய இஷ்டாநிஷ்டப்ராப்திபரிஹாரரூபமானகார்யத்தைச் செய்யுமென்று ப்ரதிபத்திபண்ணக் கடவனென்கை.

இப்படி நினைக்கவேண்டுகிறதென்னென்ன அருளிச்செய்கிறார் (அல்லாதபோது என்று தொடங்கி.) அதாவது - இத்தையொழியவுங் கார்யஞ்செய்யுமென்று நினையாதே, இதுவும் வேணும் அவன் கார்யஞ்செய்கைக்கு என்று நினைக்குமளவில், உபாயத்தினுடைய ஸஹாயாந்தரநைரபேக்ஷ்யம் ஜீவிக்கப்பெறாது என்கை.

ஆனால் இந்தஸ்வீகாரந்தான் ஏதாவதென்ன அருளிச்செய்கிறார் (இதுஎன்றுதொடங்கி.) அதாவது - இந்தஸ்வீகாரம் இத்தலையிலொன்றுமின்றிக்கேயிருக்க ஈஶ்வரன்தானே உஜ்ஜீவிப்பிக்குமளவில், எல்லாரும் பின்னை முக்தராகவேண்டாவோ என்கிற ஸர்வமுக்தி ப்ரஸங்கபரிஹாரத்துக்குறுப்பு; இதுதான், நெடுங்காலம் நம்மை ரக்ஷியாதவன் இன்று நம்மை ரக்ஷிக்கும் என்றிருக்கிறது நாம் என்கொண்டென்று இவன் தளும்பாமல் புத்திஸமாதாநம் பிறந்திருக்கைக்குறுப்பு; இவன்தான் அசேதநமன்றிக்கே சேதநனுகையாலே, அவனே உபாயம்என்கிற அத்யவஸாயம் இவன் சைதந்யத்தினுடைய கார்யம்; வைதமாக அன்றிக்கே இதில் ரஸஜ்ஞனான இவனுடைய ராகத்தாலே ப்ராப்தமான இது, ஸ்வரூபாதிரேகியன்றிக்கே ததேகரக்ஷ்யத்வரூபமான ஸ்வரூபத்திலே நிற்குமது, அநாதிகாலம் ஸ்வரக்ஷணுதிகளாலே அவன் பண்ணும் ரக்ஷணத்தை விலக்கிப்போந்த இவன் அதுதவிர்ந்தமைக்கு ப்ரகாஶகமென்கை.

---

அ.—சரக்கற-அதிசயம் போம்படியாக. இதுக்காகவன்று-இந்தஸ்வீகாரத்துக்காகவன்று. இத்தை யொழியவும் - இத்தைத் தவிரவும்.

மூ.— கீழ்-தானும்பிறருமானநிலையைக்குலைத்தான், இங்குத் தானும் இவனுமான நிலையைக்குலைக்கிறான். அவனை இவன் பற்றும்பற்று அஹங்கார கர்ப்பம், அவத்யகரம். அவனுடைய ஸ்வீகாரமே ரக்ஷகம்.

---

வ்யா.—இனி, ''மாம்'' என்கிற பதத்துக்குக்கீழும், இங்கும், ஈஸ்வரனுடைய செயல்களை யருளிச்செய்கிறார் (கீழ்என்றுதொடங்கி.) அதாவது-(ஸர்வ்வதர்மாந் பரித்யஜ்ய) (ஸர்வதர்மாந் பரித்யஜ்ய) என்கிற இடத்தில், ஸகலோபாயங்களையும் விடச்சொல்லுகையாலே, பலப்ரதனான தானும் உபாயாந்தரங்களுமாய்க் கூடிநிற்கிற நிலையைக் குலைத்தான்; ''ஏகம்'' என்கிற இடத்தில், ஸ்வீகாரத்தில் உபாயபாவத்தைக் கழிக்கையாலே உபாயபூதனான தானும், தன்ஸ்வீகாரத்தில் உபாயபுத்திபண்ணி நிற்கிற இவனுமான நிலையைக் குலைக்கிறானென்கை. உபாயாந்தரங்களைப் பிறர் என்றது, ''உன்னாலல்லால் யாவராலும்'' என்றாப்போலே.

இனி, ஸாதநபுத்த்யா இவன் பண்ணும் ஸ்வீகாரத்தினுடையதோஷத்தைஅருளிச்செய்கிறார் (அவனையென்றுதொடங்கி.) அதாவது - நிருபாதிகரக்ஷகனான அவனை, தத்ரக்ஷ்யபூதனான இவன், தன்ரக்ஷணத்துக்குறுப்பாக ஸ்வீகரிக்கிற ஸ்வீகாரம், ஸ்வகர்த்ர்த்வரூப அஹங்காரகர்ப்பமுமாய், பிதாவுக்குபுத்ரன் எழுத்துவாங்குமாப்போலே, அவத்யகரமுமா யிருக்குமென்கை.

ஆனால், ரக்ஷகமாவதுதானேதென்ன அருளிச்செய்கிறார் (அவனுடைய ஸ்வீகாரமே ரக்ஷகமென்று.) அதாவது - இவ்வாத்மாவினுடைய ரக்ஷணத்துக்குக் கடவனானவவன், இவனை நாம் ரக்ஷிக்கக்கடவோம் என்று அபிமாநித்துக் கொள்ளுகையாகிற ஸ்வீகாரமே, இவனுக்கு ரக்ஷகமாயறுவது என்கை.

---

அ.—ஸாதநபுத்த்யாஇவன்பண்ணும்ஸ்வீகாரத்தினுடைய-ஸ்வாமித்வ புத்த்யாஸ்வீகரிக்கையன்றிக்கே ஸாதநபுத்த்யா இவன் பண்ணும் ஆஸ்ரயணத்தினுடைய. பிதாவுக்கு புத்ரன் எழுத்துவாங்குமாப்போலேயிருக்கும்-உத்பாதகனாகையாலே ஹிதைஷியாய் தான் அறியாத தசையிலும் தன்னை ரக்ஷித்துக்கொண்டு போரும் தமப்பனுக்கு புத்ரனானவன் தானறிந்த தசையிலே என்னை ரக்ஷிக்கவேணும் என்று எழுதிவாங்கினால் இரண்டுதலைக்கு முண்டான வுறவுக்குக் கொத்தையாமாப்போலே, ஸத்தாகாரண பூதனாய் ஸர்வதசையிலும் ரக்ஷகனாய்க்கொண்டு போரும் அகாரவாச்யனான ஸர்வேச்வரனுக்கும் மகாரவாச்யனான இவனுக்கு முண்டான ஸம்பந்தத்துக்கு அவத்யகரமென்றபடி. ரக்ஷணத்துக்குக் கடவனானவன் - ரக்ஷணத்துக்கு சக்தனானவன். அபிமாநித்துக்கொள்ளுகையாகிற - அபிமாநித்துக் கைக்கொள்ளுகையாகிற.

மூ.—மற்றைஉபாயங்களுக்கு, நிவ்ர்த்தி தோஷம், இதுக்கு ப்ரவ்ர்த்திதோஷம். "சிற்றவேண்டா." நிவ்ர்த்தி கீழேசொல்லிற்று. உபகாரஸ்ம்ர்தியும் சைதந்யத்தாலே வந்தது, உபாயத்தில் அந் தர்ப்பவியாது.

---

வ்யா.—சேதந ப்ரவ்ர்த்தியில் ஒன்றையும் இவ்வுபாயம்ஸஹி யாதென்னுமத்தைத் தெளிவிக்கைக்காக, உபாயாந்தரங்களுக்கும் இவ்வுபாயத்துக்கு முண்டானவிஶேஷத்தை அருளிச்செய்கிறார் (மற்றை யென்றுதொடங்கி.) அதாவது - ஸித்தோபாயமான இத் தை யொழிந்த உபாயங்களுக்கு சேதந ப்ரவ்ர்த்தியாலே ஸ்வரூப ஸித்தியாகவேண்டுகையாலே, இவனுடைய ஸ்வயத்ந நிவ்ர்த்தி தோஷமாயிருக்கும்; இந்த வுபாயத்துக்கு, ஸஹாயாந்தர ஸம் ஸர்க்கம் அஸஹ்யமாகையாலே, இச்சேதநனுடைய ப்ரவ்ர்த்தி யென்பதொன்றுமே தோஷமாயிருக்குமென்கை.

சேதந வ்யாபாரமொன்றும் வேண்டாவென்னு மிடத்துக்கு ப்ரமாணங் காட்டுகிறார் (சிற்றவேண்டாவென்று.) அதாவது- ஸித்தோபாய ஸ்வீகாரஞ்சொல்லுகிற "மற்றொன்றில்லை" என் கிறபாட்டிலே, (சிற்றவேண்டா) என்று, சிற்றுதல் - சிதறுதலாய் பரக்க ஒருவ்யாபாரம் பண்ணவேண்டா என்கையாலே, இவ்வு பாயத்தில் இழியுமவனுக்கு ஒருவ்யாபாரம் பண்ணவேண்டாவெ ன்னுமிடஞ் சொல்லிற்றிறேயென்கை.

இதுதான், இஶ்லோகந் தனக்குள்ளே சொல்லிற்றென்கிறார் (நிவ்ர்த்தி கீழேசொல்லிற்றென்று.) அதாவது - (ஸர்வதர்மாந் பரித்யஜ்ய) என்று – ஸகலப்ரவ்ர்த்தியினுடையவும் நிவ்ர்த்தியே இவனுக்கு வேண்டுவதென்னுமிடம் கீழேசொல்லிற் றென்கை.

ஆனால் உபகாரஸ்ம்ர்திதான் வேணுமோ, அது உபாயத்தில் முதலிடாதோவென்ன அருளிச்செய்கிறார் (உபகாரஸ்ம்ர்தியு மென்றுதொடங்கி.) அதாவது - "என்னைத் தீமனங்கெடுத்தாய்" "மருவித்தொழும் மனமேதந்தாய்" இத்யாதியாலே இவ்வுபாய விஷயத்தில், இவன் பண்ணும் உபகாரஸ்ம்ர்தியும், இவனுடைய சைதந்ய ப்ரயுக்தமாய் வந்ததித்தனை; இது உண்டாகையாலே யன்றோ ஈஶ்வரன் கார்யஞ்செய்தது என்று உபாயத்தில் உட் புகாது என்கை. ஆக, சதுர்த்தபதார்த்தத்தை அருளிச்செய்தா ராயிற்று.

---

அ.—ஸ்வரூபஸித்தியாக வேண்டுகையாலே-சேதநனுடைய வ்யாபாரத்தாலே ஸ்வஸ்வரூபஸித்தியாக வேண்டுகையாலே.

உபாயத்தில் உட்புகாது-உபாயத்தில் அந்தர்ப்பவியாது.

மூ.—(ஶரணம்) உபாயமாக. இந்த ஶரணஶப்தம், ரக்ஷிதாவையும் க்ர்ஹத்தையும் உபாயத்தையும்காட்டக்கடவதேயாகிலும், இவ்விடத்தில் உபாயத்தையேகாட்டுகிறது; கீழோடேசேரவேண்டுகையாலே.

---

வ்யா.—இனி, பஞ்சமபதத்தைஉபாதாநம்பண்ணுகிறார் (ஶரணம் என்று.) அதுக்கு அர்த்தம் அருளிச்செய்கிறார் (உபாயமாக என்று.) அர்த்தாந்தரங்களையுங் காட்ட வற்றாயிருக்க, இவ்விடத்தில் இது உபாயத்தையே காட்டுகிறமையை ஸஹேதுகமாக அருளிச் செய்கிறார் (இந்த ஶரணஶப்தமென்று தொடங்கி.) அதாவது - (ఉపాయేగృహరక్షిత్రోశ్శబ్దశ్శరణమిత్యయం। వర్తతే) (உபாயேக்ர்ஹரக்ஷித்ரோஶ்ஶப்தஶ் ஶரணமித்யயம், வர்த்ததே) என்கிறபடியே, ஶரணஶப்தமான இது, ரக்ஷிதாவையும், க்ர்ஹத்தையும், உபாயத்தையும், காட்டக்கடவதேயாகிலும், (సాంప్రతంచైష ఉపాయార్థైకవాచకః) (ஸாம்ப்ரதஂசைஷ உபாயார்த்தைகவாசகஃ) என்கிறபடியே, இந்தஸ்த்தலத்திலே உபாயத்தையே காட்டுகிறது; ஸர்வதர்மங்களையும் விட்டு, தன்னைப்பற்றச்சொல்லுகிற ப்ரகரணமாகையால் கீழோடே சேரவேண்டுகையாலே என்கை. ஆனால், கீழ்ச்சொன்ன ஸாதநாந்தர பரித்யாகந்தானே ஸ்வீகார்ய வஸ்துவின் உபாயத்வத்தைத் தோற்றுவிக்குமதாயிருக்க, ஶரணஶப்த ப்ரயோகந்தான் வேணுமோ என்னில்; - வேணும். ப்ராபகஸமயத்தில்போலே ப்ராப்யஸமயத்திலும் நதீகிஸ்தரணாநந்தரத்தில் ப்லவபரித்யாகம்போலே, ஸாதநாந்தர பரித்யாகம் ஸமாநமாகையாலே, தத்விசிஷ்டமேயாகிலும், ஸ்வீகாரமாத்ரம் வ்யவச்சேதகமாக மாட்டாமையாலே.

---

அ.—கீழோடே-ஸர்வதர்மாந்என்கிறஉபாயப்ரகரணத்தோடே. ஶரணஶப்தப்ரயோகந்தான்வேணுமோவென்னில்என்கிறசங்காவாக்யத்துக்கு-சரணசப்த்தம் வேண்டாவென்று அபிப்ராயமாக வேணுமென்று ஸமாதாநவாக்யம். அதுக்கு ஹேது, ப்ராபகஸமயத்தில் இத்யாதி வாக்யங்கள். ப்ராபக ஸமயத்தில்போலே-உபாயஸமயத்தில்போலே. ப்ராப்யஸமயத்திலும் - உபேயஸமயத்திலும். நதீகிஸ்தரணாநந்தரத்தில் ப்லவபரித்யாகம்போலே-ஸாதநாந்தர பரித்யாகம் ப்ராபகஸமயத்தில்போலே ப்ராப்ய ஸமயத்திலும் ஸமாநமாகையாலே ப்ராப்ய ப்ராபகோபய ஸாதாரணமான ஸாதநாந்தர பரித்யாகம் ஸ்வீகார்யவஸ்துவினுடைய உபேயத்வத்தைவ்யவச்சேதித்து உபாயத்வத்தைத் தோற்றுவிக்கமாட்டாதென்றபடி. தத்விசிஷ்டமேயாகிலும் – ஸ்வீகாரம் அந்த ஸாதநாந்தர பரித்யாக விசிஷ்டமேயானாலும். ஸ்வீகாரமாத்ரம்-ப்ராப்யப்ராபகோபய ஸாதாரணமான ஸ்வீகாரமாத்ரம. வ்யவச்சேதகமாக மாட்டாமையாலே-ஸ்வீகார்ய வஸ்துவினுடைய உபேயத்வத்துக்கு வயாவர்த்தகமாக மாட்டாமையாலே. உபாயவாசகமான சரணசப்தம் வேணும் என்று பூர்வேணாந்வயஃ.

மூ.—(வ்ரஜ) புத்திபண்ணு. கத்யர்த்தமாவதுபுத்த்யர்த்தமாய் அத்யவஸியென்றபடி.

---

வ்யா.—அங்ஙன் சொல்லலாமோ, இந்தஉபாயாந்தரத்யாகம்ஸ்வீகாரத்துக்குஅங்கமாகவிதிக்கப்படுகிறதாகையாலே,ஸ்வீகார்யத்தினுடைய உபாயத்வத்தைக் காட்டவற்றாகையாலே, ஶரணஶப்தப்ரயோகத்துக்கு ப்ரயோஜநம் இல்லையே என்னில்; அப்படிச் சொல்லவொண்ணாது, ஆர்த்தமாகவருமதில்காட்டில்ஶாப்தமாகச் சொல்லு மது யுக்தமாகையாலே. (𑌆𑌕𑍍𑌷𑍇𑌪𑌤𑌃𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌾𑌦𑌭𑌿𑌧𑌾𑌨𑌿𑌕𑌸𑍍𑌯𑍈𑌵 𑌗𑍍𑌰𑌾𑌹𑍍𑌯𑌤𑍍𑌵𑌾𑌤𑍍) (ஆக்ஷேபதஃப்ராப்தாதா பிதாநிகஸ்யைவ க்ராஹ்ய த்வாத்) என்றிறே பாஷ்யகாரரும் அருளிச்செய்தது.

ஆக, உபாயவாசியான இந்த ஶரணஶப்தத்தாலே, இவ்வஸ்துவுக்கு ப்ராப்யதயா ஸ்வீகார்யத்வமும், ப்ராபகதயாஸ்வீகார்யத்வமும் உண்டாகையாலே, அதில் ப்ராப்யதயா ஸ்வீகாரத்தை வ்யவச்சேதித்ததாயிற்று.

இனி, ஷஷ்ட்டபதத்தை உபாதாநம் பண்ணுகிறார் (வ்ரஜ என்று.) அதுக்கர்த்த மருளிச்செய்கிறார் (புத்திபண்ணு என்று.) அதுதன்னை விஶதீகரிக்கிறார் (கத்யர்த்தமாவது என்றுதொடங்கி.) அதாவது- (𑌵𑍍𑌰𑌜𑌗𑌤𑍌) (வ்ரஜகதௌ) என்கிறதாதுவிலே கத்யர்த்தமாய்,(𑌗𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌾𑌬𑍁𑌦𑍍𑌧𑍍𑌯𑌰𑍍𑌥𑌾𑌃)(கத்யர்த்தாபுத்த்யர்த்தாஃ)என்கிற ந்யாயத்தாலே,கத்யர்த்தமாவது புத்த்யர்த்தமாய், அத்யவஸிஎன்றபடி என்கை. "இந்த புத்தியாகிறது, த்யாஜ்யகோடியில் உத்தீர்ணமாய், உபாயகோடியில் அநநுப்ரவிஷ்டமாய், ப்ராபகாந்தர பரித்யாக பூர்வகமாய், பகவத்ரக்ஷகத்வாநுமதிரூபமாய், சைதந்யகார்யமாய், ப்ரார்த்தநாகர்ப்பமாய், பகவந் முகவிகாஸஹேதுவாய், ஸ்வரூபாநுரூபமாய், வ்யபிசாரவிளம்ப விதுரமா யிருப்பதொரு அத்யவஸாயாத்மகஜ்ஞாநவிசேஷம்" என்று, பரந்தபடியில் இவரருளிச்செய்தவிது இவ்விடத்திலே அநுஸந்தேயம்.

---

அ.—அங்ஙன்சொல்லலாமோ-அந்தப்படிசொல்லலாமோ.இந்தவுபாயாந்தரத்யாகம்-வக்ஷ்யமாண உபாயாந்தரத்யாகம். ஸ்வீகாரத்துக்கு-ஸித்தோபாய ஸ்வீகாரத்துக்கு. ஸ்வீகார்யத்தினுடைய-ஸ்வீகார்ய வஸ்துவினுடைய. ஆர்த்தமாக வருமதில் காட்டில்-விளம்பேந ப்ரதிபத்திஜநகமான அர்த்தத்தாலே தோன்றுமதிற்காட்டில். சாப்தமாகச்சொல்லுமது-சப்தத்தாலே சொல்லுமது.

த்யாஜ்யகோடியி லுத்தீர்ணமாய்-த்யாஜ்யங்களாகச்சொன்ன கர்மஜ்ஞாநாத் யுபாயகோடியில் சேராததாய். உபாயகோடியில் அநநுப்ரவிஷ்டமாய் - உபாயவர்க்கத்திலும் ப்ரவேசியாததாய்; உபாயகணனையில் ப்ரவேசியாததாய் என்னவுமாம். ப்ராபகாந்தர பரித்யாக பூர்வகமாய் - ஸாதநாந்தர பரித்யாக பூர்வகமாய். ப்ரார்த்தநாகர்ப்பமாய் - ததேகோபாயதா யாச்நாகர்ப்பமாய். ஸ்வரூபாநுரூபமாய்-பகவதத்யந்த பாரதந்த்ர்ய ஸ்வரூபாநுகுணமாய். வ்யபிசாரமாவது - ஸமாதிபங்க ரூபாந்தராயங்கள். விளம்பமாவது - பலவிளம்பம். விதுரமாய் – கீழ்ச்சொன்ன வைகளாலே விடப்பட்டதாய்.

மூ.—வாசிக காயிகங்களும் இதுக்கு அபேக்ஷிதங்களா யிருக்கச்செய்தேயும், ஜ்ஞாநாந்மோக்ஷமாகையாலே மாநஸமான அநுஷ்டாநத்தைச் சொல்லுகிறது. ஆக, த்யாஜ்யத்தைச் சொல்லி, த்யாகப்ரகாரத்தைச்சொல்லி, பற்றப்படும் உபாயத்தைச்சொல்லி, உபாய நைரபேக்ஷ்யஞ்சொல்லி, உபாயத்வஞ்சொல்லி, உபாயஸ்வீகாரம் சொல்லுகிறது. (அஹம்.) ஸ்வக்ர்த்யத்தை அருளிச்செய்கிறான். ஸர்வஜ்ஞனாய், ஸர்வஶக்தியாய், ப்ராப்தனானநான்.

---

வ்யா.—ஸாமாந்யேநசதிவாசியானவிது, மாநஸவாசிககாயிகரூபமான கதித்ரயத்தையும் காட்டவற்றாயிருக்க, மாநஸமான அத்யவஸாயமாத்ரத்திலே ஓதுக்குகிற தென்னென்ன அருளிச்செய்கிறார் (வாசிக காயிகங்களும் என்று தொடங்கி.) அதாவது- "சிந்தையாலுஞ் சொல்லாலுஞ் செய்கையினாலும்" என்கிறபடியே கரணத்ரயத்தாலும் உண்டானஸ்வீகாரம் அதிகாரபூர்த்திக்கு உடலாகையாலே வரணோக்திரூபமான வாசிகமும், அஞ்சல்யாதி ரூபமான காயிகமும் இந்தஸ்வீகாரத்துக்கு அபேக்ஷிதங்களா யிருக்கச்செய்தேயும், * ஜ்ஞாநாந் மோக்ஷமாகையாலே அவையிரண்டையுமொழிய, மாநஸமான அநுஷ்டாந மாத்ரத்தைச் சொல்லுகிறதென்கை. ஆக, ப்ரதிபதம் அர்த்தம் அருளிச்செய்தாராயிற்று.

இனி, பூர்வார்த்தத்தால் சொல்லுகிற அர்த்தத்தை அநுவதித்து நிகமிக்கிறார் (ஆக, த்யாஜ்யத்தைச்சொல்லி என்றுதொடங்கி.) அதாவது- ஆக, பூர்வார்த்தத்தால், (ஸர்வதர்மாந்) என்று- த்யாஜ்யத்தைச்சொல்லி, (பரித்யஜ்ய) என்று- த்யாகப்ரகாரத்தைச் சொல்லி, (மாம்) என்று- பற்றப்படும்உபாயத்தைச்சொல்லி, (ஏகம்) என்று- உபாய நைரபேக்ஷ்யஞ்சொல்லி, (ஶரணம்) என்று- உபாயத்வஞ்சொல்லி, (வ்ரஜ) என்று - உபாயஸ்வீகாரம் சொல்லுகிறது என்கை.

அநந்தரம், உத்தரார்த்தத்துக்கு அர்த்தமருளிச் செய்வதாகக்கோலி, அதில் ப்ரதமபதத்தை உபாதாநம் பண்ணுகிறார் (அஹம் என்று.) இவ்வுத்தரார்த்தத்தில் ஈஶ்வரன் செய்தருளுகிற அம்ஶத்தை யருளிச்செய்கிறார் (ஸ்வக்ர்த்யத்தை யருளிச்செய்கிறான் என்று.) அதாவது- அதிகாரிக்ர்த்யமிறே, பூர்வார்த்தத்தில்சொல்லிற்று; உபாயபூதனான தன்னுடைய க்ர்த்யத்தை அருளிச்செய்கிறது இதிலேயிறே.

இனி, இப்பதத்துக்கு அர்த்தம் அருளிச்செய்கிறார் (ஸர்வஜ்ஞனென்று தொடங்கி.) அதாவது - (యస్సర్వజ్ఞస్సర్వవిత్) (யஸ்ஸர்வஜ்ஞஸ்ஸர்வவித்) என்கிறபடியே, ஸர்வத்தையும் அறியுமவனாய், (పరాస్య శక్తిర్వివిధైవ శ్రూయతే) (பராஸ்ய ஶக்திர்விவிதைவச்ரூயதே) என்கிறபடியே, எல்லாஸாமர்த்யத்தையு முடையனாய், ஶேஷியாகையாலே ப்ராப்தனாயிருக்கிற நான் என்கை.

மூ.—கீழ்நின்றநிலையும், மேல் போக்கடி அறிகைக்கும், அறிந்தபடியேசெய்து தலைக்கட்டுகைக்கும் ஏகாந்தமானகுணவிஶேஷங்களையும் தன்பேறுகச்செய்து தலைக்கட்டுகைக் கீடான பந்த விஶேஷத்தையும் காட்டுகிறது. தனக்காகக்கொண்ட ஸாரத்ய வேஷத்தை அவனையிட்டுப்பாராதே தன்னையிட்டுப்பார்த்து, அஞ்சினவச்சந்திர தானானதன்மையை (அஹம்) என்றுகாட்டுகிறான்.

---

வ்யா.—அல்லாதகுணங்களெல்லாங்கிடக்க, இந்தகுணவிஶேஷங்களை இவ்வஹம்ஶப்தங்காட்டுகிற இதுக்கு ப்ரயோஜநம் அருளிச்செய்கிறார் (இவன் கீழ்நின்றநிலையும் என்றுதொடங்கி.) அதாவது - இச்சேதநனுக்கு அநிஷ்டநிவர்த்தி இஷ்ட ப்ராப்திகளைப் பண்ணுமளவில் இவன் பூர்வத்தில் நின்றநிலையும், மேல்போகத் தக்கவழியும் அறிகைக்கும், அறிந்தபடியே அவற்றைச்செய்து தலைக்கட்டுகைக்கும் தக்கவையாயிருந்துள்ள ஸர்வஜ்ஞத்வ ஸர்வ ஶக்தித்வங்களாகிற குணவிஶேஷங்களையும் இவன் கார்யஞ் செய்யுமிடத்தில் இவனுக்காக வன்றிக்கே, தன்பேறுகச் செய்து தலைக்கட்டுகைக்கீடான ஶேஷித்வரூப பந்தவிஶேஷத்தையும் ப்ரகாஶிப்பிக்கிறது என்கை.

(மாம்) என்கிற இடத்தில், ஆஶ்ரயணத்துக்கு ஏகாந்தமான குணவிஶேஷங்கள் ப்ரகாஶித்தாப்போலே, "அஹம்" என்கிறவிடத்திலும் கார்யகரத்வத்துக்கு ஏகாந்தமான குணவிஶேஷங்கள் ப்ரகாஶிக்குமிறே. வாத்ஸல்யாதிகள் இல்லாதபோது ஆஶ்ரயணங் கூடாதாப்போலே, ஜ்ஞாநஶக்த்யாதிகள் இல்லாதபோது கார்யகரத்வம் கடியாமையாலே, இவ்விடத்தில் ஜ்ஞாநஶக்திகளும் ப்ராப்தியுஞ்சொன்ன இது பூர்த்திக்கும் உபலக்ஷணம்.

இப்பதத்தில் மாம் என்கிற இடத்தில், ஸாரதியாய் நிற்கிற பாரதந்த்ர்யத்துக்குளதிர்த்தட்டான தன்ஸ்வாதந்த்ர்யத்தை ப்ரகாசிப்பித்தமையை அருளிச்செய்கிறார் (தனக்காகக்கொண்டஎன்று தொடங்கி.) அதாவது - மாம் என்று, ஸாரத்யவேஷத்தோடே நிற்கிற தன்னைப்பற்றச் சொன்னபோது, அர்ஜுநன் தன்னுடைய ரக்ஷணார்த்தமாக ஏறிட்டுக்கொண்ட ஸாரத்யவேஷத்தை ஸர்வாதிகனானவன்இப்படித்தாழநின்றது, தன்குணத்தாலேயிறே,

---

அ.—பூர்வத்தில் நின்றநிலையும்-இவன் முன்னே நின்றஇருப்பும். அதாவது-ஸம்ஸாரியாயிருக்கை. மேல்போகத்தக்கவழி - மேல் போகிறத்துக்குத் தகுதியான மார்க்கம். அதாவது - பரமபதம்; அர்ச்சிராதிமார்க்க மென்னவுமாம்.

கார்யகரத்வத்துக்கு - சேதநனுடைய கார்யத்தைப்பண்ணிக் கொடுக்கைக்கு. பூர்த்தியாவது-அவாப்த ஸமஸ்த காமத்வம்.

மூ.—கீழில் பாரதந்த்ர்யமும் இந்த ஸ்வாதந்த்ர்யத்தினுடைய எல்லைநிலமிறே. (த்வா.) அஜ்ஞனாய், அஶக்தனாய், அப்ராப்தனாய், என்னையே உபாயமாகப் பற்றியிருக்கிற உன்னை. (ஸர்வபாபேப்ய꞉.) மத்ப்ராப்தி ப்ரதிபந்த்தகங்கள் என்று யாவையாவை சிலபாபங்களைக்குறித்து அஞ்சுகிறாய் அவ்வோபாபங்கள் எல்லாவற்றில் நின்றும்.

---

வ்யா.—என்று அவனையிட்டுப்பாராதே நமக்கு இழிதொழில்செய்து ஸாரதியாய்நிற்கிறவனன்றோ என்று தன்னையிட்டுப்பார்த்து, ஸர்வதர்மங்களையும் விட்டு என்னைப்பற்று என்னாநின்றான்; இதென்னாகக்கடவது என்று அஞ்சின அச்சந்தீர, ஸ்வாதீந த்ரிவிதசேதநாசேதந ஸ்வரூபஸ்த்திதி ப்ரவ்ர்த்திகனாய்க்கொண்டு நிரங்குஶ ஸ்வதந்த்ரனாயிருக்கிற தன்னுடைய யதாவஸ்த்தித வேஷத்தை (அஹம்) என்று தர்ஶிப்பிக்கிறான் என்கை.

ஏவம்பூதனானவன் பரதந்த்ரனானதும், தனக்குஸ்வரூபமாய்ச் செய்ததன்றென்னு மிடத்தை அருளிச் செய்கிறார் (கீழிலென்று தொடங்கி.) அதாவது - கீழ் ஸாரதியாய்நின்ற பாரதந்த்ர்யமும், நினைத்தது செய்யுமளவில் தனக்கொரு நிவாரகரில்லாதபடியான இந்த ஸ்வாதந்த்ர்யத்தினுடைய ஸீமாபூமியிறேயென்கை.

அநந்தரம், த்விதீய பதத்தை உபாதாநம் பண்ணுகிறார் (த்வாஎன்று.) அதுக்கு அர்த்தமருளிச்செய்கிறார் (அஜ்ஞனாய் என்று தொடங்கி.) அதாவது-உன்கார்யங்கள் அறிகைக்குத் தக்க ஜ்ஞாநமில்லாதவனாய், அறிந்தாலும்செய்து தலைக்கட்டிக்கொள்ளுகைக்கு ஶக்தியில்லாதவனாய், அதுதான் உண்டானாலும் உன்னுடைய ரக்ஷணத்தில் உனக்குப்ராப்தி யில்லாதவனாய், இப்படியிருக்கையாலே ஸர்வதர்மங்களையும் விட்டு என்னையே நிரபேக்ஷோபாயமாக பரிக்ரஹித்திருக்கிற உன்னையென்கை.

அநந்தரம், த்ர்தீயபதத்தை உபாதாநம்பண்ணுகிறார் (ஸர்வபாபேப்ய꞉ என்று.) இதுவும் பாபமும், பஹுவசநமும் ஸர்வஶப்தமுமாய், த்ரிப்ரகாரமாயிருக்கையாலே, இம்மூன்றையும் உட்கொண்டு இப்பதத்துக்கு அர்த்த மருளிச்செய்கிறார் (மத்ப்ராப்தி ப்ரதிபந்த்தகங்களென்றுதொடங்கி.) அதாவது - பாபமாகிறது இஷ்டவிரோதியாயும் அநிஷ்டஹேதுவாயும் இருக்குமதாகையாலும்; மோக்ஷப்ரகரணமாகையாலே, இவ்விடத்தில் இஷ்டவிரோதிகளாகிறன பகவல்லாப விரோதிகளாகையாலும்; அதில் ஜ்ஞாநவிரோதியும், ருசிவிரோதியும், உபாயவிரோதியும் பண்டே நிவ்ர்த்தமாகையாலும்;

---

அ.—இழிதொழில்-அடிமைத்தொழில். தன்னையிட்டுப்பார்த்து-ஸ்வதந்த்ரனாகத் தன்னையிட்டுப்பார்த்து. அச்சம் - பயம். யதாவஸ்திதவேஷத்தை - பரத்வத்தை. தனக்கொரு நிவாரகரில்லாதபடியான- "நதஸ்யேஶேகஶ்சந" என்கிறபடியே நிவாரகரில்லாதபடியான. பண்டே - பூர்வமே.

மூ.—"பொய்ந் நின்றஞானமும் பொல்லாவொழுக்கும் அழுக்குடம்பும்" என்கிறபடியே, அவித்யாகர்ம வாஸநாருசி ப்ரக்ர்தி ஸம்பந்தங்களைச் சொல்லுகிறது. த்ர்ணச்சேத சண்டூயநாதிகளைப் போலே ப்ரக்ர்திவாஸனையாலே அநுவர்த்திக்கு மவையென்ன, லோகாபவாதபீதியாலும், கருணையாலும், கலக்கத்தாலும் செய்யு மவையென்ன, எல்லாவற்றையும் நினைக்கிறது.

---

வ்யா.—இனி உள்ளது ப்ராப்தி விரோதியாகையாலே, நீ என்னை ப்ராபிக்கைக்கு ப்ரதிபந்த்தகங்கள் என்று யாவையாவை சிலபாபங்களை உத்தேஸித்து பயப்படுகிறாய், அந்தந்தபாபங்களெல்லாவற்றில்நின்றுமென்கை.

அதில், பஹுவசந விவக்ஷிதங்களை அருளிச் செய்கிறார் (பொய்ந்நின்ற ஞானமுமென்று தொடங்கி.) அதாவது .."பொய்ந்நின்ற ஞானமும் பொல்லாவொழுக்குமழுக்குடம்பும்" என்று, உத்பத்திவிநாஸாதி யோகத்தாலே, அஸத்ய ஸப்தவாச்யமான அசேதந விஷயத்தில் ஆத்மஜ்ஞாநமும், அந்ததேஹாத்மாபிமாநமடியான ஸாம்ஸாரிகதுஷ்கர்ம ப்ரவ்ர்த்தியும், அந்த கர்மமடியாக வரக்கடவதான மாம்ஸாஸ்ர்காதி மலரூபதேஹ ஸம்பந்தமும்" என்றுஞ் சொல்லுகிறபடியே, அவித்யையும் கர்மமும் வாஸநையும், ருசியும், ப்ரக்ர்தி ஸம்பந்தமுமாகிற இவற்றைச் சொல்லுகிறது என்கை. இவற்றில், அவித்யையாவது - ஜ்ஞாநாநுதயரூபமாயும், அந்யதாஜ்ஞாநரூபமாயும், விபரீதஜ்ஞாந ரூபமாயும் மூன்றுவகைப்பட்ட அஜ்ஞாநம்.

கர்மமாவது - புண்யபாபம்; மோக்ஷத்தைப்பற்ற பாபத்தோபாதிபுண்யமும் த்யாஜ்யம். (पुण्यपापे विधूय) (புண்யபாபே விதூய) என்னக்கடவதிறே. வாஸனையாவது - அஜ்ஞாநவாஸனையும், கர்மவாஸனையும், ப்ரக்ர்தி ஸம்பந்த்தவாஸனையும். ருசியும் விஷயபேதத்தாலே பஹுவிதையாயிருக்கும், ப்ரக்ர்தி ஸம்பந்தமாவது -ஸ்த்தூல ஸூக்ஷ்மரூபமாயிருந்துள்ள அசித்ஸம்பந்தம். இனி, ஸர்வஸப்தவிவக்ஷிதத்தை அருளிச்செய்கிறார் (த்ர்ணச்சேத இத்யாதியாலே.) அதாவது - துரும்பு நறுக்குகை, தினவு தின்றவிடம் சொரிகை தொடக்கமானவைபோலே, அபுத்தி பூர்வகமாக ப்ரக்ர்தி வாஸனையாலே அநுவர்த்திக்கும் உத்தராகங்களென்ன; செய்யாதபோது "லோகம் நம்மை அபவாதஞ் சொல்லுமே" என்கிற பயத்தாலும் நம்மைக்கண்டு லௌகிகர் இவற்றைத் தவிருவர்களாகில்அவர்களுக்குவிநாஸமாமே! ஐயோ! என்கிற க்ர்பையாலுஞ் செய்யும் நித்யநைமித்திககர்மங்களென்ன;

---

அ.—மாம்ஸாஸ்ர்காதி மலமூத்ரதேஹம் - மாம்ஸாஸ்ர்காதி மலரூபதேஹம்.

மூ.—உந்மத்தப்ரவ்ர்த்திக்கு க்ராமப்ராப்திபோலே த்யஜித்த உபாயங்களிலே இவை அந்விதங்களாமோவென்று நினைக்கவேண்டா. கலங்கி உபாயபுத்த்யாபண்ணும் ப்ரபத்தியும் பாதகத்தோடொக்கும்.

---

வ்யா.—ரஜஸ்தமஸ்ஸுக்களாலே கலங்கி த்யக்தோபாயங்களிலே அந்வயித்தல், புநःப்ரபத்தி பண்ணுதல் செய்யுமவையென்ன எல்லாவற்றையும் நினைக்கிறது என்கை.

ஸாதநபுத்த்யா செய்யாதவையும் வஸ்துகத்யா ஸாதநகோடியிலே அந்வயிக்குமென்னுமத்தை ஶங்காபூர்வகமாக அருளிச்செய்கிறார் (உந்மத்தஇத்யாதியாலே.) அதாவது-(ఉన్మాదశ్చిత్తవిభ్రమః) (உந்மாதஶ்சித்தவிப்ரமः) என்கிறபடியே, சித்தவிப்ரமம் பிறந்தானொருவன், "இன்ன வூருக்குப்போகிறோம்" என்கிற நினைவின்றிக்கே யொருவழியேபோகாநின்றால், அவ்வழிக்கு ஒருரோடே ஸம்பந்தமுண்டாயிருக்கையாலே, அவ்வூரிலே சென்றுசேருமாப்போலே, ஸாதநபுத்திரஹிதமாக லோகாபவாத பீத்யாதிகளாலே செய்யப்படுகிற இவை, விட்ட உபாயங்களிலே அந்விதங்களாமோ வென்று நினைக்கவேண்டா அந்விதங்களாயே விடுமென்றபடி. "ஆந்ர்ஶம்ஸ்ய ப்ரதாநராய் அநுஷ்டித்தாலும், எறிட்டகட்டி ஆகாஶத்திலே நில்லாதாப்போலே, இவையுமொரு பலத்தோடே ஸந்திப்பிக்கக்கடவது; ஆகையாலே அவையும்பாபஶப்தவாச்யமாகக்கடவது" என்றிறே தனிஸ்லோகத்தில் இவர்தாமே அருளிச்செய்தது. அதுதானே யாகிறது, புநःப்ரபத்திக்குதோஷமேதென்ன அருளிச்செய்கிறார் (கலங்கி என்று தொடங்கி.) அதாவது-ஸக்ர்தநுஷ்டாநமொழிய புநரநுஷ்டானத்தை ஸஹியாப்ரபத்தி ஸ்வபாவத்தை யறியாதே கலங்கி அநிஷ்டநிவ்ர்த்திக்காகவாதல், இஷ்டப்ராப்திக்காக வாதல், உபாயபுத்த்யா மீண்டு பண்ணும் ப்ரபத்தியும் (అథపాతకభీతస్త్వం) (அதபாதகபீதஸ்த்வம்) என்று, உபாயாந்தரம்போலே பாதகஸமமென்கை.

---

அ.—உத்தராகங்கள்-ஸித்தோபாயஸ்வீகாராநந்தரமுண்டான பாபங்கள். ஸாதநபுத்த்யாசெய்யாதவையும் - விசேஷித்துகைங்கர்யபுத்த்யா செய்யுமவையன்றிக்கேஸாதநபுத்த்யா செய்யாதவையும்.வஸ்துகத்யா - வஸ்துஸ்வபாவத்தாலே. ஸாதநகோடியிலே- ஸாதந வர்க்கத்திலே.

ஸ்வயம்கர்த்தா, ப்ரயோஜககர்த்தா, ப்ரயோஜ்யகர்த்தா என்று கர்த்ர்த்வம்த்ரிவிதம். அதில் ஸ்வயம் கர்த்தாவாவது - தானே செய்கை. ப்ரயோஜககர்த்தாவாவது - பிறனைக்கொண்டுசெய்விக்கை.ப்ரயோஜ்யகர்த்தாவாவது - பிறர் ஏவச்செய்கை.

மூ.—(மோக்ஷயிஷ்யாமி) முக்தனும்படி பண்ணக்கடவேன். ணிச்சாலே நானும்வேண்டா, நீயும்வேண்டா, அவைதன்னடையே விட்டுப் போங்காணென்கிருன். என்னுடைய நிக்ரஹபலமாய் வந்தவை நானிரங்கினுல் கிடக்குமோஎன்கை. அநாதிகாலம் பாபங்களைக் கண்டு நீபட்டபாட்டை அவைதான் படும்படி பண்ணுகிறேன்.

---

அநந்தரம், சதுர்த்தபதத்தை உபாதாநம் பண்ணுகிருர் (மோக்ஷயிஷ்யாமி யென்று.) அதுக்கு அர்த்தமருளிச் செய்கிருர் (முக்தனும்படி பண்ணக்கடவேனென்று.) அதாவது - இவற்றில் நின்றும் விடப்பட்டவனும்படி பண்ணக்கடவேன் என்கை. இனி ணிஜர்த்தத்தை யருளிச்செய்கிருர் (ணிச்சாலே யென்று தொடங்கி) அதாவது-"இஷ்யாமி" என்கிற ணிச்சாலே ஸ்வயம் கர்த்தாவாகையன்றிக்கே, தான் ப்ரயோஜககர்த்தாவாய், விடுவிக்கக் கடவனென்கையாலே, நானும் இதுக்கொரு யத்நம்பண்ண வேண்டா, நீயும் இதுக்குப்ரார்த்திக்க வேண்டா, நீ என்னை ஆஸ்ரயித்த ராஜகுலமாஹாத்ம்யத்தாலே உன்னைக்கண்டு தானே பயப்பட்டு, "காணே வொருங்கிற்றுக் கண்டிலமால்" என்கிறபடியே, போனவழி தெரியாதபடி தன்னடையேவிட்டுப்போங்காணென்று அருளிச்செய்கிருன் என்கை.

இப்படி அருளிச்செய்ததின் கருத்தைவெளியிடுகிருர் (என்னுடைய வென்று தொடங்கி.) அதாவது-பாபங்களாகிறன - குப்பையில் ஆமணக்குப்போலே யெழுந்து, பாம்புபோலே மிடற்றைப் பிடிப்பதொன்றன்றே; சேதநன் பண்ணின கர்மங்கள் க்ஷணத்வம்ஸிகளாகையாலே, அப்போதே நஸித்துப்போம், அஜ்ஞனுகையாலே கர்த்தாவான விவனும் மறந்துபோக ஸ்வதஸ்ஸர்வஜ்ஞனாய் ஒன்றொழியாமல் உணர்ந்திருந்து ப்ராப்த காலங்களிலே தப்பாமல் நிறுத்தநுபவிப்பிக்கிற என்னுடைய நிக்ரஹ ரூபமாகையாலே அந்தநிக்ரஹபலமாய் வந்தவை நிக்ரஹத்துக்கு ப்ரதிகோடியான அநுக்ரஹத்தை நான்பண்ணினுல் அவ்விஷயத்தில் பின்னை கிடக்குமோ வென்கை இதுக்குக் கருத்து என்றபடி,

தன்னடையே விட்டுப்போம் என்கிற இடத்தில் அபிப்ரேதத்தை அருளிச்செய்கிருர் (அநாதிகாலமென்று தொடங்கி.) அதாவது-அநாதியானகாலமெல்லாம் துஃகாவஹமான பாபங்கள் வந்து மேலிடப்புக்கால், அவற்றைக் கண்டு நீ நடுங்கின நடுக்கமெல்லாம் மதாஸ்ரயண ராஜகுல மாஹாத்ம்ய முடைய உன்னைக் கண்டு அவைதான் குடல்கரிந்து நடுங்கும்படி பண்ணக்கடவேன். அவைதானேவிட்டுப்போம்படி பண்ணுகையாவது, இவை நமக்கு முன்பு உண்டாய்க் கழிந்தது என்று தோற்றுதபடி போக்குகை; அதாகிறது - இது ஸ்ம்ர்தி விஷயமானுலும், தன்னுடைய ஸ்வாபாவிக வேஷத்தைப்பார்த்து ஸ்வப்நங்கண்டாப் போலே இவை வந்தேறியாய்க்கழிந்தது என்றிருக்கையும், ஸ்ம்ர்தியாலே துஃகம் அநுவர்த்தியாதிருக்கையும்" என்று தனிஸ்லோகத்தில் இவர்தாமே அருளிச்செய்தது இவ்விடத்தில் அநுஸந்தேயம்.

மூ.—இனி உன்கையிலும் உன்னைக்காட்டித்தாரேன். என்னுடம்பிலழுக்கை நானேபோக்கிக்கொள்ளேனோ. (மாஶுச:.) நீஉன்கார்யத்திலே அதிகரியாமையாலும், நான் உன்கார்யத்திலே அதிகரித்துக்கொண்டு போருகையாலும் உனக்கு ஶோகநிமித்தமில்லைகாண் என்று அவனுடைய ஶோகநிவர்த்தியைப் பண்ணிக் கொடுக்கிறான்.

---

வ்யா.—"மோக்ஷயிஷ்யாமி" என்கிறஉத்தமனில்அபிப்ரேதமான ஓர்த்தவிஶேஷத்தை அருளிச்செய்கிறார் (இனியென்று தொடங்கி.) அதாவது-இத்தனைகாலமும் நங்கார்யத்துக்கு நாங்கடவோம் என்று, நீ திரிகையாலே, தன்கார்யம் தானே செய்து கொள்ளுகிறான் என்றிருந்த வித்தனைபோக்கி, எனக்குநீ ஶரீரதயாஶேஷம் என்றறிந்து என்பக்கலிலே ந்யஸ்தபரனானபின்பு உன்னுடைய பாபவிமோசநார்த்தமான யத்நம் நீபண்ணிக்கொள்ளென்று உன் கையிலும் உன்னைக்காட்டித்தாரேன்; எனக்கு ஶரீரபூதனான உன்னுடைய அவித்யாரூபமாலிந்யத்தை ஶரீரியான நானே போக்கிக்கொள்ளேனோவென்கை.

(என்னுடம்பிலழுக்கை நானே போக்கிக் கொள்ளேனோ) என்றது - யத்நபலித்வங்கள் இரண்டும் தன்னதென்று தோற்றுகைக்காக. ஆகையால், என்னுடைய விரோதியில் கிடப்ப தொன்றில்லை என்றபடி.

விரோதி நிவர்த்தியும், அபிமதப்ராப்தியும், இரண்டும் பலமாயிருக்க ஒன்றைச் சொல்லுவானென்னென்னில்; ஒன்றைச் சொன்னால் மற்றையது தன்னடையே வருகையாலே சொல்லிற்றில்லை; (மாமேவைஷ்யஸி) (மாமேவைஷ்யஸி) என்று கீழில்உபாயத்துக்குச் சொன்ன பலமொழிய இவ்வுபாயத்துக்கு வேறுபலமில்லாமையாலே சொல்லிற்றில்லை என்னவுமாம்; ஆனால், விரோதிநிவர்த்திதன்னைச் சொல்லுவானென்னென்னில், அது அதிகமாகையாலே சொல்லிற்று. விரோதி நிவர்த்தி பிறந்தால் பலம் ஸ்வதஸ்ஸித்தமாயிருக்கையாலே தனித்துச்சொல்ல வேண்டாவிறே," என்று, ஸங்க்ரஹேண ஸ்ரீயஃபதிரஹஸ்யத்திலும், விஸ்தரேண பரந்தபடி, தனிஶ்லோகங்களிலும் அருளிச்செய்த ஶங்காபரிஹாரங்கள் இவ்விடத்திலேஅநுஸந்தேயம்.

அநந்தரம் சரமபதத்தை உபாதாநம் பண்ணுகிறார்(மாஶுச: என்று.) அதுக்கு அர்த்தம் அருளிச்செய்கிறார் (நீ உன்கார்யத்திலே யென்றுதொடங்கி.) அதாவது - நீஉன்கார்யத்திலே அதிகரித்து நின்றாயாகில் நங்கார்யத்துக்கு என்செய்வோம் என்று கரைந்து ஶோகிக்க ப்ராப்தம்; நான் உன்கார்யத்திலே யதிகரியாதிருந்தேனாகில் நங்கார்யத்தில் இவன் உதாஸீநனாயிரா நின்றான், நாம் எங்ஙனே உஜ்ஜீவிக்கப் புகுகிறோம் என்று, ஶோகிக்க ப்ராப்தம்;

---

அ.—அதிகரித்து - அந்வயித்து. கரைந்து - க்ரஶித்து; சிந்தித்து என்னவுமாம்.

மூ.—நிவர்த்தகஸ்வரூபத்தைச்சொல்லி, நிவர்த்யங்கள் உன்னை வந்துமேலிடாதென்று சொல்லி, ஶோகநிமித்தம் இல்லைகாண் என்கிறான். "எத்தினு லிடர்க்கடற் கிடத்தி யேழை நெஞ்சமே" என்கிறான்.

---

வ்யா.—இங்ஙனன்றிக்கே, யத்நபலித்வங்களிரண்டும் உனக்கில்லாதபடியான ஸ்வரூபபாரதந்த்ர்யத்தை உணர்ந்து, நீ உன்னுடைய ரக்ஷண கார்யத்திலே அதிகரியா தொழிகையாலும், உன்னுடைய ரக்ஷணத்தில் யத்நபலித்வங்க ளிரண்டும் என்னதாம்படி ஸ்வாமியான நான் உன்பக்கல் தடையறுகையாலே உன்னுடைய ரக்ஷண கார்யத்திலே அதிகரித்துக்கொண்டு போருகையாலும், உனக்குஶோகிக்கைக்கு நிமித்தமில்லைகாண் என்று, முன்பு ஶோகாவிஷ்டனாய் நின்ற அவனுடைய ஶோகத்தினுடைய நிவ்ர்த்தியைப் பண்ணிக் கொடுக்கிறானென்கை.

இத்தால் (அஹம், த்வா) என்கிற பதங்களாலே சொல்லப்பட்ட ரக்ஷகரக்ஷ்யபூதரான இருவருடைய ஸ்வபாவத்தையும் அநுவதித்துக்கொண்டு, ஶோகாபநோதநம் பண்ணினபடியை அருளிச்செய்தாராயிற்று.

இனிமேல், நிவர்த்தகனான தன்னுடையவும், நிவர்த்யங்களான பாபங்களினுடையவும் ஸ்வபாவங்களைச் சொல்லி, ஶோகாபநோதநம் பண்ணினபடியை அருளிச்செய்கிறார் (நிவர்த்தகஸ்வரூபத்தை யென்று தொடங்கி.) அதாவது - "அஹம்" என்று - ஸர்வஜ்ஞத்வாதிகுணவிசிஷ்டனாய்க்கொண்டு விரோதிநிவர்த்தகனாயிருக்கிற தன் ஸ்வரூபத்தைச்சொல்லி, "த்வாஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி" என்று - ணிச்சாலே நிவர்த்யங்களான பாபங்கள் உன்னைக்கண்டு தானே அஞ்சி ஓடிப்போமதொழிய, என்னையே உபாயமாக ஸ்வீகரித் திருக்கிற உன்னைவந்து மேலிடாது என்னுமிடம் சொல்லி, அநந்தரம், (மாஶுசஃ) என்கையாலே - இப்படியானபின்பு உனக்கு ஶோகிக்க நிமித்தமில்லை என்கிறானென்கை.

இத்தலையில் விரோதியைப் போக்குகைக்குத் தான் ஒருப்பட்டு நிற்கிறபடியை அறிவித்து, இவனுடைய ஶோகத்தைப் போக்குகிறமையை அபியுக்தோக்தியை நிதர்ஶநமாக்கிக்கொண்டு அருளிச்செய்கிறார் (எத்தினுலென்று தொடங்கி.)

---

அ.—உன்பக்கல் தடையறுகையாலே - உன்னிடத்தில் யத்நபலித்வங்களிரண்டும் என்னதென்றிருக்கையாகிற மத்ப்ராப்தி ப்ரதிபந்தகத்தை சேதிக்கையாலே. சேதிக்கையாலே - அறுக்கையாலே. தான் ஒருப்பட்டு நிற்கிறபடியை - தான் தீக்ஷித்துக்கொண்டு நிற்கிற ப்ரகாரத்தை.

மூ.—பாபங்களை நான்பொறுத்து புண்யமென்று நினைப்பிடா நிற்க நி ஶோகிக்கக்கடவையோ.

---

வ்யா.—அதாவது-திருமழிசைப்பிரான் தம்முடைய திருவுள்ளத்தைக்குறித்து, ஸர்வேஶ்வரன் இத்தலையில்விரோதியைப்போக்கி அடிமைகொள்வதாக ஏன்றுகொடுவந்து புகுந்திருக்கிறபடியைச்சொல்லி, இனி ஏதுக்காக நீதுக்கஸாகரத்திலே அழுந்துகிறாய் என்றாப்போலே, ஈஶ்வரனும் இப்போது இத்தலையில் ஸகல பாபங்களையும் போக்குவதாகத் தான் ஏன்றுகொண்டமையை யறிவித்து, இனி ஏதுக்காக ஶோகிக்கிறாயென்று இவனைக்குறித்து அருளிச்செய்கிறானென்கை.

இனி, இவனுடையஶோகம் மறுவலிடாமல் போக்குகைக்கு உறுப்பான ஒருபகவதபிப்ராயவிஶேஷத்தை அருளிச்செய்கிறார் (பாபங்களை நான்பொறுத்து என்று தொடங்கி.) அதாவது-நீசெய்தபாபங்களை நான்முந்துறஎன்னுடையக்ஷமா விஷயமாக்கி, அவ்வளவு மன்றிக்கே, பின்னை உன்பக்கலெனக்குண்டானவாத்ஸல்யத்தாலே "செய்தகுற்றம் நற்றமாகவேகொள்" "செய்தாரேல் நன்றுசெய்தார்" என்கிறபடியே, அவைதன்னை பாபமாக நினையாதே புண்யம் என்று நினைப்பிடாநிற்க, இனி, நீஶோகிக்கக்கடவையோவென்கை. ஆக, இவ்வுத்தரார்த்தத்தில் அஞ்சுபதத்தாலும், நிவர்த்தக ஸ்வரூபத்தையும், நிவர்த்யாஶ்ரயத்தையும், நிவர்த்யங்களான பாபங்களையும், அவற்றினுடைய நிவர்த்திப்ரகாரத்தையும், தத்கார்யமான ஶோகநிவர்த்தியையும் சொல்லிற்றாயிற்று.

இனி, இந்தஶ்லோகார்த்தத்தில் ருசி ஒருவனுக் குண்டாகையிலுள்ள அருமையையும்,இந்தஶ்லோகந் தனக்குஇன்னதிலே நோக்கென்னுமத்தையும், இதில் விஶ்வாஸோத்பத்தியின் அருமையையும், ஈஶ்வரன்றான் முதலிலே இத்தை உபதேஶியாமைக்கு ஹேதுவையும், வேதபுருஷன் உபாயாந்தரங்களை விதிக்கைக்கு ஹேதுவையும், உபாயாந்தரங்களை ஸ்வரூபேணத்யஜிக்குமளவில் தோஷமில்லையென்னுமத்தையும், அவைதான் முகாந்தரேண அந்விதங்களாகையாலே ஸ்வரூபேணத்யக்தங்களன்றென்னு மிடத்தையும், பேற்றுக்கு ஸாதநம் இன்னதென்னுமத்தையும், பலஸித்திக்கு இவன்பக்கல் வேண்டும் அம்ஶத்தையும், ஈஶ்வரனுக்கு இவனுடைய ஸுக்ருதம் அநிஷ்டமென்னுமத்தையும், இவ்வர்த்தத்தில் ஆஸ்திக்யாதிகள் உண்டாய்ப் பிழைத்தல், இல்லையாகில் நஶித்தலித்தனை என்னுமத்தையும்,

---

அ.—தான் ஏன்றுகொண்டமையை - தான் ஏன்றிருக்கிறபடியை. செய்தகுற்றம் - செய்ததோஷம். நற்றமாகக்கொண்டு- ஸுக்ருதமாகவே க்ரஹித்து.

மூ.—உய்யக்கொண்டார்விஷயமாகஉடையவர்அருளிச்செய்த வார்த்தையை ஸ்மரிப்பது. இதுக்கு ஈஸ்வர ஸ்வாதந்த்ர்யத்திலே நோக்கு. "இதுதான் அநுவாதகோடியிலே" என்று, வங்கிப்புரத்துநம்பிவார்த்தை. அர்ஜுநன், க்ர்ஷ்ணனுடையஆனைத்தொழில்களாலும், ரிஷிகள்வாக்யங்களாலும், க்ர்ஷ்ணன் தன்கார்யத்திலே அதிகரித்துக்கொண்டுபோருகையாலும், இவனே நமக்குத் தஞ்சமென்று துணிந்தபின்பு தன்னைப்பற்றச் சொல்லுகையாலே.

---

வ்யா.—வ்யவஸாயஹீநன் இதில் அந்வயித்தால் விநாஸபர்யந்தமாம் என்னுமத்தையும், இதுக்கு அதிகாரிகள் இன்னாரென்னு மத்தையும்அடைவே யருளிச்செய்து தலைக்கட்டுகிறார்.

அவற்றில், ப்ரதமத்தில் இதில் ஒருவனுக்கு ருசிபிறக்கையில் உள்ள அருமையை தர்ஸிப்பிக்கைக்காக ஓர் ஐதிஹ்யத்தை யருளிச்செய்கிறார் (உய்யக்கொண்டார் விஷயமாகவென்று தொடங்கி) அதாவது- தத்வநிர்ணயம்பண்ணினஉய்யக்கொண்டார் பக்திநிஷ்டராயிருக்கையாலே, அவரை "ப்ரபத்திநிஷ்டராம்படிபண்ணவேணும்" என்று, அவருக்கு இந்தஸ்லோகார்த்தத்தை அருளிச்செய்த வளவிலே, அர்த்தஸ்த்திதி யழகிதாயிருந்தது, ஆகிலும் அத்தைவிட்டு இத்தைப்பற்றத்தக்க ருசி எனக்கில்லை என்ன; வித்வானுகையாலே அர்த்தத்துக்கிசைந்தாய், பகவத்ப்ரஸாத மில்லாமையாலே ருசிபிறந்ததில்லை என்று, அவர் விஷயமாக உடையவர் அருளிச்செய்தவார்த்தையை நினைப்பதுஎன்கை.

இனி, இந்த ஸ்லோகத்துக்கு இன்னதிலே நோக்கென்னுமத்தை யருளிச்செய்கிறார் (இதுக்கு ஈஸ்வரஸ்வாதந்த்ர்யத்திலே நோக்கு என்று.) அதாவது-ஸாஸ்த்ரங்களெல்லாம் ஒருதலையும், தான் ஒருதலையுமாயிருக்கிற இந்த ஸ்லோகத்துக்கு, ஸாஸ்த்ர விஹிதமான ஸகல தர்மங்களையும் ஸவாஸநமாக விடுவித்து, இச்சேதநனுக்குத் தானே நிரபேக்ஷஸாதநமாய், ப்ராப்திப்ரதிபந்தக ஸகலபாபங்களையும் தள்ளிப்பொகட்டு, ஸ்வப்ராப்தியைப் பண்ணிக்கொடுக்கும் ஸ்வாதீந ஸகல ப்ரவர்த்தகனான ஈஸ்வரனுடைய ஸ்வாதந்த்ர்யத்திலே தாத்பர்யமென்கை.

இனி, இதில் விஸ்வாஸோத்பத்தியின் அருமையை அருளிச்செய்கிறார் (இதுதானென்று தொடங்கி.) அதாவது - இந்த ஸ்லோகந்தான் அநுவாதத்தினுடைய கோடியிலே என்று ஆப்ததமரான வங்கிப்புரத்துநம்பி)அருளிச்செய்யும்வார்த்தைஎன்கை.

அது எத்தாலே யென்ன அருளிச்செய்கிறார் (அர்ஜுநன் என்று தொடங்கி.)

---

அ.—சாஸ்த்ரங்களெல்லா மொருதலையும்-சாஸ்த்ரங்களெல்லா மொருப்ரகாரமும். தான்ஒருதலையுமாயிருக்கிற-தான்ஒருப்ரகாரமுமாயிருக்கிற. அநுவாதமாவது - ஜ்ஞாதார்த்த ஜ்ஞாபநம்.

மூ.—புறம்புபிறந்ததெல்லாம் இவன்நெஞ்சைசோதிக்கைக்காக.

---

வ்யா.—அதாவது - இதுக்கு அதிகாரியான அர்ஜுநன் பால்யமேதொடங்கி க்ர்ஷ்ணனுடைய அகடிதகடநா ஸாமர்த்ய ப்ரகாசகமான அதிமாநுஷ சேஷ்டிதங்களாலும், * (ఏష నారాయణశ్శ్రీమాన్ క్షీరార్ణవనికేతనః। నాగపర్యఙ్కముత్సృజ్యహ్యాగతో మధురాంపురీమ్) (ஏஷநாராயணஶ்ஶ்ரீமாந் க்ஷீரார்ணவநிகேதநः - நாகபர்யங்கமுத்ஸ்ர்ஜ்யஹ்யாகதோ மதுராம்புரீம்) (పుణ్యాద్ద్వారవతీయత్రతత్రాస్తేమధుసూదనః। సాక్షాద్దేవఃపురాణోసౌ సహిధర్మస్సనాతనః) (புண்யாத்வாரவதீயத்ர தத்ராஸ்தேமதுஸூதநः-ஸாக்ஷாத்தேவஃபுராணோஸௌ ஸஹிதர்மஸ்ஸநாதநः) (యత్రనారాయణోదేవః పరమాత్మాసనాతనః। తత్రకృత్స్నంజగత్పార్థ తీర్థాన్యాయతనానిచ) (யத்ரநாராயணோதேவः பரமாத்மாஸநாதநः தத்ரக்ர்த்ஸ்நம்ஜகத்பார்த்த தீர்த்தாந்யாயதநாநிச) (యేచవేదవిదోవిప్రాః యేచాధ్యాత్మవిదోజనాః। తేవదన్తిమహాత్మానం కృష్ణంధర్మంసనాతనమ్॥ పవిత్రాణాం హిగోవిన్దఃపవిత్రమ్పరముచ్యతే। పుణ్యానామపిపుణ్యోసౌ మఙ్గళానాఞ్చమఙ్గళమ్) (ஏச வேதவிதோவிப்ராः யேசாத்யாத்மவிதோஜநாः - தேவதந்திமஹாத்மாநம் க்ர்ஷ்ணம்தர்மம் ஸநாதநம்-பவித்ராணாம்ஹிகோவிந்தः பவித்ரம்பரமுச்யதே-புண்யாநாமபிபுண்யோஸௌ மங்களாநாம்சமங்களம்) (కృష్ణఏవహిలోకానాముత్పత్తిరపిచాప్యయః। కృష్ణస్యహికృతేభూత మిదంవిశ్వం చరాచరమ్) (க்ர்ஷ்ணயேவஹிலோகாநா முத்பத்திரபிசாப்யயः-க்ர்ஷ்ணஸ்யஹிக்ர்தேபூத மிதம்விச்வம்சராசரம்) என்றும் இத்யாதிகளாயிருந்துள்ளபராவரதத்வயாதாத்ம்யவித்துக்களானரிஷிகள் வாக்யங்களாலும், பால்யாத்ப்ரப்ர்தி புரவாஸ தசையோடு, வநவாஸதசையோடு வாசியற க்ர்ஷணன் தன்கார்யத்துக்குக் கடவனாய் நோக்கிக் கொண்டுபோருகையாலும் இவன் சொல்லுகிற உபாயங்களெல்லாம் நமக்குத் தஞ்சமன்று, இவனே நமக்குத் தஞ்சம் என்று விஶ்வஸித்த பின்பு, ஆனால் என்னைப் பற்றென்று சொல்லுகையாலே யென்கை.

இது தன்னை முதலிலேஉபதேசியாமைக்குஹேதுவை அருளிச்செய்கிறார் (புறம்பென்று தொடங்கி.) அதாவது - (యచ్ఛ్రేయస్స్యాన్నిశ్చితంబ్రూహితన్మే శిష్యస్తేహంశాధిమాంత్వాంప్రపన్నమ్)(யச்ச்ரேயஸ்யாந்நிஶ்சிதம்ப்ரூஹிதந்மேசிஷ்யஸ்தேஹம்ஶாதிமாம்த்வாம்ப்ரபந்நம்)என்ற

---

அ.—வித்துக்களான ரிஷிகள்-ரிஷிதர்சநே என்கிற தாதுவாலே-உள்ளபடி அறிந்தவர்களான. கடவனாய் - நிர்வாஹகனாய். உபாயங்களெல்லாம் - சேதநப்ரயத்ந ஸாத்யங்களான உபாயங்களெல்லாம்.

இது தன்னை - இந்த ஸித்தோபாயந்தன்னை.

மூ.—வேதபுருஷன் உபாயாந்தரங்களை விதித்தது, கொண்டிப் பஶுவுக்குத் தடிகட்டி விடுவாரைப்போலே, அஹங்கார மமகாரங்களால் வந்த களிப்பற்று ஸ்வரூபஜ்ஞாநம் பிறக்கைக்காக. ஸந்யாஸி முன்புள்ளவற்றைவிடுமாப்போலே இவ்வளவு பிறந்தவன் இவற்றைவிட்டால் குற்றம் வாராது.

---

வ்யா.— இவனுக்கு உபாயோபதேஶம் பண்ணத்தொடங்குகிற வளவிலே இத்தைஉபதேஶியாதே உபாயாந்தரங்களைப் பரக்கநின்று உபதேசித்ததெல்லாம் அவ்வளவிலே பர்யவஸித்துவிடுமோ, அவற்றினுடைய தோஷதர்ஶநத்தாலேஇவ்வுபாயோபதேசத்துக்கு அதிகாரியாமோ என்று இவனுடைய ஹ்ர்தயத்தைச் சோதிக்கைக்காக என்கை.

ஆனால், இவனன்றோ இப்படி ஹ்ர்தயஶோதநார்த்தமாக உபாயாந்தரங்களைஉபதேஶித்தவன், வேதபுருஷன் அவற்றை விதிப்பானென்னென்ன அருளிச்செய்கிறார் (வேதபுருஷனென்று தொடங்கி.) அதாவது-ஆப்ததமனான வேதபுருஷன், (విజ్ఞాయప్రజ్ఞాం కుర్వీత) (விஜ்ஞாயப்ரஜ்ஞாంகுர்வீத) (ఓమిత్యాత్మానం ధ్యాయథ) (ஓமித்யாத்மாநంத்யாயத) (ఆత్మానమేవలోకముపాసీత) (ஆத்மாநமேவ லோகமுபாஸீத) (ఆత్మావాఅరేద్రష్టవ్య శ్రోతవ్యోమన్తవ్యోనిదిధ్యాసితవ్యః) (ஆத்மா வாரேத்ரஷ்டவ்யஶ்ஶ்ரோதவ்யோமந்தவ்யோநிதித்யாஸிதவ்ய:) இத்யாதிகளாலே, உபாயாந்தரங்களை மோக்ஷஸாதநமாக விதித்தது, பட்டிதின்றுதிரிகிறபஶுவுக்கு இடைஞ்சு வசப்படுகைக்காகக் கழுத்திலே தடியைக்கட்டி விடுவாரைப்போலே, அஹங்கார மமகார வஶ்யனாய்க் களித்துத் திரிகிற விவனுக்கு, (జన్మాన్తరసహస్రేషుతపోజ్ఞానసమాధిభిః) (ஜந்மாந்தரஸஹஸ்ரேஷு தபோஜ்ஞாநஸமாதிபி:) என்கிறபடியே காயக்லேஶரூபமான கர்மாநுஷ்டாநம், இந்த்ரியஜயம் முதலான அருந்தேவைகளாலே செறுப்புண்டு அந்தக் களிப்புப்போய் பகவத்பாரதந்த்ர்யமாகிறஸ்வரூபஜ்ஞாநம் பிறக்கைக்காக என்கை.

ஆனால், இப்படி ஸ்வரூபஜ்ஞாநோதய ஹேதுவானஇவற்றை விட்டால் குற்றமாகாதோ என்ன அருளிச்செய்கிறார் (ஸந்யாஸியென்று தொடங்கி.) அதாவது - சரமாஶ்ரமத்திலே அந்விதனானவன் பூர்வாஶ்ரம தர்மங்களை விடுகிறாப்போலே, அந்யோபாயங்களினுடைய ஸ்வரூப விரோதித்வாதிகளாலே ஸித்தோபாயத்திலே இழியும்படி இவ்வளவான ஜ்ஞாநபாகம் பிறந்தவன் இவ்வுபாயாந்தரங்களை விட்டால் தோஷமாகாது என்றபடி.

---

அ.—உபாயாந்தரங்களைப்பரக்க - உபாயாந்தரங்களை விஸ்த்ர்தமாக. நின்று உபதேசித்ததெல்லாம் – இருந்து உபதேசித்ததெல்லாம். பர்யவஸித்துவிடுமோ - த்ர்ப்தியடைந்துவிடுமோ. அவற்றினுடைய தோஷதர்சநத்தாலே - முதலிலே உபதேசித்த உபாயாந்தரங்களினுடைய துஶ்ஶகத்வஸ்வரூப தோஷதர்சநத்தாலே. அரும்தேவைகளாலே - கடிந வ்யாபாரங்களாலே. செறுப்புண்டு - க்லேசப்பட்டு. களிப்புப்போய் - மதம்போய்.

மூ.—இவன்றான் இவை தன்னை நேராகவிட்டிலன். கர்மம் கைங்கர்யத்திலே புகும், ஜ்ஞாநம் ஸ்வரூபப்ரகாசத்திலே புகும், பக்திப்ராப்ய ருசியிலே புகும், ப்ரபத்தி ஸ்வரூபயாதாத்ம்ய ஜ்ஞாநத்திலே புகும். ஒருபலத்துக்கு அரிய வழியையும், எளியவழியையும் உபதேசிக்கையாலே, இவை இரண்டுமொழிய பகவத்ப்ரஸாதமே உபாயமாகக்கடவது.

---

வ்யா.—இவைதான ஆகாராந்தரத்தாலே அந்விதங்களாகையாலே இவற்றில் இவன் றனக்கு ஸ்வரூபத்யாக மில்லை யென்னுமத்தை அருளிச்செய்கிறார் (இவன்றான் இவைதன்னை நேராக விட்டிலனென்று.) அதாவது - ஸாதநாந்தர பரித்யாக பூர்வகமாக விஹித ஸாதந பரிக்ரஹம்பண்ணின இவ்வதிகாரிதான், கர்மஜ்ஞாநாதிகளாகிற இவைதன்னை ஸ்வரூபேண த்யஜித்திலனென்கை.

அதெங்ஙனே என்ன அருளிச்செய்கிறார் (கர்மமென்று தொடங்கி.) அதாவது - ஸ்வவர்ண ஸ்வாஶ்ரமோசிதமாக இவன் அநுஷ்டிக்கும் விஹித கர்மம், ஸாதநபுத்த்யா வன்றிக்கே ஆந்ருஶம்ஸ்யத்தாலே பரார்த்தமாக அநுஷ்டிக்கையாலே, ஈஶ்வரனுக்கு மிகவும் உகப்பாகையாலே, தத்ப்ரீதி ஹேதுவாகப் பண்ணுங் கைங்கர்யத்திலே அந்தர்ப்பவிக்கும்.

"நுண்ணறிவு" என்கிறபடியே, ஸ்வரூபஜ்ஞாந பூர்வகமாக பரஸ்வரூபத்தை ஸாக்ஷாத்கரிக்கைக்கு உறுப்பான ஸூக்ஷ்ம ஜ்ஞாநம், ஸாதநபுத்தி கழிந்தவாறே ஸ்வரூபத்திநுடைய ப்ரகாஶத்திலே அந்தர்ப்பவிக்கும். (भक्त्या त्वनन्यया शक्यः) (பக்த்யாத்வநந்யயாஶக்ய:) என்கிறபடியே, பகவத்ப்ராப்திக்கு ஸாதநமான புத்திபோனவாறே போஜநத்துக்கு க்ஷுத்துப்போலே ப்ராப்யமான கைங்கர்யத்துக்கு பூர்வக்ஷணத்திலே யநுவர்த்திக்கக் கடவதான ருசியிலே அந்தர்ப்பவிக்கும்.

விஹிதோபாய வரணரூபையான ப்ரபத்தி ஏகபதத்திலே சொல்லுகிறபடியே, ஸாதநபாவம் கழிந்தவாறே அத்யந்தபாரதந்த்ர்யா அநந்யஶரணமா யிருந்துள்ள ஸ்வரூபத்திநுடைய யாதாத்ம்யஜ்ஞாநத்திலே அந்தர்ப்பவிக்குமென்கை. பக்திப்ரபத்திகள் இரண்டையுங் கழித்தால் இவன் றனக்கு பலஸாதநமாவதேதென்ன அருளிச்செய்கிறார் (ஒருபலத்துக்கு என்று தொடங்கி.)

---

அ.—கைங்கர்யத்திலே அந்தர்ப்பவிக்கும் - ஆஜ்ஞாரூப கைங்கர்யத்திலே அந்விதமாம்.

ஸ்வரூபஜ்ஞாந பூர்வகமாக - ஸ்வஸ்வரூபஜ்ஞாந பூர்வகமாக. ஸ்வரூபத்திநுடைய - ஸ்வஸ்வ ரூபத்திநுடைய ; பரஸ்வரூபத்திநுடைய வென்னவுமாம்.

மூ.—பேற்றுக்கு வேண்டுவது விலக்காமையும் இரப்பும். சக்ரவர்த்தித்திருமகன் பாபத்தோடேவரிலும்அமையும்என்றான், இவன் புண்யத்தைப் போகட்டுவரவேணுமென்றான்.

---

வ்யா.—அதாவது - பகவத்ப்ராப்தியாகிற ஒருபலத்துக்கு (జన్మాన్తరసహస్రేషు తపోజ్ఞానసమాధిభిః । నరాణాంక్షీణపాపానాం కృష్ణే భక్తిః ప్రజాయతే) (ஜந்மாந்தரஸஹஸ்ரேஷு தபோஜ்ஞாநஸமாதிபி:- நராணாம் க்ஷீணபாபாநாம் க்ர்ஷ்ணேபக்தி: ப்ரஜாயதே) என்கிறபடியே, அநேக ஜந்மங்களிலே கர்மஜ்ஞாநாதிகளாகிற அங்கங்களாலே ஸாதிக்கப்படும தாகையாலே, அரிதாயிருந்துள்ள பக்திமார்க்கத்தையும், "ஸர்வதர்மாந் பரித்யஜ்ய" என்று, ஸகலப்ரவ்ர்த்தி நிவ்ர்த்திபூர்வகமாக ஸக்ர்தநுஷ்ட்டேய மாகையாலே, எளிதாயிருந்துள்ள ப்ரபத்தி மார்க்கத்தையும் உபதேஸிக்கையாலே, ஸாதந கௌரவ லாகவங்களில் தாத்பர்யமின்றிக்கே தத்தத்வ்யாஜேந பலப்ரதனாகாநின்றவனுடைய ப்ரஸாதமே ப்ரதாநமாகையாலே, பக்திப்ரபத்திகளாகிற விவையிரண்டுமொழிய, பகவானுடைய ப்ரஸாதமே உபாயமாகக்கடவது என்கை.

ஆனாலும் பேற்றுக்கு இவன்பக்கல் ஏதேனுமுண்டாகவேண்டாவோவென்ன அருளிச்செய்கிறார் (பேற்றுக்கு என்றுதொடங்கி.) அதாவது - பலஸித்திக்கு சேதநன்பக்கல் உண்டாகவேண்டுவது, ஸ்வயத்நத்தாலே அவன்பண்ணும் ரக்ஷணத்தைவிலக்காதொழிகையும், அது புருஷார்த்தமாகைக்கு உறுப்பான இரப்பும் என்கை.

இங்ஙனன்றிக்கே, இவன்பக்கலிலும் சிலஸுக்ர்தமுண்டானால் ஆகாதோவென்ன; அது உபாயபூதனுக்கு அநிஷ்டம் என்னுமத்தை அருளிச்செய்கிறார் (சக்ரவர்த்தித் திருமகனென்று தொடங்கி.)அதாவது-(రామో విగ్రహవాన్ ధర్మః)(ராமோவிக்ரஹவான் தர்ம:) என்கிற சக்ரவர்த்தித் திருமகன், (యది వా రావణస్స్వయమ్) (யதிவாராவணஸ்ஸ்வயம்) என்று - பாபிஷ்ட்டனான ராவணனானாகிலும் அழைத்துவாரும் என்கையாலே, பாபம் பேற்றுக்கு ஹேதுவாக நினைக்கைக்குட லல்லாமையாலே, பாபத்தோடே வரிலுமமையும் என்றான்.

---

அ.—அரிதாயிருந்துள்ள-துர்லபமாயிருக்கிற. எளிதாயிருந்துள்ள-ஸுலபமாயிருக்கிற. நின்றவனுடைய-இருக்கிறவனுடைய. பகவானுடைய ப்ரஸாதமே என்று அவதரிக்கையாலே-மற்றொன்று உபாயமன்றென்றபடி. இவன்பக்கல் - ப்ராப்தனான இவன்பக்கல். ஸுக்ர்தம் அநிஷ்டமென்று கருத்து. அங்ஙனன்றிக்கே, பாபம் ப்ராப்தி-ப்ரதிபந்தகமுமன்று, ஸுக்ர்தம் ப்ராப்த்யுபாயமுமன்று அவனுடைய ப்ரஸாதமே உபாயம்.

மூ.—"ஆஸ்திகனாய் இவ்வர்த்தத்தில் ருசி விஸ்வாஸங்களுடையனாய் உஜ்ஜீவித்தல், நாஸ்திகனாய்நஸித்தலொழிய நடுவில் நிலையில்லை" என்று பட்டர்க்கு எம்பாரருளிச்செய்த வார்த்தை. வ்யவஸாய மில்லாதவனுக்கு இதில் அந்வயம், ஆமத்தில் போஜநம்போலே. "விட்டுசித்தர் கேட்டிருப்பர்" என்கிறபடியே அதிகாரிகள் நியதர்.

---

வ்யா.—(க்ருஷ்ணம் தர்மம் ஸநாதநம்) (க்ர்ஷ்ணம் தர்மம் ஸநாதநம்) என்கிற இவன், ஸர்வதர்மாந் பரித்யஜ்ய என்கையாலே - பேற்றுக்கு ஹேதுவாக நினைக்கைக்கு உடலான புண்யத்தைப்போகட்டுவரவேணும் என்றான் என்கை. ஆகையால், ஸஹாயாந்தர ஸம்ஸர்க்காஸஹனான உபாயபூதனுக்கு இவன்பக்கல் ஸுக்ர்தம் அநிஷ்டமென்றுகருத்து.

இவ்வர்த்தத்தில் இழிந்தவனுக்கு ஆஸ்திகனாய் உஜ்ஜீவித்தல், நாஸ்திகனாய் நஸித்தலொழிய மத்யமஸ்த்திதியில்லை என்னுமத்தை பூர்வாசார்யவசநத்தாலே அறிவிக்கிறார் (ஆஸ்திகனாயென்று தொடங்கி.) அதாவது - இவ்வர்த்தத்தில் அந்விதனானவன் பகவத்ப்ரபாவத்தால் "இதுஸத்யம்" என்று, ஆஸ்திகனாய் இவ்வர்த்தத்தில்ருசியும், "இது தப்பாது," என்கிறவிஸ்வாஸமுமுடையனாய் உஜ்ஜீவித்தல்; ஸாஸ்த்ரங்களெல்லா மொருதலையும் இது வொருதலையுமாய் இப்படியிருப்பதொன் றுண்டோவென்று, நாஸ்திகனாய்இத்தையநாதரித்து நஸித்தலித்தனையொழிய நடுவொருநிலையில்லை" என்று, ஸகலஸாஸ்த்ர வித்தமரானபட்டருக்கு ஆப்ததமரான எம்பாரருளிச்செய்த வார்த்தையென்கை.

வ்யவஸாயஹீநனுக்கு இதில்அந்வயம் விநாஸத்துக்குடலாம் என்னுமத்தை ஸத்ர்ஷ்டாந்தமாக அருளிச்செய்கிறார் (வ்யவஸாயமென்று தொடங்கி.) அதாவது - இதிலசொல்லுகிற த்யாக ஸ்வீகாரங்களுக்கீடான வ்யவஸாயமில்லாதவனுக்கு, இதிலுண்டான அந்வயம், அஜீர்ண தசையில்பண்ணின போஜநம், மரணஹேதுவாமாப்போலேவிநாஸஹேதுவாய்பர்யவஸிக்குமென்கை.

இதுதனக்கு அதிகாரிகள் இன்னொன்னுமத்தை அருளிச்செய்கிறார் (விட்டுசித்தர் கேட்டிருப்பரென்கிறபடியே அதிகாரிகள் நியதர்என்று.)

---

அ.—ஆஸ்திகனாகிறான்-உள்ளோடு புறம்போடுவாசியற ஏகரூபனாயிருக்குமவன். நாஸ்திகனாகிறான்-தர்மாதர்ம பரலோகசேதநேச்வரர்களுக்கு ப்ரதிபாதகமான சாஸ்த்ரத்திலே ப்ராமாண்யபுத்தியின்றிக்கே ஸ்வைரஸஞ்சாரியாய்த்திரியுமவன்.

வ்யவஸாயமில்லாதவனுக்கு - நிஸ்சயாத்மக ஜ்ஞாநமில்லாதவனுக்கு. (அஜீர்ண தசையில் பண்ணின போஜனம்) விஷம் மரணஹேது வாமாப்போலே அஜீர்ண தசையில் பண்ணின போஜநம் விநாசஹேதுவாய் பர்யவஸிக்கும்.

மூ.—"வார்த்தையறிபவர்" என்கிறபாட்டும். "அத்தனாகி" என்கிறபாட்டும் இதுக்கு அர்த்தமாக அநுஸந்த்தேயம்.

பிள்ளை லோகாசார்யர்திருவடிகளே சரணம்.

---

வ்யா.—அதாவது - "செம்மையுடைய திருவரங்கர் தாம் பணித்த மெய்ம்மைப் பெருவார்த்தை விட்டுசித்தர் கேட்டிருப்பர்" என்று, கரணத்ரயத்தாலும் செவ்வியராய், அது தன்னை அர்த்தக்ரியாகாரியாக்கிக்கொண்டு கோயிலிலே சாய்ந்தருளினவர்தாம், அர்ஜுநவ்யாஜத்தாலே திருத்தேர்த்தட்டிலேநின்று அருளிச்செய்த யதார்த்தமுமாய், சீரியதுமாய், ஸுலபமுமான "மாமேகம்ஶரணம்வ்ரஜ" என்கிறவ்வார்த்தையைப் பெரியாழ்வார் கேட்டு, தந்நிஷ்டராயிருப்பர் என்கிறபடியே, இவ்வர்த்தத்துக்கு அதிகாரிகள் இதுகேட்டால் இதின்படியே நியதராயிருக்குமவர்களென்கை.

இவ்வர்த்தநிஷ்டரான ஆழ்வார்களுடைய திவ்யஸூக்தியில் இதுக்கு அர்த்தமாக அநுஸந்திக்கப்படுமவற்றை அருளிச்செய்து இது தன்னை நிகமிக்கிறார் (வார்த்தையறிபவர் என்று தொடங்கி.) அதாவது - "வார்த்தையறிபவர், போர்த்தபிறப்பொடு நோயொடு மூப்பொ டிறப்பவைபேர்த்துப்பெருந்துன்பம் வேரற நீக்கித்தன்றாளின் கீழ்ச்சேர்த்து அவன்செய்யுஞ்சேமத்தையெண்ணித்தெளிவுற்று - மாயவற்காளன்றியாவரோ" என்று, "மாமேகம் ஶரணம்வ்ரஜ - ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி" என்ற நல்வார்த்தையை அறியுமவர்கள், பரணிக்கூடு வரிந்தாப்போலே இவ்வாத்மாவைச் சூழப்பொதிந்துகிடக்கிற ஜந்மங்களோடும், அவைபுக்கவிடத்தே புகக்கடவதான வ்யாதியோடும், அங்ஙனே யாகிலும் சிறிதுநாள் செல்லாதபடி இடிவிழுந்தாப்போலேவரும் ஜரையோடும், அங்ஙனேயாகிலும் இருக்கவொண்ணாதபடி இவனுக்கு அநபிமதமானவிநாஶமுமாகிற இவற்றை, விரகர் நெடுஞ்சுவர் தள்ளுமாப்போலே தள்ளி, அவைபோனவநந்தரம் வரக்கடவதான கைவல்யமாகிற மஹாதுக்கத்தை ஸவாஸநமாகப்போக்கி பாதரேகைபோலே தன்திருவடிகளின்கீழே சேரும்படிபண்ணி, புநராவ்ர்த்திபறும்படி அவன் பண்ணும் ரக்ஷையை அநுஸந்தித்து வ்யவஸிதராய்க்கொண்டு தங்களுக்கு ஆஶ்ரயணீயனாய் விரோதிநிவர்த்தகனான ஆஶ்சர்யபூதனுக்கொழிய வேறொருவர்க்காளாவரோவென்று, நம்மாழ்வாரருளிச்செய்த "வார்த்தையறிபவர்" என்கிற பாட்டும், "முத்தனார் முகுந்தனார் - ஒத்தொவ்வாத பல்பிறப்பொழித்து நம்மையாட் கொள்வான் - அத்தனாகி யன்னையாகி யாளுமெம்பிரானுமாய் - புகுந்து நம்முள்மேவினார்; ஏழைநெஞ்சமே! எத்தினாலிடர்க் கடற்கிடத்தி" என்று -

---

அ.—அர்த்தக்ரியா காரியாக்கிக்கொண்டு-அநுஷ்டாநபர்யந்தமாக்கிக்கொண்டு.

சுத்தஸத்வம் தொட்டாசாரியர் திருவடிகளே சரணம்.

வ்யா.—ஹேயப்ரத்ய[illegible]ராகையாலே அஸ்ப்ர்ஷ்ட ஸம்ஸாரகந்த்தராய், முக்திபூமிப்ர[illegible]னவர், ஸகலதேஹ வர்த்திகளான ஆத்மாக்களும ஜ்ஞானை[illegible]காகாரதயாவொத்து, தேவாதிபேதத்தாலே ஒவ்வாமலிருக்கும் [illegible] பலவகைப்பட்ட ஜந்மங்களைப்போக்கி, நித்யஸம்ஸாரிகளாய்ப்[illegible]போந்த நம்மை நித்யஸூரிகள்கொள்ளும் அடிமையைக்கொள்ளு[illegible]கைக்காக ஹிதமே ப்ரவர்த்திப்பிக்கும் பிதாவாயும், ப்ரியமேப்ரவ[illegible]ர்த்திப்பிக்கும் மாதாவாயும், அடிமைகொள்ளக்கடவ நம்முடை[illegible]ய ஸ்வாமியாயும் இப்படி ஸர்வவிதபந்துவாயும், நம்முடைய[illegible] தண்மையையும், தம்முடைய பெருமையையும்பாராதே, நம்முடைய ஸர்வபரத்தையும் தாமேயேறிட்டுக்கொண்டு செய்வாராக ஹேயமான நம்முள்ளேபுகுந்து ஒரு நீராகப்பொருந்தினார்; அறிவிலியானநெஞ்சே!, நம்முடைய ஹிதமறிகைக்கு நாம் ஸர்வஜ்ஞராயோ, அவன் அஜ்ஞனோ, ஹிதத்தைப் ப்ரவர்த்திப்பிக்கைக்கு நாம் ஶக்தராயோ, அவன் அஶக்தனோ, கார்யஞ்செய்துகொள்ளுகைக்கு நாம் ப்ராப்தராயோ, அவன் அப்ராப்தனோ, தன்மேன்மைபாராதே தாழநின்று உபகரிக்குமவனையிருக்க எத்தாலே நீ துக்கஸாகரத்தில் கிடக்கிறது என்று, திருமழிசைப்பிரா னருளிச்செய்த "அத்தனாகி" என்கிறபாட்டும் இந்த ஶ்லோகத்துக்கு அர்த்தமாக அநுஸந்தேயமென்கை.

ஆக, இத்தால் ஸ்வீகாராங்கதயா த்யாஜ்யமான தர்மவிஶேஷங்களையும், அந்த தர்மங்களினுடைய த்யாக ப்ரகாரத்தையும், அந்த தர்மத்யாக பூர்வகமாகப் பற்றும் விஷயத்தினுடைய ஸௌலப்யாதி குணயோகத்தையும், அக்குணவிசிஷ்ட வஸ்துவினுடைய ஸஹாயாஸஹத்வ லக்ஷணமான நைரபேக்ஷ்யத்தையும், நிரபேக்ஷவஸ்துவினுடைய உபாயபாவத்தையும், அத்தை உபாயத்வேந ஸ்வீகரிக்கையையும், ஸ்வீக்ர்தமான உபாயத்தினுடைய ஜ்ஞாநஶக்த்யாதி குணயோகத்தையும், அக்குண விசிஷ்டவஸ்துவிலே ந்யஸ்தபரனான அதிகாரியையும், அதிகாரிக்கு விரோதியான பாபஸமூஹத்தையும், அப்பாபவிமோசந ப்ரகாரத்தையும், அப்பாபவிமோசகனைப்பற்றின அதிகாரியுடைய நைர்ப்பர்யத்தையுஞ் சொல்லிற்றாயிற்று,

பெரியஜீயர்திருவடிகளேஶரணம்.

முமுக்ஷுப்படிவ்யாக்யாநம்

சரமஶ்லோகப்ரகரணம்

முற்றிற்று.

---